D. தியாகதேவி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்குழு

18வது மாநில மாநாடு

பிப்ரவரி 3 - 6, 2005, நாகர்கோவில்

அரசியல் - ஸ்தாபன அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்குழு

18வது மாநில மாநாடு

பிப்ரவரி 3 - 6, 2005, நாகர்கோவில்

அரசியல் - ஸ்தாபன அறிக்கை

அன்பான பிரதிநிதி தோழர்களே!

2002 பிப்ரவரி 11 - 14 தேதிகளில் கோவையில் நடைபெற்ற 17வது மாநாட்டிற்கு பின் மூன்று ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், நாகர்கோவிலில் 18வது மாநில மாநாட்டில் நாம் கூடியுள்ளோம்.

மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதிநிதிகளுக்கும், சிறப்பு அழைப்பாளர்களுக்கும் அரசியல் தலைமைக்குழு மற்றும் மத்தியகுழு உறுப்பினர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சமீப கால வரலாற்றில் நாம் கண்டிராத அளவிற்கு 'சுனாமி' கடல் கொந்தளிப்பினால் ஏற்பட்ட கொடூரமான விளைவுகளால் பல்லாயிரக்கணக்கானோரை நாடு இழந்துள்ளது. பல இலட்சக்கணக்கானோர் வாழ்க்கை ஆதாரங்களை முழுமையாக இழந்து தவிக்கிறார்கள். நாகை, குமரி, கடலூர் மாவட்டங்களில் பெருமளவும், புதுவை உட்பட இதர கடலோர பகுதிகள் அனைத்தும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. உயிரிழந்தவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்துகிறோம். மக்களின் துயரத்தை பகிர்ந்து கொள்கிறோம்.

17வது மாநில மாநாட்டிற்கு பின் நம்மை விட்டு பிரிந்த, நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி மறைந்த நமது கட்சியின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஜனநாயக முற்போக்கு இயக்கங்களைச் சேர்ந்த போராட்ட வீரர்கள், தலைவர்கள், அரசியல் - கலை - இலக்கியத்துறைகளைச் சேர்ந்த வல்லுனர்கள் அனைவரது நினைவையும் போற்றுகிறோம்.

மக்கள் போராட்டங்களையொட்டி உயிரை அர்ப்பணித்த தியாகிகள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்துகிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகள், வேகமான அரசியல் நிகழ்வுகள், பிரம்மாண்டமான போராட்டங்கள், மக்கள் இயக்கங்கள் நடைபெற்ற காலமாகும். தமிழகத்தில் நடைபெற்ற அரசியல் - ஸ்தாபன பணிகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் போது, அதற்கெல்லாம் பின்புலமாக உள்ள சர்வதேச, தேசிய நிலைமைகளின் முக்கிய அம்சங்களைப் பார்ப்போம்.

சர்வதேச நிலை

1.1 சோவியத் பின்னடைவுக்கு பின் உலகில் ஒரு தலைபட்ச ஆதிக்க முயற்சிகளை வலுப்படுத்தி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம், இதற்கென அரசியல் - பொருளாதார - இராணுவ நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

1.2 இந்த ஆதிக்க நடவடிக்கைகள், மூன்றாவது உலக நாடுகளுக்கு எதிரானவையாகும். அந்த நாடுகள் மீது பெரும் சுமைகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் இவை உள்ளன. ஏகாதிபத்திய நிபந்தனைகளையும், நிர்ப்பந்தங்களையும் இந்த நாடுகள் மீது திணிப்பதற்கு உலக வங்கி, சர்வதேச நிதியம், உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்துவதும் அதற்கும் மேலாக நேரடியான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாக உள்ளன. யூகோஸ்லோவியா, ஆப்கானிஸ்தான், இராக் என இந்த கொடூரப் போர்கள் தொடர்கின்றன. தங்களது விருப்பங்களை நிறைவேற்ற மறுக்கும் எந்த நாட்டின் மீதும் "முன்னெச்சரிக்கை நடவடிக்கை"

என்ற பெயரால் போர் தொடுப்பதற்கு தங்களுக்கு உரிமை இருக்கிறது என அமெரிக்க ஏகாதிபத்தியம் கொக்கரிக்கிறது.

1.3 ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச அமைப்புகளை தங்களுக்கான கருவிகளாக ஆக்கிக் கொள்வதும், அதற்கு இடையூறு ஏற்படும் போது, அந்த அமைப்புகள் பற்றியோ, சர்வதேச நியதிகள் பற்றியோ கவலைப்படாமல் விருப்பம்போல் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொடர்கிறது.

1.4 உலக முதலாளித்துவ நாடுகள், அமெரிக்கா உட்பட, பொருளாதார ரீதியான நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டே இருக்கின்றன. வர்த்தகப் பற்றாக்குறையும் வேலையின்மையும் மிகப் பெரிய பிரச்சினைகளாக உள்ளன. இதே காலத்தில் மக்கள் சீனத்தில் தொடர்ந்து, நீடித்து வரும் பொருளாதார வளர்ச்சி, உலக ரீதியாக வர்த்தகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

1.5 முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலும், இந்த காலத்தில் மோதல்களும், முரண்பாடுகளும் தொடர்ந்தன. இராக் பிரச்சினையில் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனிக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பகிரங்க கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

1.6 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ஜார்ஜ் புஷ் மீண்டும் வெற்றி பெற்ற பின், இதர நாடுகளுக்கு எதிரான அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் அதிகமாகியுள்ளன. தங்களோடு முழுமையாக ஒத்துழைக்க மறுக்கும் ஐ.நா. தலைமைச் செயலாளர் கோஃபி அன்னான், சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தலைவர் முகமது எல். பிரிதி ஆகியோருக்கு எதிராக பொய்ப் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டு நிர்ப்பந்தப்படுத்துகின்றனர்.

1.7 கியூபா, வடகொரியா ஆகிய சோசலிச நாடுகளுக்கு எதிராக ஏற்கனவே உள்ள பொருளாதார தடைகளுக்கு மேலாக தற்போது பகிரங்க மிரட்டல்கள் தொடருகின்றன. இராக்கை தொடர்ந்து இரான் மீது போர் தொடுக்க காரணங்கள் உருவாக்கப்படுகின்றன. இராக் மக்களை படுகொலை செய்து வரும் தற்போதைய போர் துவங்குவதற்காக கூறப்பட்ட "பேரழிவு ஆயுதக் குவியல்" என்ற காரணம் பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. ஐ.நா.வின் ஆய்வுக்குழுவே இதை அம்பலப்படுத்தியது. இப்போது, இரானில் அணு ஆயுதங்கள் இருப்பதாக கூறித்தான் போருக்கு திட்டமிடப்படுகிறது.

1.8 யூகோஸ்லோவியா, ஜார்ஜியா, உக்ரைன் என பல்வேறு நாடுகளில் ஏகாதிபத்தியம் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலையிட்டு, "ஜனநாயக பாதுகாப்பு" என்ற பெயரால் தங்களது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டதைக் கண்டோம். இதே காலத்தில் தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் இந்த முயற்சி மக்களால் இருமுறை முறியடிக்கப்பட்டது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

1.9 ஏகாதிபத்திய சக்திகள் தங்களது ஆதிக்க முயற்சிகளையும் போர் வெறித்தனங்களையும் வலுப்படுத்தியுள்ள இந்த காலத்தில் இதற்கெதிரான எதிர்ப்பியக்கங்களும் வலுவாக நடைபெற்று வருவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1.10 இராக் மீது தொடுக்கப்பட்ட போருக்கு எதிராக, பல லட்சம் பேர் பங்கேற்ற "யுத்த எதிர்ப்பு" பேரணிகள் அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட உலகளாவிய முறையில் நடைபெற்றன.

1.11 உலகமய - தாராளமய கொள்கைகள், வறுமையையும், வேலையின்மையையும் ஏற்றத் தாழ்வுகளையும் உலகமயமாக்கியுள்ளதை உணர்ந்துள்ள மக்கள், பெருமளவில் ஒன்று திரண்டு, பல வடிவங்களில் எதிர்ப்பு இயக்கங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

1.12 ஸ்பெயின் நாட்டின் ஜனாதிபதி தேர்தல், ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்திற்காக நடைபெற்ற தேர்தல், இங்கிலாந்தில் நடைபெற்ற இடைத் தேர்தல் போன்றவற்றில் இந்த எதிர்ப்பு பிரதிபலித்ததைக் கண்டோம்.

1.13 தென் அமெரிக்க நாடுகளில் இந்த காலத்தில் நிகழ்ந்த மாற்றங்கள், அந்தப் பகுதியை ஏகாதிபத்திய எதிர்ப்பு கோட்டையாக மாற்றி வருகிறது என்றே சொல்லலாம். இந்த காலத்தில் அமெரிக்க முயற்சிகளுக்கு இங்குதான் பின்னடைவு ஏற்பட்டது. ஏற்கனவே குறிப்பிட்ட வெனிசுலா, உலகமய எதிர்ப்பின் பிரதிநிதியாக தொழிலாளர் கட்சித் தலைவர் 'லூலா' வெற்றி பெற்ற பிரேசில்,

பொலிவியா, ஈகுவேடார் மற்றும் கடைசியாக இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள உருகுவே ஆகிய நாடுகளில் அமெரிக்க ஆதரவாளர்களுக்கு பலத்த தோல்வி ஏற்பட்டுள்ளது.

1.14 மத்திய அமெரிக்க பகுதியில், ஏகாதிபத்திய எதிர்ப்பு அடிப்படையில், சில ஆண்டுகளுக்கு முன் "சான்டினிஸ்டா" இயக்கம் ஆட்சியைப் பிடித்த நிகராகுவாவில் அமெரிக்க கவிழ்ப்பு முயற்சி வெற்றி பெற்றது. ஆனால் சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல்களில் மிகப் பெரும்பான்மையான உள்ளாட்சிகளில் சான்டினிஸ்டா வெற்றி பெற்ற செய்திகளும் வெளிவந்துள்ளன.

1.15 வெனிசுலா, கியூபா நாடுகளுக்கு இடையே பொருளாதார, வர்த்தக ஒப்பந்தங்களை உருவாக்கியும் கல்வி - சுகாதார பணிகளில் வெனிசுலாவிற்கு கியூபா ஒத்துழைப்பு நல்கியும், அமெரிக்க தடைகளுக்கு எதிராக தென்னமெரிக்க மக்களின் ஒற்றுமை எனும் கருத்திற்கு வடிவம் கொடுக்கும் முயற்சிகள் துவங்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1.16 ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டவையாகவோ, தெளிவான லட்சியத்துடன் இயங்கக் கூடியவையாகவோ இல்லையென்றாலும், நடைபெற்று வரும் இயக்கங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

1.17 ஏகாதிபத்திய அபாயம் குறித்து மக்களுக்கு உணர்வு ஊட்டி, உலகம் முழுவதும் போராடும் மக்களோடு, இந்திய மக்களை அணிதிரட்ட வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை

1.18 இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து இலங்கை அரசிற்கும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே நார்வே குழுவின் முன்முயற்சியில் பேச்சுவார்த்தை நடந்தது. ரணில் விக்கிரமசிங்கே தலைமையிலான அரசு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை உருவாக்கிட தனது திட்டத்தை முன்வைத்தது. இதற்கிடையில் ரணில் விக்கிரமசிங்கே தலைமையிலான அரசை கலைத்து, அடுத்து நடந்த தேர்தலில் சந்திரிகா தலைமையிலான கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றது. தற்பொழுது சந்திரிகா தலைமையிலான அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் என அறிவித்துள்ளது. சுனாமி ஆழிப் பேரலையால் கடுமையான பாதிப்புக்கு உள்ளான இலங்கை, இதில் இருந்து மீண்ட பிறகே இலங்கை அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை பற்றிய நிலைமை தெளிவாகும்.

தேசிய நிலைமை

2.1 மத்தியில் மதவாத பா.ஜ.க.வின் தலைமையிலான அரசாங்கம் பொறுப்பேற்றதன் விளைவுகள் பற்றிய எச்சரிக்கைகளோடு தான் கட்சியின் 16, 17வது மாநாடுகள் நடைபெற்று முடிந்தன.

2.2 இந்தப் பின்னணியில், 2004 மே மாதத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல் முடிவுகள் தேசிய அரசியல் நிலைமையில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஒட்டுமொத்த இந்திய அரசியலில் இது முக்கியமான மாற்றங்களை உருவாக்கியுள்ளது. வகுப்புவாத பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு, ஐக்கிய முற்போக்கு அணி ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளது.

2.3 நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு நடைபெற்ற மாநில தேர்தல்களில், குறிப்பாக மராட்டிய தேர்தலில், பா.ஜ.க. - சிவசேனா தோல்வியானது மக்களிடையே வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான உணர்வுகள் வலுப்பெற்று வருவதை எடுத்துக்காட்டுகிறது.

2.4 மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசுக்கு, பெரும்பான்மையை உத்திரவாதப்படுத்துவதில் இடதுசாரி கட்சிகள் பிரதான பங்களிப்பை செலுத்துகின்றன. மார்க்சிஸ்ட் கட்சியும், ஒட்டுமொத்தமாக இடதுசாரி கட்சிகளும் கடந்தகால தேர்தல்களை விட கூடுதலான இடங்களில் வெற்றி பெற்றதானது, ஆட்சி மாற்றத்தை உத்திரவாதப்படுத்த உதவியது. நமது கட்சி உருவாக்கிய நடைமுறை யுத்திகள், இந்த மாற்றங்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தது.

2.5 நாடாளுமன்ற தேர்தலின் முடிவுகள், வகுப்புவாதத்திற்கு எதிரான தீர்ப்பாக மட்டுமல்ல, ஆட்சியாளர்கள் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளுக்கும் எதிரானது என்பதை நமது மத்தியக்கமிட்டி தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது. குறைந்தபட்ச பொதுத் திட்டத்தின் அடிப்படையில் இடதுசாரி கட்சிகள் ஆட்சியில் பங்கேற்காமலேயே, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை ஆதரித்து வருகின்றன.

2.6 அறிவிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச திட்டம், நமக்கோ, இடதுசாரிகளுக்கோ, முழு ஏற்புடையதல்ல; அனைத்துப் பகுதி உழைப்பாளி மக்களும் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் இந்த குறைந்த பட்ச பொதுத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்க கூடியதாக அமையும் என்பதை மத்திய கமிட்டி தெளிவுபடுத்தியது.

2.7 நாட்டின் வெளியுறவு கொள்கையில், பா.ஜ.க. தலைமையிலான அரசு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் இஸ்ரேல் போன்ற நாடுகளுடனும் "லட்சிய உறவை" வளர்ப்பதாக கூறி செயல்பட்டது. நாட்டின் விடுதலைக்கு பிறகு உருவாக்கப்பட்ட சுயேச்சையான வெளியுறவு கொள்கை கைவிடப்பட்டது. சர்வதேச அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்துவதற்கு காரணமான அணிசேரா இயக்க கோட்பாடுகளை தேசிய ஜனநாயக - கூட்டணி அரசாங்கம் கைவிட்டது. இந்நிலையை மாற்றுவதற்கும் குறைந்தபட்ச திட்டத்தில் வழிவகுக்கப்பட்டது.

2.8 ஆனால், ஐக்கிய முற்போக்கு அணியின் தலைமையிலுள்ள காங்கிரஸ் மற்றும் அந்த அணியில் உள்ள கட்சிகள், அவர்களது வர்க்கத் தன்மையின் அடிப்படையில் பொருளாதார சீர்திருத்தங்களை வரவேற்று, அமலாக்க விரும்பும் கட்சிகளாகும். இதனால், குறிப்பாக பொருளாதாரக் கொள்கை குறித்த பிரச்சினைகளில் ஊசலாட்டம் தொடருகிறது. வெளியுறவு கொள்கை பிரச்சினைகளிலும் கூட இந்த ஊசலாட்டத்தை காண முடிகிறது.

2.9 இருப்பினும், இந்துத்துவா கொள்கைகள், கல்வி, ஆராய்ச்சி துறைகளிலும் அரசு இயந்திரத்தின் பல மட்டங்களிலும் புகுத்தப்பட்டதை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள், தெஹல்கா ஊழல் குறித்த சி.பி.ஐ. விசாரணை, கோத்ரா ரயில் நிலைய நிகழ்வு குறித்த தனி விசாரணை, காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலப் பிரச்சினைகள் குறித்த அணுகுமுறை, 100 நாட்கள் வேலைக்கான சட்டம் இயற்றுதல் போன்ற பல வரவேற்கத்தகுந்த அறிவிப்புகள் வெளிவந்துள்ளன.

2.10 இதே காலத்தில் குறைந்தபட்ச பொதுத் திட்ட அறிவிப்புகளுக்கு மாறான சில நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு, லாபம் ஈட்டும் பொதுத்துறைகளின் பங்குகள் விற்பனை, மின்சார சட்டம் பரிசீலனைக்கு உட்படுத்தாமல் அமலாக்கும் முயற்சிகள், தொலைத் தொடர்பு - சிவில் விமானப் போக்குவரத்து - இன்சூரன்ஸ் துறைகளில் அன்னிய நேரடி முதலீடு அதிகரிப்பு, காப்புரிமை சட்ட திருத்தம் குறித்த அவசரச் சட்டம் போன்ற பல நடவடிக்கைகள் இதற்கு உதாரணங்களாக உள்ளன. 100 நாள் வேலை உத்திரவாத சட்டத்தை பெருமளவிற்கு நீர்த்துப் போகச் செய்துள்ளனர்.

2.11 சாதாரண மக்களுக்கு உதவும் முறையிலான மானியங்களை கைவிடுவது என்ற அணுகுமுறையின் வெளிப்பாடுதான் சமையல் எரிவாயுவுக்கு மாதா மாதம் விலை உயர்வு என வெளிவந்த அறிவிப்பு. நமது கடுமையான எதிர்ப்பினால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

2.12 உலகவங்கி - ஐ.எம்.எப். பிரதிநிதிகளை திட்டக்குழுவின் ஆலோசனைக்குழு உறுப்பினராக் கினார்கள். திட்டக்குழு நாட்டின் இறையாண்மையின் ஓர் அம்சம் என்பதை மறந்த இந்த செயல்பாடு பிறகு திருத்தப்பட்டது. ஆனால், ஆலோசனைக்குழுக்கள் அனைத்தும் கலைக்கப்பட்டன.

2.13 மக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்பதே நாம் எடுத்துள்ள நிலை. இதற்காக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங் களையும், பாராளுமன்றத்தையும் பயன்படுத்துவதோடு, கட்சியும் கட்சித் தோழர்களால் தலைமை தாங்கப்படும் வெகுஜன அமைப்புகள் மூலமாகவும் மக்களை திரட்டிப் போராடி வருகிறது. இதை மென்மேலும் வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

2.14 பாரதீய ஜனதா கட்சி மத்திய ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டாலும், இன்றைய மத்திய அரசுக்கு எதிரான அதிருப்திகளைப் பயன்படுத்தும் வலிமையைப் பெற்றுள்ளது. கட்சிக்குள் மோதல்கள், கோஷ்டிச் சண்டைகள் வலுப்பெற்றிருந்தாலும், பா.ஜ.க.வை குறைத்து மதிப்பிடக் கூடாது. ஆட்சியை இழந்த பிறகு, அது இந்துத்துவா கொள்கையை நேரடியாக கையிலெடுத்து செயல்படத் துவங்கியுள்ளது. ஆட்சியிலிருந்த காலத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்ட கோஷங்களுக்கு மீண்டும் உயிரூட்டியுள்ளனர். சங்கரமட பிரச்சினையையும், வடமாநிலங்களில் மத உணர்வுகளை தூண்டி விட்டு, ஆதரவு திரட்டுவதற்கான வாய்ப்பாக மாற்ற முற்பட்டுள்ளது.

2.15 இந்திய மக்களின் ஒற்றுமைக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் பேராபத்தை விளைவிக்க கூடிய பா.ஜ.க. மீண்டும் ஆட்சியில் அமரும் வாய்ப்பு ஏற்பட்டு விடக் கூடாது. அவர்களது வெறித் தாக்குதல்களிலிருந்து நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும். மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசை, இந்த நோக்கத்துடனேயே நாம் ஆதரித்து வருகிறோம். அதே நேரத்தில், ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கை நிலைகளை எதிர்த்துப் போராடியாக வேண்டும். மக்கள் நலனைக் காப்பதற்கான போராட்டத்தை உறுதியுடன் நடத்த வேண்டியது நாம் உட்பட அனைத்து இடதுசாரி சக்திகளின் கடமையாக உள்ளது.

2.16 இந்தக் கடமையை நிறைவேற்றிக் கொண்டே மதவாத சக்திகளுக்கு எதிராகவும் நாட்டின் ஒற்றுமையையும், ஜனநாயக அமைப்புகளையும் மக்கள் உரிமைகளையும் பாதுகாக்கவும் மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையை மேலும், மேலும் வலுப்படுத்துவதற்கும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். நெருக்கடி மிகுந்த இன்றைய சூழலில், இடதுசாரிகளிடமிருந்து நாடு இதனைப் பெரிதும் எதிர்பார்க்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழக நிலைமை

17வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானம், தமிழக நிலைமை குறித்து கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

> *"சர்வதேச நிதியம், உலகவங்கி, உலக வர்த்தக அமைப்புகளின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு மத்திய அரசு அமலாக்கி வரும் உலகமயமாக்கும் பொருளாதாரக் கொள்கைகள், நாட்டின் தொழில்துறை, சேவைத்துறை, விவசாயம், வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து துறைகளையும் கடுமையாக பாதித்துள்ளன."*
>
> *"பெரும் தொழில்கள், சிறுதொழில்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பல லட்சக்கணக்கானோர் பணிபுரியும் நமது பாரம்பரிய தொழில்கள், சிறு வியாபாரம் ஆகியவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அனைத்து விளைபொருட்களும் விலைவீழ்ச்சியை சந்தித்துக் கொண்டிருக்கின்றன."*
>
> *மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறி செயல்படும் அஇஅதிமுக அரசு, "மத்திய ஆட்சியாளர்களின் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகளை ஏற்றுச் செயல்படுகின்ற அரசாங்கமாக" உள்ளதையும் அந்த தீர்மானம் சுட்டிக்காட்டியது.*

3.1 2002 பிப்ரவரியில், கோவை மாநாடு சுட்டிக்காட்டிய இந்த அபாயகரமான கொள்கையை அதிமுக அரசு தொடருவதனால் ஏற்படும் விளைவுகளையே இன்று நாம் சந்தித்து வருகிறோம்.

3.2 சிறுதொழில்கள், பாரம்பரிய தொழில்கள் உட்பட்ட தொழில்துறை, விவசாயம், வர்த்தகம், வேலைவாய்ப்பு என எல்லா துறைகளிலும் பெரும் நெருக்கடிகளை சந்தித்த காலமாக கடந்த மூன்று ஆண்டுகள் இருந்தன.

3.3 தொழில்துறையைப் பொறுத்த வரை பெரும் தொழில்களில், நெருக்கடிகளும் முன்னேற்றமும் இணைந்த சூழல் நிலவுகிறது. ஜவுளி, இன்ஜினியரிங், சிமெண்ட், சர்க்கரை போன்ற தமிழகத்தின்

பிரதான உற்பத்திப் பிரிவு தொழில்களில் இதை நாம் பார்க்க முடியும். நவீனமயமாக்கப்பட்ட ஆலைகளிலும், நீண்டகாலமாக செயல்பட்டு வரும் பழைய தொழிற்சாலைகளிலும் என இந்த வேறுபட்ட நிலை எல்லா பிரதான தொழில்களிலும் பளிச்சென தெரிகிறது. நவீன ஆலைகளில் பொதுவாகப் பார்த்தால் லாபம் பெருகியுள்ளது. கூடுதலான முதலீடு, நவீன இயந்திரங்கள், குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்கள், குறைக்கப்பட்ட ஊதிய செலவுகள், தொழிலாளர்களில் மிகப் பெரும்பாலோர் தற்காலிக மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் என்பதனால், தொழிலாளர்களுக்கான செலவுகளில் வெட்டு என பல்வகை காரணங்களால் இந்த ஒரு பகுதி தொழில்கள் லாபம் ஈட்டுகின்றன. சில நவீன தொழில்களில் முன்னேற்றம் இருந்தாலும், அதுவும் வேலைவாய்ப்பற்ற வளர்ச்சிதான். தொழில் நலிவு, ஆட்குறைப்பு, ஆலைமூடல் என பழைய நிறுவனங்கள் பல கடுமையான நெருக்கடிகளை சந்தித்து வருகின்றன. பழைய நிறுவனங்களில் ஒரு சில மட்டும் ஓரளவு நல்ல நிலையில் உள்ளன.

3.4 தமிழகத்தில், மத்திய அரசின் பொறுப்பிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் தனியார்மயம், பங்கு விற்பனை, ஆலை மூடல் என பல்வேறு பிரச்சினைகளில் ஏதேனும் ஒன்றை சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளன.

3.5 மாநில அரசின் பொறுப்பில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு தொழிற்சாலைகள், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், தனியார்மயமாக்கப்படும் நிலையிலும், மூடப்பட்ட அல்லது மூடலை நோக்கி நகர்த்தப்படும் நிலையிலும் உள்ளன. கூட்டுறவு அமைப்புகளில் ஜனநாயகபூர்வ செயல்பாட்டுக்கு வேட்டு வைத்து, அதிகார வர்க்கத்தின், ஆளும் கட்சியினரின் வேட்டைக்காடாக அவை மாற்றப்பட்டுள்ளன.

3.6 பல லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் பல, அரசின் கொள்கைகளின் நேரடி விளைவுகளால் பாதிக்கப்பட்டு நலிவடைந்துள்ளன. மூலப்பொருட்கள் விலை உயர்வு, தங்கு தடையின்றி இறக்குமதி அனுமதிக்கப்படுவதால் உள்ள பாதிப்புகள், அரசு அளித்து வந்த சலுகைகள் வெட்டு என இந்த பிரச்சினைகள் தொடருகின்றன.

3.7 கைத்தறி, விசைத்தறி, தீப்பெட்டி, உப்பு என பல லட்சம் பேருக்கு வேலையளிக்கும் பாரம்பரியத் தொழில்களும், கட்டுமானம் போன்ற துறைகளும் அவ்வப்போது பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. தோட்டத் தொழில்களில் குறிப்பாக தேயிலை தொழிலில் இந்தக் காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் ஆயிரக்கணக்கான சிறு உற்பத்தியாளர்களை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கின்றன.

3.8 தமிழகத்தின் வளர்ச்சியடைந்த, பிரதான தொழில் பிரிவான ஜவுளித் தொழில் - நூல் நூற்பு, கைத்தறி - விசைத்தறி நெசவு, பின்னலாடை, ஆயத்த ஆடைகள் - பெரும் எதிர்பார்ப்புகளும் கவலையும் நிறைந்த சூழலில் உள்ளது. 2005 ஜனவரி முதல் கோட்டா முறை ரத்து செய்யப்படுவதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை உறுதிபட சொல்ல முடியவில்லையென்றாலும் கூடுதலான முதலீடுகளைச் செய்து, வாய்ப்புகளைப் பயன்படுத்த, தொழிலுடமையாளர்கள் தயாராகி வருகின்றனர்.

3.9 தகவல் தொழில் நுட்பத் தொழில் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைப் பிரிவுகளில் சமீபகாலமாக ஏற்பட்ட வளர்ச்சி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. உலகளாவிய நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் ஏற்றத் தாழ்வுகளை சந்திக்க கூடியது இந்தத் துறை.

3.10 சேவைப் பிரிவுகளில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்கள், சில்லறை வர்த்தகங்களிலும் பகாசுர கம்பெனிகள் வருகை என மாறுபட்ட பிரச்சினைகளை சந்தித்து வருகிறோம்.

3.11 காவல்துறை, தீயணைப்பு படை போன்ற சீருடைப் பணிகள் தவிர, மற்ற அரசு பணிகளில் புதிதாக வேலைக்கு ஆள் எடுப்பதில்லை என்ற நிலை தொடருகிறது.

3.12 மொத்தத்தில், தொழில்துறையில் ஏற்பட்டுள்ள ஒரு சில வளர்ச்சிப் போக்குகளும் வேலைவாய்ப்பை பெருக்கவில்லை. "வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி" என்பதே இன்று நாம் காணும் நிலை.

3.13 இதற்கும் மேலாக, தாராளமயக் கொள்கைகளின் பல்வேறு விளைவுகள் - அரசு தன் சமூகப் பொறுப்புகளிலிருந்து விலகுதல், பயனீட்டு கட்டணங்கள் உயர்த்தப்படுதல் என பல அம்சங்கள் மக்களை கடுமையாக பாதித்துள்ளன.

3.14 விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் மிக கடுமையாக பாதிக்கப்பட்ட காலம் இது. மூன்றாண்டுகளாக வறட்சி, இந்த ஆண்டில் காவிரி டெல்டா பகுதியில் வெள்ளம் என விவசாயிகள் பெரும் துயரைச் சந்திக்கின்றனர்.

3.15 கரும்பு, பருத்தி உட்பட உள்ள விளைபொருள் உற்பத்தியாளர்களும் இடுபொருள் விலை உயர்வு, நியாயமான விலை கிடைக்காதது, கச்சா சர்க்கரை இறக்குமதி போன்றவற்றால் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். கடன், வட்டிச்சுமை, அறிவிக்கப்படும் சலுகைகள் வழங்கப்படாமை என விவசாயிகள் வாழ்வு நெருக்கடிக்குள்ளாகி, விவசாயத் தொழிலாளர்களும், சிறு விவசாயிகளும் வேலை தேடி கூட்டம் கூட்டமாக இடம் பெயர்ந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது.

3.16 விவசாயத் துறையில், சீர்திருத்தங்கள் என்ற பெயரால், தலைகீழ் நடவடிக்கைகளைத்தான் அரசு மேற்கொள்கிறது. வன நிலங்கள் பாதுகாப்பு என்ற பெயரால், ஆண்டாண்டுக்காலமாக பயிரிடுவோர் வெளியேற்றம், தரிசு நிலங்களை பகாசுர கம்பெனிகளுக்கு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் ஒரு புறத்திலும், விவசாயிகள் இருக்கும் நிலத்தையும் இழந்து விடும் நிலை மறுபுறத்திலும் உருவாகி வருகிறது.

3.17 விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்தவித நிவாரணமும் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நலத்திட்டங்கள் குறித்து வழங்கப்பட்ட பரிந்துரைகளையும் அமலாக்க அரசு மறுத்து வருகிறது.

3.18 சுனாமி ஆழிப்பேரலையால் மீனவர்கள் மீன்பிடி சார்பு தொழிலில் உள்ளவர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மிகப் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

3.19 கல்வி, சுகாதாரம், குடிநீர், சாலைப்போக்குவரத்து என் பலதுறைகளிலும் தனியார்துறை ஊக்குவிப்பு, பெரும்பான்மையான மக்களை கடுமையாக பாதித்துள்ளது. உயர் கல்வி வணிகமயமாகி விட்டது தரமான சுகாதார வசதி ஏழை மக்களுக்கு கிடைப்பதில்லை. குடிநீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றுதல், மின்சார வசதி அளித்தல் போன்றவற்றை தனியார்மயமாக்கிடவும் உள்ளாட்சி அமைப்புகளை அரசு நிர்ப்பந்தித்து வருகிறது. எல்லாவற்றிற்கும் கூடுதலான கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

3.20 பெருகி வரும் வேலையின்மையும், வேலையில் இருந்தவர்களுக்கு வேலையிழப்பும், போராடிப் பெற்ற உரிமைகள் பறிக்கப்படுவதும், நலச்சட்டங்களில் அமலாக்கம் என்பது கைவிடப் பட்டுள்ளதும் கடுமையான விளைவுகளை உருவாக்கியுள்ளது.

3.21 மத உணர்வுகளைத் தூண்டி விடும் முயற்சிகள், தீண்டாமை மற்றும் சாதி ஒடுக்குமுறைகள் பலப் பல வடிவங்களில் தொடர்வது, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெருகுவது, குழந்தை உழைப்பு பரவலாவது, பொருளாதார, பண்பாட்டுத்துறைகளில் நுகர்வு கலாச்சாரப் போக்குகளின் தாக்கங்கள் அதிகரிப்பு என தமிழக மக்கள் பல வகைப் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர்.

3.22 பொருளாதார சீர்திருத்த கொள்கையின் நேரடியான விளைவுகளாக ரேஷன் மறுப்பு, ரேஷன் பொருள் விலை உயர்வு, இலவச மின்சாரம் ரத்து, மின்கட்டண உயர்வு, போக்குவரத்து சலுகைகள் பறிப்பு, அரசின் பொறுப்பிலுள்ள தொழிலாளர்கள் - ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் பறிப்பு, விவசாய தொழிலாளர்கள் உட்பட, முறைசாரா தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்கள் முடக்கம் என தமிழக அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கடந்த மூன்றாண்டுகளில் நாம் கண்டோம்.

3.23 அமைப்புரீதியாக திரண்டுள்ளவர்களில் ஒரு பகுதியினராவது, இந்த தாக்குதல்களுக்கு எதிராக போராட முன்வரும்போது ஜனநாயக உரிமைகளையும், தொழிற்சங்க உரிமைகளையும் மறுத்து, அடக்குமுறைகள் ஏவிவிடப்படுகின்றன.

3.24 அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் போராட்டத்தின் போது இந்த அடக்குமுறைகள் உச்சகட்டத்தை எட்டியது. இதே காலத்தில் பத்திரிக்கைகள் மீது வழக்குகள், கட்சித் தலைவர்கள் மீது வழக்குகள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்குகள் என அரசியல் அடக்குமுறைகள் பல்வேறு பகுதியினருக்கு எதிராகவும் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். நிர்வாகத்துறையும் நீதித்துறையும் ஜனநாயக உரிமை பறிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, உண்மை உருவத்தை வெளிப்படுத்தியதானது நாட்டின் கவனத்தை ஈர்த்தது. உலகமயக் கொள்கைகளின் தாக்கம், நாட்டின் நீதித்துறையையும் விட்டு வைக்கவில்லை என்பதையும் கண்டோம்.

ஊழல்

3.25 தமிழகத்தில் ஊழல், லஞ்ச - லாவண்யம் அரசின் அனைத்து மட்டத்திலும் நிலவுகிறது. கூட்டுறவுத்துறை, உள்ளாட்சித்துறை, காவல்துறை, பொது விநியோகம், அரசின் நலத்திட்ட செயலாக்கம் ஆகியவற்றில் ஊழல் மலிந்துள்ளது. மணல் திருட்டு, நிலத்தடி நீர் கொள்ளை அதிகரித்துள்ளது. வேலைக்கு உணவு திட்டப் பணிகளில்கூட காண்ட்ராக்ட் கொள்ளை நடைபெறுகிறது. நீதித்துறையின் அனைத்து மட்டத்திலும் ஊழல் நிலவுகிறது. இதனால் சாமான்ய மக்களுக்கு நீதி மறுக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நீதித்துறை ஊழலுக்கு எதிராக வழக்கறிஞர்கள் போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும். ஊழல், காண்ட்ராக்ட் கொள்ளைக்கு எதிராக் மக்களை திரட்டி போராடவேண்டியுள்ளது.

சுற்றுச் சூழல் பாதிப்பு

3.26 நீடித்த வளர்ச்சி (Sustainable Development) என்பது தற்பொழுது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் தமிழகத்தில் பல மாவட்டங்களில் தண்ணீர், மண் மாசுபடும் சூழல் வேகமாக உருவாகி வருகிறது. நகரங்களில் சில இடங்களில் இரசாயன கழிவு நீரை தடுத்திட அல்லது சுத்தப்படுத்திட சரியான ஏற்பாடு இல்லாததால், விவசாயத்தையும், குடிநீரையும் கடுமையாக பாதித்து வருகிறது. தமிழகக் கடலோரப் பகுதிகளில் உச்சநீதிமன்ற தீர்ப்பையும் மீறி இறால் பண்ணைகள் உருவாகி, விவசாயத்தை பாதிப்பதோடு, விவசாயத்திற்கு தகுதியான நிலங்களின் மண்வளத்தையும் பாதிக்கிறது. இதனால் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் தமிழகத்தில் பல மாவட்டங்களில் நீர் வளமும், மண்வளமும் பாதித்து சுற்றுச் சூழலே பாதிப்புக்கு உள்ளாகி சுகாதார கேடுகள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய கேடுகளை தடுப்பதற்கு அரசு போதுமான நடவடிக்கை எடுத்திட முன்வராதது மட்டுமல்ல; இது முழுக்க முழுக்க தொழில் முனைவோர் செய்ய வேண்டிய பணி என தனது கடமையை அரசு தட்டிக் கழிக்கிறது. தொழில் முனைவோர்களில் பலர் வளர்ச்சி என்ற ஒன்றைத் தவிர சுற்றுச் சூழல் பற்றி கவலைப்படாத நிலையும் உள்ளது.

அரசியல் நிலைமை

3.27 17வது மாநாடு நடைபெறும் போது இருந்த மாநில அரசியல் நிலைமைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

3.28 மாநில ஆளும் கட்சியான அஇஅதிமுக-வின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராகவும் மக்கள் கோரிக்கைகளுக்காகவும் போராட வேண்டுமென கோவை மாநாடு முடிவு செய்தது.

3.29 ஆளும் கட்சியான அஇஅதிமுக "மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை ஏற்று செயல்பட்டு வருகிறது." என்றும் மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான திமுக "மத்தியில் ஆளும் கட்சியாக இருந்து கொண்டு மக்கள் விரோத கொள்கைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது." என்றும் கோவை மாநாட்டின் அரசியல் தீர்மானம் சுட்டிக்காட்டியது.

3.30 மாநில அரசுக்கு எதிராகவும் மத்திய அரசுக்கு எதிராகவும் ஒன்றுபட்டு போராடுவதற்கு அறைகூவல் விடுத்த அந்த மாநாடு "பல்வேறு மக்கள் கோரிக்கைகளுக்கான இயக்கங்களில் மார்க்சிஸ்ட் கட்சியோடு இணைந்து நின்று போராடும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடும், இக்காலத்தில் பா.ஜ.க. கூட்டணியின் கொள்கைகளுக்கு எதிரான அரசியல் நிலையெடுத்து செயல்பட்டு வரும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியோடும் தமிழகத்தின் இதர முற்போக்கு ஜனநாயக, மதச்சார்பற்ற தேசபக்த சக்திகளோடும் இணைந்து நின்று மார்க்சிஸ்ட் கட்சி தமிழக மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை உறுதியாக முன்னெடுத்துச் செல்லும்" என பிரகடனப்படுத்தியது.

3.31 அதே அரசியல் தீர்மானத்தில் கீழ்வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. "மத்தியில் ஆட்சியில் உள்ள வகுப்புவாத சக்திகள் மக்களின் ஒற்றுமையை சீரழிக்கின்றன; நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்தை விளைவிக்கின்றன; நாட்டின் பொருளாதாரத்தை சீரழிக்கின்றன. இப்படிப்பட்ட சக்திகளோடு அரசியல் உறவு வைத்துள்ள தி.மு.க., மதிமுக, பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் நாட்டின் நலன்களுக்காக அந்த சக்திகளை விட்டு வெளியேற வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது."

3.32 மூன்றாண்டுகளுக்குப் பிறகு, தற்போது அரசியல் நிலைமைகளைப் பரிசீலிக்கும் போது கட்சிகளின் நிலைபாடுகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காணமுடியும்.

3.33 மாநில ஆளும் கட்சியான அஇஅதிமுக, மக்கள் விரோத கொள்கைகளில் உச்சகட்டத்திற்கே சென்று, இந்த மூன்றாண்டுகளில் கணிசமான பகுதி மக்களிடமிருந்து தனிமைப்பட்டு நிற்கிறது.

3.34 தி.மு.க., மதிமுக, பா.ம.க. ஆகிய கட்சிகள் தேசீய ஜனநாயக அணியிலிருந்து 2003 டிசம்பர் மாதத்தில் தான் வெளியேறின. இடைப்பட்ட காலத்தில், நமது கட்சி, மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டியிருந்தது.

3.35 "தேசிய ஜனநாயக அணியில் இடம் பெற்று, மத்திய ஆட்சியில் பங்கேற்கும் கட்சிகளோடு, கொள்கை ரீதியான பிரச்சினைகளில் கூட்டு வைப்பது சாத்தியமல்ல" என்ற நிலையில் நாம் உறுதிபட செயல்பட்டோம். தி.மு. கழகத்தைப் பொறுத்தமட்டிலும், மத்திய ஆட்சிப் பொறுப்பில் நீடித்துக் கொண்டே தமிழக எதிர்கட்சிகளின் ஒற்றுமையை உருவாக்கி, மாநில அரசை எதிர்த்துப் போராடுவது என்ற நிலைபாட்டையே தொடர்ச்சியாக மேற்கொண்டது.

3.36 அரசியல் - பொருளாதாரக் கொள்கைகளில் தி.மு.க.வுடன் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள மறுத்த நாம், மதமாற்ற தடைச் சட்டம், சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள், பத்திரிக்கை சுதந்திரம் பறிப்பு போன்ற பிரச்சினைகளில் இணைந்து போராட தயங்கவில்லை. இந்த மேடைகளில், "இந்த அணி தொடரும்" என்றும் "வலுவான கூட்டணி உருவாகும்" என்றும் திமுக தலைவர்கள் பேசியபோது, ஆட்சியிலிருந்து வெளியேறாமல் அணிசேர்க்கை பற்றிய பேச்சே இல்லை என்று தெளிவுப்படுத்திக் கொண்டே, "ஆட்சியிலிருந்து வெளியேறுமாறு" வேண்டுகோள் விடுத்துக் கொண்டும் இருந்தோம்.

3.37 ஆனால் தி.மு.க. ஆட்சியிலிருந்து வெளியேற மறுத்தது மட்டுமல்ல; திமுக தலைமையை மார்க்சிஸ்ட் கட்சி விமர்சிப்பதை நிறுத்தினால்தான் தொழிற்சங்க அரங்கில் கூட்டு இயக்கத்திற்கு எல்.பி.எப். வரும். இல்லையெனில் வராது எனற நிலை எடுத்தது. மாநிலத்தில் தொழிற்சங்க அரங்கில் சி.ஐ.டி.யூ. - ஏ.ஐ.டி.யூ.சி. - எல்.பி.எப். - ஐ.என்.டி.யூ.சி. என மாநில அரசுக்கு எதிராக உருவாக்கிய கூட்டுப் போராட்டத்தை சிதைக்கும் அளவிற்கு தி.மு.க. தலைமை சென்றது. தனது அரசியல் சந்தர்ப்பவாதத்தை மார்க்சிஸ்ட் கட்சி விமர்சித்தால், கூட்டு இயக்கத்திற்கு சாத்தியமில்லை என்று தி.மு.க. கூறியபோதும், நாம் நமது அரசியல் நிலைபாட்டை கைவிடவில்லை.

3.38 மக்கள் பிரச்சினைகளில், அதன் தன்மைக்கேற்ப தனித்த போராட்டம், சி.பி.ஐ.யுடன் இணைந்து இடதுசாரி கட்சிகள் இயக்கம், வகுப்புவாதத்திற்கு எதிரான இயக்கங்களில் காங்கிரசுடன் இணைந்த இயக்கங்கள், இராக் யுத்த எதிர்ப்பு போன்ற பிரச்சினைகளில் செயல்பட முன்வரும் அனைவருடனும் இணைந்த இயக்கங்கள் என்ற நிலையை 2003ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலும் மேற்கொண்டோம்.

3.39 இதனடிப்படையிலேயே சைதாப்பேட்டை, அச்சிறுப்பாக்கம், சாத்தான்குளம், வாணியம்பாடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் இடைத் தேர்தல்களில் முறையே சிபிஐ. ஆதரவுடன் தனித்துப் போட்டி, சிபிஐக்கு ஆதரவு, சொந்த மேடையிலிருந்து காங்கிரஸ், தேசிய லீக் வேட்பாளர்களுக்கு ஆதரவு என நிலையெடுத்தோம்.

3.40 2001 மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற அதிமுக அரசு, சில மாதங்களுக்கு பிறகு அனைத்து முனைகளிலும் அப்பட்டமான மக்கள் விரோத கொள்கைகளை அமலாக்கத் துவங்கியது. பத்திரிக்கை சுதந்திரம் பறிப்பு, தன்னை விமர்சித்த எதிர்கட்சித் தலைவர்கள் மீது பொய் வழக்கு, ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்தத் தடை, மனித உரிமைகள் பறிப்பு, உழைப்பாளி மக்களின் போராட்டத்தை என்றும் கண்டிராத் அளவுக்கு ஒடுக்கியது, கூலிக்கு கொலை செய்யும் கோர சம்பவங்கள் அதிகரிப்பு, என்கவுன்டர் கொலைகள், ஜனநாயக முறையில் இயக்கம் நடத்துவதற்கு எதிர்கட்சிகளுக்கு அனுமதி மறுப்பு போன்ற பல்வேறு வகைகளில் எதேச்சதிகாரமான முறையில் அதிமுக அரசு நடந்து கொண்டது.

3.41 அஇஅதிமுகவின் இந்துத்துவா ஆதரவு நிலைகளும், மதமாற்றத் தடை சட்டத்தை இயற்றுவது போன்ற நடவடிக்கைகளுக்கு மாநில பா.ஜ.க. மற்றும் இந்து முன்னணி போன்ற அமைப்புகளும் ஆதரவளித்ததும் மாநில பா.ஜ.க. தலைமைக்கும் தி.மு.க.விற்கும் இடையே இடைவெளி ஏற்படுத்தியபோதிலும் அகில இந்திய உறவு தொடர்ந்தது. சைதாப்பேட்டை இடைத் தேர்தலில் தி.மு.க. தனியாகவும், மதிமுக - பா.ஜ.க. இணைந்தும் போட்டியிட்டன. 2002 நவம்பருக்கு பிறகு, பொடாவில் கைதாகி சிறையிலிருந்த வைகோவை கருணாநிதி சந்தித்த பின்னர் தான் திமுக - மதிமுக கட்சிகளுக்கு இடையான உறவில் சகஜ நிலை ஏற்பட்டது.

3.42 பொடாவை எதிர்த்து தி.மு.க. ஏற்பாடு செய்த மாநாட்டில் நாம் பங்கேற்க மறுத்தபோது, காங்கிரசும் சி.பி.ஐ.யும் அதே நிலை எடுத்தது.

3.43 இவ்வாறு உறுதியான நிலையை மேற்கொண்டு, நாம் செயல்பட்ட போது, சி.பி.ஐ. பல நேரங்களில் நம்முடன் இணைந்து நிற்கவில்லை. தி.மு.க.-வின் சந்தர்ப்பவாத அரசியல் நிலைபாட்டை எந்த முறையிலும், எந்த நிலையிலும் விமர்சிக்க அவர்கள் தயாராக இல்லை.

3.44 2003 ஜூன் மாதத்தில், "தேசிய ஜனநாயக அணியுடனான உறவை பரிசீலிப்போம்" என திமுக தலைமை பேச வேண்டியதாயிற்று. இந்தக் காலத்தில் பா.ம.க. தொடர்ந்து ஊசலாட்டமான நிலையை மேற்கொண்டு வந்தது.

3.45 இதற்கிடையே அஇஅதிமுக நாடு தழுவிய மூன்றாவது அணி என்று பேசி ஜெயலலிதாதான் அடுத்த பிரதமர் என தீர்மானங்களை நிறைவேற்றும் அளவிற்கு சென்றது. மறுபக்கத்தில் பா.ஜ.க.வுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொடர்ந்தது. இந்த நோக்கோடு அதிமுக, காங்கிரசையும் - சோனியா காந்தியையும் கடுமையாக விமர்சித்தது.

3.46 இந்த காலத்தில் நாம் ஏற்கனவே எடுத்த நிலைபாட்டை மீண்டும், மீண்டும் வலியுறுத்தி, வகுப்புவாதத்திற்கும், அஇஅதிமுகவுக்கும் எதிராக ஒன்றுபட்டு போராடுவதற்காக மத்திய அரசிலிருந்து வெளியேறுமாறு திமுக, மதிமுக, பா.ம.க. ஆகியவற்றுக்கு வேண்டுகோள் விடுத்தோம். இந்த அடிப்படையில் நாம் நடத்திய பல்வேறு இயக்கங்கள் மக்களின் கவனத்தை ஈர்த்தது.

3.47 தேர்தல் முன்கூட்டியே வந்து விடும் என்ற நிலை ஏற்பட்டபோது, 2003 டிசம்பர் மாதத்தில், தி.மு.க. தேசிய ஜனநாயக அணியிலிருந்து வெளியேறியது. தொடர்ந்து மதிமுக, பாம.க.வும் அதே நிலை எடுத்தன.

3.48 இந்த மாற்றங்களை நாம் வரவேற்றோம். மத்தியில் தேசிய ஜனநாயக அணி அரசை பலவீனப்படுத்த இது பெரிதும் உதவும் என்பதோடு தமிழகத்தில் அஇஅதிமுக அரசை எதிர்த்து மக்கள் இயக்கங்களை வலுப்படுத்தவும் முடியும் என்பதே நமது பார்வையாக இருந்தது.

3.49 இந்த அணுகுமுறை சரியானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.14வது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில், பா.ஜ.க. - அஇஅதிமுகவுக்கு எதிராக வலிமை மிக்க அணிசேர்க்கையை உருவாக்கவும், தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள 40 தொகுதிகளிலும் அந்த அணியை தோற்கடிக்கவும் இந்த அணுகுமுறை பயன்பட்டது. அகில இந்திய ரீதியில் மாற்றத்தை உறுதிப்படுத்த தமிழக வெற்றி பெரிதும் உதவியது.

3.50 தேர்தல் பரிசீலனையில் மத்திய கமிட்டி கீழ்வருமாறு குறிப்பிட்டது. "பா.ஜ.க.வுக்கும், திமுகவுக்கும் இடையே முரண்பாடான பிரச்சினை தோன்றும் போதெல்லாம், தேசீய ஜனநாயக கூட்டணியில் தி.மு.க. நீடிப்பது குறித்து நமது கட்சி தொடர்ந்து கிளப்பி வந்த பிரச்சாரமானது, தேசீய ஜனநாயக கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேற வழிவகுத்தது. இத்திருப்பமானது விரிவானதொரு ஒற்றுமையை உருவாக்குவதற்கு பொருத்தமான சூழ்நிலையை தோற்றுவிக்க உதவியது."

3.51 இவ்வாறு, கோவை மாநாட்டிலிருந்து துவங்கி, 14வது நாடாளுமன்ற தேர்தல் வரையிலும் மாநாட்டு முடிவுகள் அடிப்படையிலும் மத்திய கமிட்டியின் வழிகாட்டுதல்கள் அடிப்படையிலும் நாம் எடுத்த நிலை அரசியல் ரீதியாக நமக்கு பெரிதும் உதவியுள்ளது.

14வது நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்

3.52 நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் நடைமுறைப் பற்றி மத்தியக்குழு கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது.

"பா.ஜ.க. தலைமையிலான அணி வீழ்த்தப்பட்டதும், நமது ஆதரவோடு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பொறுப்பேற்றுள்ளதும், இடதுசாரி சக்திகளுக்கு சாதகமான சூழலை உருவாக்கியுள்ளது. இடதுசாரி சக்திகளுக்கு கிடைத்த வெற்றி நமது கட்சியின் மரியாதையை உயர்த்தியுள்ளது. இச்சாதகமான சூழலை, நமது கட்சி வளர்ச்சிக்கு பயன்படுத்திட வேண்டும். இதற்கு நமது சுயேச்சையான தலையீட்டையும், நடவடிக்கையையும் அதிகப்படுத்திட வேண்டும். விரைந்து செயல்பட வேண்டும்; சாதகமான சூழல் நீண்ட நாள் நீடிக்காது. நமது கட்சி பலகீனமாக உள்ள பகுதிகளில் மக்கள் நமது தலையீட்டை எதிர்பார்க்கிறார்கள். கட்சி முழுவதும் மக்களை நோக்கி செல்வதோடு, வெகுஜன இயக்கங்களில் மக்களை ஈடுபடுத்திட வேண்டும்."

மத்தியக்குழு தீர்மானித்த அரசியல் கடமைகளை அமலாக்கிட, மாநில செயற்குழு விவாதித்தது.

3.53 அரசியல் தலைமைக்குழுவின் வழிகாட்டுதலோடு, கீழ்க்கண்ட கடமைகளை மாநில செயற்குழு தீர்மானித்தது.

* "தமிழகத்தில் குறைந்தபட்ச பொது திட்டத்தில் தமிழகத்திற்கான திட்டங்களை செயல்படுத்த வலியுறுத்திக் கொண்டே பா.ஜ.க. மதவெறி சக்திகளையும் மக்கள் விரோத அதிமுக அரசையும் எதிர்த்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வது.

* கட்சி சார்பில் மக்கள் பிரச்சினைகளுக்காக சுயேச்சையான இயக்கங்களை வலுவாக முன்னெடுத்துச் செல்வது. வெகுஜன அமைப்புகள் சார்பிலும் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் பிரச்சினைகளுக்கான இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வது.

* குறைந்தபட்ச பொது செயல் திட்டத்தில் நாம் ஏற்றுக் கொண்ட அம்சங்களை அமலாக்கிட கூட்டு இயக்கங்கள் நடத்துவது. மேலும், தி.மு.க. தலைமையுடன் நமக்கு மாறுபாடுள்ள கருத்துக்களை விமர்சித்துக் கொண்டே அவசியமுள்ள, பொதுவான, கருத்தொற்றுமையுள்ள மக்கள் பிரச்சினைகளில் நட்புக் கட்சிகளோடு கூட்டு இயக்கம் காண்பது."

3.54 மத்தியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை ஆதரிக்கிற அதே நேரத்தில், அதனுடைய தவறான கொள்கையை விமர்சிப்பதன் மூலம் நமது கட்சியின் சுயேச்சையான தன்மையை நிலை நிறுத்துகிறோம். அதைப்போலவே தமிழகத்தில் நமது கட்சியின் அடையாளத்தை, சுயேச்சையான தன்மையை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் நட்புக் கட்சிகளிடம் இருந்து

நம்மை வேறுபடுத்தி காட்டவேண்டிய அரசியல் அவசியம் உள்ளது. அதேசமயம் அடுத்த சட்டமன்ற தேர்தலுக்கும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் உருவான ஜனநாயக முற்போக்கு கூட்டணி அப்படியே தொடர வேண்டும் என்று தி.மு.க. தலைமை விரும்புகிறது. நமது சுயேச்சையான நிலைபாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு அணி என்ற தோற்றம் கூடாது என்பது நமது கட்சியின் நிலைபாடு. தேர்தல் வருகிறபோது, நமது உத்தி பற்றி அப்போது பரிசீலிப்போம்.

3.55 மேற்கண்ட அரசியல் நிலைபாட்டின் அடிப்படையில்தான் ஜெயேந்திரர் கைது, சுனாமி நிவாரணம் ஆகிய பிரச்சினைகளில் நாம் ஒரு சுயேச்சையான நிலைபாட்டை மேற்கொண்டோம். தி.மு.க. தலைமையுடன் நட்பு நீடிக்கிற அதே நேரத்தில் நாம் ஏற்றுக் கொள்ளாத கருத்தில் நாம் வேறுபடுத்தி காட்ட வேண்டியுள்ளது. அதே நேரத்தில் வகுப்புவாதத்திற்கு எதிராக அதிமுக அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக தி.மு.க., மதிமுக, பா.ம.க. போன்ற கட்சிகளுடன் கூட்டு நடவடிக்கைக்கும் செல்லவேண்டியுள்ளது.

3.56 தமிழகத்தில் நமது நட்புக் கட்சிகள், ஐக்கிய முற்போக்கு அணி உறுப்புகளாக உள்ளதையும், மதிமுக தவிர மற்ற கட்சிகள் ஆட்சியில் பங்கேற்பவர்களாக இருப்பதையும் கணக்கில் கொண்டு மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

3.57 மத்திய அரசின் கொள்கைகளுக்கு எதிரான இயக்கங்களை நமது தனித்த நடவடிக்கைகளாகவும், வாய்ப்புள்ள போது சி.பி.ஐ.யுடன் இணைந்தும் தான் மேற்கொள்ள முடியும் என்பதையும் மாநிலக்குழு கணக்கிலெடுத்தது. தேர்தல் உடன்பாடுகள், தேர்தலோடு முடிந்து விட்டாலும், மாநில அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக, வலிமை மிக்க இயக்கங்கள் தேவையாகின்றன. தேவையையொட்டி, இதற்கான கூட்டு இயக்கங்களில் நட்புக் கட்சிகளுடன் இணைந்து செயல்படவும் மாநிலக்குழு முடிவு செய்தது.

3.58 அதனடிப்படையில் கடந்த 7 மாதங்களாக கல்வி, வேலைவாய்ப்பு, மொழிப் பிரச்சினை, ஜவுளித் தொழில் பாதிப்புகள், தீண்டாமைக் கொடுமைகள், தொழிலாளர் நலன், விவசாயிகளுக்கு பாதிப்புகள் போன்ற பிரச்சினைகளில் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் மூலம் தனித்த நடவடிக்கைகளும் பெட்ரோலியப் பொருட்கள் விலை உயர்வு போன்றவற்றில் சிபிஐயுடன் இணந்தும், தொழிலாளர் பிரச்சினைகளில் அனைத்து சங்க ஒற்றுமையை உருவாக்க முயற்சித்தும், விவசாயிகளுக்கு நிவாரணம் கோருவது மற்றும் ஜெயேந்திரர் கைது பிரச்சினையில் பா.ஜ.க.வின் திசை திருப்பு முயற்சிகளை கண்டிப்பது ஆகியவற்றில் அனைத்து கட்சிகள் சார்பில் இயக்கங்களை நடத்தியும், மாநிலக்குழுவின் முடிவை அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இந்த அணுகுமுறையுடன் நமது நடவடிக்கைகளையும் இயக்கங்களையும் தொடர்ந்து கொண்டு செல்லவேண்டும்.

அஇஅதிமுக

3.59 அஇஅதிமுக அரசு தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான சாகசங்களை தொடருகிறது. மூன்றாண்டுகால ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் விரோத நடவடிக்கைகள் பலவற்றை நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின் அது ரத்து செய்துள்ளது. மக்கள் நல அரசு என பிரச்சாரம் செய்ய திட்டமிட்டு செயல்படுகிறது. தேர்தலில் கிடைத்த 30 சதவாக்குகளை அதிகப்படுத்தும் நோக்கோடு பல்வகை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மத்திய அரசுக்கு எதிரான உணர்வுகளை வலுப்படுத்த கிடைக்கும் வாய்ப்புகளை திட்டமிட்டு பயன்படுத்துகிறது. இருப்பினும் அஇஅதிமுக அரசின் மக்கள் விரோதத் தன்மைகளில், ஜனநாயக விரோதப் போக்குகளில், எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படவில்லை.

திமுக

3.60 திமுகழகத்தைப் பொறுத்த மட்டிலும், நாடாளுமன்ற தேர்தலில் உருவான அணிசேர்க்கை தொடர வேண்டும் என்பதை அறிவித்துக் கொண்டேயிருக்கிறது. அதே நேரத்தில், மத்தியில்

ஆளும் கட்சி என்கிற முறையில் தமிழக மக்கள் பிரச்சினைகளை கையிலெடுப்பதில் அவர்களுக்கு தயக்கம் உண்டு. மாநில சட்டமன்ற தேர்தல் தயாரிப்புகளை அக்கட்சி துவக்கியுள்ளது. மாநாடுகள், விழாக்கள் அனைத்தையும் அந்தப் பார்வையுடன்தான் திட்டமிடுகிறது. மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நல்ல நடவடிக்கைகளை தனது சாதனையாக சித்தரிக்கிறது. மக்களை பாதிக்கும் பிரச்சினைகளில் ஒரு சிலவற்றுக்கு மட்டும் ஆட்சேபனை தெரிவித்து கடிதம் எழுதுவதும் நடைமுறையாக உள்ளது. அதிமுக அரசுக்கு எதிரான உணர்வுகளை சாதகமாக்கிக் கொள்ள முயல்கிறபோது, மக்கள் பிரச்சினைகளில் தெளிவான நிலை எடுத்து போராட தயாராகவில்லை. அதிமுக எதிர்ப்பு என்ற நிலையிலிருந்து மட்டும் செயல்படும் போது ஏற்படும் சருக்கல் நிலை, ஜெயேந்திரர் கைது பிரச்சினையில் கூட வெளிப்படுகிறது.

காங்கிரஸ்

3.61 காங்கிரஸ் கட்சியுடன் த.மா.கா., ஜனநாயக பேரவை இணைந்துள்ளது. மத்திய ஆளும் கட்சி என்பதைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு கோஷ்டி சண்டைகள் தொடருகிறது. ஜனநாயக பேரவை இணைப்புக்கு பின், சண்டையை விடுத்து, இணைந்து பணியாற்றப் போவதாக அறிவித்துள்ள போதிலும், கோஷ்டிப் போக்கு தொடர்கிறது. காமராஜர் ஆட்சி, திராவிட கட்சிகளை தவிர்த்த அணி என்றெல்லாம் பேசுகிறார்கள். கட்சிகள் இணைப்புக்குப் பிறகு, வாக்கு வங்கி மீண்டும் ஓரளவு வலுப்பெற்றுள்ளது.

மதிமுக

3.62 ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் பங்கேற்காமல், அணியில் தொடருகிறது. தி.மு.க.வுடனான உறவில் நெருக்கமான நிலை இல்லை. வைகோவின் நடைபயணம் மூலம் ஊடகங்களில் தங்களை முன்னிறுத்துவதிலும், ஊழியர்களை உற்சாகப்படுத்துவதிலும் ஓரளவு வெற்றி கண்டார்கள். மக்கள் பிச்சினைகளில் இயக்கம் நடத்திட முன்முயற்சி இல்லை.

பா.ம.க.

3.63 பாட்டாளி மக்கள் கட்சி 2001இல் சட்டமன்ற தேர்தலின் போது வெளியே வந்து, மீண்டும் என்.டி.ஏ.வில் சேர்ந்து, நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின் மத்திய ஆட்சியில் மீண்டும் இடம் பிடித்துள்ளது. தி.மு.க. அணியில் தொடருவோம் என அவ்வப்போது கூறிக் கொண்டே, திருமாவளவன், பழ.நெடுமாறன், டாக்டர் சேதுராமன் உட்பட்டவர்களுடன் இணைந்து தமிழ் பாதுகாப்பு என்ற பேரால் அணி உருவாக்கி இயக்கம் நடத்தி வருகிறார்கள். இது தவிர பல்வேறு பிரச்சினைகளில் அறிவிப்புகள் செய்தும், சில பிரச்சினைகளில் போராட்டங்களை நடத்தியும் மக்கள் முன் நிற்க முயற்சிக்கிறது. இருப்பினும் பழைய வேகத்தை உருவாக்க முடியவில்லை.

சி.பி.ஐ.

3.64 சி.பி.ஐ.யை பொறுத்த மட்டிலும், நாடாளுமன்ற தேர்தலுக்கு முன் நம்முடன் இருந்த ஓரளவு நெருக்கமான நிலையும் தேர்தல் நெருங்கும் போது இல்லாமல் போயிற்று. தொகுதி உடன்பாடு முடிந்த பின் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க நாம் முன்முயற்சி எடுத்தோம். தேர்தலுக்கு பின்னும், திமுகவுடனான நெருக்கத்திற்கு பாதகம் ஏற்படக் கூடாது என்ற பார்வையுடன் தான் செயல்படுகிறார்கள். பொது இயக்கங்களை உருவாக்க, இடதுசாரி ஒற்றுமை நிலையிலிருந்து நமது முயற்சிகளை தொடர வேண்டியுள்ளது.

பா.ஜ.க.

3.65 அதிமுகவும் - திமுகவும் மாறி, மாறி கூட்டணி வைத்துக் கொண்டதை தமிழகத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள பா.ஜ.க. பயன்படுத்திக் கொண்டது. மத்தியில் ஆட்சியிலிருந்ததை பா.ஜ.க. முழுமையாக பயன்படுத்தியது. நாடாளுமன்ற தேர்தலில் அதிமுகவுடன் மீண்டும் உறவு ஏற்பட்டது அவர்களுக்கு பலனளிக்கவில்லை. தற்பொழுது ஜெயேந்திரர் கைது பிரச்சினையில் அதிமுக ஆட்சியை கலைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. இருப்பினும் மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தை பா.ஜ.க. - அதிமுக இரண்டும் எதிர்த்து வருகின்றன.

3.66 சங்பரிவாரத்தை சேர்ந்தவர்களென்றாலும், தனித்தனியாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த

ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, விஸ்வ இந்து பரிஷத் மற்றும் அவர்களது பல்வேறு அமைப்புகளின் மேடைகளில் பா.ஜ.க.வின் அகில இந்திய, மாநில தலைவர்கள் தற்போது பங்கேற்க துவங்கியுள்ளனர். ஜெயேந்திரர் கைது பிரச்சினையில், தனிமைப்பட்ட பின் சங்பரிவாரங்களின் இந்தக் கூட்டு செயல்பாடு அதிகரித்துள்ளது. மத உணர்வுகளைத் தூண்டி இந்துக்களை ஒன்றுபடுத்த முயல்வது, மதச் சிறுபான்மையினருக்கு எதிராகவும், இடதுசாரிகளுக்கு எதிராகவும் அவதூறு பரப்புவது, மத்திய அரசுக்கும், ஆளும் கூட்டணிக்கும் குறிப்பாக சோனியா காந்திக்கும் எதிராகப் பிரச்சாரம் மேற்கொள்வது என்பது அவர்களது செயல்முறையாக உள்ளது.

தலித் அமைப்புகள்

3.67 விடுதலைச் சிறுத்தைகள் அமைப்புக்கு வட மாவட்டங்களில் ஒரு பிரிவு தலித் மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது. சமீபகாலமாக பாமகவுடன் சில பிரச்சனைகளில் இணைந்து செயல்படுகிறது. மார்க்சிஸ்ட் எதிர்ப்பு நிலையை தொடர்ந்து மேற்கொள்கிறது. பழைய கோஷங்களை வைத்து தனது அணிகளை தொடர்ந்து உற்சாகப்படுத்திட இயலவில்லை என்பதால், இரட்டை வாக்குரிமை என்ற கோரிக்கையை முன்வைத்து தற்பொழுது பிரச்சாரம் செய்து வருகிறது.

3.68 புதிய தமிழகம் கட்சிக்கு தென்மாவட்டங்களில் ஏற்கெனவே இருந்த செல்வாக்கு குறைந்துள்ளது. இழந்த செல்வாக்கை மீண்டும் பெற இரட்டை வாக்குரிமை கோரி டெல்லியில் மாநாடு நடத்தியது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட முன்னாள் பிரதமர் வி.பி. சிங் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. நாமும் இக்கோரிக்கையை ஆதரிக்கவில்லை.

3.69 விடுதலை சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் நாடாளுமன்ற தேர்தலில், ஐக்கிய ஜனதா தளத்துடன் அணி அமைத்தன. ஜனநாயக முற்போக்கு அணியில் இடம் பெற இயலாத நிலையில், அவர்கள் தேசிய ஜனநாயக அணிக்கு உதவும் நிலைக்கு சென்றனர். ஆனால் கடந்த கால வாக்கு வங்கிகளைக் கூட தலைவர்கள் போட்டியிட்ட இரு தொகுதிகள் தவிர மற்ற தொகுதிகளில் பாதுகாக்க இயலவில்லை.

3.70 தலித் இயக்கங்களுடன் நமது அணுகுமுறை பற்றி கோவை மாநாட்டில் விவாதித்தோம். மாநிலம் தழுவிய கூட்டு இயக்கங்களை மேற்கொள்ள வாய்ப்பு இல்லை என்றும், ஸ்தல மட்டத்தில் பிரச்சினைகள் அடிப்படையில் இயக்கம் நடத்தலாமென்றும் முடிவு செய்தோம். இந்த அணுகுமுறையைத் தான் கடந்த மூன்று ஆண்டுகளில் பின் பற்றி வந்துள்ளோம்.

3.71 நாடாளுமன்ற தேர்தலில் இந்த இரண்டு கட்சிகளையும் தி.மு.க. கூட்டணியில் இணைத்து அதிமுக - பா.ஜ.க.வுக்கு எதிராக தொகுதி உடன்பாடு காண வேண்டும் என்பதே நமது நிலையாக இருந்தது.

3.72 பல்வேறு ஜாதீய அமைப்புகள் தங்களை அரசியல் கட்சிகளாக மாற்றிக் கொண்டாலும் தொடர்ந்து செயல்பட இயலவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் சூழலும் அவர்களுக்கு உதவவில்லை. ஆனால் ஜாதிய கட்சிகளை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

3.73 முஸ்லீம் லீக், தேசிய லீக் போன்றவை தேர்தலில் பங்கேற்கும் அரசியல் கட்சிகளாகவும், த.மு.மு.க. போன்ற பல அமைப்புகள் நேரடியாக தேர்தலில் பங்கேற்காத இயக்கங்களாகவும் முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவைகளாக உள்ளன. முஸ்லீம் மக்களில் சிறு பகுதியினரிடமே முஸ்லீம் லீக், தேசிய லீக்கிற்கு பிடிமானமுண்டு. இளைஞர்களிடையே த.மு.மு.க.வுக்கு ஓரளவு செல்வாக்கு உண்டு. மதவாத, அடிப்படைவாத கருத்துக்களை வலியுறுத்தும் பல குழுக்கள் முஸ்லீம் மக்களிடையே செயல்பட்டு வருகின்றன.

திராவிடர் கழகம்

3.74 கண்மூடித்தனமாக அஇஅதிமுகவை ஆதரித்ததிலிருந்து விலகி, நாடாளுமன்ற தேர்தலின் போது ஜனநாயக முற்போக்கு அணிக்கு ஆதரவு தெரிவித்து, பிரச்சாரமும் செய்தது. அந்த நிலை தேர்தலுக்குப் பிறகும் தொடருகிறது.

375 மேலும் பார்வர்ட் பிளாக் கட்சி பிளவுப்பட்டு சந்தானம் தலைமையில் ஒரு குழுவும், பி.வி. கதிரவன் தலைமையில் மற்றொரு குழுவும் செயல்பட்டு வருகிறது. சந்தானம் தலைமையிலான குழு அதிமுக ஆதரவு நிலை எடுத்து வருகிறது. பி.வி. கதிரவன் தலைமையிலான குழு திமுக ஆதரவு நிலை எடுத்து வருகிறது.

376 தமிழகத்தில் தீவிரவாதக்குழுக்களும் சில மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

தன்னார்வக் குழுக்கள்

377 ஏராளமான எண்ணிக்கையில் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. சாதாரண மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளில் கவனம் செலுத்திடும் அமைப்புகள், உலகமய - தாராளமய எதிர்ப்பு, குழந்தை உழைப்பு எதிர்ப்பு, பெண்களின் உரிமைகள் பாதுகாப்பு, மனித உரிமைகள் பாதுகாப்பு என பல்வகைப் பிரச்சினைகளை கையிலெடுத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பல அமைப்புகள், ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டும் அமைப்புகளாக உள்ளன. பெருமளவிலான நிதி ஆதாரங்களுடன் செயல்படுகின்றன. வெளிநாட்டு நிதி பெருமளவில் வருகிறது. பொதுவாகப் பார்த்தால், தன்னார்வக்குழுக்கள் மக்கள் போராட்டங்களை திசை திருப்பும் அமைப்புகளாகவே உள்ளன. இந்த அமைப்புகளில் சில, மக்கள் இயக்கங்கள், போராட்டங்கள் வலுப்பெற வேண்டும் என்ற நோக்கோடு நமது வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து செயல்பட முன்வருவதுண்டு. பிரச்சினைகளின் தன்மை, அமைப்புகள் மற்றும் அவற்றின் பொறுப்பாளர்கள் தன்மைக்கேற்ப நமது அணுகுமுறை உருவாக்கப்பட வேண்டும்.

ஐக்கிய முன்னணி தந்திரம் குறித்து

378 தமிழக அரசியல் நிலைமையையும் இதர கட்சிகளின் பொதுவான தன்மைகளையும் ஆய்வு செய்யும் போது, இந்தக் கட்சிகளுடனான நமது அணுகுமுறையின் அடிப்படை அம்சங்களை நாம் மறந்து விடக் கூடாது.

379 மக்கள் இயக்கங்களை உருவாக்குவதற்கான கூட்டுப் போராட்டங்கள் மற்றும் பிரதான எதிரியை பலவீனப்படுத்தும் நோக்கோடு தேர்தல்களின் போது உருவாக்கப்படும் உடன்பாடுகள் பற்றிய நமது அணுகுமுறையை ஐக்கிய முன்னணி தந்திரம் என குறிப்பிடுகிறோம்.

3.80 இது பற்றி 17வது கட்சி காங்கிரஸ் ஸ்தாபன அறிக்கையில், கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"கட்சியின் முன்னேற்றத்திற்கு ஐக்கிய முன்னணி தந்திரம் அவசியமானதாகும். ஐக்கிய முன்னணிகள் பல்வகையானவை. மக்கள் இயக்கங்களை வளர்ப்பதற்காக இதர கட்சிகளுடனும் அமைப்புகளுடனும் பொதுப் பிரச்சினைகளில் கூட்டு நடவடிக்கைகள் இருக்கலாம். குறிப்பிட்ட அரசியல் பிரச்சினைகளில் மக்களை திரட்டுவதற்காகவும், பிரச்சாரங்கள், போராட்டங்களை நடத்துவதற்காகவும் அரசியல் கட்சிகளுடன் ஐக்கிய முன்னணி இருக்கலாம். தேர்தல் போராட்டங்களில் நமது உடனடி இலக்குகளை அடைவதற்கோ தேர்தல் போராட்டங்களில் பலனுள்ள முறையில் தலையிட்டு, அரசியல் நிலைமையில் மாற்றம் கொண்டு வருவதற்கோ என குறிப்பிட்ட நோக்கத்துடன் முதலாளித்துவ கட்சிகள் உட்பட உள்ள இதர கட்சிகளுடன், தேர்தல் காலங்களில் உடன்பாடு காணப்படலாம். ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த மட்டிலும் ஐக்கிய முன்னணி தந்திரம் என்பது, கட்சியின் சுயேச்சையான நடவடிக்கைகளுடன் தெளிவாக இணைந்தே செல்ல வேண்டியதாகும். குறிப்பாக முதலாளித்துவ கட்சிகளுடன் ஒன்றுபடும் போது, பொது மேடைகளோ, கூட்டான தேர்தல் மேடைகளோ உருவானாலும், கட்சி தனது சொந்த மேடையில் இருந்து சுயேச்சையான அரசியல் நிலையையும் வழிமுறைகளையும், மிகுந்த சிரத்தைகளோடு மக்கள் முன் விளக்க வேண்டும். இந்த கட்சிகளுடன் ஐக்கிய முன்னணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் போதே, கொள்கைரீதியாகவும், தத்துவார்த்த ரீதியாகவுமுள்ள முதலாளித்துவ கட்சிகளின் நிலைபாடுகளிலிருந்து நமது நிலைபாட்டை வேறுபடுத்திக் காட்டுவதும் அவசியமாகும்.

ஐக்கிய முன்னணி தந்திரத்தின் மற்றுமொரு முக்கிய அம்சம் என்னவென்றால், கூட்டு மேடைகள் மற்றும் இயக்கங்கள் நடவடிக்கைகள் மூலம் இதர கட்சிகளைப் பின்பற்றும் மக்களை அணுகுவதற்கும் அவர்களிடையே செல்வாக்கு பெறுவதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஐக்கிய முன்னணி தந்திரம் சரியாக பயன்படுத்தப்படுவதன் மூலம், கட்சி அணி சேரும் முதலாளித்துவ கட்சிகளின் செல்வாக்கிலுள்ள மக்கள் பகுதிகளை வென்றெடுப்பது சாத்தியமாக வேண்டும். முதலாளித்துவ கட்சிகளின் செல்வாக்கின் கீழ் உள்ள மக்களை மென்மேலும் வென்றெடுத்து கட்சி மற்றும் இடதுசாரி - ஜனநாயக சக்திகளின் செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதன் மூலமாகவே வர்க்க சக்திகளின் பலாபலத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.''

3.81 தமிழகத்தில், கட்சியின் செல்வாக்கை அதிகப்படுத்தும் முறையில் இடதுசாரி - ஜனநாயக சக்திகளுக்கு வளர்ச்சி ஏற்பட்டு, வர்க்க பலாபலத்தில் நமக்கு சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதே தற்போதைய பிரதான கடமையாக உள்ளது.

3.82 இதற்கேற்றவாறு, 17வது அகில இந்திய மாநாடு சுட்டிக்காட்டிய முறையில் நமது ஐக்கிய முன்னணி தந்திர அமலாக்கத்தை உத்திரவாதப்படுத்த வேண்டும்.

3.83 சரியான ஐக்கிய முன்னணி தந்திரத்தின் ஒரு பகுதி தான் நமது சுயேச்சையான நடவடிக்கைகள் என்பதை 17வது காங்கிரஸ் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. ஆனால் சுயேச்சையான இயக்கங்கள் குறித்த புரிதல் போதுமானதாக இல்லை என அதே மாநாட்டு அரசியல் ஸ்தாபன அறிக்கை கூறுகிறது.

''கட்சியின் சுயேச்சையான பாத்திரமும் நடவடிக்கைகளும் என்றால் என்ன என்பது குறித்து சரியான புரிதல் இருக்கிறதா என்பது சந்தேகமே. அரசின் கொள்கைகள் மற்றும் முக்கிய அரசியல் வளர்ச்சிப்போக்குகள், மக்கள் வாழ்க்கை மீதான தாக்குதல்களுக்கு எதிராக பிரச்சாரங்கள், கூட்டங்கள், தர்ணாக்கள் நடத்துவதற்காக கட்சி அவ்வப்போது வெளியிடும் வேண்டுகோள்களையே சுயேச்சையான இயக்கம் என பொதுவாக புரிந்து கொள்ளப்படுகிறது. இவை தேவையானவையாக இருந்தாலும், வர்க்க சுரண்டலுக்கு எதிராக பல்வேறு பகுதி உழைக்கும் மக்களின் போராட்டங்களை கட்சியின் தலைமையில் வளர்த்தெடுப்பதே பிரதான முயற்சியாக இருக்க வேண்டும். வர்க்கப் போராட்டங்கள் இப்படித்தான் முன்னேற முடியும். போராட்டங்களை வளர்ப்பதும், அந்தந்த கோரிக்கைகள் அடிப்படையில் அவற்றை தொடர்ந்து கொண்டு செல்வதும், சுயேச்சை நடவடிக்கைகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். அப்படிப்பட்ட போராட்டங்களை வர்க்க - வெகுஜன அமைப்புகள் நடத்தும் போது, கட்சி தலையிட்டு, ஆதரவளிக்க வேண்டும். இதற்கு கட்சி கமிட்டிகள் மக்களின் நிலைமைகளை கற்றறிந்து, ஸ்தூலமான நிலைமைக்கு ஏற்ற கோரிக்கைகளை உருவாக்க வேண்டும். குறிப்பாக கிராமப்புறங்களில் விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் திரட்டுவதற்கும் ஸ்தாபனப்படுத்துவதற்கும் இந்த அணுகுமுறை மிகவும் அவசியமாகும்.''

3.84 17வது அகில இந்திய மாநாடு, ஐக்கிய முன்னணித் தந்திரம் மற்றும் சுயேச்சையான இயக்கம் குறித்து சுட்டிக்காட்டியுள்ள வழிகாட்டுதலுக்கேற்ப, இந்த மூன்றாண்டுகால பணிகள் நடைபெற்றுள்ளனவா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும்.

3.85 தேர்தலுக்கான அணிசேர்க்கை என்பதில் 14வது நாடாளுமன்ற தேர்தல் குறித்த மத்திய குழுவின் பரிசீலனை அறிக்கை கீழ்வருமாறு சுட்டிக்காட்டுகிறது.

''தமிழ்நாட்டில் நமது கட்சியின் உடன்பாடு என்பது திமுகவுடன் தான் இருந்தது. திமுகவானது காங்கிரஸ், பாமக, மதிமுக, முஸ்லீம் லீக் மற்றும் சிபிஐ ஆகிய கட்சிகளுடன் உடன்பாடு கண்டு விரிவான கூட்டணியை ஏற்படுத்தியது. தமிழ் நாட்டில் நடத்தப்படும் தேர்தல் பிரச்சார முறை குறித்த நமது கடந்தகால அனுபவத்தின் அடிப்படையில் பார்த்தால் அனைத்து கட்சிகளும் ஒரு முன்னணியாக அல்லது கூட்டணி என்ற வகையில் தேர்தலை சந்திக்கும். எனவே இந்த கூட்டுப் பிரச்சாரத்தோடு கூடவே கட்சி தனக்கென தனி மேடைபோட்டு தேர்தல் கூட்டங்களை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ்நாடு மாநிலக்குழுவின் அறிக்கைப்படி நமது கட்சியின் சார்பில் மாநிலம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களும், தெருமுனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. எனினும் நாம் ஏற்பாடு செய்த

பொதுக்கூட்டங்களும் கூட, ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் தலைவர்களும் அக்கூட்டங்களில் பங்குகொண்டு இறுதியில் நமது கட்சியின் சார்பில் சிறப்புப் பேச்சாளர் என்ற வகையில் மாறி கூட்டுப் பொதுக்கூட்டமாக பரிணமித்தது. நமது சுயேச்சையான நிலைபாட்டை எடுத்துக்கூற இந்தக் கூட்டங்கள் உதவிய போதிலும், இக்கூட்டம் இதர கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட நிலையில் சில சங்கடங்களையும் ஏற்படுத்தியது.''

3.86 நமது வருங்கால நடவடிக்கைகள் அனைத்தும் மத்திய கமிட்டியின் மேற்குறிப்பிட்ட அனைத்து வழிகாட்டுதல்களுக்கும் விமர்சனங்களுக்கும் ஏற்றவாறு அமைவதற்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் அடிப்படையில்தான் கடந்த மூன்று ஆண்டுகாலத்தில் நாம் ஆற்றியுள்ள பணிகளை பரிசீலிக்க வேண்டும்.

புதுச்சேரி யூனியன் பிரதேச நிலைமை

3.87 காங்கிரஸ் தனிப் பெரும் கட்சியாகவும்; 30 பேர் கொண்ட புதுவை சட்டப் பேரவையில் 19 பேர் பலத்துடன் ஆளுகிற கட்சியாகவும் உள்ளது. கோஷ்டியாக உள்ள போதிலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதில் ஒற்றுமையாக உள்ளனர்.

3.88 தாராளமய கொள்கை செயலாக்கத்தால் தொழில் நசிவு, வேலை இழப்பு அதிகரித்துள்ளன. புதிய தொழில்கள் - வேலை வாய்ப்புக்கள் இல்லை. பட்ஜெட்டில் திட்டச் செலவிற்கு குறைவான நிதியே ஒதுக்கப்படுகிறது. கிராமப்புற தொழில் பாதுகாப்பு மற்றும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் இல்லாததால் கிராமப்புற வேலைவாய்ப்பு சுருங்கி வருகிறது. உணவுக்கான வேலைத்திட்ட செயலாக்க குறைபாடுகளால் கிராமப்புற வறுமை அதிகரித்துள்ளது. 10 லட்சம் மக்கள் தொகையுள்ள புதுவை பிரதேசத்தில் 1 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வேலை கேட்டு பதிவு செய்துள்ளனர்.

3.89 பொறியியல், மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், சுகாதாரப் பணிகள், துறைமுகம் தூர்வாருதல் போன்றவை தனியார் கொள்ளைக்கு விடப்படுகின்றன. சட்டத்திற்கு விரோதமாக ஒப்பந்த தொழிலாளர் முறை - குறைந்த கூலி - உழைப்பு நேரம் அதிகரிப்பு என உழைப்புச் சுரண்டல் அதிகரித்துள்ளது.

3.90 வீட்டுவரி, பேருந்து - மின்கட்டணங்கள், பால்விலை உயர்த்தப்பட்டுள்ளன. வீடு - நிலம் அபகரிப்பு, கொலை - கொள்ளை போன்ற சமூக விரோத செயல்களுக்கு காவல்துறை துணை நிற்கிறது. உள்ளாட்சி தேர்தல் 36 ஆண்டுகளாக நடைபெறவில்லை.

3.91 அரசு நலத்திட்டங்கள், நிவாரண நடவடிக்கைகள், தனிநபர் உதவிகள், மக்களோடு நேரடி தொடர்புகள், குடும்ப நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் தங்களது தளங்களை நிலை நிறுத்திக் கொள்கிறது காங்கிரஸ் கட்சி. தற்போது மத்தியில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமானதாகும்.

3.92 ஆட்சியின் தவறுகள் மற்றும் நடவடிக்கைகளால் தொழிலாளர்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்களிடம் அதிருப்தி ஏற்பட்டு வருகிறது. இதை ஒருமுகப்படுத்தி தொடர்ச்சியான கிளர்ச்சிப் பிரச்சாரத்தையும், போராட்டங்களையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. உள்ளாட்சித் தேர்தல் நடத்த வற்புறுத்தி தொடர் இயக்கங்கள் நடத்துகிறோம். வலுவான கூட்டு இயக்கம் நடத்த வேண்டும்.

3.93 நமது அரசியல் தலையீடுகள் - முன்முயற்சியால் நமது செல்வாக்கு அதிகரித்துள்ளது. சுயேச்சையான செயல்பாடுகள், ஸ்தல மட்ட பணிகள் அதிகரித்துள்ளன. வர்க்க - வெகுஜன அமைப்புகள் ஓரளவு செயல்படுகின்றன. எனினும் ஸ்தாபன பலம் உயரவில்லை. மக்கள் செல்வாக்கு தளங்கள் இல்லாததால் நமது இயக்கங்கள் - செயல்பாடுகள் அடையாளப்பூர்வமாகவே உள்ளன.

394 திமுக 6 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பிரதான எதிர்கட்சியெனினும் காங்கிரஸ் ஆட்சியின் தவறுகளை எதிர்த்து போராடுவதில்லை. அறிக்கைகளோடு நிறுத்திக் கொள்கிறது. வெற்றி பெற்றுள்ள தொகுதிகளை தக்க வைக்கும் முயற்சிகளே பிரதான பணியாக உள்ளது.

395 அதிமுக பரவலான செல்வாக்குடன் இல்லையெனினும் கிராமப்பகுதிகளில் மக்கள் தளங்கள் உள்ளன. பாமக செயல்பாடுகள் குறைவே. எனினும் 'புதுச்சேரி ஆட்சி' கனவு தொடர்கிறது. மத்திய பதவிகளை முன்னிறுத்தி செயல்படுகிறது. சிபிஐ மக்கள் பிரச்சினைகளுக்கான இயக்கங்களை நடத்துகிறது - அனைத்தும் அடையாளப் பூர்வமாக உள்ளன. நம்மோடு இணைந்து நிற்பதில் தயக்கம் காட்டுகிறது.

396 பாஜகவுக்கு ஒரு எம்.எல்.ஏ., உண்டு. நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்றாலும் வாக்குகள் கூடுதலாகவே பெற்றுள்ளது. முந்தைய ஆளுநரை பயன்படுத்தி தொடர்புகளை விஸ்தரித்துள்ளது. சாதி, மதம், கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், கோவில் விழாக்கள் மூலம் விஸ்தரிப்பு முயற்சிகள் உள்ளன.

397 தலித் மக்கள் அமைப்புகள் சில உள்ளன. இதில் டிபிஐ தொடர்புகளே அதிகம். சில கிராமங்களில் வலுவாக உள்ளனர். அரசு ஊழியர், ஆட்டோ - சுமைப்பணி, தனியார் தொழிற்சாலைகளில் தலித்துகளை தனிச் சங்கமாக சேர்க்கும் முயற்சி எடுக்கிறது.

❑❑❑

நடைபெற்ற இயக்கங்கள்

கடந்த 3 ஆண்டுகளில் நடைபெற்ற இயக்கங்கள் போராட்டங்கள், நாம் செய்த பணிகள் அனைத்தையும் இங்கே தொகுப்பது அறிக்கையின் நோக்கம் அல்ல; நமது அரசியல் நடைமுறை கொள்கையை அமலாக்கிடும் அளவிற்கு மேற்கொள்ளபட்ட பிரதானமானவற்றை பரிசீலிப்போம்.

இக்காலத்தில் அரசியல் - பொருளாதார - சமூக - ஸ்தலப் பிரச்சினைகள் மீது கட்சி தொடர்ச்சியான பல இயக்கங்களை நடத்தியுள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

4.1 ஆப்கானிஸ்தானத்தின் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் - இதன் தொடர்ச்சியாக ஈராக், பேரழிவு ஆயுதங்களைக் கொண்டுள்ளது என்று சொல்லி ஈராக்கின் எண்ணெய் வளங்களை கொள்ளையடிக்க ஈராக்கை ஆக்கிரமிக்க யுத்த முஸ்தீபுகளை மேற்கொண்ட நிலையிலேயே யுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. தோழர் பிரகாஷ்காரத் எழுதிய போருக்கான உண்மைக்காரணங்களை விளக்கும் பிரசுரத்தை (2 லட்சம்) பரவலாக மக்களிடம் கொண்டு சென்றோம்.

4.2 நமது முன்முயற்சியில் கலைஞர்கள், வர்க்க வெகுஜன அமைப்புகள், பிரமுகர்கள், அறிவியலாளர்கள் ஆகியோரைக் கொண்ட யுத்தஎதிர்ப்புக்குழு பிரண்ட் லைன் ஆசிரியர் என். ராம் தலைமையில் அமைக்கப்பட்டது. இக்குழுவின் முடிவிற்கேற்ப பிப்ரவரி 27, 2003 அன்று சென்னையில் இவ்வியக்கம் சக்தியாக நடைபெற்றது.

4.3 சி.பி.எம். - சி.பி.ஐ. - காங்கிரஸ் மற்றும் திராவிடர் கழகமும், யுத்த எதிர்ப்பு உணர்வு கொண்ட பொது மக்களும் இந்த இயக்கத்தில் பங்கேற்று கண்டனம் முழங்கினர்.

4.4 யுத்த எதிர்ப்புக்குழுவின் அறைகூவலை ஏற்று மார்ச் 10, 2003 அன்று தமிழகமெங்கும் பெருந்திரள் மக்கள் பங்கேற்புடன் கண்டன பேரணிகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன. நமது வர்க்க - வெகுஜன அமைப்புகளும் மத்திய தர அமைப்புகளும் திரளாக பங்கேற்று ஆர்ப்பரித்தன.

4.5 ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த யுத்தத்தினால், பெரும் உயிர்ச் சேதமும், பொருட்கள் சேதமும் ஏற்பட்டன. லட்சக்கணக்கில் மக்கள் மருத்துவ உதவியின்றி தவித்தனர். இந்நிலையில் ஈராக் மக்களுக்கு உதவிடும் வகையில் அரசியல் தலைமைக்குழு அறைகூவலுக்கேற்ப மருத்துவ நிதி திரட்டிட ஏப்ரல் 17, 2003 அன்று மக்களிடம் சென்றோம். ரூ. 3,39,783 வசூலித்து மத்தியக்குழு மூலம் (மருந்தாக) அனுப்பினோம்.

4.6 பா.ஜ.க. அரசின் அழைப்பின் பேரில் செப்டம்பர் 9, 2003ல், பாலஸ்தீனிய மக்களை படுகொலை செய்யும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷாரோன் இந்தியா வருகைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், சென்னையில் செப்டம்பர் 8 அன்று கண்டன கருத்தரங்கம் நடைபெற்றது. சி.பி.ஐ. மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகளும் பங்கேற்றன.

4.7 ஈராக் மீது அமெரிக்கா ராணுவத் தாக்குதல் நடத்திய மார்ச் 20ஆம் தேதியை யுத்த எதிர்ப்பு தினமாக அனுஷ்டிக்க சர்வதேச அளவில் அறைகூவல் விடுக்கப்பட்டது. 2004 மார்ச் 20 அன்று உலகெங்கும் நடைபெற்ற யுத்த எதிர்ப்பு இயக்கங்களோடு இணைந்து கண்டனம் முழங்கும் வகையில் அரசியல் தலைமைக்குழு முடிவிற்கேற்ப ஈராக்கிலிருந்து அமெரிக்க ஏகாதிபத்தியமே வெளியேறு! இராக் நாட்டின் இறையாண்மையையும் மக்களின் ஜனநாயக உணர்வையும் மதித்து நட! என்ற முழக்கத்தோடு தமிழக மாநகர் மையங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தமிழகமெங்கும் சுவரொட்டி இயக்கமும் நடைபெற்றது.

4.8 ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலை நமது மேடையில் தொடர்ந்து நாம் கொண்டு செல்கிறோம். ஏகாதிபத்திய சக்திகளுக்கு அடிபணிந்து செயல்படும் பா.ஜ.க.வை அம்பலப்படுத்தும் பிரச்சாரத்தையும் கொண்டு செல்கிறோம்.

4.9 அமெரிக்கா ஈராக்கை தாக்குகிறபோது, ஈராக் மக்களுக்கு இந்திய மக்களின் ஆதரவை தெரிவிக்கும் வகையில் சென்ற குழுவில் தோழர் அ. சவுந்தரராசன் இடம் பெற்றிருந்தார். அவருடைய அனுபவத்தை விளக்குகிற அடிப்படையில் மாநிலத்தில் பல கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பினுடைய ஒரு பகுதியாக அமைந்தது.

4.10 மாநிலத்தில் நாம் நடத்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் மற்ற இயக்கங்களில் கலந்து கொண்டது போல், நமது கட்சி அணிகள் பங்கேற்பு இல்லை. 17வது க்ட்சிக் காங்கிரஸ் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தில் நாம் ஆற்ற வேண்டிய பங்கினை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று சுட்டிக்காட்டியதை மனதில் வைத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திலும் நமது கட்சி அணிகளை முழுமையாக பங்கேற்க வைக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக, மதச்சார்பின்மை - மத நல்லிணக்கத்திற்கு ஆதரவாக

4.11 குஜராத் கோத்ரா ரயில் நிலையத்தில் 58 பேர் எரிப்பு சம்பவத்தைக் கண்டித்தும், தொடர்ந்து நரேந்திர மோடி அரசின் ஆதரவோடு நடத்தப்பட்ட கலவரம் - படுகொலைகள் ஆகியவற்றை கண்டித்தும், சுயேச்சையாகவும், கூட்டாகவும் தமிழகம் முழுவதும் பரவலாக இயக்கங்கள் நடைபெற்றன. "குருதியில் நனையும் குஜராத்" எனும் சிறு பிரசுரம் லட்சம் பிரதிகளுக்கு மேல் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன.

4.12 மார்ச் 6, 2002 அன்று சி.பி.எம். - சி.பி.ஐ., த.மா.கா. சார்பில் சென்னை மற்றும் 5 மாநகராட்சி மையங்களிலும் "தேச ஒற்றுமை நாள்" கூட்டங்கள் நடைபெற்றன. ஏப்ரல் 17, 2002 அன்று மக்கள் முன்னணி அறைகூவலை ஏற்று சி.பி.எம். - சி.பி.ஐ. இடதுசாரி கட்சிகளின் முடிவிற்கேற்ப 2002 அக்டோபர் 2 அன்று மத நல்லிணக்க உறுதிமொழியேற்புக் கூட்டங்கள், தமிழக மாவட்டத் தலைநகரங்களிலும் - மக்கள் கூடும் மையங்களிலும் நடைபெற்றன.

4.13 நெல்லையில் சி.பி.எம். முன்முயற்சியில் சி.பி.ஐ. - த.மா.கா. மற்றும் இஸ்லாமிய சமூகப் பெரியவர்கள் இணைந்து 3000 பேர் பங்கேற்ற மத நல்லிணக்க பேரணி மாநாடு சிறப்பாக நடைபெற்றது. பங்கேற்பில் இஸ்லாமிய மக்கள் 2500 பேர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். குஜராத் சம்பவத்தால் அச்சமும், சோகமும் கொண்ட இஸ்லாமிய மக்களுக்கு நம்பிக்கையளிக்க இம்மாநாடு - பேரணி பயனளித்தது. அதே சமயம் இத்தகைய இயக்கங்களில் கட்சி அணிகளையும், பெரும்பான்மை சமூக மக்களையும் கூடுதலாக திரட்டாவிட்டால் நாம் சிறுபான்மை வகுப்புவாதத்திற்கு சாதகமாக செயலாற்றுகிறோம் என்ற எண்ணத்தை தூண்டுவதற்கு வழிவகுத்திடும் அபாயம் உள்ளதையும் இப்பேரணி - மாநாடு உணர்த்தியது.

4.14 மேற்கண்ட நடவடிக்கைகளினால் குஜராத் சம்பவத்தின் பின் உள்ள பா.ஜ.க. மற்றும் இந்துத்துவ சக்திகளையும், அதிமுக, திமுக, பா.ம.க., மதிமுக ஆகிய கட்சிகளின் தவறான நிலைபாட்டையும் ஓரளவு, அம்பலப்படுத்த முடிந்தது.

4.15 கோத்ரா - குஜராத் சம்பவங்களால் தமிழகத்தில் சில பாதிப்புகள் வெளிப்பட்டன. வி.எச்.பி.- பிரச்சாரம் ஆத்திரமூட்டலையும் பதட்ட நிலைமையையும் ஏற்படுத்தின. அரசாட்சியில் மடாதிபதிகளின் நேரடியான தலையீடு நிலைமையை மோசமாக்கியது. கோவை, நீலகிரி மாவட்டங்களின் நிலைமை நீறுபூத்த நெருப்பாகவே இருந்தது. சிறுபான்மை மத அடிப்படைவாதிகளும், நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து செயல்படவில்லை. சில இஸ்லாமிய பெரியவர்கள் மாநில தலைமையைச் சந்தித்து கவலை தெரிவித்தனர். அதிமுக அரசு மௌனம் சாதித்தது.

4.16 இத்தகு நிலையில் பா.ஜ.க. சங்பரிவாரங்களின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைக்ளையும், பெரும்பான்மை - சிறுபான்மை மதவெறியையும் எதிர்த்து மதச்சார்பற்ற சக்திகளை ஒன்றுபடுத்தும் வகையிலும், திமுக, பா.ம.க., அதிமுக, மதிமுக போன்ற கட்சிகளின் சந்தர்ப்பவாத நிலைபாடுகளை அம்பலப்படுத்தியும் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்ல முடிவு செய்தோம்.

4.17 இதற்கேற்ப தமிழகமெங்கும் தட்டிபோர்டுகள், சுவரொட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுர விநியோகம் என்ற வடிவங்களில் விரிவான பகுதி மக்களிடம் 'மக்கள் ஒற்றுமை - நல்லிணக்க' பிரச்சாரம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. மதச்சார்பின்மை - மக்கள் ஒற்றுமை விரும்பும் மக்களிடம் இவ்வியக்கம் நல்ல வரவேற்பை பெற்றது. சிறுபான்மை மக்களும் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். நிலைமையின் தீவிரம் உணர்ந்து இப்பிரச்சாரப் பணியை மேற்கொண்டது - நம் கட்சி அணிகளின் அரசியல் உணர்வை வெளிப்படுத்தியது. எனினும், நமது சக்தியை வெளிப்படுத்துவதாக அமையவில்லை. உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தலையீடாக இவ்வியக்கம் அமைந்தது.

4.18 பா.ஜ.க.வின் வகுப்புவாத செயல்பாட்டிற்கு துணை நிற்கும் வகையில் அதிமுக அரசு கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் கொணர்ந்தது. இதை எதிர்த்து கண்டன இயக்கங்களையும், பிரச்சாரத்தையும் நாம் பரவலாக நடத்தினோம். பல தரப்பினரும் கண்டன இயக்கங்கள் - கூட்டங்கள் நடத்தினர்.

4.19 மதுரையில் மதமாற்ற தடைச் சட்ட எதிர்ப்பு - மத நல்லிணக்க சிறப்பு மாநாடு 28.02.2003ல் நடத்தினோம். சி.பி.எம். - சி.பி.ஐ., காங்கிரஸ் மற்றும் பால பிரஜாபதி அடிகளார் உரை நிகழ்த்தினர். 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டது மாநாட்டிற்கு சிறப்பைச் சேர்த்தது. இது அதிமுக அரசுக்கு வலுவான எதிர்ப்பாக அமைந்தது.

4.20 மார்ச் 23, 2003-இல் வடசென்னையில் புளியந்தோப்பு பகுதியிலும், ஏப்ரல் 5, 2003-இல் தென்சென்னை திருவல்லிக் கேணியிலும் மக்கள் ஒற்றுமை - மத நல்லிணக்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவ்விரு நிகழ்ச்சிகளிலும் இஸ்லாமிய மக்கள் திரளானோர் பங்கேற்றனர். ராமேஸ்வரம் பகுதியில் கிருத்துவ மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சங்பரிவார் நடவடிக்கைகள் அதிகரித்து வந்த நிலையில் - அப்பகுதியில் நல்லிணக்கத்தை வலியுறுத்தி ஜூலை 2003ல் சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது. பெருந்திரளான மக்கள் பங்கேற்புடன் மாநாடு சிறப்பாக நடந்தது.

4.21 மதமாற்ற தடைச் சட்டத்தை திரும்பப் பெற மறுத்த அதிமுக அரசு - மக்களவைத் தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து சட்டத்தை திரும்பப் பெற்றது.

4.22 பெரும்பான்மை - சிறுபான்மை வகுப்புவாத நடவடிக்கைகளை எதிர் கொள்ள உதவிடும் வகையில் "வகுப்புவாதம் குறித்து" மாநில ஆய்வரங்கம் ஒன்று 2, 3 பிப்ரவரி 2003இல் கோவையில் நடத்தப்பட்டது. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாநில அளவில் அழைக்கப்பட்ட 62 பேர் இதில் கலந்து கொண்டனர். பேராசிரியர் கே.என். பணிக்கர் விளக்கவுரை நிகழ்த்தினார். மிகவும் பயனுள்ளதாக ஆய்வரங்கம் அமைந்தது. இதனைத் தொடர்ந்து அரசியல், தத்துவ, கலாச்சார தளங்களில் வகுப்புவாதத்தை எதிர்கொள்ளும் மாற்று நடவடிக்கைகள் பற்றிய வழிகாட்டுதல் குறிப்பை இறுதிப்படுத்தி நவம்பர் 2003இல் அனைத்து கமிட்டிகளுக்கும் அனுப்பினோம். இந்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மாவட்ட, ஸ்தல மட்டங்களில் உள்ள பிரத்யேக நிலைமைக்கேற்ப மாற்று நடவடிக்கைகளை உருவாக்கி செயல்பட முடிவு செய்தோம். இந்த வழிகாட்டுதல்கள் மாவட்டங்களில் இன்னும் செயல் வடிவம் பெறவில்லை. சிறுபான்மை மக்களை திரட்டிட மதநல்லிணக்க அமைப்பு ஒன்றை உருவாக்கிட நெல்லை மாவட்டக்குழு எடுத்த முன்முயற்சி குறிப்பிடத்தக்கது.

4.23 வகுப்புவாத எதிர்ப்பில் முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ கட்சிகள் பல நேரங்களில் உறுதியான நிலையெடுத்து செயல்பட முன்வருவதில்லை. தி.மு.க. - அதிமுக போன்ற கட்சிகள் மாறி, மாறி பா.ஜ.க.வுடன் கூட்டு வைத்துக் கொண்டபோதெல்லாம் அவர்கள் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக நின்றார்கள். சந்தர்ப்பவாதமே அவர்களது சாரமாகும். எனினும் மதச்சார்பின்மைக்கான போரில் முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ கட்சிகளை வகுப்புவாத எதிர்ப்பு மேடையில் அணிதிரட்ட வேண்டியுள்ளது. இதனைச் செய்து கொண்டே வாழ்க்கைக்கான கோரிக்கைகளின் அடிப்படையிலும், இடது - ஜனநாயக மாற்று அரசியலுக்கான போராட்டத்தின் மூலமும் உழைப்பாளி மக்களிடம் மதம் கடந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதின் மூலமும்தான் வகுப்புவாத சக்திகளை எதிர்த்த போராட்டம் வலுமிக்கதாய் அமையும். இந்த ஒற்றுமை பலப்பட - பலப்பட ஆற்றல் கொண்ட அரசியல் சக்தியாக இடதுசாரி இயக்கம் உருக்கொள்ளும். மதச்சார்பற்ற

மக்களை, ஜனநாயக எண்ணம் கொண்டோரை ஈர்க்கும் அரசியல் சக்தியாகவும் இடதுசாரி இயக்கம் வளரும்.

சிறுபான்மை மக்களைத் திரட்டிட

4.24 மத்தியில் பாஜக தலைமையிலான ஆட்சியின் போது சிறுபான்மை மக்களுக்கெதிராக பல நடவடிக்கைகள் எடுத்த போதும் ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., போன்ற அமைப்புகள் வகுப்பு மோதலை உருவாக்கிய போதும் சிறுபான்மை மக்கள் மத்தியில் குறிப்பாக இஸ்லாமியர்கள் மத்தியில் அச்சமும், கவலையும் ஏற்பட்டது. மேலும் மாநில அதிமுக அரசு மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வந்த போது இஸ்லாமிய, கிறித்துவ மக்கள் மத்தியில் பலமான எதிர்ப்பு எழுந்தது. இத்தகைய பிரச்சனைகளில் சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக நமது கட்சி தலையிட்டுள்ளது.

4.25 சிறுபான்மை மக்கள் மாநில உபகுழு, சிறுபான்மை மக்களை திரட்டுவது குறித்து விவாதித்து மாநில செயற்குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளது. இதனடிப்படையில் மாநிலத்தில் பல இடங்களில் இஸ்லாமிய மக்களின் பேரவைக் கூட்டங்களை நடத்தி அவர்களுடன் கலந்துரையாடல் செய்து பல பிரச்சனைகளின் மீது அவர்களுடைய கருத்தை அறிந்தோம். பொதுவாக இக்காலத்தில் இடதுசாரி கட்சிகள் குறிப்பாக, மார்க்சிஸ்ட் கட்சி மீது இஸ்லாமிய மக்கள் மத்தியில் மரியாதை உருவாகியுள்ளது. இஸ்லாமிய மக்களில் பெரும்பாலானோர் கல்வியிலும், பொருளாரத்திலும் பின்தங்கியுள்ளனர். சிறுபான்மை மக்கள் மத்தியில் நமது அரசியலின் நெருக்கத்தை பலப்படுத்த கூடுதல் கவனமும், முனைப்பும் அவசியமாகும்.

மத்திய - மாநில அரசுகளின் கொள்கை எதிர்ப்பு நடவடிக்கைகளும் அரசியல் இயக்கங்களும்

4.26 2002 மத்திய - மாநில அரசுகளின் பட்ஜெட்டுகள் அடித்தட்டு, நடுத்தர மக்களையும்; சிறுதொழில்களையும் கடுமையாக பாதிக்கும் வகையில் அமைந்தன. குஜராத் சம்பவங்களின் பின்னணி பட்ஜெட்டின் தாக்குதலை பின்னுக்கு தள்ளியபோதிலும், பாதிப்புகளை சந்திக்க நேரிடும் போது மக்கள் ஆட்சியாளர்கள் மீது கோபம் கொள்வார்கள் என்பதை கணக்கில் கொண்டு பட்ஜெட் பாதிப்புகளை தெருமுனை பிரச்சார வடிவில் மக்களிடம் எடுத்துச் சென்றோம். இடதுசாரி தொழிற்சங்க அமைப்புகள் 2002 மார்ச் 11 அன்று கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின. நமது வாலிபர் இயக்க முன் முயற்சியில் விவசாய, மாதர், மாணவர் அமைப்புகள் இணைந்து ரயில் மறியல், மத்திய அலுவலகங்கள் முன் மறியல் இயக்கத்தை நடத்தின. ராஜபாளையம் மறியலின் போது காவல்துறை தடியடி நடத்தியது. 2002 மார்ச் 17 அன்று தீக்கதிர் சிறப்பிதழ் (57,000) வெளியிட்டது. இந்த மறியல் உரிய நேரத்தில் நடைபெற்ற இயக்கமாகும்.

4.27 தாராளமயக் கொள்கைகளின் விளைவாக ஏற்படும் பாதிப்புகளை எதிர்த்து தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் என பல்வேறு பகுதியினரும் களமிறங்கி போராடினர். போனஸ் மறுக்கப்பட்டதால் போக்குவரத்து - மின்சாரத்துறை ஊழியர்களும் களமிறங்கும் நிலை ஏற்பட்டது. இதனை அடக்குமுறை சட்டங்கள் மூலம் ஒடுக்கிட அதிமுக அரசு வேலைநிறுத்த தடைச்சட்டம் இயற்றியது. இந்த கருப்புச் சட்டத்தை எதிர்த்தும் ஜனநாயக இயக்கங்களுக்கு காவல்துறை அனுமதி மறுக்கப்படுவதை எதிர்த்தும் மே 23, 2002 அன்று மாவட்டத் தலைநகர்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

4.28 சேலம் உருக்காலையை தனியாருக்கு விற்பதென்றும், ஊட்டி போட்டோ பிலிம் ஆலையை மூடுவது என்றும், மத்திய அரசு எடுத்த முடிவை எதிர்த்து இரண்டு மாவட்டங்களிலும் சி.ஐ.டி.யு. மற்றும் கட்சி முன்முயற்சி எடுத்து நடத்திய இயக்கத்தினால், அரசின் முடிவை பின்னுக்குத் தள்ள முடிந்தது. இருப்பினும் எச்.பி.எப். ஆலையை தொடர்ந்து நடத்திட மத்திய அரசை வலியுறுத்தி நம்முடைய இயக்கத்தை தொடரவேண்டியுள்ளது.

4.29 பொடா சட்டம் - வேலைநிறுத்த தடைச்சட்டம் - ஊர்வலம் பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி மறுப்பு போன்ற மத்திய, மாநில அரசுகளின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத செயல்களை எதிர்த்து முதற்கட்டமாக தமிழகம் தழுவிய கிளர்ச்சியை மேற்கொள்வது என்ற முடிவிற்கேற்ப 2002 ஆகஸ்ட் 25 முதல் செப்டம்பர் 3 வரை (10 நாட்கள்) நூற்றுக்கும் மேற்பட்ட பொதுக்கூட்டங்களையும், பரவலான தெருமுனைக் கூட்டங்களையும் நடத்தினோம். துண்டுப் பிரசுரங்களும், "காயும் தமிழகம் - கதறும் கைத்தறி"-எனும் சிறு பிரசுரமும் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன. இவ்வியக்கத்தின் நிறைவாக செப்டம்பர் 3, 2002 அன்று சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்கள் சார்பில் பெருந்திரளான பங்கேற்புடன் சென்னையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. மக்களிடம் வரவேற்பையும், கட்சி அணிகளிடம் உற்சாகத்தையும் இவ்வியக்கம் ஏற்படுத்தியது.

4.30 இக்காலத்தில் ஆட்சியாளர்களின் தாக்குதலால் பல்வேறு தரப்பு உழைப்பாளி மக்களும் போராட்ட களத்தில் இறங்கினர்.

4.31 வேலைநிறுத்த தடைச்சட்டம் - தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்து ஜூலை 27, 2002 அன்று சிஐடியு முயன்று சுமார் 20,000 பேர் பங்கேற்ற மறியல் நடந்தது.

4.32 அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் அமைப்புகள் ஒன்று சேர்ந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் ஆகியவற்றை தொடர்ந்து செப்டம்பர் 3, 2002ல் மறியலையும் நடத்தின.

4.33 தரிசுநில மேம்பாட்டு திட்ட மோசடிகளை அம்பலப்படுத்தி மதுரையில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டைத் தொடர்ந்து செப்டம்பர் 18, 2002 அன்று மறியல் நடைபெற்றது.

4.34 2002, செப்டம்பர் 12ல் ஜனநாயக மாதர் சங்கம் மறியல், செப்டம்பர் 24ல் கைத்தறி நெசவாளர்கள் மறியல், பணி நீக்கத்தை எதிர்த்து சாலைப்பணியாளர்கள் - ஊட்டச்சத்து ஊழியர்களின் தொடர் போராட்டங்கள், பல்கலைக்கழகங்களுடன் அரசு கல்லூரி இணைப்பை எதிர்த்து, அரசு கல்லூரி ஆசிரியர்கள் - மாணவர்கள் போராட்டம் என தமிழகமே போர்க்களமான நிலையில் மக்கள் மீதான ஆட்சியாளர்களின் தாக்குதல்களை எதிர்த்து போராடும் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக களமிறங்குவது என முடிவெடுத்து செப்டம்பர் 30 அன்று மறியல் நடத்திட கட்சி அறைகூவல் விடுத்தது.

4.35 கட்சியின் அறைகூவலை ஏற்று 54,740 பேர் மறியலில் பங்கேற்று கைதாகினர். கைது செய்யப்பட்டவர்களில் 13,566 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆட்சியாளர்களை அம்பலப்படுத்த நமது அரசியலை மக்களிடம் எடுத்துச் செல்ல இக்காலத்து தொடர் நடவடிக்கைகள் ஓரளவு உதவின.

4.36 வறட்சி நிவாரணம், வறட்சி பகுதியில் குடும்பத்திற்கு மாதம் 30 கிலோ அரிசி இலவசமாக வழங்குவது, குடிநீர் - வேலைக்கு உணவு திட்டம், பயிர்க்கடன் ரத்து, விவசாயத்திற்கான இலவச மின்சாரம் தொடர்வது, பொதுவிநியோகம் பலப்படுத்துவது, பொடா சட்டம் - வேலை நியமனத் தடைச்சட்டம் - மதமாற்றத் தடைச்சட்டம் திரும்பப்பெறுவது, விலை உயர்வை கட்டுப்படுத்துவது, மூடிய ஆலைகளைத் திறப்பது, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது, தீண்டாமை ஒழிப்பு போன்ற பல்வேறு மக்கள் கோரிக்கைகளை பிரதானப்படுத்தி விரிவான பகுதி மக்களைத் தட்டி எழுப்பும் வகையில் நகரங்கள், கிராமங்கள் என 15,000 கி.மீட்டர் "நடைபயண பிரச்சார இயக்கம்" நடத்துவது எனற முடிவினை செயல்படுத்தும் வகையில் சுமார் 1500 குழுக்கள் பிப்ரவரி 4, 2003 அன்று (10 முதல் 15 தோழர்களை கொண்ட ஒவ்வொரு குழுவும் 15 கி.மீட்டர் பிரச்சாரம் செய்வது) 20,000 கி.மீ தூரத்திற்கு மேல் கொடிகள் - கோரிக்கை அட்டைகளுடன் நடைபயணமாக ஆயிரக்கணக்கான கிராமங்கள் - நகரங்கள் சென்று, பல லட்சம் மக்களை சந்தித்து துண்டுப் பிரசுரங்கள் கொடுப்பது, மைக் பிரச்சாரம் செய்வது - தீக்கதிரின் சிறப்பிதழ் (ஒரு இலட்சம்) விற்பனை செய்வது, உண்டியல் வசூல் செய்வது என்ற வகையில் 25,000க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்புடன் இவ்வியக்கம் சிறப்பாக - விரிவான பகுதி மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. இப் பிரச்சார வடிவம் தோழர்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியது. புதிய பகுதிகளில் கட்சியை அறிமுகப்படுத்தவும் உதவியது.

4.37 வறட்சிக்கு தமிழகத்தில் 17 பேர் பலியாகும் நிலை ஏற்பட்டது. தொடர்ச்சியான நமது போராட்டங்கள் - விவசாய இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற இயக்கங்கள், இதர கட்சிகள், அமைப்பினரின் எதிர்ப்புகள் அனைத்தும் ஏற்படுத்திய நிர்பந்தத்தை தொடர்ந்து, அதிமுக அரசு வறட்சி பாதித்த கிராமங்களில் உள்ள குடும்பத்திற்கு 30 கிலோ அரிசி வழங்குவதாக அறிவித்தது. விவசாயிகளுக்கு இழப்பீடும் அறிவிக்கப்பட்டது. இந்த நிவாரணம் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் நடவடிக்கையிலும் நாம் நமது பங்கை செலுத்தினோம். மரணமடைந்த விவசாய குடும்பங்களுக்கு நமது விவசாய அமைப்புகள் சார்பில் ரூ. 2 லட்சம் உதவி நிதி வசூலித்து வழங்கப்பட்டது.

4.38 அதிமுக அரசு ரூ.1400 கோடி மின் கட்டண உயர்வை மக்கள் தலையில் சுமத்தியது. இந்த கட்டண உயர்வு மக்களிடத்தில் கடும் கோபத்தை ஏற்படுத்தியது. பாஜக அரசு தனியாருக்கு மின் துறையை தாரை வார்க்க முடிவெடுத்து நாடாளுமன்றத்தில் மின்சார சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றியது. இந்த இரண்டையும் கண்டித்து 2003 மார்ச் 24 அன்று ஒன்றிய அளவில் நாமும், சிபிஐயும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

4.39 விவசாயிகள் இயக்கம் சார்பில் ஏப்ரல் 22, 2003 அன்று சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. 7500 பெண்கள் உட்பட 30,250பேர் இம்மறியலில் பங்கேற்று கைதாகினர்.

4.40 இதைத் தொடர்ந்து மின் கட்டண உயர்வை எதிர்த்து நாம் வெளியிட்ட சிறிய பிரசுரத்தை (1.25 லட்சம்) பரவலாக மக்களிடம் எடுத்துச் சென்றோம். மக்கள் கோபத்திற்கு வடிவம் தரும் வகையில் "முழுஅடைப்பு போராட்டம் நோக்கிச் செல்வது"-என்ற நமது மாநிலக்குழு ஆலோசனையை சிபிஐ ஏற்காததால் முழுஅடைப்பு என்ற நமது முடிவை செயல்படுத்த முடியவில்லை.

4.41 பொடா சட்ட அமலாக்கம், இலவச மின்சாரம் ரத்து ஆகியவற்றை முன்வைத்து திமுக அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை ஏப்ரல் 24, 2003இல் நடத்தியது. தி.மு.க., பா.ம.க., மதிமுக போன்ற கட்சிகள் மத்திய பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியில் பங்கேற்றுக் கொண்டே நம்முடன் கூட்டு இயக்கத்திற்கு முயற்சிக்கும் இரட்டை நிலையை விமர்சித்ததோடு, இக்கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்று நாம் முடிவு செய்தோம். காங்கிரஸ் இக்கூட்டத்தை புறக்கணித்தது. இந்நிலையில் வேறு வழியின்றி சி.பி.ஐயும் தயக்கத்துடன் பங்கேற்பதில்லை என்ற நிலையெடுக்க நேர்ந்தது. இதன் தொடர்ச்சியாக மே 29, 2003 அன்று சென்னையில் 'பொடா' சட்ட எதிர்ப்பு சிறப்பு மாநாட்டை சென்னையில் நடத்தினோம். சி.பி.ஐ. காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகிய கட்சிகளை பங்கேற்கச் செய்தோம். வடசென்னை - தென்சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலிருந்து தோழர்கள் சக்தியாக பங்கேற்றனர். திமுக, பா.ம.க., மதிமுக கட்சிகளின் சந்தர்ப்பவாத நிலைபாட்டை அம்பலப்படுத்தினோம்.

4.42 அனைத்து தரப்பு மக்களையும் பாதிக்கக்கூடிய முக்கிய பிரச்சினைகளையும், பிரதான அரசியல் நிகழ்வுகளையும், நமது அரசியல் நிலைபாட்டையும் 2003 ஆகஸ்ட் 15 - 30 (15 நாட்கள்) முன்வைத்து நாடு தழுவிய பிரச்சார இயக்கத்திற்கு மத்தியக்குழு அறைகூவல் விடுத்தது. இவ்வியக்கம் "தேசம் காக்க அணி திரள்வோம்" என்ற கோஷத்துடன் விரிவாக மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. சுவரெழுத்து தட்டிபோர்டு வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டது.

4.43 நகர்ப்புறங்களில் பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், கிராமப்புறங்களில் சைக்கிள் பிரச்சார வடிவிலும் பல லட்சம் மக்களிடம் பிரச்சாரம் மாவட்டக்குழுக்களால் எடுத்துச் செல்லப்பட்டது. மாநிலத்தின் அனைத்து மட்ட கட்சித் தலைவர்களும் இப்பிரச்சாரத்தில் பங்கேற்றனர். வர்க்க - வெகுஜன அரங்க முன்னணி தோழர்களும் இப்பிரச்சாரத்தில் இணைந்து சென்றனர். இவ்வியக்கத்தின் நிறைவாக 2003 ஆகஸ்ட் 19இல் ஒசூர், ஆகஸ்ட் 26இல் கோவை, ஆகஸ்ட் 27ல் திருவாரூர், ஆகஸ்ட் 28இல் திண்டுக்கல், ஆகஸ்ட் 30இல் சென்னை என 5 மையங்களில் (மாவட்டங்களை 5 மண்டலங்களாக பிரித்து) மண்டல பேரணி - பொதுக்கூட்டங்கள், மாநாடுகளைப் போல சக்தியாக நடைபெற்றன. புதுவையில் தனியாக இப்பிரச்சாரம் நடைபெற்றது. 40,000 தோழர்கள் வரை இவ்வியக்கத்தில் பங்கேற்றது, 20,000 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடந்தது, பொது மக்களிடம் இருந்த வரவேற்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

4.44 மதவெறி சக்திகளை எதிர்த்தும், தாராளமய கொள்கைகளை எதிர்த்தும் இடதுசாரி - ஜனநாயக - மதச்சார்பற்ற சக்திகளின் கொள்கைகளை முன்வைத்தும் இயக்கம் நடத்திட மத்தியக்குழு விடுத்த அறைகூவலைத் தொடர்ந்து ஜனவரி 24 முதல் பிப்ரவரி 5, 2004 வரை "பா.ஜ.க. - என்.டி.ஏ. கட்சிகளை ஆட்சியிலிருந்து அகற்றுவோம்; அடக்குமுறை அதிமுகவை தோற்கடிப்போம்" என்ற கோஷத்தை முன்வைத்து கிளர்ச்சிப் பிரச்சாரத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல தீர்மானித்தோம்.

4.45 பா.ஜ.க. கூட்டணி அமைச்சரவையிலிருந்து திமுக வெளியேறிய நிலையில், ஆதரவை விளக்கிக் கொள்ள பா.ம.க., மதிமுக கட்சிகள் ஊசலாடிய நேரத்தில் இந்த இயக்கம் திட்டமிடப்பட்டது.

4.46 மாநிலத்தின் 5 முனைகளிலிருந்து வேன் பிரச்சாரத்தை துவக்கி ஒவ்வொரு குழுவும் 6 - 7 மாவட்டங்களில் பிரச்சாரம் செய்து மதுரை வந்து சேருவது, முன்னதாக மாவட்டங்களில் துணைப் பிரச்சார குழுக்கள் அமைத்து கிராமங்களை நோக்கி பிரச்சாரத்தை எடுத்துச் செல்வது, ஒவ்வொரு மாவட்டக்குழுவும் குறைந்தது 100 தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது, நாம் போட்டியிட வாய்ப்புள்ள நாடாளுமன்ற தொகுதிகளில் கூடுதல் பிரச்சாரத்தை கொண்டு செல்வது, துண்டுப் பிரசுரங்கள் - பிரசுர விற்பனை செய்வது, விரிவான விளம்பரம் செய்வது, பிப்ரவரி 5, 2004ல் மதுரையில் பிரம்மாண்டமான பேரணி - பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் தீர்மானித்தோம்.

4.47 மாநில மெங்கும் தயாரிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்ற போதிலும் "நாடாளுமன்ற தேர்தல்" ஏப்ரல் 2004இல் நடைபெறுவது உறுதியான நிலையில், தொகுதி உடன்பாடு பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் துவக்கப்பட வேண்டிய நிலையில், மாநில தலைவர்கள் பங்கேற்புடன் மாநில அளவிலான பிரச்சாரத்தை நடத்துவதில் உள்ள நடைமுறைச் சிரமங்களால் மாவட்ட அளவில் நிறைவாக பிப்ரவரி 5 அன்று மதுரையில் கூட்டம் நடத்துவது. திட்டமிட்டபடி பிரச்சாரம் செய்வது என்று 2004 ஜனவரி 11 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் முடிவு செய்தது.

4.48 இந்த முடிவினைத் தொடர்ந்து இவ்வியக்கம் மாவட்ட அளவில் விரிவாக நடைபெற்றது. பிரச்சாரத்தின் போது, சுமார் 3 லட்சம் பிரசுரம் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டது. பிப்ரவரி 5 அன்று மதுரையில் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத் தோழர்கள் மதுரை கூட்டத்தில் கலந்து கெண்டனர்.

14வது மக்களவைத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சிப் பின்னணியில்...

4.49 தேர்தலுக்குப் பிறகு மாறிய அரசியல் சூழலில் தமிழகத்தில் நாம் அதிமுக அரசை எதிர்த்து இயக்கம் நடத்துகிற அதே நேரத்தில், மத்தியில் ஆட்சியில் உள்ள தி.மு.க. - பா.ம.க. - மதிமுக ஆகிய கட்சிகளிடம் இருந்து வேறுபடுத்தி காட்டக்கூடிய அளவிற்கு நமது கட்சியினுடைய வெகுஜன அமைப்புகளின் சுயேச்சையான இயக்கத்தை பல மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். இதனடிப்படையில் கட்சியின் மாநிலக்குழு தொடர்ச்சியான பல இயக்கங்களுக்கு திட்டமிட்டது.

4.50 காவிரி நீர் வரத்து இல்லாததாலும், தொடர்ச்சியான வறட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள காவிரி டெல்டா பகுதி விவசாயிகளைப் பாதுகாக்க உதவிடும் வகையில் "பற்றாக்குறை காலத்து நீர் பகிர்வு" ஏற்பாடுகளை உறுதிப்படுத்த காவிரி ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென வற்புறுத்தியும், வறட்சி காலத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழக அரசை வற்புறுத்தியும் ஒன்றிய அளவில் விவசாய இயக்கங்கள் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கட்சியும் இணைந்து நின்று குரலெழுப்பியது.

4.51 மத்தியக்குழு அறைகூவலுக்கேற்ப கட்சியின் அரசியல் நிலையை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையிலும், குறைந்தபட்ச செயல் திட்டத்திலுள்ள மதச்சார்பின்மை, வேலைவாய்ப்பு, கிராமப்புற மக்களுக்கு நிவாரணம், பெண்களுக்கு 33 சத இடஒதுக்கீடு, கல்வி - சுகாதாரம்

போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்த வலியுறுத்தியும், பொது விநியோகத்தை பலப்படுத்துவது - பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை தவிர்ப்பது என்பதை முன்வைத்தும், பா.ஜ.க. மதவெறி சக்திகளை தனிமைப்படுத்தும் வகையிலும் நாடு தழுவிய அளவில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பிரச்சார இயக்கத்தை தமிழகத்திலும் முன்னெடுத்துச் சென்றோம்.

452 கூடுதலாக அதிமுக அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளையும், மாவட்ட ஸ்தல அளவிலான முக்கிய பிரச்சினைகளையும் இணைத்து இப்பிரச்சாரம் 2004 ஆகஸ்ட் 25 முதல் 31 வரை சக்தியாக நடைபெற்றது. 3000க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட்டங்கள் 3 லட்சம் மக்கள் பங்கேற்புடன் நடந்துள்ளன. முக்கிய மையங்களில் பொதுக்கூட்டங்கள் நடந்துள்ளன. துவக்க நாளான ஆகஸ்ட் 25இல் தீக்கதிர் சிறப்பு விற்பனை (1,40,000) நடந்தது. மக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் இவ்வியக்கம் அமைந்தது.

453 இவ்வியக்கத்திற்கு முன்னதாக மக்களவை தேர்தலுக்குப் பின் நமது அரசியல் நிலையை விளக்கி சிறு பிரசுரம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது.

மக்களின் இதர சமூக பிரச்சினைகளுக்கான நடவடிக்கைகள்

454 தமிழகம் சந்தித்த பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து சிறப்பு மாநாடுகள் நடத்தி - ஆட்சியாளர்களை அம்பலப்படுத்துவது, மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்துவது என்ற முடிவிற்கிணங்க சிறப்பு மாநாடுகளும் இயக்கங்களும் நடந்துள்ளன.

455 அதிகரித்து வந்த அரசியல் படுகொலைகள், லாக்-அப் மரணங்கள், மனித உரிமை மீறல்களை எதிர்த்தும்; ஜனநாயக இயக்கங்களுக்கு விதிக்கப்படும் தடைகளை எதிர்த்தும் 'அரசியல் படுகொலை எதிர்ப்பு - மனித உரிமை பாதுகாப்பு' மாநாடு ஜூலை 26, 2003 அன்று மதுரையில் நடைபெற்றது. மதுரை மாநகர் - புறநகர், தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மாவட்ட தோழர்கள் பங்கேற்புடன் மாநாடு நடைபெற்றது.

456 ஆட்சியாளர்களின் தவறான கொள்கையால் விசைத்தறி தொழில் கடும் நெருக்கடியைச் சந்தித்தது. தொழிலாளர்களும், தொழில் முனைவோரும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் 'விசைத்தறி தொழில் பாதுகாப்பு மாநாடு', ஜூலை 20,2003 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. 2000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். தொழில் முனைவோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம், திருப்பூர், கோவை ஆகிய மாவட்டங்கள் பங்கேற்றன.

457 சிட்டா நூல் வரி - கலால்வரி உயர்வாலும், விசைத்தறி ஏற்றுமதிக்கான மானியக் குறைப்பாலும் விசைத்தறி, கைத்தறி பனியன் தொழில்கள் கடும் பாதிப்புக்குத் ஆளாயின. திருப்பூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் 12 லட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டது. தொழில் பாதுகாப்பை வலியுறுத்தி நமது முயற்சியில் அனைத்துக் கட்சிகள் சார்பில் நவம்பர் 24, 2003 அன்று திருப்பூரில் 'முழுஅடைப்பு' நடத்தப்பட்டது. ஈரோட்டில் டிசம்பர் 2 அன்று உரிமையாளர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. சிறப்புக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. தோழர் மோகன் எம்.பி., தலைமையில் டெல்லி சென்று மத்திய அமைச்சர்களிடம் மனு கொடுக்கப்பட்டது.

458 மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமைந்த சூழலில் சென்வாட் வரிவிதிப்பு மற்றும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருந்த ஜவுளித் தொழிலை பாதுகாக்க மத்திய அரசின் கவனத்தை ஈர்த்திட ஜவுளித் தொழில் பாதுகாப்பு சிறப்பு மாநாட்டை ஈரோட்டில் ஜூலை 29,2004 அன்று நடத்தினோம். ஈரோடு, கரூர், திருப்பூர், சேலம், நாமக்கல், கோவை மாவட்டங்களிலிருந்து தோழர்கள் பங்கேற்றனர். விசைத்தறி உரிமையாளர்களும் பங்கேற்றனர். இத்தகைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மத்திய பட்ஜெட்டின் போது சென்வாட் வரி ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இத்தொழிலில் ஈடுபட்ட மக்களிடம் கட்சி மீது மரியாதை உயர்ந்தது.

4.59 வரதட்சணை கொடுமையாலும், நுகர்வு கலாச்சார தாக்கத்தாலும், சமூகக் கொடுமையாலும் இளம் பெண்கள் பலியாவதும், திருமணங்கள் தடைபடுவதும் அதிகரித்து வரும் சூழலில் 'வரதட்சணை எதிர்ப்பு மாநாடு' அக்டோபர் 27, 2003 அன்று சென்னையில் நடைபெற்றது. வடசென்னை, தென்சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டக்குழுக்கள் சார்பில் ஆண்களும், பெண்களுமாக 2000 பேர் பங்கேற்புடன் மாநாடு நடந்தது. பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

4.60 ரேசன் உரிமையை ஒழித்துக் கட்டும் வகையில் செயல்பட்ட பாஜக அரசோடு இணைந்து நின்று அதிமுக அரசு தமிழகத்தில் 'ஹெச்' முத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தியது. புதிய ரேசன் கார்டுகள் வழங்கும் பணி நிறுத்தப்பட்டது. இதனை எதிர்த்து மாநிலம் முழுவதும் ஸ்தல மட்ட அளவில் தொடர் பிரச்சாரமும், இயக்கங்களும் நடைபெற்றன. தென்சென்னை மாவட்டக்குழு சிறுபிரசுரம் வெளியிட்டு பிரச்சார இயக்கம் நடத்தியது. வாலிபர் - மாதர் அமைப்புகளும் இவ்வியக்கத்தை பரவலாக நடத்தின. வாலிபர் இயக்க முயற்சியில் திருப்பூரில் 8000 பேர் திரண்ட ஆர்ப்பாட்டமும், வேலூரில் 1500 பேர் திரண்ட ஆர்ப்பாட்டமும் நடந்துள்ளன.

4.61 தி.மு.க., பி.ஜே.பி. தலைமையிலான மத்திய ஆட்சியில் அமர்ந்து மதவெறி சக்திகளுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருந்தது. அதிமுக மதவெறி சக்திகளுக்கு ஆதரவாக மாநில அரசின் அதிகாரத்தை பயன்படுத்தியது. இத்தகைய நிலையில், சமூக சீர்திருத்த பணிகளில் பெரியாரின் பங்களிப்பை முன்னிறுத்தி 'பெரியார் 125ம் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் நடத்திட செய்த முடிவின் படி மாவட்டங்களில் திறந்தவெளி கருத்தரங்குகள் நடைபெற்றன. கட்சிக்கு அப்பாற்பட்ட பிரமுகர்களையும் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்தோம்.

4.62 கல்வி வர்த்தகமயமாவது, பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் எழுந்த பிரச்சனை, மருத்துவ மாணவர்கள் பிரச்சனை போன்ற கல்வி பிரச்சனைகளை முன்வைத்து "கல்வியும், சமூகநீதியும்" -என்ற மாநில சிறப்பு மாநாடு சென்னையில் ஆகஸ்ட் 2, 2004ல் நடைபெற்றது. மத்திய - மாநில அரசுகளின் கல்விக் கொள்கையை எதிர்த்து நடைபெற்ற இம்மாநாட்டில் தோழர் சீதாராம் யெச்சூரி பங்கேற்று சிறப்பித்தார். ஏராளமான மாணவர்கள், மத்திய தர தோழர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். பத்திரிகைகள் விளம்பரம் தந்தன. காலத்தே எடுத்த நடவடிக்கையாக இம்மாநாடு அமைந்தது. சென்னை மாவட்டக்குழுக்கள் இம்மாநாட்டை நடத்தின.

4.63 வேலையின்மையை எதிர்த்து இயக்கம் நடத்துவது என்ற வழிகாட்டுதலைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு மற்றும் இளைஞர்களின் கோரிக்கைகளை முன்வைத்து மாவட்டங்களில் விரிவான பிரச்சாரம் மேற்கொண்டு நிறைவாக சென்னையில் செப்டம்பர் 19, 2004 அன்று 12,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற மாநிலப் பேரணி வாலிபர் இயக்கத்தின் சார்பில் நடைபெற்றது. தோழர் என்.எஸ்., பேரணியை துவக்கி வைக்க, தோழர் சீதாராம் யெச்சூரி, என்.வி., பொதுக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

4.64 நிலத்தடி நீரை கொள்ளையடிக்கும் தனியார் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக தொண்டு நிறுவனங்கள், வர்க்க - வெகுஜன அமைப்புகளை கொண்டு நிலத்தடி நீர் பாதுகாப்பு நடவடிக்கைக்குழு, ஒன்றை சிவகங்கை மாவட்டக்குழு முன்னின்று உருவாக்கியது. 3000 அடி ஆழத்தில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து, வைகை நிலத்தடி ஆற்று நீர் கொள்ளைக்கு கோகோ - கோலா நிறுவனம் திட்டமிட்டதை எதிர்த்து வலுவான இயக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஏப்ரல் 28, 2003 அன்று மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட 7000 பேர் பங்கேற்ற பேரணி - ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தடையை மீறி பேரணி நடத்தியதாக தோழர்கள் வாசுகி, அர்ஜூனன் உட்பட பங்கேற்ற பொதுமக்கள் 2000 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. தொடர்ச்சியாக மே 31, 2003ல் சிவகங்கையில் தோழர் என்.வி., எம்.என்.எஸ்., கலந்து கொண்ட மக்கள் எழுச்சி மாநாட்டில் பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர். இந்த முன்முயற்சியும், தலையீடும் நல்ல உதாரணமாகும்.

4.65 தமிழக அரசின் தரிசு நில மேம்பாட்டு திட்ட மோசடிகளை எதிர்த்தும், பயன்பாட்டில் உள்ள தரிசு / புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்தக்கூடாது, பட்டா வழங்க வேண்டுமென வலியுறுத்தியும் 85க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரச்சாரமும், சிறு குறு கூட்டங்களும் நடத்தி

7000 மனுக்களுடன் 3 மையங்களில் காஞ்சி மாவட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட கிராமப்புற மக்கள் பங்கேற்ற பேரணி - ஆர்ப்பாட்டங்கள் மாநில அரசு அலுவலகங்கள் முன் நடைபெற்றன. திமுக - அதிமுக விவசாயிகள் உட்பட ஏராளமான பெண்கள் இவ்வியக்கத்தில் பங்கேற்றது குறிப்படத்தக்கதாகும். கட்சியும், விவசாய இயக்கமும் இணைந்து நடத்திய இவ்வியக்கத்தால் கூடுதலாக 4000 பேர் விவசாய சங்கத்தில் சேர்க்கப்பட்டனர்.

4.66 கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டிடங்களுக்கு எந்த சலுகைகளையும் வழங்கிடக் கூடாது என மாநில அரசு பிறப்பித்த கட்டிட வரன்முறைச் சட்டத்திற்கு எதிராக கட்சியின் கோவை மேற்கு மாவட்டக்குழு முடிவின்படி 65 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இயக்கம் நடத்தியது குறிப்பிடத்தக்கது. கோவை மாவட்டக்குழு இச்சட்டத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தடையுத்தரவு பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ள ஆறு மாநகராட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு இது பயன்தரக்கூடியது.

4.67 மேற்குவங்க இடது முன்னணி அரசு 25ஆம் ஆண்டு விழா: இடது முன்னணி அரசின் சாதனைகளை விளக்கி ஜூன் 21 - 24, 2002 தேதிகளில் பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள் அரங்கக் கூட்டங்கள் நடைபெற்றன. தீக்கதிர் சிறப்பிதழ், 57,000 விற்பனை செய்யப்பட்டது. மத்தியக்குழு பிரசுரம் மொழியாக்கம் செய்து அச்சிட்டு 75,000 பிரதிகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. மேற்கு வங்க அமைச்சர் நிரூபென் சென் பங்கேற்ற (கோவை கூட்டத்தில் 1000 பேரும், மதுரை கூட்டத்தில் 2500 பேரும்) கூட்டங்கள் சிறப்பாக நடந்தன. குமரியில் என்.வி. பங்கேற்ற கூட்டத்தில் 4000 பேர் வரை பங்கேற்பு இருந்தது.

நாம் நடத்திய இயக்கங்கள் பற்றிய மதிப்பீடு

4.68 ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு, தாராளமய கொள்கை எதிர்ப்பு என இக்காலத்தில் தொடர்ச்சியாக இயக்கத்தை நடத்தியுள்ளோம். சில இயக்கங்களில் கட்சி அணிகளின் பங்கேற்பு குறிப்பிடத்க்க அளவிற்கு இருந்தது.

4.69 கட்சி மற்றும் வர்க்க - வெகுஜன அமைப்புகளின் சார்பில் இடைவிடாது தொடர்ச்சியாக இயக்கத்திற்கு அறைகூவல் விடுவதால், பல இயக்கங்களில் கட்சிகளின் பங்கேற்பு குறைவாக உள்ளது.

4.70 மேலும் தொடர்ச்சியான இயக்கத்தால் சில நேரங்களில் ஸ்தாபன பணிகளை கவனிக்க முடியாத நிலையும் இருந்தது.

4.71 அடுக்கடுக்கான இயக்கங்களுக்கு அறைகூவல் விடுவதால் உருவாகும் விளைவுகள் குறித்து, கட்சியின் மாநிலக்குழு பரிசீலிக்க வேண்டியுள்ளது. இருப்பினும் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் நடத்திய இயக்கங்களினால் தமிழகத்தில் நமது கட்சியினுடைய மரியாதை உயர்ந்துள்ளது. நடைபெறும் இயக்கத்தில் கட்சி அணிகளின் பங்கேற்பை உத்திரவாதப்படுத்திட முயற்சிக்க வேண்டும்.

தேர்தல்கள்

சட்டமன்ற இடைத் தேர்தல்கள்

4.72 சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சிறுப்பாக்கம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலை (மே 2002) முக்கிய அரசியல் இயக்கமாக கருதி நாம் செயல்பட்டோம். என்.டி.ஏ. அணியில் உள்ள திமுகவையும், என்.டி.ஏ. கொள்கைகளை செயல்படுத்தும் அதிமுகவையும் எதிர்ப்பது என்றும்; காங்கிரஸ் கட்சியுடன் அணியோ - தொகுதி உடன்பாடோ கொள்வதில்லை என்றும் மாநிலக்குழு முடிவு செய்தது. இந்தப் பின்னணியில் சைதாப்பேட்டையில் நாம் போட்டியிடுவது, அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சி.பி.ஐ. வேட்பாளரை ஆதரிப்பது, வாணியம்பாடியில் தேசிய லீக் வேட்பாளரை நமது சொந்த மேடையிலிருந்து ஆதரிப்பது என்றும் முடிவு செய்து தேர்தல் பணிகளை மேற்கொண்டோம்.

473 பணம், அதிகாரம், கள்ள ஓட்டு, வாக்குச் சாவடி கைப்பற்றுவது என அனைத்து தில்லு முல்லுகளையும் செய்து ஆளும் அதிமுக 3 தொகுதிகளையும் கைப்பற்றியது. அச்சிறுப்பாக்கம் தொகுதியை பா.ம.க.வும், சைதாப்பேட்டை தொகுதியை திமுகவும் இழந்தது.

4.74 சைதை தொகுதியில் தென்சென்னை மாவட்டக்குழு செயலாளர் டி. நந்தகோபாலை போட்டியிடச் செய்தோம். 4154 வாக்குகள் கிடைத்தன. தேர்தல் தில்லு முல்லுகள் இல்லாமல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்திருந்தால் நமக்கு சற்று கூடுதலான வாக்குகள் கிடைத்திருக்கும். இந்தத் தொகுதியில் நம் தோழர்கள் கடுமையாக உழைத்தனர். இதர தொகுதிகளிலும் நமது கடமையை நிறைவேற்றினோம்.

4.75 சாத்தான்குளம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் - அதிமுகவை தோற்கடிப்பது என்ற நிலையெடுத்து நமது சொந்த மேடையிலிருந்து காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்தோம். சி.பி.ஐ. தனியாக பிரச்சாரம் செய்தது.

குடியரசுத் தலைவர் தேர்தல்

4.76 குடியரசுத் தலைவர் வேட்பாளராக போட்டியிட்ட தோழர் கேப்டன் லெட்சுமி செகல் வாக்கு சேகரிப்பதற்காக சென்னை வருகை தந்ததையொட்டி எம்பி., எம்.எல்.ஏக்கள் சந்திப்பு கூட்டத்தை 06.07.2002 அன்று நடத்தினோம். சிபிஐ(எம்), சிபிஐ சார்பு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டனர். பத்திரிகையாளர் சந்திப்பும், 1500 பேர் பங்கேற்ற பொது நிகழ்ச்சியும் (அரங்கக் கூட்டம்) நடத்தினோம்.

14வது நாடாளுமன்றத் தேர்தல்

4.77 14வது மக்களவைத் தேர்தல் மே 10, 2004 தமிழகம் - புதுவை உட்பட 40 தொகுதிகளிலும், பாஜக - அதிமுக கூட்டணியை தோற்கடித்து மதச்சார்பற்ற ஜனநாயக இடதுசாரி கட்சிகளுக்கு வெற்றியைத் தந்தது. தோல்வியைக் கண்டு அதிமுகவும், பாஜகவும் அதிர்ச்சியடைந்தன. இந்த வெற்றி பாஜக கூட்டணி மற்றும் அதிமுக அரசுகளின் வகுப்புவாத, தாராளமய கொள்கைகளை மக்கள் விரோத செயல்பாட்டையும் எதிர்த்து தொடர்ந்து நடத்தப்பட்ட இயக்கத்தின் தொடர்ச்சியே ஆகும்.

4.78 என்.டி.ஏ.விலிருந்து திமுக வெளியேறியதைத் தொடர்ந்து தோழர் சுர்ஜித் - திமுக தலைமை சந்திப்பு, நமது மாநிலத் தலைமை - திமுக தலைமை சந்திப்பு ஆகியவை வலுவான அணிசேர்க்கைக்கு அடித்தளமிட்டன. மக்களிடம் திமுக தலைமையிலான அணி வலுவான அணி; வெற்றி பெறும் அணி என்ற கருத்துருவாக்கத்திற்கு வித்திட்டது. திமுக தலைமையுடன் குறைந்தபட்சம் மூன்று தொகுதிகளுக்கு முயன்று இரண்டு தொகுதிகளை ஏற்று உடன்பாடு கண்டு மதுரை, நாகர்கோவிலில் போட்டியிட்டோம். இந்த உடன்பாட்டிற்கு கட்சி அணிகளிடம் வரவேற்பு இருந்தது.

4.79 திமுகவுடன் காங்கிரசும் உடன்பாடு கொண்டு அணிசேர்ந்த நிலையில் காங்கிரஸ் பற்றிய நமது அணுகுமுறை திமுக தலைமைக்கு தெரிவிக்கப்பட்டது. அதிமுக - பாஜக அணியை தோற்கடிக்க காங்கிரசுடன் நெளிவு சுளிவான அணுகுமுறையை கடைப்பிடிப்பது என்றும், நெருக்கமாக இருந்து பணியாற்றுவது என்றும் முடிவு செய்தோம். இதற்கேற்ப நமது தேர்தல் பணிகள் நடைபெற்றன.

4.80 நாம் போட்டியிட்ட இரண்டு தொகுதிகள் தவிர, மற்ற 38 தொகுதிகளிலும் நட்புக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர்களோடு இணைந்தும், நமது சொந்த மேடையிலிருந்தும் பிரச்சாரம் மற்றும் தேர்தல் பணிகளை முன்னெடுத்துச் சென்றோம். பரவலான மக்களிடம் நமது அரசியலும் எடுத்துச் செல்லப்பட்டது.

4.81 மதுரை, நாகர்கோவில் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட மாவட்டக்குழு தோழர்களோடு கூடுதலாக மாநில செயற்குழு, மாநிலக்குழு உறுப்பினர்களையும் இணைத்து பொறுப்பாக்கி இதர கட்சிகளை ஒருங்கிணைத்து தேர்தல் பணிகளை நடத்தினோம். காங்கிரசை இணைப்பதில் நாகர்கோவில் தொகுதியில் ஆரம்பத்தில் பிரச்சனை இருந்தது. எனினும் சில நாட்களில் இணக்கம் காணப்பட்டது.

4.82 அதிமுக - பாஜகவின் பிரச்சாரத்தை எதிர்கொள்ளும் வகையில் நமது சுயேச்சையான பிரச்சாரம் வலுவாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. தோழர்கள் சுர்ஜித், பிரகாஷ்காரத், சீதாராம் யெச்சூரி, மாணிக்சர்க்கார், ஆர். உமாநாத், கே. வரதராஜன், உரா. வரதராஜன் மற்றும் மாநில தலைவர்களும், மாவட்டத் தலைவர்களும் கலந்து கொண்டு நடைபெற்ற பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், கலைக்குழு நிகழ்ச்சிகள் போன்றவை நமது பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல உதவின. வர்க்க - வெகுஜன அமைப்புகளும் தங்கள் மேடையிலிருந்து பிரச்சாரத்தை எடுத்துச் சென்றன.

4.83 அதிமுக - பாஜகவும் வலுவாக பிரச்சாரம் - தேர்தல் பணிகளைச் செய்தன. அதிகாரத்தை பயன்படுத்தியதோடு அதிமுக - பாஜக அணி பணம் கொடுத்து வாக்கு சேகரிக்க முயன்றது. எனினும் மக்கள் அரசியலாகவே வாக்களித்தனர் என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தின.

4.84 மக்கள் கூட்டணி என்ற பெயரால் டிபிஐ, புதிய தமிழகம், தமிழ்தேசம் போன்ற கட்சிகள் இணைந்து போட்டியிட்டன. சாதி ரீதியில் வாக்குகளைப் பெறவும் - பிளவுபடுத்தவும் முயன்றன. ஆனாலும் தலித் மக்கள் உட்பட அரசியலாக வாக்களித்துள்ளனர் என்பதையே தேர்தல் முடிவுகள் தெரிவித்தன. டிபிஐ, புதிய தமிழகம் தலைவர்கள் போட்டியிட்ட தென்காசி, சிதம்பரம் தொகுதிகளில் மட்டுமே இந்த அணி கூடுதல் வாக்குகளைப் பெற்றது.

4.85 சிறுபான்மையினர், கிராமப்புற மக்கள் என பொதுவாக தமிழக மக்கள் இந்த தேர்தலில் அரசியலாகவே வாக்களித்துள்ளனர். மதுரை, நாகர்கோவில் தொகுதிகளில் சிறுபான்மையினர் வாக்குகள் நமக்கு கூடுதலாகவே கிடைத்தன.

4.86 40 தொகுதிகளில் 9 தொகுதிகளில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்கு வித்தியாசத்திலும், 27 தொகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் மேலான வாக்கு வித்தியாசத்திலும் நமது அணி வெற்றி பெற்றது. மதுரையில் 58.03 சத வாக்குகளையும், நாகர்கோவிலில் 60.88 சத வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றோம். தேர்தல் முடிவுகள் பாஜக - அதிமுக ஆட்சியாளர்கள் மீதான மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தின. அதிமுக மீது மக்களின் கோபம் கூடுதலாக இருந்ததை தேர்தல் பணிகளின் போது காண முடிந்தது. தேர்தல் வெற்றிக்கு வலுவான அணிசேர்க்கை உதவியது என்றாலும் பாஜக - அதிமுக அரசுகளின் தாராளமய மக்கள் விரோத கொள்கைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் எதிரான மக்கள் கருத்தே பிரதானமானதாகும். அதிமுக எதிர்ப்பு அலை தமிழகத்தில் வீசியது எனலாம்.

4.87 40 தொகுதிகளிலும் அதிமுக - பாஜக தோல்வியைச் சந்தித்திருந்தாலும் 30 சதவீத வாக்குகளை (1 கோடி) பெற்றுள்ளனர் என்பதை நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும். இந்த பின்னணியில் தோல்வியிலிருந்து மீட்சி பெறும் நோக்கத்தோடு பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் மக்களுக்கு வழங்கிடும் அறிவிப்பை அதிமுக அரசு செய்துள்ளது. அரசு ஊழியர் - ஆசிரியர்கள் விஷயத்திலும் கூட நிதான அணுகுமுறையை அதிமுக அரசு மேற்கொள்கிறது. இந்த வகையில் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும். தமிழக தேர்தல் முடிவுகள் அகில இந்திய அளவிலும் முக்கியத்துவம் பெற்றது.

சாதீய வேறுபாடுகள் - தீண்டாமை கொடுமைக்கு எதிராக

4.88 கட்சி சார்பிலும், வர்க்க - வெகுஜன இயக்கங்கள் சார்பிலும் சமூக ஒடுக்குமுறை எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. கடந்த காலங்களில் தென் மாவட்டங்களில் கூடுதலாக நமது தலையீடுகள் இருந்தன. தற்போது பரவலாக இயக்கங்கள் நடைபெறுகின்றன.

4.89 இக்காலத்தில் இரட்டை கிளாஸ் முறை, சுடுகாடு, சுடுகாட்டு பாதை, கோவில் நுழைவு, சாதி கடந்த திருமணங்களால் ஏற்படும் மோதல்கள், உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆதிக்க சக்திகளின் அணுகுமுறை, சாதியின் பெயரால் இழிவு படுத்தப்படுவது, பொதுப் பாதைகள், குளங்கள், சொத்துக்களை பயன்படுத்துவது,

திருவிழாக்களில் தப்படிக்க வற்புறுத்துவது, தலித்துக்கள் மீதான தாக்குதல்கள் - பொய் வழக்கு புனைவது குறிப்பாக பெண்கள் மீதான வன்முறை போன்ற பல்வேறு பிரச்சினைகளில் நாம் தலையிட்டுள்ளோம்.

490 இத்தகைய தலையீடுகளால் தலித் மக்களிடம் நமது பலம், செல்வாக்கு உயர்ந்திருப்பதை விருதுநகர், தூத்துக்குடி, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்ட அனுபவங்கள் உணர்த்துகின்றன. கோவை மாவட்டம் காளப்பட்டியில் தலித் மக்கள் தாக்கப்பட்ட பிரச்சினையில் காலத்தே நமது தலையீடு இல்லை. மாநில மையம் தலையீடு செய்ய நேர்ந்தது. தூத்துக்குடி மாவட்டம் சண்முகபுரம் கிராமத்தில் (தலித் மக்கள் ஆண் நாய் வளர்க்க கூடாது என்ற பிரச்சினை) நாம் தலையிட்டதில் தலித் மக்களிடம் வரவேற்பு இருந்தது.

491 நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மற்ற மாவட்டங்களில் உள்ளது போல் தீண்டாமை இல்லையென்றாலும், சில பகுதிகளில் இன்றும் தொடரும் சமூக ஒடுக்குமுறை பிரச்சினைகளில் தலையிடுவதிலும், தலித் இளைஞர்களை திரட்டுவதிலும் தனி கவனம் தேவைப்படுகிறது. மாவட்டக்குழுக்கள், கூடுதலான முனைப்புடன் இந்தப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

492 தலித் - பழங்குடி மக்கள் நலத்திட்ட ஒதுக்கீட்டு நிதி முறையாக செலவு செய்யப்படுவதில்லை. அரசுத் துறைகளில் ஒதுக்கீட்டு காலி இடங்கள் நிரப்பப்படுவதில்லை. 4 ஊராட்சிகளில் தலித் தலைவர்களை தேர்ந்தெடுக்க முடியவில்லை. வன்கொடுமை தடுப்புச் சட்டம் முறையாக செயல்படுத்தப்படுவதில்லை. பழங்குடியினர் நில வெளியேற்றம் தொடர்கிறது. தலித் மக்கள் வாழ் பகுதிகள் அடிப்படை வசதிகளின்றி புறக்கணிக்கப்படுகின்றன. இதுபோன்று தலித் - பழங்குடி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலும் நாம் தலையிட்டு அவர்களோடு இணைந்து நின்று போராட வேண்டும்.

493 14வது நாடாளுமன்ற தேர்தல் பரிசீலனையில் 'தலித் மக்களிடம் தலித் அமைப்புகளின் பிடிமானம் சற்று தளர்ந்துள்ளது' என்று மாநிலக்குழு கணித்தது. இந்த பின்னணியில் நமது தல்லயீடுகள் - நடவடிக்கைகளை வலுப்படுத்த உதவும் வகையில் மாநிலத்தின் 4 மையங்களில் பயிற்சி பட்டறைகள் மாவட்டத் தலைமைத் தோழர்களுக்காக நடத்தப்பட்டன. 800 பேர் பங்கேற்றனர். 'நமது அணுகுமுறை' குறித்து இந்தப் பட்டறைகளில் தெளிவுபடுத்தப்பட்டது.

494 இதன் தொடர்ச்சியாக 'தீண்டாமை ஒழிப்பு மாநில சிறப்பு மாநாடு' அக்டோபர் 21, 2004 அன்று மதுரையில் நடத்தினோம். 5000 பேர் கலந்து கொண்டனர். தோழர் என்.வி. மாநாட்டை துவக்கி பேசினார். தோழர் யெச்சூரியின் சிறப்புரை ஒரு வழிகாட்டியாக இருந்தது. தோழர் கே.வி. மற்றும் மாநில செயற்குழு, மாநிலக்குழு தோழர்கள் தலித் - பழங்குடி மக்கள் தொகைக்கேற்ப 19 +1=20 சத இடஒதுக்கீட்டை வலியுறுத்தும் தீர்மானம் உள்பட பல தீர்மானங்களை விளக்கிப் பேசினர். மாநாட்டு செய்திகள் மீடியாக்களில் இடம் பெற்றன. தீண்டாமை ஒழிப்பு போரில் மார்க்சிஸ்ட்டுகள், பூமிக்கு பொறுக்காது (தலித் சிறுகதைகள் தொகுப்பு) ஆகிய புத்தகங்கள் நம் தரப்பில் வெளியிடப்பட்டன.

495 சாதிய வேறுபாடுகள், ஒடுக்குமுறைகள், வர்ண தர்மம் ஆகியவற்றை எதிர்க்கும் முதலாளித்துவ கட்சிகளும், தலித் அமைப்புகளும் இந்தக் கொடுமைகளை சமூக பொருளாதார ஒடுக்குமுறையின் வடிவங்களாகவும், இவற்றின் அடித்தளம் நிலப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது என்றும் பார்ப்பதில்லை. இதனால் நிறைவேற்றப்பட்டுள்ள நிலச் சீர்திருத்த சட்டங்கள் கூட முறையாக செயல்படுத்தப்படுவதில்லை.

496 திராவிடக் கட்சிகள் ஆதிக்க சக்திகளுக்கும் சாதிச் சங்கங்களுக்கும் துணையாகவே உள்ளன. சமூக ஒடுக்குமுறை எதிர்ப்பு நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவதில்லை.

497 தலித் அமைப்புகள் நமது தலையீட்டை விரும்புவதில்லை. நமக்கு எதிரான பிரச்சாரத்தை செய்கின்றன. ஜனநாயக இயக்கங்களில் தலித் மக்கள் திரள்வதை தடுக்கும், தனிமைப்படுத்தும் அணுகுமுறையை பின்பற்றுகின்றன.

4.98 மேற்கண்டவைகளை நமது வலுவான தலையீடுகள் - நடவடிக்கைகள் மூலமே எதிர் கொள்ள முடியும். எனவே தீண்டாமை கொடுமைக் மற்றும் இதர ஒடுக்குமுறை நடவடிக்கைகளை எதிர்த்த போராட்டத்தோடு - வாழ்க்கைக்கு ஆதாரமான நிலத்துக்கான போராட்டத்தையும், சமூக பொருளாதார கோரிக்கைகளுக்கான போராட்டத்தையும் இணைத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இத்துடன் தலித் பழங்குடி மக்களை ஜனநாயகப்படுத்தும் நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

4.99 சாதிகளாய் பிளவுபட்டுள்ள உழைப்பாளி மக்களை, வர்க்கமாய் ஒன்றுபடுத்தும் வகையில் சரியான புரிதலை உருவாக்கும் அரசியல் சித்தாந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதும் நமது அவசிய கடமையாகும்.

4.100 கடந்த மூன்றாண்டுகளில் தலித் - பழங்குடி உபகுழு நான்கு முறை கூடி தமிழகத்தில் நீடித்து வரும் தீண்டாமைக் கொடுமை பற்றியும், தீண்டாமை ஒழிப்பில் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளின் தலையீடு பற்றியும் எதிர்கால இயக்கம் பற்றியும் விவாதித்து, மாநில செயற்குழுவிற்கு பரிந்துரைத்து இயக்கத்திற்கு திட்டமிட முன்முயற்சி எடுத்துள்ளது.

சி.பி.எம். - சி.பி.ஐ. கூட்டு இயக்கம்

4.101 சி.பி.எம். - சி.பி.ஐ. கூட்டு இயக்கங்கள் நடத்துவதில் தொடர்ச்சியாக நாம் முன்முயற்சி எடுத்து வருகிறோம். பொதுவாக சி.பி.ஐ. இதில் அக்கறை காட்டுவதில்லை. கடந்த அக்டோபர் மாதத்தில் சி.பி.எம். - சி.பி.ஐ. கலந்து பேசி மாநிலத்தில் 6 மையங்களில் குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை வலியுறுத்தியும் பா.ஜ.க. மதவெறி - அதிமுக மக்கள் விரோத செயல்பாடுகளை எதிர்த்தும் இடதுசாரி மாற்று கொள்கைகளை முன்வைத்தும் கூட்டு பொதுக்கூட்டங்கள் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

4.102 முதல் கூட்டம் அக்டோபர் 15 அன்று திருப்பூரில் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் என்.எஸ்., ஆர்.என்.கே. கலந்து கொண்டனர். அடுத்த கூட்டத்தை தஞ்சாவூரில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

4.103 கூட்டு நடவடிக்கையின் தொடர்ச்சியாக நவம்பர் 7 புரட்சி தினக் கூட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் இணைந்து நடத்தப்பட்டுள்ளன.

4.104 மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு அறிவித்த பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை திரும்பப் பெற வற்புறுத்தியும், தமிழக அதிமுக அரசு மழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரியும் நவம்பர் 14, 2004 அன்று சி.பி.எம்., சி.பி.ஐ. இணைந்து தமிழகமெங்கும் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். விழுப்புரத்திலும், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியிலும் மறியல் வீரர்களின் ஊர்வலத்தை தடுத்து காவல்துறை தடியடி நடத்தியது. தஞ்சை பேருந்து நிலையத்தில் தோழர்கள் ஜி. வீரய்யன், என். சீனிவாசன் ஆகியோர் முன்னெச்சரிக்கை என்ற பெயரால் கைது செய்யப்பட்டனர்.

4.105 கூட்டு நடவடிக்கைகளை பலப்படுத்துவதில் தொடர் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

4.106 புதுவை பிரதேசத்திலும் கூட்டு நடவடிக்கைகளுக்கு நாம்தான் முன்முயற்சி எடுத்து வருகிறோம். பல கூட்டு இயக்கங்கள் நடந்துள்ளன. கூட்டு இயக்கத்திற்கான முன்முயற்சியை நாம் தொடர வேண்டியுள்ளது.

தமிழ் வளர்ச்சி இயக்கம்

4.107 ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14 - தமிழ்ப் புத்தாண்டு தினம் "தமிழ் வளர்ச்சி தினமாக" அனுஷ்டிக்கப்பட்டு சிறப்பு கருத்தரங்கு - கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பல மாவட்டக்குழுக்கள் இதில் கவனம் செலுத்துவதில்லை. மாநிலக்குழுவும் கவனம் செலுத்துவதில்லை. தமிழ் மொழி வளர்ச்சி, கலை, பண்பாடு போன்றவை, கலை - இலக்கிய அமைப்பின் பணியாகவே விடப்படுகிறது.

4.108 இடதுசாரிகள் ஆதரவோடு அமைந்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு குறைந்தபட்ச திட்டத்தில்ஏற்றுக் கொண்டபடி 'தமிழ் மொழி செம்மொழி ஆக்கப்படும்' என்பதை அறிவித்தது.

4.109 இதனைத் தொடர்ந்து செம்மொழி அறிவிப்பை வரவேற்றும் செம்மொழியாக்கும் அரசாணை வெளியிட வலியுறுத்தியும் ஜூலை 2004 சென்னையில் மாநில சிறப்பு மாநாட்டை நடத்தினோம். இம்மாநாட்டின் வாயிலாக செம்மொழியாவதற்காக நாம் எடுத்த முயற்சிகளையும் எடுத்துச் சென்றோம். சென்னை மாவட்டக் குழுக்கள் முன்னின்று இம்மாநாட்டை நடத்தின.

4.110 மேற்கண்டவை தவிர இக்காலத்தில் பிரத்யேக நடவடிக்கைகள் இயக்கங்கள் நடத்தப்படாதது பெருங்குறையே ஆகும்.

4.111 எதிர் வரும் காலத்தில் தமிழ் - செம்மொழியாக அங்கீகாரம் பெற்றுள்ள நிலையில் மொழி வளர்ச்சிக்கான கோரிக்கைகளை உருவாக்கி செயல்பட வேண்டும்.

4.112 கலை இலக்கிய பண்பாட்டு பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

4.113 தமிழகத்தின் நிர்வாக, நீதிமன்ற, கல்வி மொழியாக தமிழ் மொழி பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த தமிழக அரசை வற்புறுத்த வேண்டும்.

4.114 மத்திய நிர்வாக, நாடாளுமன்ற மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழி ஏற்றம் பெறவும், சம அந்தஸ்து பெறவும் இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும்.

உலக சமூக மாமன்றம்

4.115 உலக சமூக மாமன்ற 4வது மாநாட்டு (2004-ஆம் ஆண்டு) நிகழ்ச்சிகள் ஜனவரி 16 - 21, 2004ல் மும்பையில் நடைபெற்றன. தமிழகத்தின் பங்கேற்பு குறைவே. சுமார் 3000 பேர் கலந்து கொண்டதில் தன்னார்வ குழுக்கள் மற்றும் தலித் அமைப்புகள் சார்பிலான பெண்கள், தலித் மக்களே அதிகம். தன்னார்வ குழுக்களின் செயல்பாடு பரவலாக உள்ளது என்பதையே இந்தக் கூடுதல் எண்ணிக்கையிலான பங்கேற்பு வெளிப்படுத்துகிறது. தோழர் டிகே.ஆர்., ஜி.ஆர். கலந்து கொண்டனர். நமது வர்க்க, வெகுஜன - மத்தியதர அமைப்புகள் சார்பில் 300 பேர் வரை கலந்து கொண்டனர்.

4.116 'உலக சமூக மாமன்றம்' என்பது உலகமயமாக்கலுக்கும், அதன் தீய விளைவுகளுக்கும் எதிரான உலகளாவிய ஒரு பிரச்சார மேடையாக உள்ளது. நிரந்தர ஸ்தாபன அமைப்போ, சட்ட விதிகளோ கிடையாது. உலகமயமாக்கலை எதிர்க்கிற தனிநபர்கள், அமைப்புகள், இதன் மாநாடுகளில் பங்கேற்கலாம் என்பதே தற்போதைய நடைமுறையாக உள்ளது.

4.117 அதே சமயம் மாநில, மாவட்ட அளவில் மாமன்றத்தின் நிரந்தர ஸ்தாபன எற்பாடுகளை உருவாக்கும் முயற்சிகள் உள்ளன. இதில் நாமோ, நமது தலைமையில் இயங்கும் ஸ்தாபனங்களோ பங்கேற்க வேண்டியதில்லை. நிரந்தர ஸ்தாபன ஏற்பாடு (Permanent Body) அவசியமில்லை என்பது நமது நிலையாகும்.

சமூக விரோத சக்திகளால் கொலை செய்யப்பட்ட தோழர்கள் குடும்ப உதவி, இதரவை

4.118 திருப்பூர், இடுவாய் ஊராட்சிமன்ற தலைவர் தோழர் கே. இரத்தினசாமி, கொடியவர்களால் (மார்ச் 2002) படுகொலை செய்யப்பட்டதை எதிர்த்து, தமிழகமெங்கும் வலுவான கண்டன இயக்கங்கள் நடைபெற்றன. கொலையாளிகளை கைது செய்ய வற்புறுத்தி ஏப்ரல் 12, 2002இல் தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கொலையாளிகள் கைது செய்யப்பட்டு தற்போது வழக்கு நிலுவையில் உள்ளது. குடும்ப உதவி நிதி, வழக்கு நிதியாக ரூ. 5 லட்சம் வசூலித்து ஜூலை 29, 2002-இல் வழங்கப்பட்டது.

4.119 தூத்துக்குடி- ஸ்ரீ வைகுண்டம் வட்டக்குழு உறுப்பினர் தோழர் ஆர். மகாலிங்கம் ஏப்ரல் 22, 2003 இரவு படுகொலை செய்யப்பட்டார். கிராமப்புற ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும், சாதீய கொடுமைகளுக்கு எதிராகவும் உறுதியாகப் போராடியவர். கொலைக்கு எதிராக கண்டன

இயக்கம் நடைபெற்றது. குடும்ப உதவி நிதி ரூ. 2,00,000 வழங்கப்பட்டது. வழக்கு நிலுவையில் உள்ளது.

4.120 திண்டுக்கல் நிலக்கோட்டை தாலுக்கா குழு உறுப்பினர் தோழர் எம்.பி. பாண்டியராஜன் தொண்டு நிறுவனங்கள் சிலவற்றில் நடைபெறும் நிதி மோசடி, முறைகேடுகளை அம்பலப்படுத்தி போராடியதால், செப்டம்பர் 15, 2003இல் சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டார். இதை எதிர்த்து கண்டன இயக்கங்கள் நடைபெற்றன. கொலையாளிகள் சிலர் கைது செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டது.

4.121 கும்பகோணம் தனியார் பள்ளியில் (ஜூலை 15, 2004) நடந்த தீ விபத்தில் 94 குழந்தைகள் கருகி உயிரிழந்தனர். தமிழகத்தை உலுக்கியது. தேசம் அதிர்ந்தது. தோழர் என்.வி., டி.எல்., நன்மாறன், பாலபாரதி, தஞ்சை மாவட்ட தோழர்கள் நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர். தொடர்ந்து தோழர் யெச்சூரி, டி.கே.ஆர்., கே.பி. ஆகியோரும் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தனர். மத்திய - மாநில அரசுகள் அரசியல் கட்சிகள் மற்றும் பல தரப்பிலிருந்தும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பல்வேறு உதவிகள் செய்திருந்த போதும் மனித நேய அடிப்படையில் நம் தரப்பிலும் குறைந்தபட்ச உதவிகள் செய்வது அவசியம் என கருதினோம். இதனடிப்படையில் குடந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தோழர். என்.எஸ். கலந்து கொண்டு 112 குடும்பங்களுக்கு ரூ.1000/- வீதம் நம் தரப்பிலும் நிதி வசூல் செய்து உதவினோம். சமுதாயக் கூடம் ஒன்று கிராமத்தில் கட்டுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

⌘⌘⌘

அரங்கங்கள்

தொழிற்சங்க அரங்கம்

இந்த அறிக்கையின் முன்பகுதியில் குறிப்பிட்டுள்ளதைப்போல பெருந்தொழில்களில் நெருக்கடிகளும், முன்னேற்றங்களும் கலந்த சூழல் நிலவுகிறது.

தொழில் மற்றும் தொழிலாளர் நிலை

5.1 தமிழகத்தில் 121 பெரிய - சிறிய பஞ்சாலைகள் மூடப்பட்டு 33 ஆயிரத்து 500 பேர் வேலையிழந்துள்ளனர். அதேவேளையில் ஏராளமான புதிய பஞ்சாலைகள் தோன்றி, இப்போது மாநிலத்தில் 828 பெரிய பஞ்சாலைகள், 904 சிறிய ஆலைகள் என மொத்தம் 1732 பஞ்சாலைகள் இருக்கின்றன. 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 13 ஆலைகள் மூடப்பட்டுள்ளன. கோட்ஸ் போன்ற ஆலைகளில் தொழிலாளர் எண்ணிக்கை 7 ஆயிரத்திலிருந்து 800ஆக குறைந்துள்ள அதேவேளையில் உற்பத்தி இரண்டு மடங்கு ஆகியிருக்கிறது. அதாவது, வேலைவாய்ப்பு பறிக்கப்பட்டு சுரண்டல் தீவிரப்பட்டுள்ளது. சிமெண்ட் மற்றும் சர்க்கரை ஆலைகளுக்கும் இது பொருந்தும்.

5.2 இன்ஜினீயரிங் தொழிற்சாலைகள் பல மூடப்படுகிற போது புதிய நவீன தொழில்கள் தோன்றுகின்றன. தமிழகத்தில் உற்பத்தியாகும் பொருட்களின் உற்பத்தியில் மொத்தத்தில் குறைவு ஏற்பட்டுவிடவில்லை. ஒவ்வொரு பெரிய நிறுவனமும் (சிம்சன், ஆட்கோ, இந்துஸ்தான் மோட்டார்ஸ், டிவிஎஸ், லேலண்டு போன்றவை) அதே பொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை மாநிலத்தின் இதர இடங்களில் உருவாக்கிக் கொண்டுள்ளன. பழைய கம்பெனிகளில் படிப்படியாக ஆட்களைக் குறைப்பது நடக்கிறது. புதிய கம்பெனிகளில் மலிவான ஊதியத்தில் நிரந்தரமற்ற ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். காண்ட்ராக்ட், கேஷுவல் முறைகள் தீவிரப்பட்டுள்ளன. இந்தியா பெருமுதலாளிகளுக்கு ஒளிர்வதாகவும், உழைப்பாளர்களுக்கு இருளுவதாகவுமே இருக்கிறது.

5.3 தமிழகத்தில் பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து வந்த கைத்தறி, தீப்பெட்டி, தோட்டம், தேயிலை, தோல் பதனிடல் போன்ற பல தொழில்கள் நவீன மயம் மற்றும் தாராள இறக்குமதிகளை தாக்குப்பிடிக்க முடியாமல் நலிவடைகின்றன. இதனால் பெரும்வேலையின்மை உருவாகிறது.

5.4 புதிதாக வந்துள்ள பெரிய கார் தொழிற்சாலைகள் தனக்குத் தேவையான துணைத் தொழிற்சாலைகளை தன்னைச் சுற்றி உருவாக்கிக் கொள்கின்றன. இதே போல சிறப்பு பொருளாதார மண்டலங்களிலும் தொழிற்சாலைகள் அமைகின்றன. மலிவான கூலிக்கு தொழிலாளர்கள் இந்தத் தொழிற்சாலைகளில் வேலை வாங்கப்படுகின்றனர். சட்டம் இங்கே மதிக்கப்படுவதில்லை. தொழிற்சங்கம் அனுமதிக்கப்படுவதில்லை.

5.5 கொக்கோ-கோலா, போர்டு போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய சட்டங்கள் எங்களுக்கு பொருந்தாது என்று பகிரங்கமாகவே தொழிலாளர்களை மிரட்டுகின்றன.

5.6 தகவல் தொழில் நுட்பத் துறையில் உருவாகியுள்ள கம்பெனிகளில் வேலைவாய்ப்பு கிட்டியுள்ளது. அவுட்சோர்சிங்கில் பணியாற்றுவோருக்கு ஒவ்வொரு நாளும் இரவுப் பணி தான். இங்கும் சுரண்டல் மிகக்கடுமையாக உள்ளது. பெண்கள் உட்பட அனைவருக்கும் வேலை நேரம் குறைந்தது 12 மணிநேரம் என்ற நிலை உள்ளது. இந்தத்துறையிலும் எந்தத் தொழிலுறவு சட்டத்தையும் மதிப்பதில்லை.

5.7 முதலாளிகள் கூட்டமைப்புகளில் வேலைநிரந்தரம் போன்ற பணிப்பாதுகாப்புகளை அகற்ற வேண்டும் என்கிறார்கள். இதர தொழிலுறவுச் சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும் என்கிறார்கள். இந்த நிலை ஏற்பட்டால் தான் வெளிநாட்டு மூலதனம் தடையில்லாமல் வரும் என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

5.8 தொழிலுறவுச் சட்டங்களை அமலாக்கும் பிரிவு நடைமுறையில் முடமாக்கப்பட்டுள்ளது.

5.9 கேந்திரமான பெருந்தொழில்களில் இப்போது பொதுத்துறையில் உள்ள நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் முயற்சி தீவிரமாக இருக்கிறது.

5.10 பி.ஜே.பி. ஆட்சியின்போது தமிழகத்தில் உள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர் அகில இந்திய அளவில் பால்கோ உட்பட பல பெரும் தொழிற்சாலைகள் தனியாருக்கு விற்கப்பட்டன.

5.11 தமிழ்நாட்டில் உள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், சேலம் உருக்காலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி போன்ற மத்திய தொழிற்சாலைகள் கூட மூடப்படும் அல்லது தனியாருக்கு விற்கப்படும் என்ற நிலை அப்போது இருந்தது.

5.12 தனியார் மயம் என்றாலே தேசத்திற்கு ஏற்படும் பல இழப்புகளோடு தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேற்றப்படுவதும் நடக்கிறது.

5.13 அரசிற்கு பல வழிகளில் நிதி திரட்டித் தருகிற நிதி நிறுவனங்களைக்கூட தனியாருக்கு தருவதற்கான முயற்சிகள் தொடருகின்றன.

5.14 தனியார் வங்கிகளை வாங்கிக் கொள்ள அந்நிய வங்கிகள் அனுமதிக்கப்படும் என்பதும், காப்பீட்டுத்துறையில் தனியார் அனுமதிக்கப்படுவர் என்பதும், விமானப் போக்குவரத்தில் வெளிநாட்டு வழித்தடங்களில், இந்திய தனியார் அனுமதிக்கப்படுவர் என்பதும், பெரிய விமான நிலையங்களை தனியாருக்கு தருகின்ற முயற்சியும் தொடருகின்றன.

5.15 கூரியர் சர்வீஸ், கேஸ் போடுதல், டெலிபோன் பூத்துக்கள், பெட்ரோல் பங்குகள், வீட்டு மராமத்துப் பணிகள், வீடுசார் பணிகள், சுயதொழில்கள் போன்ற பல தரப்பட்ட வேலைகள் அதிகரித்துள்ளன. உத்தரவாதமான வேலை, குறைந்தபட்ச வருமானம் எதுவும் இந்தத் தொழில்களில் கிடையாது.

போராட்டங்கள்

5.16 சென்ற 17வது மாநாடு நடந்த போது மாநிலஅரசு உலகமயம் மற்றும் தாராளமயத்தின் பிரதிநிதியாக தொழிற்சங்க இயக்கத்தையே நசுக்கும் நோக்கத்தோடு அடக்குமுறையை ஏவியதைப் பரிசீலித்தோம். கடந்த மூன்றாண்டுகளிலும் முதலாளிகளின் போக்கை எதிர்த்தும், அரசின் போக்கை எதிர்த்தும் தொழிலாளர்களின் வலுவான கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடந்தன.

5.17 போக்குவரத்தை தனியார்மயப் படுத்தும் அரசின் முயற்சியை எதிர்த்து போக்குவரத்து ஊழியர்கள் சம்மேளனம் மாநிலந்தழுவிய நடைப்பயணம், மனிதச் சங்கிலிப் போராட்டம், மக்கள் பிரதிநிதிகள் சந்திப்பு இயக்கம் ஆகியவற்றை நடத்தியது. இந்தப்போராட்டங்களில் மாதர், வாலிபர், மாணவர், மத்தியதர தொழிற்சங்க அமைப்புகள் என்று அத்தனைத் தரப்பினரும், சகோதர ஆதரவை சிறப்பாக வெளிப்படுத்தினர். மனித சங்கிலியில் நல்ல எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

5.18 அரசுப் போக்குவரத்தை தனியார் மயமாக்குவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு அந்த முயற்சி தடை செய்யப்பட்டுள்ளது.

5.19 மின்வாரியம், இன்சூரன்ஸ், பிஎஸ்என்எல், வங்கி போன்ற அனைத்து இடங்களிலும் தனியார்மய எதிர்ப்பு இயக்கங்கள் சக்தியாக நடத்தப்பட்டன. அமைப்பு ரீதியாக திரட்டப்பட்ட தொழில்களில் பறிக்கப்பட்ட சலுகைகளை திரும்பப் பெறவும், பொதுத்துறைத் தொழில்களில் கூடுதலாக தனியார் மயப்படுத்தலை எதிர்த்தும் போராட்டங்கள் நடந்தன.

5.20 ஆரம்பத்தில் கூட்டு இயக்கத்தில் ஆர்வம் காட்டாத தொ.மு.ச. பேரவை போன்ற சங்கங்கள் கூட நமது தனி இயக்கங்கள் உண்டாக்கிய தாக்கத்தால் பிறகு கூட்டு இயக்கத்திற்கு வர நேர்ந்தது. பி.ஜே.பி. தலைமையிலான என்.டி.ஏ.வின் ஆட்சியிலேயே அங்கம் வகித்ததால் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய சங்கங்கள் உளப்பூர்வமாக கூட்டு இயக்கத்தில் இல்லை.

5.21 மாநில பொதுத்துறைத் தொழில்களில் போனஸ் மற்றும் சலுகைப் பறிப்புகளை எதிர்த்து கடும் அடக்குமுறைக்குப் பிறகும் நமது இயக்கம் தொடர்ந்து கிளர்ச்சிகள் நடத்தி வந்தது. அரசின் கொள்கைகளுக்கு எதிரான வலுவான பிரச்சாரமும் செய்து வந்தது.

5.22 பென்சன் மற்றும் சில உரிமைப் பறிப்புகளை எதிர்த்து நடந்த அரசு ஊழியர், ஆசிரியர்களின் பிரம்மாண்டமான வேலைநிறுத்தம் சிறப்பிற்குரியது. அரசு டெஸ்மா சட்டத்திருத்தம் செய்து கொண்டு ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர்களை ஒட்டுமொத்தமாக வேலைநீக்கம் செய்தது. இது முதலாளித்துவ அரசு இயந்திரத்தின் உண்மைச் சொரூபத்தை தோலுரித்துக்காட்டியது.

5.23 வேலைநிறுத்தம் செய்யும் உரிமை அரசு ஊழியர்களுக்கு எந்த வகையிலும் கிடையாது என்று நீதிமன்றங்கள் கொடுத்த தீர்ப்பும் அரசியலமைப்புச் சட்டப்படியான அடிப்படை உரிமைகளைப் பற்றிய கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. இதர தொழிலாளர்கள் வலுவான ஆதரவுப் போராட்டத்தை நடத்தியிருக்க வேண்டிய இந்தப்பிரச்சனையில் ஆரம்பத்திலேயே சிலர் உயர்நீதிமன்றம் சென்றுவிட்டதால் சிக்கல் ஏற்பட்டது.

5.24 இந்த வேலை நீக்கங்களை எதிர்த்து அரசுப்போக்குவரத்து ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் தோழர் டி.கே.ஆர். தொடுத்த வழக்கில் வேலைநிறுத்த உரிமை பற்றிய நமது நிலையை வலுவாக சொல்லியுள்ளோம். வேலைநிறுத்த உரிமைக்கான போராட்டத்தை தொடர்ந்து வலுவாக நடத்த வேண்டியுள்ளது.

5.25 கடந்த மூன்றாண்டுகளில் தொழிலாளர்கள் போராட்டம் போலவே லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம், விசைத்தறி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம், பனியன் தொழிற்சாலை உரிமையாளர்களின் போராட்டம், இன்ஜினீயரிங் தொழில் உரிமையாளர்கள் வேலைநிறுத்தம், வியாபாரிகளின் வேலைநிறுத்தம், சிறு உற்பத்தியாளர்கள் போராட்டம் என்று பல வலுவான போராட்டங்கள் நடந்தன.

5.26 பெரு முதலாளிகள் மற்றும் அந்நிய முதலாளிகளுக்கு ஆதரவான உலகமயக் கொள்கையால் பாதிக்கப்படுகிற அனைத்துத் தரப்பினரும் போராடத் துவங்கியுள்ளனர். இந்தப் போராட்டங்களுக்கு நமது தொழிற்சங்க அமைப்புகள் ஆதரவும், ஊக்கமும் அளித்தன.

5.27 இந்த சிறு உடமையாளர் பிரிவினரோடு நாம் கூட்டணி அமைத்து செயல்பட வேண்டிய புரிதலை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

மே 21 வேலைநிறுத்தம்

5.28 உலகமயம், தாராளமயம் மற்றும் தனியார் மயக் கொள்கைகளால் உழைப்பாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எதிர்த்து 2003 மே 21 அன்று அனைத்திந்திய வேலைநிறுத்தத்திற்கு மத்திய அமைப்புகள் டில்லியில் கூட்டாக முடிவெடுத்தன. இந்த வேலைநிறுத்தத்தை தமிழகத்தில் வெற்றிகரமாக நடத்த நமதுஅமைப்பு தீவிரமாக முன்முயற்சி எடுத்தது. சென்னை சுற்றுவட்டாரங்களிலும், ஊட்டி தேயிலை தோட்டங்களிலும், இதர மாவட்டங்களில் பரவலாகவும் வேலைநிறுத்தம் நடந்தது. கூட்டு இயக்கம் என்றாலும் கிட்டதட்ட இடதுசாரிகள் மட்டும் நடத்திய வேலைநிறுத்தமாகவே இருந்தது. பாண்டிச்சேரியில் இது 'பந்த்' போராட்டமே நடத்தப்பட்டது பாராட்டிற்குரியது. முறைசாரா தொழிலாளர்கள் பல இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்டனர். கொள்கை மாற்றத்தை வலியுறுத்தும் இது போன்ற போராட்டங்களை வெற்றிகரமாக நடத்த வேண்டியதன் அவசியத்தை சாதாரண தொழிலாளர்களிடம் பெருமளவிற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

பிப்ரவரி 24 வேலைநிறுத்தம்

5.29 வேலைநிறுத்த உரிமைக்கெதிராக தமிழக அரசு தொடுத்த தாக்குதலை எதிர்த்தும், வேலைநிறுத்த உரிமைக்கெதிராக நீதிமன்றங்கள் கொடுத்த தீர்ப்புகளை எதிர்த்தும் 2004 பிப்ரவரி 24 அன்று அனைத்திந்திய வேலை நிறுத்தம் செய்யுமாறு அனைத்திந்திய முடிவு மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்தில் இந்த வேலைநிறுத்தம் சிறப்பான பிரச்சாரத்தோடு நடத்தப்பட்டது. தொழிற்சாலைகளிலும், வங்கி, இன்சூரன்ஸ், தபால், தொலைத்தொடர்பு, மத்திய அரசு,

பாதுகாப்புத்துறை போன்ற அலுவலகங்களிலும் இந்த வேலைநிறுத்தம் சிறப்பாக நடைபெற்றது. பெரும்பாலான மாவட்டங்களில் தொழிலாளர்கள் அன்றைய தினம் மறியல் செய்தனர். அரசு ஊழியர்கள்- ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போக்குவரத்து, மின்சாரம்,குடிநீர் போன்ற மாநில அரசு தொடர்பான தொழில்களில் அப்போதிருந்த நிலைமையை கணக்கில் கொண்டு அனைத்திந்திய தலைமையோடு கலந்து பேசி விதிவிலக்கு அளித்தோம்.

முறைசாரா தொழிலாளர்

5.30 முறைசாரா தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் உட்பட, தமிழகத்தில் இரண்டரை கோடி பேர் உள்ளனர். இந்த முறைசாரா தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இந்தப்பிரிவினருக்கான குறைந்தபட்ச ஊதியம், சமூகப் பாதுகாப்பு, சட்டப்பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறுவதற்கான முன்முயற்சியை நாம் எடுத்து வருகிறோம். நமது தொடர்ந்த கிளர்ச்சிகளால் நல வாரியங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் கட்டுமான தொழிலாளர் நல வாரியம் தவிர மற்ற நல வாரியங்கள் குளறுபடிகளால் முடங்கிக்கிடக்கின்றன. நல வாரிய செயல்பாட்டை வலியுறுத்தி தொடர்ந்து இயக்கங்கள் நடத்தி வருகிறோம். பெரும்பாலும் தலித், பிற்பட்டோர், சிறுபான்மையோர் மட்டுமே உள்ள இந்த உடலுழைப்புத் தொழிலாளர்களின் வலுவான இயக்கத்தைக் கட்டுவது கட்சியின் முக்கியமான பணி. இந்த உழைப்பாளிகளில் பெரும் பகுதியினர் பெண்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வேலையின்மை

5.31 முன்பே கூறியுள்ளபடி வேலையின்மை தான் முன்னுக்கு வருகிற முக்கிய பிரச்சனை. புதிதாக வருகிற வளர்ச்சியும் வேலைவாய்ப்பைத் தராத வளர்ச்சியாகவே உள்ளது. தொழிற்சங்கப் போராட்டங்களை உடைக்கிற படையாகவும் இது பயன்படுத்தப்படுகிறது. அரசு ஊழியர் - ஆசிரியர் போராட்டத்திலும் இதைக் காண முடிந்தது. வேலையற்ற இளைஞர்களின் பிரச்சனையில் இதர வெகுஜன அமைப்புகளையும் இணைத்துக் கொண்டு தொழிற்சங்க இயக்கம் அரசின் கொள்கைகளுக்கு எதிரான கிளர்ச்சிகளுக்கும், பிரச்சாரங்களுக்கும் திட்டமிட வேண்டும்.

உழைக்கும் பெண்கள்

5.32 தொழிலாளர்களின் ஒரு பகுதியாக இருக்கிற உழைக்கும் பெண்களை சங்கங்களில் திரட்டுவதிலும் பலவீனம் உள்ளது. அவர்களை தலைமைப் பொறுப்பிற்குக் கொண்டு வருவதிலும் தயக்கம் இருக்கிறது. உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு மூலமாக இதில் முறிப்பைக் கொண்டு வரும் முயற்சியில் சிறு முன்னேற்றமுள்ளது. 27 மாவட்டங்களில் மாவட்ட கமிட்டிகள் உண்டு. கட்சி உறுப்பினர்களின் தனி கவனத்தோடும் வெகுஜனத் தன்மையோடும் இதைப் பலப்படுத்த வேண்டும்.

5.33 சமீபத்தில் உழைக்கும் பெண்களின் டெல்லி பேரணிக்கு 100 பெண்கள் தமிழகத்தில் இருந்து சென்று வந்தது மிகப் பெரிய வேலையாகும். உழைக்கும் பெண்களுக்கு ஒரு பயிற்சி முகாமும் நடத்தப்பட்டுள்ளது. பொதுவான இயக்கங்களில் பெண்களின் பங்கெடுப்பு அதிகரித்துள்ளது. பிரதான மாவட்டங்களிலாவது, பெண் முழு நேர ஊழியர்களை தொழிற்சங்க பணிகளுக்கென நிர்ணயிக்க வேண்டும்.

அகில இந்திய மாநாடு

5.34 சிஐடியுவின் அகில இந்திய மாநாட்டை சென்னையில் நடத்தும் பொறுப்பு தரப்பட்டது. இந்த மாநாட்டை நாம் தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக நடத்திக்கொடுத்தோம். பிரதிநிதிகள் தங்கும் வசதி, சாப்பாட்டு வசதி, கூட்ட அரங்கு போன்ற ஒவ்வொன்றும் நிறைவாக செய்து தரப்பட்டது.

5.35 சிஐடியு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், மத்தியதர வர்க்க அமைப்புகளை சார்ந்தவர்கள் மூலமாக இதற்கான நிதி வசூல் ரூபாய் 1கோடிக்கும் மேல் திரட்டப்பட்டது. இதுவரை நாம் நினைத்துப்பார்க்காத தொகை இது. தொழிலாளர்கள் மத்தியில் நமக்குள்ள மரியாதையை இது

காட்டியதோடு, திட்டமிட்டு நமது அணிகளை பணியில் இறக்கினால் நமது சக்தி பெரியது என்பதையும் காட்டியது.

5.36 வீடுகளில் கொடியேற்றுதல், உள்ளூர் தொலைக்காட்சிகளில் விளம்பரப்படுத்துதல், எல்லா இடங்களிலும் சுவர் விளம்பரம் செய்தல் தமிழகத்தின் தலைசிறந்த ஓவியர்களைப் பயன்படுத்தியது போன்ற ஒவ்வொன்றும் தனித்தன்மையோடு நிறைவேற்றப்பட்டது.

5.37 இறுதிநாள் பேரணிக்கான இடமும் அனுமதியும் மறுக்கப்பட்டது. பெரும் முயற்சிக்குப் பிறகு புறநகரில் ஒரு தனியார் இடத்தில் பொதுக்கூட்டம் நடத்தினோம். கோயம்பேட்டிலிருந்து பேரணியும் நடத்தினோம். இந்தப் பேரணியில் 1 லட்சம் பேர் கலந்து கொண்டது முன்னெப்போதும் இல்லாத ஒன்று. அரசின் அடக்குமுறைகளுக்கு எதிர் சவாலாகவே தொழிலாளர்களும், மத்தியதர வர்க்க ஊழியர்களும் பெருமளவில் பெண்களும் திரண்டார்கள். இதுவும் நமது பலத்தை உணர்த்தியது.

தேர்தல்

5.38 நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று சிஐடியு மாநிலக்குழுவில் முடிவு செய்து தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தோம். இதற்கு முன்பு இப்படி நாம் கூறியதில்லை. ஒரு தரப்பிற்கே ஓட்டு என்று நாம் கூறியது இதுவே முதன்முறை. பி.ஜே.பி.யின் கொள்கை, அ.தி.மு.க.அரசின் அடக்குமுறைப்போக்கு, உலகமயம் மற்றும் தாராளமயத்தின் பிரதிநிதிகளாக அடக்குமுறைகளை ஏவியது, பொதுத்துறை தொழில்களை விற்றது, பொடா,டெஸ்மா போன்ற அடக்குமுறைச் சட்டங்களின் ஆட்சியாக இருந்தது, தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் ஆகியவற்றை விளக்கி, மத்தியில் பி.ஜே.பி.யும் மாநிலத்தில் அ.தி.மு.கவும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று பகிரங்கமாக தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தோம். இது நல்ல பலனைத் தந்தது.

பயிற்சி முகாம்

5.39 சிஐடியு முழுநேர ஊழியர்கள் மற்றும் பகுதிநேர ஊழியர்கள் 600 பேர்களுக்கு நேர நிர்வாகம், ஆளுமைப்பண்பு, தொழிலுறவு சட்டங்களைப் பற்றியும், தொழிற்சங்கத்தில் நமது கடமை குறித்தும் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. மாநிலத்தில் 6 இடங்களில் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி முகாம் தொழிற்சங்க ஊழியர்களின் பணிமேம்பாட்டை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. எங்களுக்கு நல்ல பலன் தரும் பயற்சி என்று ஊழியர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

நடைப்பயணம்

5.40 2004 வெண்மணி தினத்தையொட்டி 3 நாட்கள் 90 குழுக்கள் 1900 பேர் 5000 கிலோ மீட்டர், 4000 கிராமங்கள் வழியாக வர்க்க ஒற்றுமை, இடதுசாரி மாற்றுத்திட்டம் ஆகியவற்றை பிரச்சாரம் செய்கிற நடைப்பயணத்தை பழைய ஒன்றுபட்ட தஞ்சைமாவட்டத்தில் மேற்கொள்வது என சிஐடியு முடிவு செய்தது. டிசம்பர் 22,23,24 தேதிகளில் இந்த நடைப்பயணம் நடந்தது. 25ந்தேதி வெண்மணி நினைவிடத்தில் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் அனைத்துத் தொழில்களில் இருந்தும் வந்த தொழிலாளர்கள் திரண்டனர். எதிர்பாத்ததைவிட சிறப்பான விளைவுகளை இந்த நடைப்பயணம் உருவாக்கியுள்ளது. நடைப்பயணத்தில் சென்றவர்கள் உறுதி, அர்ப்பணிப்பு உணர்வு, இயக்க வேலைகளை பல மடங்கு தீவிரப்படுத்த வேண்டிய அவசியம் மற்றும் உற்சாகம் ஆகியவற்றை பெற்றுள்ளனர். அவர்களின் வர்க்கப் பார்வையை இந்த நடைப்பயணம் விசாலப்படுத்தியுள்ளது.

5.41 தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள கட்சி ஊழியர்கள், வி.ச., வி.தொ.ச. ஊழியர்கள் புத்தெழுச்சி கொண்டுள்ளனர். கிராம மக்கள் நமது தொழிலாளர்களின் அணுகுமுறையில் நெகிழ்வும், நம்பிக்கையும் பெற்றுள்ளனர். தொழிலாளி - விவசாயி ஒற்றுமை என்ற நமது முழக்கம் இந்த முறையில்தான் நடைமுறை ஆக்கம் பெறும் என்ற எண்ணத்தையும் உண்டாக்கியுள்ளது.

5.42 அந்த மூன்று மாவட்டங்களிலும், வாலிபர், மாணவர், மாதர் ஆகிய அமைப்புகளையும், வி.ச. வி.தொ.ச. அமைப்புகளையும் முன்னெடுத்துச் செல்ல இந்த நடைப்பயணம் உதவி செய்யும்.

உறுப்பினர் எண்ணிக்கை

5.43 சிஐடியு உறுப்பினர் எண்ணிக்கையில் உயர்வில்லை. 2001ல் 2,77,278ம், 2002-ல் 2,63,482ம், 2003ல் 2,07,514ம் என்ற முறையில்உறுப்பினர் எண்ணிக்கை உள்ளது. 2003க்கான உறுப்பினர் விபரம் முழுமையானது அல்ல. ஆடிட் செய்யப்பட்டு, அதனடிப்படையில் இணைப்புக் கட்டணம் மாநில மையத்தில் சேர்ப்பிக்கப்பட்ட அடிப்படையிலான விபரம் இது. ஒரு சில மாவட்டங்கள் இன்றளவும் இணைப்பு கட்டணம் செலுத்ததால் உறுப்பினர் எண்ணிக்கையில் இடம் பெறவில்லை. பல மாவட்டங்கள் ஒரு பகுதி இணைப்பு கட்டணம் செலுத்தி, இன்னொரு பகுதி செலுத்தாமல் இருப்பதாலும் உறுப்பினர் எண்ணிக்கை முழுமை பெறவில்லை.

5.44 உறுப்பினர் எண்ணிக்கை குறைவிற்கு, பழைய தொழிற்சாலைகளில் வேலையிழப்பு என்கிற காரணம் இருப்பினும், புதிய பகுதிகளில் விஸ்தரிப்பு இல்லாததும் காரணம். இந்த விஸ்தரிப்பை உறுதி செய்ய வேண்டும். மாவட்ட மாநாடுகளில் தொழில் வாரியாக முன்னுரிமை தந்து உறுப்பினர் சேர்ப்பது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது.

மாநாடுகள்

5.45 2003ல் 33 மாவட்ட மாநாடுகளும், 27 உழைக்கும் பெண்கள் மாவட்ட மாநாடுகளும் நடத்தப்பட்டுள்ளன. உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பு, தொழிலாளர்களை சங்க வேலைகளில் ஈடுபடுத்துவது உள்ளிட்ட ஜனநாயக செயல்பாடு, பெண்களைத் திரட்டுதல், தலைமை பொறுப்பிற்கு கொண்டு வருதல், கூட்டு இயக்கங்களை நடத்த வேண்டிய அவசியமும் உத்தியும், நிதி ஒழுக்கம், அரசியல் - பொருளாதார சிந்தனையோடு செயல்படுதல் போன்றவை உணர்த்தப்பட்டுள்ளன. இது ஒரு தொடர் முயற்சி.

5.46 இதேபோல் போக்குவரத்து, மின்சாரம், மருந்து விற்பனை பிரதிநிதிகள், பஞ்சாலை, கூட்டுறவு, பீடி, கைத்தறி ஆகிய சம்மேளன மாநாடுகள் நடைபெற்றன. சிஐடியு மாநில மாநாடும், உழைக்கும் பெண்கள் மாநில மாநாடும், நடத்தப்பட்டுள்ளன.

விவசாய நிதி

5.47 விவசாய இயக்க நிதியாக ஆண்டுதோறும் ரூ.1லட்சத்திற்கு மேல் சிஐடியு நிதி வழங்கி வருகிறது.

இதழ்கள்

5.48 சிஐடியு செய்தி, போக்குவரத்து தொழிலாளி, மின்கதிர், தொழிலரசு (ரயில்வே), டிஎன்.எம்.எஸ்.ஆர்.ஏ.செய்தி, கூட்டுறவு குரல் இதழ்களும் வெளிவருகின்றன.

5.49 2004ல் சிஐடியு செய்தி-10789ம், போக்குவரத்து தொழிலாளி -23,500ம், மின்கதிர்-7,000ம், தொழிலரசு-4,000ம், டி.என்.எம்.எஸ்.ஆர்.ஏ. செய்தி 3500ம், கூட்டுறவு குரல் 2300ம் விற்பனையாகியுள்ளன.

5.50 இவை தவிர வங்கி ஊழியர்கள் , ஆசிரியர் அமைப்புகள், அரசு ஊழியர்கள் சத்துணவு ஊழியர்கள் , தபால் ஊழியர்கள், தொலைதொடர்பு ஊழியர்கள் ஆகியோர் தங்களுக்கென தனித்தனி மாத இதழ்களை வெளியிடுகின்றனர். இன்சூரன்ஸ் ஊழியர்கள் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒவ்வொரு மாத இதழை கொண்டு வருகின்றனர்.

பிரச்சினைகள்

5.51 புதிய தொழிற்சாலைகளில் வருகிற இளைய தொழிலாளர்கள் தொழிற்சங்க அனுபமற்றவர்கள். 40 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த போராட்டங்கள் பற்றியெல்லாம் எதுவுமே அறியாதவர்கள். ஏராளமான பிரமைகளோடும், எதிர்பார்ப்புகளோடும் வருகிறார்கள். நவீன தொழில்களில் உள்ள இவர்களைத் திரட்ட வேண்டியது முக்கியமான வேலை. இவர்களிடம் தொழிற்சங்கம்

வருவதையே முதலாளிகள் ஏற்பதில்லை. கடுமையான பழிவாங்கல்கள் நடக்கின்றன. கடுமையான சுரண்டலும் நடக்கிறது. எனவே இந்த இளந்தொழிலாளர்கள் மத்தியில் கோபம் இருக்கிறது. இவர்களை கட்டிற்குள் வைப்பதற்காக பல இடங்களில் சுய அறிவிப்புகளாக சலுகைகள் வழங்கப்படுகின்றன. இப்போது இந்த இளைஞர்கள் மத்தியில் உள்ள குமுறல் தன்னெழுச்சியான வெடிப்புகளாகக்கூட வெளிப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இவர்கள் மத்தியில் நமது வேலையை புதிய முறைகளில் செய்ய திட்டமிட வேண்டும். பெரும்பாலான தொழிற்சாலைகளுக்கு பஸ்களில் பெண்களும், ஆண்களும் அழைத்து வரப்படுகிறார்கள். மீண்டும் திரும்ப வீடுகளில் விடப்படுகிறார்கள். நமது பிரச்சாரத்தையும், விழிப்புணர்வு ஊட்டலையும் இவர்கள் வாழும் பகுதிகளிலும், கிராமங்களிலுந்தான் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ப வாலிபர் அமைப்புகள், மாதர் அமைப்புகள் என்றும் கூட நாம் அவர்களைத் திரட்டியாக வேண்டும். சங்கம் அமைப்பதற்கே போராட்டம் என்கிற நிலையை ஏற்படுத்துவதே முதலாளிகளின் வேலையாக உள்ளது. நாம் பொருத்தமான மாற்று ஏற்பாடுகளை நமது கட்சி கிளைகள், பகுதிக்குழுக்கள் மூலம் திட்டமிட வேண்டும்.

552 தொழிற்சங்க இயக்கத்திற்குள் வர வேண்டிய பிரிவினரிடம் நமது சமூகத்தின் ஜாதி அடையாளம் மங்காமல் இருக்கிறது. அது தொடர்ந்து ஜாதீய சக்திகளால் விசிறி விடப்படுகிறது. தொழிலாளர்களின் அன்றாட, அடிப்படைப் பிரச்சனைகளில் அவர்களை எழுச்சி கொள்ளச்செய்வதும், அவைகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்துவம் அவர்களிடையே வர்க்க ஒற்றுமையைக் கொண்டு வரும். முழுநேர ஊழியர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களின் வேலையில் வேகமும், நேர்த்தியும், தொழிலாளர் இருக்குமிடம் செல்லுகிற தன்மையும் அதிகரிக்க வேண்டும். அதற்கான பயிற்சியும் அவர்களுக்குத் தேவை.

553 தொழிற்சங்க செயல்பாட்டில் ஜனநாயகமும், தொழிலாளர்களை செயல்களில் ஈடுபடுத்தும் முனைப்பும் தேவை. வரவு-செலவு கணக்குகளில் கூட பல இடங்களில் ஏனோ தானோ என்று இருக்கிற போக்குகள் உள்ளன. நிதி ஒழுக்கமின்மையையும், தன்னிச்சை செயல்பாடுகளையும் நாம் களைந்தாக வேண்டும்.

வேலை கலாச்சாரம்

554 17வது மாநாட்டு அறிக்கையில், " தனியார்மயத் தாக்குதல் மற்றும் உரிமை பறிப்பு நடவடிக்கைகளும் தாராளமய கொள்கையின் நாசகர விளைவுகளும் அதிகமாக வருகையில், தொழிற்சங்க இயக்கம் அனைத்துப் பகுதி மக்களுக்குமாக குரல் கொடுத்து போராடும் அமைப்பாக மாற வேண்டும். ஆனால், மக்களுடன் நெருக்கமான தொடர்புகொண்ட சேவைப்பிரிவுகளில் குறிப்பாக அரசு ஊழியர், ஆசிரியர், வங்கி, இன்சூரன்ஸ், போக்குவரத்து துறைகள், மின்சாரம் போன்றவற்றில் தொழிலாளர்களுக்கும் மக்களுக்குமிடையே பொதுவாக நல்லுறவு இல்லை. சேவைப்பிரிவுகளில் வேலைக் கலாச்சாரத்தை மேற்படுத்துவதற்கு நமது தரப்பிலிருந்து விசேஷ முயற்சி தேவைப்படுகிறது. இதையொட்டி சம்பந்தப்பட்ட அரங்கங்களில் பரிசீலித்து பொது வழிகாட்டுதலை உருவாக்க வேண்டுமென கட்சி மாநிலக்குழு முடிவு செய்திருந்தது. ஒரு சில அரங்கங்களில் விவாதம் துவக்கப்பட்டது. தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இது பற்றி காலதாமதமின்றி விவாதிக்கப்பட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது. இதில் சில மாற்றங்களை நாம் உண்டாக்கியிருந்தாலும் முழு முறிப்பு ஏற்படுத்தப்படவில்லை. போக்குவரத்து மற்றும் அரசு ஊழியர் போராட்டங்களின் அனுபவத்தில் இது மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. சிஐடியு இணைப்பு சங்கங்களில் மருந்து விற்பனை பிரதிநிதிகள் சங்கம் மக்களுக்கான மருந்து கொள்கை, காப்புரிமை சட்ட பாதுகாப்பு போன்ற பல மக்கள் பிரச்சனைகளில் தொடர்ச்சியான இயக்கங்களை நடத்தி முன்னுதாரணமான முறையில் நடத்தி வருகின்றனர்.

மத்தியதர அரங்குகளில்

555 தொலைதொடர்பு துறையில் நமது தோழர்களால் தலைமையேற்று நடத்தப்படும் பிஎஸ்என்எல் ஊழியர் சங்கம் 2004டிசம்பரில் நடைபெற்ற சங்க அங்கீகார தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. கூட்டணி அமைத்து இந்த வெற்றி பெற்றுள்ளனர் என்றாலும் இது முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசின் கொள்கைகளுக்கு எதிராக தொடர்ச்சியான இயக்கங்களும் போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. தேர்தல் வெற்றியை திட்டமிட்டு பயன்படுத்தினால் முன்னேற்றம் காண இயலும்.

5.56 இன்சூரன்ஸ் அரங்கில் தனியார் மய எதிர்ப்பு, ஊதிய உயர்வு கோரிக்கை போன்ற பல பிரச்சனைகளில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அரசின் கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தில் முன்னுதாரணமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் மய எதிர்ப்பு கையெழுத்து இயக்கம், மக்கள் பிரதிநிதிகளிடம் கையெழுத்து பெறும் இயக்கம், பாலிசிதாரர்களிடம் கையெழுத்து இயக்கம் என தொடர்ச்சியான இயக்கங்கள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. இந்தியாவுக்கான மக்கள் இயக்கம் என அரசின் கொள்கைகளுக்கு எதிராக அனைத்து பகுதியினரையும் ஒன்றுதிரட்டும் பொது இயக்கமும் இன்சூரன்ஸ் அரங்க முன்முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளது.

5.57 வங்கித் துறையில் அதிகாரிகள்- ஊழியர்கள் என அனைத்து பகுதியினரது முழு ஒற்றுமையில் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, நாடு தழுவிய முறையில் போராடி வருகிறார்கள். தனியார் மய எதிர்ப்பு, வங்கித் துறைக்கு பாதகமான சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு என இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன.

பிராக்ஷன்

5.58 சிஐடியு மட்டுமல்லாமல் இதர மத்தியதர ஊழியர்கள் அமைப்புகளையும் உள்ளடக்கிய விரிவான பிராக்ஷன் அமைத்து செயல்படுவது பொதுவான புரிதலுக்கும், திட்டமிடுதலுக்கும் உதவும் என சென்ற மாநாட்டிற்கு பிறகு முடிவு செய்தோம். எனினும் இந்த பிராக்ஷன் கூட்டம் நான்கு முறை தான் நடந்தது. உரிய பலனும், விளைவும் இதனால் ஏற்படவில்லை என்பது அனுபவம். இந்த மாநாட்டிற்கு பிறகு பொருத்தமான சப்-கமிட்டி ஏற்பாட்டை நாம் அமல்படுத்த வேண்டும்.

5.59 கட்சி இப்போது விவாதித்து வருகிற "வெகுஜன அரங்கங்களின் பால் கட்சியின் அணுகுமுறை" என்ற ஆவணத்தின் முடிவுகளை கறாராக நமது மாநிலத்தில் பொருத்துவதும், பிராக்ஷன், சப்-கமிட்டி ஆகியவற்றின் செயல்பாடுகளில் பொருத்தமான மாற்றம் செய்து அரசியல் பணி ஆற்ற வைப்பதும், ஊழியர் தரத்தை உயர்த்துவதும், உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்துவதோடு, தொழிலாளர்கள் மத்தியில் கட்சி கட்டும் பணிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்து கட்சியின் பலத்தை தொழிலாளி வர்க்கத்தில் அதிகரிப்பதற்குமான முறையில் நமது பணிகளை செப்பனிட வேண்டும்.

விவசாயிகள் - விவசாய தொழிலாளர் அரங்கம்

6.1 உலகமய, தாராளமயக் கொள்கைகளால் ஏற்கனவே நெருக்கடிக்குள்ளான தமிழக விவசாயம் கடந்த மூன்றாண்டுகளில் தொடர் வறட்சியால் நிலைகுலைந்து போயுள்ளது. சாகுபடி பரப்பளவு குறைந்து, வேளாண் உற்பத்தியும், உற்பத்தித் திறனும் வீழ்ச்சியடைந்துள்ளது. கர்நாடகத்தால் காவிரியில் தண்ணீர் மறுக்கப்பட்டு டெல்டா மாவட்டங்கள் மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன. நெல், கரும்பு, பருத்தி, மணிலா உட்பட அனைத்து சாகுபடிகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. மான்யங்களை வெட்டுவதும், அரசு கொள்முதலை படிப்படியாக கைவிடுவதும் மேற்கொள்ளப் படுகின்றன. புதிய வேளாண் கொள்கை என்ற பெயரில் நவீன சாகுபடி முறைகள், ஏற்றுமதிக்கான உற்பத்தி ஊக்குவிக்கப்படுகின்றன. உள்நாட்டு, பன்னாட்டு கம்பெனிகளுக்கு வேளாண் உற்பத்தி மற்றும் வியாபாரத்தில் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. பண்ணை சாகுபடி முறைகள், ஒப்பந்த சாகுபடி முறைகள் மூலம் பெரும் பண்ணைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. கூட்டுறவு - அரசுடைமை வங்கிகளில் விவசாயக் கடன்கள் மறுக்கப்பட்டு கந்துவட்டி கொடுமைகளில் விவசாயிகள் மீள முடியாமல் சிக்கியுள்ளனர். இடுபொருட்கள் விலையுர்வு, விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சி விவசாயிகளின் கழுத்தை நெறித்துக் கொண்டுள்ளது. இக்கொள்கைகளால் ஏழை - நடுத்தர விவசாயிகள் விவசாயத்தை விட்டு தூக்கியெறியப்படும் ஆபத்து உருவாகியுள்ளது. விவசாயத்தை இயந்திரமயமாக்குவதாலும், வறட்சியாலும் விவசாயத் தொழிலாளர்களின் வேலை நாட்கள்

வெகுவாக குறைந்துவிட்டன. நவீன சாகுபடி முறைகள் வேலைவாய்ப்பை வெகுவாக பறிக்கின்றன. வருமானமின்றி அவர்களது வாழ்வு சீரழிந்துள்ளது. பிழைப்பு தேடி ஆண்களும், பெண்களும் கிராமங்களை விட்டு வெளியேறுவது அதிகரித்துக் கொண்டுள்ளது. இக்காலத்தில் அரசு மேற்கொண்ட வறட்சி நிவாரணப் பணிகள் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கவில்லை. மாறாக ஆளுங்கட்சி, அதிகாரிகள், காண்ட்ராக்டர்களின் ஊழல் களங்களாகவே திகழ்ந்தன. பட்டினி, அதிர்ச்சி மற்றும் தற்கொலைகளால் 20க்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளனர். நடப்பு ஆண்டிலும் சாகுபடிகள் வெள்ளத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டு நெருக்கடிகளும், வேதனைகளும் தொடர் கதையாகிக் கொண்டுள்ளன. ஒட்டு மொத்தத்தில் கிராமப்புற பொருளாதாரம் நாசமடைந்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் வாழ்வு கேள்விக்குறியாக மாறியுள்ளது.

நடைபெற்ற இயக்கங்கள்:

6.2 இக்காலத்தில் வறட்சி நிவாரணம், கடன் தள்ளுபடி, சாகுபடிக்கு புதிய கடன், உணவுக்கான வேலைத்திட்டத்தை ஊழலின்றி அமலாக்குவது போன்ற கோரிக்கைகள் மீது வலுவான இயக்கங்கள், போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. உச்சநீதிமன்ற தீர்ப்பு மற்றும் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு அடிப்படையில் காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் மறுத்த போது நமது சங்கங்களின் சார்பில் தனியாகவும் - இதர சங்கங்களோடு கூட்டாகவும் மாநாடுகள் - சாலை மறியல், முதல்வருக்கு கருப்புக்கொடி, பொது வேலை நிறுத்தம் உட்பட பலகட்ட இயக்கங்கள் நடைபெற்றன. கரும்பு, தேயிலை, ஏலக்காய், பால் கொள்முதல் விலை பிரச்சனைகளில் இயக்கங்கள் நடத்தப்பட்டன. கடன் தள்ளுபடி, புதிய கடன் கோரி கார்டு இயக்கம் முற்றுகை போராட்டம்-காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டங்கள் உட்பட நடத்தப்பட்டன. வறட்சியால் உயிரிழந்தவர்களின் 20 குடும்பங்களுக்கு ரூ. 2 லட்சம் நிதி வசூலித்து அளிக்கப்பட்டது. இக்காலத்தில் ஆதிக்க வெறியர்களால் தூத்துக்குடி மாவட்டத்தில் தோழர் ஆர். மகாலிங்கமும், திண்டுக்கல் மாவட்டத்தில் தோழர் பாண்டியராஜனும் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். இக்கொலைகளை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்றன.

6.3 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் குடிசைகளுக்கும் -விவசாயத்துக்குமான இலவச மின் திட்டத்தை ரத்து செய்தபோது, கட்சியின் மாநிலக்குழுவில் விவாதிக்கப்பட்டு நாம் மேற்கொள்ள வேண்டிய நிலை தீர்மானிக்கப்பட்டு இயக்கங்கள் நடத்தப்பட்டன. முன்னதாக மின் ஊழியர் மத்திய அமைப்புடன் இணைந்து இப்பிரச்சினையில் மண்டல மாநாடுகள் நடத்தப்பட்டன. நாம் நடத்திய இயக்கங்களில் பரவலான விவசாயிகள் பங்கேற்றனர். விவசாயிகள் மத்தியில் இப்போராட்டங்கள் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

நிலவெளியேற்றம் – நிலத்துக்கான போராட்டம்

6.4 ஐம்பது லட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை தொழில் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கும் அதிமுக அரசின் திட்டத்தை எதிர்த்து மாநாடு மற்றும் போராட்டங்கள் நடத்தப்பட்டதன் விளைவால் அரசு தற்போது இத்திட்டத்தை அமல்படுத்த தீவிரம் காட்டவில்லை.

6.5 உச்சநீதிமன்ற உத்தரவு அடிப்படையில் சுமார் 3 லட்சம் ஏக்கர் வன நிலங்களிலிருந்து ஆதிவாசிகளையும் - விவசாயிகளையும் வெளியேற்ற கடுமையான முயற்சிகளை வனத்துறையினர் மேற்கொண்டபோது மலைவாழ் மக்கள் சங்கமும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும் இணைந்து நாமக்கல், கிருஷ்ணகிரி, தர்மபுரி, தேனி, திண்டுக்கல், மதுரை, விழுப்புரம், நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் வலுவான போராட்டங்கள் நடைபெற்றன. வனத்துறையினர் நட்டகன்றுகள் பிடுங்கி எறியப்பட்டு நிலம் மீட்கப்பட்டது. சில இடங்களில் வனத்துறையினருக்கும் - நமக்கும் மோதலாக உருவாகி நமது முன்னணி ஊழியர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர். நமது உறுதியான தலையீட்டால் வனத்துறையினரின் முயற்சி மாநிலத்தில் எங்கும் வெற்றி பெறவில்லை. இருப்பினும் நிலவெளியேற்ற ஆபத்து தொடர்வதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

6.6 நிலப் பிரச்சனையில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது என தீர்மானிக்கப்பட்டு நிலமீட்சிப்

போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் தரிசு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் பெரியம்மாபட்டியில் உபரியாக அறிவிக்கப்பட்டு பல பிரமுகர்களின் பினாமி அனுபவத்தில் இருந்த 5000 ஏக்கர் நிலங்களை மீட்க நிலமீட்சிப் போராட்டம் நடைபெற்றது. இதன் விளைவாக முதல் கட்டமாக 532 ஏக்கர் நிலங்களை நிலமற்றவர்களுக்கு வினியோகிப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களிலும் நில மோசடிகளை எதிர்த்து இயக்கங்கள் நடைபெற்று வருகின்றன. பஞ்சமி நில மீட்பு திருச்சி மாவட்டத்தில் மட்டுமே நடந்தது. நிலப் பிரச்சனைகளில் நமது முன்முயற்சி நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. ஆனால் பெரும்பகுதி மாவட்டங்களில் இப்பிரச்சனையில் கவனம் செலுத்தாத பெரும் குறைபாடுள்ளது.

6.7 விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கோலப்பன் குழு சிபாரிசுகளை அமலாக்க விவசாயத் தொழிலாளர் நலவாரியத்தை செயல்படுத்த கோரியும் அறுவடை இயந்திரத்தை எதிர்த்தும், வறட்சி நிவாரண பணிகளில் இயந்திரத்தை பயன்படுத்துவதை எதிர்த்தும் பலகட்ட இயக்கங்கள் நடைபெற்றன. சிபிஐ வி.தொ.ச.வுடன் இணைந்து கூட்டான போராட்டங்களும் நடத்தப்பட்டன. வேலைக்கான உணவு திட்டத்தில் முறைகேடுகளை எதிர்த்து கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும், அறுவடை இயந்திரத்தை எதிர்த்து புளிச்சக்காடியிலும் (திருவாரூர் மாவட்டம்) நடைபெற்ற போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. தொடர் வறட்சியினால் இக்காலத்தில் கூலிக்கான இயக்கத்தை மேற்கொள்ள முடியவில்லை. அதிமுக அரசு முடக்கி வைத்துள்ள விவசாயத் தொழிலாளர் நலவாரியத்தை செயல்படுத்துவதற்கான விரிவான போராட்டங்களை வரும் காலங்களில் நடத்த வேண்டும்.

6.8 வி.ச, வி.தொ.ச. இணைந்து தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்து நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டன. திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்டங்களில் ஆலயப்பிரவேச போராட்டங்கள் நடத்தப்பட்டன. இரட்டை கிளாஸ் ஒழிப்பு, செருப்பணிய, சைக்கிளில் செல்ல தடை, சுடுகாட்டுப் பாதை போன்ற போராட்டங்கள் பரவலாக நடத்தப்பட்டன. இருப்பினும் இப்பிரச்சனையில் சரிபாதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் போதிய முன்முயற்சியில்லாதது எதிர் காலத்தில் களையப்பட வேண்டும்.

6.9 மத்திய அரசின் குறைந்தபட்ச திட்டத்தை அமலாக்குவது, நலவாரியத்தை செயல்படுத்துவது, கடன் தள்ளுபடி, புதிய கடன் உள்ளிட்ட கோரிக்கைகளை வற்புறுத்தி 2004, செப்டம்பர் 28ல் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 15000க்கும் அதிகமான பெண்கள் உட்பட 50,000 பேர் கைதாகி விடுதலையானார்கள். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14000 பேர் கைதானது குறிப்பிடத்தக்கதாகும்.

6.10 முக்கிய ஊழியர்களுக்கான இரண்டு மண்டல வகுப்புகள் நடத்தப்பட்டன.

6.11 பெண்களை திரட்டுவது: விவசாயப் பணிகளில் ஈடுபடும் பெண்களை திரட்டுவதற்கு விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எடுத்த முடிவு நடைமுறைப்படுத்தப்படவில்லை. சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

6.12 நமது தலைமையில் செயல்படும் பல்வேறு பழங்குடி மக்கள் அமைப்புகளை இணைத்து 'பழங்குடி மக்கள் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டுள்ளது.

6.13 நதிநீர் பிரச்சினைகள்: தமிழகம் ஏற்கனவே தண்ணீர் பற்றாக்குறை மாநிலமாகும். காவிரி பிரச்சினையில் கர்நாடகத்தின் போக்கு, பருவமழை பொய்த்து வறட்சி, நிலத்தடி நீர்மட்டம் குறைவு போன்றவற்றால் தமிழகம் கடுமையான பாதிப்புகளை சந்தித்தது. இந்நிலையில் தேசிய நதிகளை இணைக்க வேண்டும், முதல் கட்டமாக தீபகற்ப நதிகளை இணைக்க வேண்டும், கர்நாடக அணைகளை மத்திய அரசு கையகப்படுத்திட வேண்டும், பெரியார் அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்திட வேண்டும். கேரளாவில் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளை தமிழகத்துக்கு திருப்பிவிட வேண்டும் போன்ற கோஷங்கள் வலுவாக எழுப்பப்படுகின்றன. இதனை இனவெறி பிரச்சினையாக திசை திருப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

614 இப்பிரச்சினைகளில் தமிழகத்தின் உரிமையை வலியுறுத்தும் அதேநேரத்தில் நதிநீர் பிரச்சினைகளில் அண்டை மாநிலங்களோடு சுமூகமாக பேசி தீர்வுகாண வேண்டும். காவிரி பிரச்சினையில் நடுவர்மன்ற இறுதி தீர்ப்பு வரும் வரை இடைக்கால தீர்ப்பினை அமல்படுத்திட மத்திய அரசும், காவிரி ஆணையமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்தி வருகிறோம். எதிர்காலத்திலும் தண்ணீர் பிரச்சினைகளில் மாநிலத்துக்குள்ளும் - அண்டை மாநிலங்களோடும் பல முரண்பாடுகள் எழக்கூடும். நாம் எச்சரிக்கையாக இருந்து நிலைமைகளை சமாளிக்க வேண்டும்.

கூட்டு இயக்கங்கள்

615 கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள போதிலும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு போராட வேண்டுமென்ற உணர்வுமட்டம் மிகவும் குறைவாக உள்ளது. போராடி என்ன கிடைக்கப் போகிறது என்ற கண்ணோட்டம் மற்றும் வலுவான சாதிய பிடிமானம் இத்தகைய பின்தங்கிய நிலைக்கு அடித்தளமாக அமைந்துள்ளன. பரவலான கிராமப்புற மக்களை போராட்டங்களில் ஈடுபடுத்திட சுயேச்சையான இயக்கங்களை நடத்தும் அதேசமயத்தில் கூட்டு போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வது அவசியமாகும். அரசியல் கட்சிகள் சார்புள்ள அரசியல் சார்பற்ற பல சங்கங்கள் உள்ளன. இவைகளில் மிகப் பெரும்பான்மை தனி நபர்கள் தலைமையிலான அமைப்பு ரீதியாக செயல்படாத பெயரளவுக்கான இயக்கங்களை நடத்தும் சங்கங்களாக உள்ளன. மேலும் இச்சங்கங்களின் தலைவர்கள் நிலப்பிரபுத்துவ சார்பு கோரிக்கைகளை எழுப்புவதிலேயே அக்கறை காட்டுகின்றனர். எனவே இச்சங்கங்களோடு கூட்டு இயக்கம் நடத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.சிபிஐ தலைமையிலான வி.ச.; வி.தொ.ச. சங்கங்களுடன் கூட்டு இயக்கம் நடத்துவதில் நாம் முயற்சிக்கும் போதெல்லாம் அச்சங்க தலைவர்கள் இதர சங்கங்களுடன் கூட்டு இயக்கம் நடத்துவதில் அழுத்தமாக உள்ளனர்.

616 நமது சுயேச்சையான இயக்கங்களை நடத்திக் கொண்டே ஒத்த பிரச்சினைகளில் கூட்டு இயக்கங்களுக்கு முயற்சிக்க வேண்டும்.

617 - ஸ்தாபனம்: வி.ச, வி.தொ.ச. சந்தா பதிவு மூன்றாண்டுகளில் சற்று முன்னேறியுள்ளது. 2003-04 ஆண்டில் தொடர் வறட்சி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறுக்கீடுகளால் பதிவு இயக்கத்தை முன்னெடுத்து செல்லமுடியவில்லை. பதிவு செய்யப்பட்ட இடங்களில் கிளை அமைத்து செயல்படாததால் பதிவில் குறிப்பிடத்தக்க முறிப்பை ஏற்படுத்த இயலவில்லை.

618 இடைக்குழு மட்டத்தில் இவ்வரங்கங்களின் பொறுப்பாளர்கள் பெரும்பகுதி கட்சியின் பொறுப்பாளர்களாக உள்ளனர். இவர்கள் பகுதிநேர ஊழியர்களாக இருந்து கொண்டு கட்சி, விவசாய இயக்கப் பணிகள் இரண்டையும் இணைத்துச் செய்வதில் சிரமம் உள்ளது. குறைந்தபட்சம் வி.ச., வி.தொ.ச, இடைக்குழு செயலாளர்கள் இப்பணிக்கென முழுமையாக தீர்மானிக்கப்படுவதன் மூலம் முன்னேற்றத்தை உருவாக்கிட முடியும்.

619 மாவட்டங்களில் வி.ச, வி.தொ.ச சங்கங்களுக்கு தனியாக முழுநேர ஊழியர்கள் தீர்மானிக்கப் பட்டுள்ளனர். மாவட்ட மையம் முதல் கிராமங்கள் வரையில் சென்று இவர்கள் பணியாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் இவ்வூழியர்களுக்கு கூடுதலான கட்சி பொறுப்புகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் கட்சி இடைக்குழு செயலாளர்கள் இவ்வரங்க ஊழியர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற காரணங்களால் இவ்வரங்க பணிகளில் தொடர்ச்சியின்மையும், முன்னேற்றமின்மையும் உள்ளது.

620 வி.ச, வி.தொ.ச. அரங்க ஊழியர்கள் சங்க பணிகளை முதன்மை பணியாக மேற்கொள்ளும் வகையில் பொறுப்புகளைத் தீர்மானிக்க வேண்டும். அதே சமயம் இவ்வரங்க ஊழியர்களின் பணிகள் மற்றும் முன் முயற்சிகள் குறித்து சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிகளில் பரிசீலிக்கப்படவும், தேவை அடிப்படையில் உரிய மாற்றங்களை மேற்கொள்ளவும் வேண்டும்.

மாநிலக்குழு - மாநில மையம்

6.21 தோழர் ஜி.வீரையன், கே.பாலகிருஷ்ணன், கே.முகமது அலி, பி. சண்முகம், எஸ். திருநாவுக்கரசு, ஜி. மணி ஆகிய 6 தோழர்கள் மாநில மையத்திலிருந்து செயல்படுகின்றனர். தோழர்.எம். லகுமய்யா கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்புடன் மாநில மையப் பணிக்கு உதவுகிறார். விவசாய தொழிலாளர் சங்கத்தில் ஜி.வி, எஸ்.டி., ஜி.எம்(கரும்பு சங்க பொறுப்புடன்) ஆகியோரும், விவசாய சங்கத்தில் கே.பி, கே.எம், பி.எஸ் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர். தொடர்ந்து மாநில மையக் கூட்டம் நடத்தப்பட்டு கூட்டாக பணிகள் தீர்மானிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அதோடு இணைந்த மலைவாழ் மக்கள் சங்கம், கரும்பு சங்கம், பால் உற்பத்தியாளர் சங்கம், அதேபோல் விவசாய தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் மாநிலக்குழுக்கள் - நிர்வாகிகள் கூட்டம் உரிய கால இடைவெளிக்குள் நடத்தப்படுகின்றன.

6.22 ஒவ்வொரு மாவட்டத்திலும் வாய்ப்பான சில தாலுகா அல்லது ஒன்றியங்களை தேர்வு செய்து இங்கு முழுநேர ஊழியர்களை தீர்மானித்து கவனிக்க வேண்டுமென்ற கட்சியின் 15வது மாநில மாநாட்டு முடிவினை எதிர்காலத்தில் அமலாக்கிட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களை கூடுதலாக கவனிப்பது பலமான இயக்கத்தை கட்ட உதவி செய்யும்.

6.23 சிஐடியு வழங்கும் நிதியினைக் கொண்டு மாநிலக்குழுவின் நிதி தேவை ஓரளவு ஈடுகொடுக்கப்படுகிறது. மாவட்ட மற்றும் இடைக்குழுக்கள் செயல்பாட்டில் நிதியின்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை அரங்க வளர்ச்சி நிதி வசூல் செய்திட வேண்டும்.

6.24 உபகுழு: மாநில உபகுழு 9 முறை கூடியுள்ளது. முன்னுக்கு வரும் பிரச்சினைகள் மீது மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள் ஸ்தாபன ஏற்பாடுகள் விவாதிக்கப்பட்டு, மாநில செயற்குழு, மாநிலக்குழு ஒப்புதலோடு அமலாக்கப்படுகின்றன. மாவட்டங்களில் உபகுழு செயல்படுவதை முறைப்படுத்த வேண்டியுள்ளது.

"விவசாய சங்கத்தையும், விவசாய தொழிலாளர் சங்கத்தையும் கட்சி பலப்படுத்த தவறியது இன்று தேசிய அளவில் ஜனநாயக இயக்கத்தின் பலவீனத்துக்கு காரணமாகியுள்ளது. நாட்டு மக்கள்தொகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்களை உள்ளடக்கியுள்ள இந்த அரங்கங்களில் ஸ்தாபனங்களை கட்சி வளர்த்தெடுக்காவிடில் இந்நாட்டு அரசியலில் நம்கட்சி ஒரு தீர்மான கரமான சக்தியாக விளங்க தவறிவிடும்" என கட்சியின் 15வது காங்கிரஸ் ஸ்தாபன தீர்மானத்தில் அழுத்தமாக குறிப்பிட்டுள்ளது.

6.25 தமிழகத்தில் அரை நூற்றாண்டுக்கு மேலாக வீரம் செறிந்த போராட்டங்கள், இயக்கங்கள் நடத்திய பின்னரும் சில குறிப்பிட்ட பகுதிகளைத் தவிர இதர இடங்களில் வலுவான இயக்கத்தை கட்டமுடியவில்லை. உருவாக்கப்பட்ட இயக்கத்தை தக்கவைப்பதிலும், குறிப்பாக அடுத்த தலைமுறையினரை ஈர்ப்பதிலும் பிரச்சினைகள் உள்ளன. இன்றைக்கும் நமது கட்சியின் வாக்கு வாங்கிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. கடுமையான நெருக்கடிகளுக்குள்ளாக்கப்பட்டிருந்த போதிலும் கிராமப்புறங்கள் பூர்ஷ்வா கட்சிகளின் வாக்கு வங்கிகளாகவே நீடிக்கின்றன. கிராமப்புற இயக்கத்தில் முறிப்பை ஏற்படுத்தாமல் தமிழக அரசியலில் தீர்மானகரமான பங்கினை கட்சி வகிப்பது சாத்தியமில்லை. விவசாய சங்கம் - விவசாய தொழிலாளர் சங்கம் ஆகிய சங்க பணிகளுக்கு சில ஊழியர்களை தீர்மானித்து விடுவது மட்டுமே எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்தி விடாது. கிராமப்புற மக்களை திரட்டும் கேந்திரமான பணியினை நிறைவேற்றுவது பற்றிய சமீபத்திய மத்தியக்குழுவின் ஆவணம் கீழ்கண்டவாறு சுட்டிகாட்டியுள்ளது.

"கிராமப்புற கட்சி கிளைகள் விவசாய சங்கத்தையும், விவசாய தொழிலாளர் சங்கத்தையும் செயல்படுத்துவதை தங்களது முக்கியமான பணியாக கொள்ள வேண்டும். கிராமப்புறத்தில் உள்ள ஒவ்வொரு கட்சி கிளைக்கும், ஒவ்வொரு கட்சி உறுப்பினருக்கும் விவசாய சங்கத்தையும், விவசாய தொழிலாளர் சங்கத்தையும் கட்ட வேண்டிய அவசர அவசியத்தை வற்புறுத்திட வேண்டும். வேறுபணிகள் தீர்மானிக்கப்பட்டு அதற்கு

மேல்கமிட்டியின் ஒப்புதலை பெற்றுள்ளவர்களைத் தவிர கிராமப்புறங்களில் உள்ள மற்ற கட்சி உறுப்பினர்களும் மேல்கமிட்டி உறுப்பினர்களும் இச்சங்கங்களை கட்டும் பணியில் சேர்ந்து தீவிரமாக பணியாற்ற வேண்டும்"

இக்கடமை கிராமப்புற கட்சி கிளைகளுக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் மேல்கமிட்டி உறுப்பினர்களுக்கும் உணர்த்தப்பட வேண்டும்.

வெகுஜனத் தன்மை மற்றும் சுயேச்சையான செயல்பாடு:

626 வி.ச., வி.தொ.ச., சங்க செயல்பாடுகளில் வெகுஜனத் தன்மை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் போராட்டங்கள் ஸ்தாபனம் அனைத்தும் கட்சியின் மறுபதிப்பாகவே உள்ளன. மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் அனைத்தும் கட்சியின் மேடைகளாகவே திகழ்கின்றன. நமது நடவடிக்கைகளை கட்சி நடவடிக்கையாகவே மக்கள் கருதும் நிலையுள்ளது. இத்தகைய அணுகுமுறைகளால் பல்வேறு பிரச்சனைகளால் பாதிப்புக்குள்ளாகும் பலதரப்பட்ட விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் நமது அமைப்பின் கீழ் திரட்டுவது இயலவில்லை. சில இயக்கங்களில் பங்கேற்கும் பொதுவான விவசாயிகளும் படிப்படியாக நம்மை விட்டு விலகி விடுகின்றனர். மாநில அலுவலகம், குமரி, நெல்லை, ஈரோடு, திண்டுக்கல் மாவட்ட அலுவலகங்கள் தவிர ஏனைய அனைத்து மாவட்ட செயல்பாடுகளும் கட்சி அலுவலகங்களிலிருந்தே நடைபெறுகின்றன.

627 வி.ச., வி.தொ.ச., சங்கங்கள் சுயேச்சையாக செயல்படுவதிலும் பெரும் குறைபாடு உள்ளது. தேர்தல், கட்சியின் மத்திய, மாநிலக்குழுக்களின் அறைகூவல்கள் அடிப்படையில் நடைபெறும் இயக்கங்கள் போன்ற காலங்களில் இவ்வரங்கப் பணிகளை தொடருவதில் சிரமம் இருக்க வாய்ப்புண்டு. ஆனால், மாவட்டங்களில் கட்சி மற்றும் கட்டிட நிதி வசூல், சில இயக்கங்கள் நடத்தப்படும் காலங்களிலும் இச்சங்கப் பணிகள் முடக்கப்படுகின்றன. கட்சிப் பணிகளுக்கு உட்பட்டுத் தான் இச்சங்கப் பணிகள் என்ற நிலைமை நிலவுகிறது. இச்சங்கப் பொறுப்பாளர்களுக்கு கூடுதலான கட்சிப் பணிகளை தீர்மானித்து ஈடுபடுத்துவதால் அரங்கப் பணிகளை தொடருவதில் சிரமம் உள்ளது. தீர்மானிக்கப்படும் இயக்கங்களை கட்சி தலையிட்டு ஒத்தி வைப்பது, ரத்து செய்வது வழக்கமாக உள்ளது. சந்தா பதிவுக்கான காலத்தை தீர்மானிப்பதே பெரும் போராட்டமாக உள்ளது. தொடர் செயல்பாட்டுக்கும், இயக்கங்களுக்கும் கூட நிதி வசூலுக்கு அனுமதிக்காத நிலைமை உள்ளது. இவ்வரங்க அன்றாடப் பணிகள் கூட சம்பந்தப்பட்ட கட்சிக் கமிட்டிகளின் ஒப்புதலை பெற்றுதான் செய்ய வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. மேற்கண்ட குறைபாடுகளை களைவது இன்றைய அவசரத் தேவையாகும்.

628 கட்சியும் வெகுஜன ஸ்தாபனங்களும் என்ற சமீபத்திய மத்தியக்குழு ஆவணம் கட்சி அணிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டு சரியான புரிதலை உருவாக்கிட வேண்டும். அத்தீர்மானத்தின் வழிகாட்டுதலில் சங்க செயல்பாடுகள் அமைந்திட வேண்டும். அனைத்துமட்டத்திலும் கட்சியின் உபகுழுக்கள் உருவாக்கி அதன்மூலம் இவ்வரங்கிற்கு வழிகாட்ட வேண்டும்.

629 விவசாயிகள், விவசாய தொழிலாளர் அரங்க பணிகள் மற்றும் பரிசீலனை என்ற மத்தியக்குழு ஆவணம் கட்சி அணிகளுக்கு விரிவாக விளக்கப்பட வேண்டும். அத்தீர்மானத்தை தமிழகத்தில் அமலாக்கிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

630 சாதிய பிடிமானம், நிலப்பிரபுத்துவ பழமை மற்றும் பிற்போக்கு சிந்தனை ஆதிக்கத்தில் உள்ள கிராமப்புற மக்களை திரட்டும் பணி கடுமையான பணியாகும். விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை திரட்டுவது, ஸ்தாபனப்படுத்துவது, நிலப்பிரபுத்துவ சிந்தனைப் போக்கை எதிர்த்து தத்துவார்த்த போராட்டத்தை நடத்துவது போன்றவற்றை மேற்கொள்ளும் அதே நேரத்தில், வி.ச., வி.தொ.ச.வின் வெகுஜனத் தன்மை பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் கட்சியின் கடமையாகும்.

எதிர்கால கடமைகள்

- ❑ பஞ்சமி நிலமீட்பு உட்பட அனைத்துவகையான நில மோசடிகள் மீது நேரடி நடவடிக்கையில் இறங்குவது
- ❑ திருவாரூர், நாகை மாவட்டங்களில் சமூக-பொருளாதார மாற்றங்கள் குறித்த ஆய்வினை மேற்கொள்வது.
- ❑ வி.ச, வி.தொ.ச. அரங்கின் சுயேச்சையான செயல்பாட்டினை உறுதிப்படுத்துவது. விவசாய அரங்க கடமைகள், பணிகள் மற்றும் பரிசீலனை என்ற மத்தியக்குழு தீர்மானத்தை தமிழகத்தில் அமலாக்குவது.

வாலிபர் அரங்கம்

7.1 உலகமயம், தனியார்மயம், தாராளமய கொள்கையாலும், வகுப்புவாத மற்றும் சாதிய சக்திகளின் தீவிரத்தாலும் அலைக்கழிக்கப்படும் பிரிவினராக இளைஞர்கள் இருக்கின்றனர். திமுக, அதிமுக, காங்கிரஸ், மதிமுக, பாமக, விடுதலைச்சிறுத்தைகள், பாஜக ஆகிய கட்சிகளின் இளைஞர் அமைப்புக்களாக இருந்தாலும் சரி, இவற்றின் அமைப்பு ரீதியான செயல்பாடு குறைந்திருக்கிறது. ஆனாலும் இளைஞர்களைத் தன் பக்கம் வைத்துக்கொள்வதில் தீவிரம் காட்டுகின்றன.

7.2 உலகமய கலாச்சார தாக்கம் நமது வாலிபர் அரங்கத்தில் இருந்தாலும், அமைப்பைத் தக்க வைப்பதில், புதிய இளைஞர்களை வென்றெடுப்பதில் டி.ஒய்.எப்.ஐ முன்னணியில் இருக்கிறது. அதேபோல் ரசிகர் மன்றங்கள், தொண்டு நிறுவனங்கள், சேவை அமைப்புக்களின் பின்னாலும் இளைஞர்கள் அணி வகுக்கின்றனர். சுய உதவிக்குழுக்கள் மூலம் கணிசமான இளம் பெண்கள் திரட்டப்பட்டுள்ளனர். எனினும் கணிசமான நடுத்தர வர்க்கத்து இளைஞர்களும், எல்லாத் தரப்பிலுமான இளம் பெண்களும் எந்த ஒரு அமைப்பாலும் அணிதிரட்டப்படாமல் இருக்கின்றனர்.

7.3 கடந்த மாநில மாநாட்டின் போது இவர்களை அமைப்பின் கீழ் திரட்டுவதிலும், கிராமப்புறத்தை சார்ந்த தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களை திட்டமிட்டு திரட்டுவதிலும் நமது வாலிபர் அரங்கம் கவனம் செலுத்த வேண்டும் என விவாதிக்கப்பட்டது.

7.4 வேலை - கல்விக்கான போராட்டங்கள், வகுப்புவாத மற்றும் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான செயல்கள், உழைப்புதானம், இரத்ததானம், விளையாட்டுக்கழகத்தை செயல் படுத்துவது மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் போன்றவற்றில் கூடுதல் முனைப்பு காட்டுவது, என தீர்மானிக்கப்பட்டது.

வேலை - கல்விக்கான போராட்டங்கள்

7.5 2002 டிசம்பர் 16 ல் நடைபெற்ற மாநிலம் தழுவிய முற்றுகைப்போர், 2003 ஆகஸ்ட் இறுதி முதல் செப்டம்பர் கடைசி வரை ஒரு மாத காலம் மாநிலம் முழுவதும் நடைபெற்ற பிரச்சாரம், ஆர்ப்பாட்டங்கள், 2004 ஆகஸ்ட் துவங்கி செப்டம்பர் இரண்டாம் வாரம் வரை நடைபெற்ற பிரச்சாரம், செப்டம்பர் 19 ல் நடைபெற்ற பேரணி ஆகிய மூன்றும் முற்றுகைப் போராட்டத்தில் புதிய பகுதி இளைஞர்களை நமது அமைப்பிற்குள் கொண்டு வந்துள்ளது. முற்றுகைப் போராட்டத்தில் மாநிலம் முழுவதுமிருந்து சுமார் 19000 தோழர்கள் பங்கேற்றனர். பிரச்சனையின் தன்மை காரணமாக கணிசமான பங்கேற்பு இருந்தது. தென் சென்னையில் நடைபெற்ற பேரணியில் 12,500 பேர் வரையிலும் கலந்து கொண்டனர். இதில் 70 சதம் புதிய இளைஞர்கள்.

7.6 ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து பிழைப்புக்கு வழிதேடுபவராக பெரும்பகுதி இளைஞர்கள் உள்ளனர். வாலிபர் அரங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களில் 90 சதமானோர் முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள இளைஞர்களாவர். வேலைக்கான கோரிக்கையினை இத்தகைய இளைஞர்களின் நலனில் இருந்தும் உருவாக்க வேண்டியுள்ளது. இதற்காக மாநில அளவில் ஒரு ஆய்வரங்கம் நடத்தப்பட்டது. மாவட்டங்களிலும் நடத்த வேண்டும்.

7.7 மேற்கண்ட இயக்கங்களின் காரணமாக தென்சென்னை, வடசென்னை, கோவை, சிவகங்கை, விருதுநகர், மதுரை நகர் உள்ளிட்ட மாவட்டங்களில் புதிய கிளைகள் அதிக எண்ணிக்கையில் உருவாயின. கல்விக்கான இயக்கம், கல்விப் பிரச்சனையின் மீதும் வாலிபர் அரங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

வகுப்புவாதம் மற்றும் சாதீய ஒடுக்குமுறைக்கு எதிரான இயக்கம்

7.8 குஜராத் கோத்ரா ரயில் எரிப்பைத் தொடர்ந்து நடைபெற்ற வகுப்புவாத வன்முறையை எதிர்த்து மாநிலம் முழுவதும் இயக்கம் நடைபெற்றது.

7.9 மதமாற்றத் தடைச்சட்டத்தை எதிர்த்து தென் மாவட்டங்களை ஒன்றிணைத்து தூத்துக்குடியில் சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது. சுமார் 3000 பேர் கலந்து கொண்டனர். தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் இந்நிகழ்ச்சிக்காக சீரிய பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மதுரை நகர், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டக்குழுக்கள் மூலம் சுமார் 10ஆயிரம் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. இச்சிறப்பு மாநாட்டு நிகழ்ச்சியில் கணிசமான சிறுபான்மையினரைத் திரட்ட முடிந்தது. ஆனால், அமைப்புக்குள் கொண்டு வருவதில் வெற்றி பெற முடியவில்லை.

7.10 நாம் நடத்துகிற பெரும்பான்மை வகுப்புவாத எதிர்ப்பு - சிறுபான்மை தீவிரவாத எதிர்ப்பு இயக்கம், உணர்வு ரீதியான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. மதச்சார்பற்ற உணர்வை இளைஞர்களிடம் ஏற்படுத்த ஸ்தல அளவில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

7.11 சாதீய ஒடுக்கு முறைக்கு எதிராக திருவண்ணாமலை போளூர் வட்டத்தில் வடகரை நெம்மநேந்தல் ஊரில் சுடுகாட்டுப் பாதைக்கான போராட்டம் வெற்றி பெற்றது. இதே வட்டத்தில் வகூர் கிராமத்தில் இரட்டை கிளாஸ் முறைக்கு எதிராகவும் வலுவான போராட்டம் நடத்தப்பட்டது. திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் தலித் இளைஞர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராகவும், சீர்காழியில் தலித்துக்களுக்கு முடிவெட்ட மறுத்ததை எதிர்த்தும் பாண்டிச்சேரியில் இரட்டை கிளாஸ் முறைக்கு எதிராகவும் நடந்த போராட்டங்கள் விருதுநகர் மாவட்டம் செந்நெல்குளம் கிராமத்தில் இதர அமைப்புக்கள் இணைந்து நடத்திய ஆலய நுழைவுப்போராட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. மேற்கண்ட மாவட்டங்களில் தலித் பகுதிகளில் புதிய விரிவாக்கம் ஏற்பட்டுள்ளது. இன்னும் பலநூறு பிரச்சனைகள் மண்டிக்கிடக்கின்றன. தொடர்ந்து போராட வேண்டும்.

அரசின் கொள்கைகளுக்கு எதிராக மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்

7.12 கோக் மற்றும் பெப்சிபை தடைசெய்ய வேண்டும் எனக்கோரி டி.ஒய்.எப்.ஐ ஆகஸ்ட் 9, 2003 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தன்று அந்நியப் பொருள்களுக்கு எதிராக அறிவித்த போராட்டம் கூடுதல் முக்கியத்துவம் பெற்றது. இந்த இயக்கம் இன்றைக்கும் தொடர வேண்டிய நிலை உள்ளது.

7.13 கோக் குடிநீர் நிறுவனம் சிவகங்கை மாவட்டத்தில் குடிநீர் உற்பத்தியை துவக்க இருந்ததை எதிர்த்து நடைபெற்ற பிரச்சாரம், பின்னர் மதுரை நகர், புறநகர், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்கள் இணைந்து நடத்திய பிரச்சாரம் குறிப்பிடத்தக்கது.

7.14 மாநிலம் முழுவதும் ரேசன் கார்டு வழங்குவது நிறுத்தப்பட்டபோது, ரேசன் கார்டுக்கான இயக்கம் 2003 அக்டோபரில் தீவிரமாக நடத்தப்பட்டது. கோவை (கி) மாவட்டம் திருப்பூரில் இந்தப்போராட்டத்தின் போது 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

7.15 பொடா சட்டத்தை எதிர்த்து, கோவை (மே) மாவட்ட டி.ஒய்.எப்.ஐ 10 ஆயிரம் பிரசுரம் வெளியிட்டு பிரச்சாரம் செய்தது.

7.16 அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்த மறுநாளே சென்னை மாவட்டத் தோழர்கள் எஸ்.எப்.ஐ உடன் இணைந்து அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பு தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்து கைதாகியது குறிப்பிடத்தக்கது. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை இளைஞர்களிடம் உருவாக்குவதில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது.

ஸ்தாபனம்

7.17 மேற்கண்ட செயல்பாடுகள் அனைத்தும் நமது அமைப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும், ஓரளவு முன்னேற்றத்திற்கும் உதவியுள்ளன. இதே காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதுக்கிளைகளின் வரவும் உண்டு. 800க்கும் மேற்பட்ட கிளைகள் விடுபட்டும் இருக்கின்றன. Floating Character இதற்கு காரணம் என்பதுடன், இடம் பெயர்ந்ததாலும், கட்சியின் தொடர் கண்காணிப்பு, ஊழியர் பிரச்சனை, கமிட்டிகளில் டி.ஒய்.எப்.ஐ பொறுப்பாளர்கள் மாற்று ஏற்பாடின்றி விடுவிக்கப்படுவது போன்ற பிரச்சனைகளும் காரணமாக உள்ளது.

7.18 தற்போது 3 ஊழியர்கள் மாநில மையத்தில் செயல்படுகின்றனர். இது குறைந்த பட்சம் 5 ஆக உயர்த்தப்பட வேண்டும். அப்போது தான் மாநில அளவில் உள்ள இரத்ததான கழகம், விளையாட்டுக்கழகம், இளம்பெண்கள் பண்பாட்டு தளம் போன்றவற்றில் கவனம் செலுத்த முடியும்.

7.19 14 பேர் கொண்ட மாநில ஃபிராக்ஷன், 2 மாதங்களுக்கு ஒருமுறை கூடி விவாதிக்கிறது. பெரும்பாலும் அரங்கப் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

7.20 கட்சி கட்டும் பணியில் ஸ்தூலமான முயற்சி இல்லை. குறிப்பாக தலித், சிறுபான்மை, இளம்பெண்கள் போன்றவர்களை திரட்டிட ஆழமாக விவாதிக்கவில்லை.

7.21 உறுப்பினர் பதிவு 2001 ல் இருந்து 2004-ல் சுமார் ஒரு லட்சத்திற்கு மேல் பதிவு உயர்ந்துள்ளது (விவரம் பட்டியலில்).

7.22 மாவட்ட ஃபிராக்ஷன் மூலம் தான் உறுப்பினர்களை உறுதிப்படுத்துகிற, கட்சி கட்டுகிற பணிகளைச் செய்திட முடியும். வெகுஜன அமைப்பாக செயல்படுத்துவதிலும், மாவட்ட ஃபிராக்ஷன் தான் வழிகாட்ட முடியும். மேலும், தொடர் ஸ்தாபன விஸ்தரிப்புக்கும், புதிய சவால்களை எதிர் கொள்வதற்கும் திட்டமிட முடியும்.

7.23 மாவட்ட ஃபிராக்ஷன்கள் தேவைக்கேற்ப கூட்டப்படுவதில்லை. வருடக்கணக்கில் கூடாத ஃபிராக்ஷன்களும் உண்டு. உதாரணத்திற்கு சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சி, கரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட மாவட்டங்களைக் குறிப்பிடலாம். மாவட்ட ஊழியர், இடைக்கமிட்டி ஊழியர், கமிட்டி செயல்பாட்டின் உத்திரவாதம் போன்றவை இதனால் பாதிக்கப்படுகிறது.

7.24 கட்சி இல்லாத இடங்களில் டி.ஒய்.எப்.ஐ உருவாக்கப்படுவது தொடர்கிறது. இதில் 50 சதமான கிளைகளில் ஓரிரு ஆண்டுகளில் கட்சி உருவாக்கப்படுகிறது.

7.25 கடந்த மாநாட்டின் போது, நாகை, திருவாரூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி ஆகிய கட்சி வலுவாக உள்ள மாவட்டங்களில் டி.ஒய்.எப்.ஐ பலகீனமாக இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இதில் திண்டுக்கல் தவிர மற்ற மாவட்டங்களில் சிறு முன்னேற்றம் உள்ளது.

7.26 கிளைகள் அமைக்கப்படுவதும், செயல்படுவதும் மிக முக்கியம். இடைக்கமிட்டிகளில் குறைந்த பட்சம் 2க்கும் மேற்பட்ட உத்திரவாதமான தலைவர்கள் இருக்கிற போது தான், கிளைகள் உள்ளிட்ட செயல்பாடுகளை உறுதி செய்ய முடியும். ஆனால் நடைமுறையில் ஒருவர் புதிதாக உருவானால், ஏற்கனவே இருப்பவரை உடனடியாக வாலிபர் அரங்கத்திலிருந்து விடுவிக்கிற நிலைமை இருக்கிறது.

வெகுஜன தன்மை

7.27 கடந்த கட்சி காங்கிரசின் ஸ்தாபன அறிக்கை வெகுஜன அரங்கங்களின் ஊழியர்களை கட்சியின் ஊழியர் பற்றாக்குறைக்கு பயன்படுத்துவது சரியல்ல என குறிப்பிடுகிறது. இந்த நிலைமை தமிழகத்தில் நாமக்கல், தேனி, இராமநாதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் உள்ளது. பகுதிக்குழு மற்றும் தாலுகா குழுக்களில் இந்த நிலை அதிக அளவில் இருப்பதைக் குறிப்பிட முடியும். இதை கட்சி மாவட்டக்குழுக்கள் சரி செய்ய வேண்டும். வாலிபர் அரங்க வேலை கட்சி வேலையாகக் கருதப்படுவதில்லை. வாலிபர் அரங்க தோழர்களுக்கு வாலிபர் அரங்கப் பணிகளே முன்னுரிமைப் பணி என வலியுறுத்த வேண்டும்.

7.28 வாலிபர் அரங்கம் குறைந்த பட்சம் மாவட்ட அளவில் தனியான அலுவலகத்தில் செயல்படுவது அதனுடைய வெகுஜனத் தன்மையை அதிகரிக்க உதவும்.

நிதி

7.29 வாலிபர் அரங்கத்திற்கு உறுப்பினர் பதிவு தவிர, வருடந்தோறும் 50 ஆயிரம் ரூபாய் நிதியாக வசூலிக்கிற ஏற்பாடு இருக்கிறது. வாலிபர் அரங்க கட்டிடத்திற்கான பணம் ரூ.10 லட்சம் வங்கி டிபாசிட்டில் இருக்கிறது. சுமார் 1.50 லட்சம் ரூபாய் கடனும் இருக்கிறது. மாநில வரவு - செலவு கணக்கில் முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டு அலுவலகச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

7.30 நிதி நெருக்கடி காரணமாக மாவட்ட, இடைக்கமிட்டிகளின் செயல்பாடு பெருமளவில் முடங்கிப்போகிறது. குறிப்பிட்ட மாதங்களை ஒதுக்கி இடைக்கமிட்டி, மாவட்ட, மாநில நிதி தேவைக்கு வசூல் செய்வது என்ற கட்சி கடிதம் 5 ன் வழிகாட்டுதலை கோவை, திருப்பூர், வடசென்னை, தென்சென்னை, விருதுநகர் போன்ற சில மாவட்டங்களே நிறைவேற்றுகின்றன. இதனால் இம்மாவட்டங்களில் தனி அலுவலக செயல்பாடு, மாவட்ட மைய செயல்பாடு, பல இடைக்கமிட்டிகளில் உயிரோட்டமாக செயல்படும் தன்மை உள்ளது. இதர மாவட்டங்களிலும் குறிப்பிட்ட காலத்தை தீர்மானித்து நிதி வசூலிக்க கட்சி வழிகாட்ட வேண்டும்.

அரசியல்படுத்துதல்

7.31 டிஒய்.எப்.ஐ உறுப்பினர் எண்ணிக்கைக்கும், அரசியல் ஆதரவர்ளர்கள் எண்ணிக்கைக்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. இதற்கு வெகுஜன கல்வி முறை (Mass Education) குறிப்பிட்ட தலைப்புகளில் சிறிய உரை அடிப்படையிலான வகுப்புகள் பரவலாக கிளை அளவிலும் இடைக்கமிட்டி அளவிலும் வருடத்திற்கு குறைந்த பட்சம் இருமுறை நடத்திட வேண்டும்.

7.32 தற்போது ஊழியர்களுக்கான அரசியல் முகாம்கள் நடத்தப்படுகின்றன. மாநில அளவில் 7 நாள் முகாம் 138 ஊழியர்களுக்கு மாமல்லபுரத்தில் நடத்தப்பட்டது. மண்டல அளவில் 6 முகாம்கள் 2 நாட்கள் நடத்தப்பட்டன. இவற்றில் 800 க்கும் அதிகமான தோழர்கள் பங்கெடுத்தனர். இவையன்றி மாவட்டங்களில் தனியாக நடத்தப்பட்டுள்ளது.

7.33 இளைஞர் முழக்கம் 7 ஆயிரத்திற்கும் 8 ஆயிரத்துக்கும் இடையேயான எண்ணிக்கையில் தொடர்ந்து வெளிவருகிறது. பத்திரிகையின் உள்ளடக்கம், தோற்றம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஊழியர்கள்

7.34 வாலிபர் அரங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை உயர்வுக்கு ஏற்ற வகையிலும், முன்னுக்கு வந்துள்ள சவால்களை எதிர்கொள்வதற்கும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய நிலையில், முழு நேர மற்றும் பகுதி நேர ஊழியர்களின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளது.

7.35 உறுப்பினர் சேர்ப்பில் கணிசமான எண்ணிக்கையில் இளம் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ள சூழலில், பெண் ஊழியர்கள் செயல்படுவது அவசியம். உடனடியாக சென்னை, கோவை, மதுரை, திருப்பூர், விருதுநகர், குமரி போன்ற மாவட்டங்களில் வாய்ப்பு இருப்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

பன்முக நடவடிக்கை

7.36 20 ஆண்டுகளுக்கும் மேலாக பொங்கல் விளையாட்டு விழா, ரத்ததானம், இரவுப் பள்ளி போன்றவை நடத்தப்படுகின்றன. மாநிலம் முழுவதும் ரத்ததான கழகத்தின் செயல்பாடு பரவலாக இருக்கிறது. ஆண்டிற்கு குறைந்த பட்சம் 5000 பேர் ரத்ததானம் செய்வது வாலிபர் அரங்க செல்வாக்கு உயருவதற்கு உதவுகிறது.

7.37 இரவுப்பள்ளி செயல்பாடு குறித்து தொலை நோக்கு தன்மையுடனான பணி என்பதை புரிந்து செயல்படுவதில் பலவீனம் நீடிக்கிறது. எதிர்காலத்தில் கிடைக்கிற பலன்களுக்கான உழைப்பை செலுத்த முனைப்பு காட்டுவதில்லை. 500 இரவு பள்ளிகள் அமைக்க முடிவு செய்து 142 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

7.38 - டிஒய்.எப்.ஐ விளையாட்டுக்கழகம் 4 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மூன்று முறை மாநில அளவிலான தடகளப் போட்டி நடைபெற்றுள்ளது. மயிலாடுதுறை விளையாட்டுக்கழகம் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. விரிவாக்கும் முயற்சி தேவை. குறிப்பாக கிராமங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

எதிர் வரும் ஆண்டுகளில்

- உறுப்பினர் எண்ணிக்கையை 10 லட்சமாக உயர்த்துவது. கிளைகள், இடைக்கமிட்டிகள் செயல்பாட்டை பலப்படுத்துவது.
- நகர்ப்புற இளைஞர்கள் - இளம் பெண்கள், தலித் இளைஞர்கள், சிறுபான்மை இளைஞர்களை திரட்டுவதில் சிறப்பு கவனம் செலுத்துவது.
- அரசியல்படுத்துவது - கட்சி கட்டுவது ஆகிய பணிகளை தீவிரமாக முன்னெடுத்துச் செல்வது.
- விளையாட்டு, பண்பாட்டு தளங்களில் செயல்பாட்டை - விரிவுப்படுத்துவது.

மாதர் அரங்கம்

8.1 பாலின, வர்க்க, சாதிய அடிப்படையிலும் குடிமக்கள் என்ற முறையிலும் பெண்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர் கொள்கிறார்கள் என்று மார்க்சிஸ்ட் கட்சி வரையறுத்துள்ளது. இத்தகைய பிரச்சனைகளில் மாதர் அரங்கம் எவ்வளவு தூரம் தலையிட முடிந்துள்ளது, என்ன நிவாரணம் பெற முடிந்துள்ளது, எந்த அளவு பெண்களுக்கு இப்பிரச்சனைகளின் பின்னுள்ள அரசியல் நிலைபாட்டைக் கொண்டு போக முடிந்துள்ளது என்று பரிசீலிக்க வேண்டும்.

8.2 உலகமயக் கொள்கைகளின் விளைவுகள் அனைவரையும் பாதித்தாலும், தாக்கம் ஒரே மாதிரியாக இல்லை. நலிந்த ஒடுக்கப்பட்ட பிரிவினர் குறிப்பாக நகர்ப்புறத்தில் முறைசாரா தொழிலாளர்கள் கிராமப்புறத்தில் ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மீதான பாதிப்பு ஆழமாக உள்ளது. இவர்களில் பெண்கள், தலித்துகள், மலைவாழ் மக்கள் கூடுதலாக நெருக்கடிக்குள்ளாகிறார்கள். எனவே குறிப்பான பாதிப்பையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. இக்கால கட்டத்தில் தொழில் நெருக்கடியும், விவசாய நெருக்கடியும் பெண்களை மிக ஆழமாக பாதித்துள்ளன. பொருளாதார பாதிப்பு மட்டும் இல்லாமல், சமூக ரீதியான தாக்கத்தையும் குறைத்து மதிப்பிட முடியாது.

8.3 இக்காலகட்டத்தில் பெண்கள் மீதான வன்முறை என்று பார்க்கும் போது 2003ம் ஆண்டு புள்ளி விரப்படி தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட பாலியல் குற்றங்கள் 3460. இது பெண்கள் மீதான மொத்த வன்முறை சம்பவங்களில் 57.20 சதவீதம்; இதில் பாலியல் துன்புறுத்தல் (ஈவ் டீஸிங்) 881: சென்னையில் மட்டும் 212: அடுத்தபடியாக காஞ்சி மாவட்டம் 1771.

பிரச்சனைகளில் தலையீடு

சாதிய ஒடுக்குமுறை

8.4 இக்கால கட்டத்தில் தலித் பெண்கள் பிரச்சனைகளில் மாதர் அரங்கத்தின் தலையீடு குறிப்பிடத்தகுந்ததாக இருந்திருக்கிறது. புதுக்கோட்டை, திருப்பூர், தேனி, விழுப்புரத்தில் நடந்த மண்டல மாநாடுகளில், நமது இயக்கத்துக்கு அப்பாற்பட்ட நூற்றுக்கணக்கான தலித் பெண்கள் கலந்து கொண்டு பிரச்சனைகளைப் பேசினர். தேனியில் 75 சதவீதம் அருந்ததிய பெண்களாக இருந்தார்கள். பல மாவட்டங்களில் ஆய்வும் செய்யப்பட்டது. இவற்றின் முன் வந்த

கோரிக்கைகள் தொகுக்கப்பட்டு அதிகாரிகளிடமும் அளிக்கப்பட்டுள்ளன. 2002ல் இதற்காக 5 மாவட்டங்களில் நடந்த மறியலில் 1300 பெண்கள் 76 சதவீதம் தலித் பெண்கள் - பங்கேற்றனர். இதையடுத்து காவல்துறையின் சமூக நீதிப் பிரிவு நம்மிடமிருந்து விவரங்கள் வாங்கி, பல மாவட்டங்களில் ரெட்டை டம்ளர் கடைகளில் ரெய்டு செய்துள்ளனர்.

8.5 பெரம்பலூர் மாவட்டம் பேரளியில் திட்டமிட்டபடி சைக்கிள் பேரணி நடத்த முடியாவிட்டாலும், நமது முயற்சி பரவலாகப் பேசப்பட்டது. குறிப்பாக தீண்டாமை பற்றி தலித்துகளிடம் மட்டும் பேசாமல் ஆதிக்க சாதியினரிடமும் பேசியது தலித் அமைப்புகளால் குறிப்பாகப் பாராட்டப்பட்டது. தலித்துகளின் சுடுகாடுகள் விழுப்புரம் மாவட்டத்தின் பல இடங்களில் ஆக்கிரமிக்கப்பட்டு, ஒரு பிணத்தின் மீது மற்றொரு பிணம் புதைக்கப்படுகிற கொடுமையைக் கண்டித்து, இயக்கம் நடத்தப்பட்டது. விருதுநகர் மாவட்டம் சென்னா குளம், ஆவியூர் பிரச்சனைகளில் நமது தலையீட்டின் மூலமாக, பெருமளவு பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளது. இதையடுத்து அப்பகுதியில் 30க்கும் மேற்பட்ட பெண்கள் கட்சியில் சேர்ந்துள்ளனர். இதே மாவட்டத்தில் தேசிய பெண்கள் ஆணையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட பொது விசாரணையில், பல்வேறு மாவட்ட காவல்துறை அதிகாரிகள் நேருக்குநேர் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த முடிந்தது. சில தீர்வுகளும் கிடைத்தன.

வகுப்புவாதத்தை எதிர்த்து

8.6 வகுப்புவாதக் கருத்துக்களுக்கு எதிரான கலாச்சார ரீதியான தலையீடு பற்றி கோவையில் கட்சியின் மாநில மையம் நடத்திய கே.என். பணிக்கரின் பயிற்சி முகாமிற்குப் பிறகு மாதர் அரங்க மாநிலக்குழுவின் ஒரு விசேஷ அமர்வில் விவாதித்து, ஒரு செயல் திட்டம் இறுதியாக்கப்பட்டது. இதன் பின்னர் கடலூர், இராமநாதபுரம், குமரி, திருப்பூர், காஞ்சிபுரம், கரூர், விருதுநகர், நெல்லை மாவட்டங்களில் கோவில் திருவிழாக்களின் போது, மாதர் சங்கக் கொடி பேனருடன், குடிநீர், மோர் வழங்கப்பட்டது. இந்நடவடிக்கை பெண்களின் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. சமீபத்தில் நவராத்திரியின் போது, பெண்ணுரிமை கொலு வடசென்னை, தென்சென்னை, திருச்சி கோவையில் வைக்கப்பட்டது. பெண்கள் அதிகம் ஈடுபடும் நிகழ்ச்சியின் வடிவத்தை கையாண்டு முற்போக்கு, மதசார்பற்ற கருத்துக்களை முன்வைப்பது நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறது.

8.7 கோவை, திருச்சி, வடசென்னை, வேலூர் மாவட்டங்களில் நடைபெற்ற சிறுபான்மை முஸ்லீம் பெண்களுக்கான சிறப்பு கூட்டங்களில் 200க்கும் மேற்பட்ட முஸ்லீம் பெண்கள் கலந்து கொண்டனர். குறிப்பிட்ட சில மாவட்டங்களைத் தேர்வு செய்து, உறுப்பினர் பதிவை இப்பகுதி பெண்கள் மத்தியில் அதிகப்படுத்தியுள்ளோம். இப்பணியை வருங்காலத்தில் பலப்படுத்த வேண்டியுள்ளது.

வர்க்கப் பிரச்சனை

8.8 கிராமப்புற, நகர்ப்புற உழைப்பாளிப் பெண்கள் பிரச்சனைகளை எடுப்பதில் மாதர் சங்கம் பின் தங்கியுள்ளது என்ற தொடர்ந்த விமர்சனத்தின் அடிப்படையில், ஒரு சில பிரச்சனைகள் இக்கால கட்டத்தில் எடுக்கப்பட்டன. நெசவாளர் நெருக்கடி உச்சக்கட்டத்தில் இருந்த போது, மாநிலம் தழுவிய மறியல், ஆர்ப்பாட்டம் தர்ணாவுக்கு அறைகூவல் விடப்பட்டது. இதில் பங்கேற்ற சுமார் 2000 பெண்களில் 24 சதவீதம் பேர் நெசவாளர்கள். மீனவப் பெண்களுக்கு ரஃப் சீஸன் பணம் கிடைப்பதில்லை என்கிற பாரபட்சம் வலுவாக எடுக்கப்பட்டு, சட்டமன்றத்திலும் பேசப்பட்டு, அரசின் உத்தரவு பின்னர் கிடைத்தது.

8.9 சமீபத்தில், பெண்களின் வேலை வாய்ப்புரிமை மாநாடு திண்டுக்கல்லில் நடத்தப்பட்டது. வேலை நிறுத்த உரிமையை முன்வைத்து நடத்தப்பட்ட பிப். 24, 2004 இயக்கத்தில் மாதர் அரங்கத்திலிருந்து 2153 பெண்கள் கலந்து கொண்டனர்.

8.10 விவசாய தொழிலாளர் பிரச்சனைகளில் சுயேச்சையான இயக்கமும், கூட்டு இயக்கமும் மாவட்ட அளவில் நடத்தப்படுவதில் முன்னேற்றம் உண்டு.

வாழ்வுரிமை பிரச்சனைகள்

8.11 அடித்தட்டு மக்களின் பிரச்சனைகள் மீது கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று சென்ற மாநாடு சுட்டிக்காட்டியபடி, ஏராளமான இயக்கங்கள் வாழ்வுரிமை பிரச்சனைகளுக்காக நடத்தப்பட்டன. உணவுக்கான உரிமை, பொது விநியோகம், முதியோர், விதவை பென்ஷனை வைத்து, மாநிலம் தழுவிய 3 இயக்கங்கள் நடத்தப்பட்டன. நாகை மாவட்டத்தில் பல இடங்களில் 15,000 பெண்களும், திருவாரூரில் 14,000 பெண்களும் பங்கேற்றது இந்த இயக்கங்களின் தேவையை உணர்த்துகிறது. பல மாவட்டங்களில் ரேஷன் கார்டுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு விண்ணப்பங்கள் அதிகாரிகளிடம் அளிக்கப்பட்டன. வேலைக்கு உணவு திட்டத்தின் முறைகேடுகள் களையப்பட வேண்டுமென்றும், பெண்களும் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாக இணைக்கப்பட வேண்டுமென்றும் சில மாவட்ட விவரங்களோடு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரை சந்தித்து பேசப்பட்டது. அந்த்யோதயா திட்டம் மற்றும் உச்ச நீதி மன்றத்தின் உத்திரவுகள் பல அதிகாரிகளுக்கும், பொது மக்களுக்கும் இந்த இயக்கத்தின் மூலமாகவே தெரிய வந்தன.

பொதுவாழ்வில் பெண்கள் பங்கேற்பு

8.12 பெண்களின் அரசியல் பங்கேற்பு உத்திரவாதப்படுத்தப்பட்ட 33 சதவீத இட ஒதுக்கீட்டுக்காக இயக்கங்கள் நடத்தப்பட்டதோடு, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மாதர் அரங்கத்தின் பங்கு சிறப்பாக இருந்தது. மாற்றுக் கட்சிகளால் வியப்புடன் பாராட்டப்பட்டது. ஆயினும் பெரும்பான்மை பெண்கள் திராவிட இயக்கங்களின் பின்னால் திரண்டிருக்கும் நிலையில் சொல்லக் கூடிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. மாதர் சங்க அரசியல் நிலைபாடு, பிரச்சாரத்திற்கு ஏற்ப மாதர் சங்க உறுப்பினர்களின் ஓட்டுகள் விழுவதில்லை. தற்போது மாறியுள்ள அரசியல் சூழலில் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் பெண்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி, தண்டோரா ஆர்ப்பாட்டம் மாநில அளவில் நடத்தப்பட்டு அரசியல் பிரச்சாரம் செய்யப்பட்டது. இரு குழந்தைகளுக்கு மேல் இருந்தால் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்கிற மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பை, முதல் அமைப்பாக எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி, ஆணையருக்கு நேரில் மனு கொடுத்து பேசப்பட்டது. இனி இதை வலியுறுத்தவில்லை என்ற வாக்குறுதியை அவரிடமிருந்து பெற முடிந்துள்ளது.

மீடியா

8.13 மீடியாக்களில் பெண்களின் சித்தரிப்பு குறித்து தொடர்ச்சியான அழுத்தம் இக்காலக்கட்டத்தில் இருந்தது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் வாயிலாக நமது நிலைபாடு வெளியிடப் படுகிறது. பாபா பட பெண்ணுரிமை எதிர்ப்பு வசனங்களைக் கண்டித்து கையெழுத்து இயக்கம் நடத்தி கடிதம் அனுப்பியவுடன், தொலைக்காட்சி மூலமாக லதா ரஜினிகாந்த் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. திரைப்படப் பாடல்கள் குறித்த ஆய்வு நடத்தப்பட்டு, வைரமுத்து, பா.விஜய் உள்ளிட்ட பல பாடாலசிரியர்கள் பதில் சொல்லுகிற அவசியத்தையும், இது குறித்த ஒரு விவாதத்தையும் உருவாக்க முடிந்தது. பாய்ஸ் பட எதிர்ப்பை அடுத்து, நாம் குறிப்பிட்ட பல ஆட்சேபணைக்குரிய காட்சிகளைத் தயாரிப்பாளர் அகற்றியது குறிப்பிடத்தக்கது. உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது. நியூ படத்திற்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு, நாம் எழுப்பிய கேள்விகளுக்கு இயக்குநர் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டது.

வன்முறை பிரச்சனைகள்

8.14 ஏராளமான வன்முறை பிரச்சனைகளில் தலையீடு இருந்துள்ளது. பல வழக்குகளில் நமது இயக்கங்களின் மூலமே எப்.ஐ.ஆர். போடப்பட்டது. உதவி கேட்டு, நம்மை நாடி வருவோரின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. மாநில மையம், வடசென்னை, தென்சென்னை, திருச்சி, கடலூர், சேலம், மதுரை, குமரி, தஞ்சை, கோவை, திருப்பூர், காஞ்சிபுரம், சிவகங்கை, பாண்டி மாவட்டங்களில் சட்ட உதவி மையங்கள் இயங்கி வருகின்றன. சிறுமியர் பாலியல் பலாத்கார சம்பவங்கள் பெருமளவு அதிகரித்துள்ளன. பெண்களைக் கடத்தி விபச்சாரத்தில்

ஈடுபடுத்தும் 3 வழக்குகளில் நல்ல தலையீடு இருந்துள்ளது. தமிழகத்திலேயே ஈவ்டீசிங் கொடுமைகள் அதிகம் நடப்பது (பாதிக்கும் மேல்) சென்னையில் என்கிற அடிப்படையில் ஈவ்டீசிங் எதிர்ப்பு மாநாடு நல்ல தயாரிப்புடன் நடத்தப்பட்டது. இதையொட்டி பலதரப்பட்டவர்களை இணைத்து ஈவ்டீஸிங் எதிர்ப்புக் கமிட்டி அமைக்கப்பட்டு, தொடர் தலையீடு செய்ய வேண்டியுள்ளது.

8.15 தமிழகத்தில் ஆழமாக உள்ள பெண் சிசுக் கொலை, கருக்கொலை பிரச்சினைகளில் தலையீடு ஓரளவு இருந்தாலும், பெருமளவு முன்னேற வேண்டியுள்ளது.

ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள்

8.16 கே.பி.ஜே. அறக்கட்டளையின் மூலமாக மதுரை மாவட்டம் உசிலை தாலுகாவில் 38 தலித் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு கல்விக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

8.17 சென்னையில் மாதர் அரங்க ஊழியர்களின் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை அதிகப்படுத்துவதற்காக மாநில மைய அலுவலகத்தில் 1000க்கும் மேற்பட்ட புத்தகங்களைக் கொண்ட நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

8.18 சுய உதவிக் குழுக்கள் தற்போது 400க்கும் மேல் உள்ளன. நெல்லை, தூத்துக்குடி, தென்சென்னை, திருப்பூர், வேலூர், கரூர், தஞ்சை, தருமபுரி, திண்டுக்கல் மாவட்டங்களில் மாதர் சங்கம் சுயேச்சையாகவும், குமரி, விருதுநகர், இராமநாதபுரம், வடசென்னை, மதுரை மாவட்டங்களில் அறிவியல் இயக்கம் மூலமாகவும், காஞ்சி, கோவையில் மற்ற தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தும் குழுக்கள் நடத்தப்படுகின்றன. திருப்பூரில் கட்சியின் உதவி கூடுதலாக உள்ளது.

கூட்டு நடவடிக்கைகள்

8.19 கௌரவ அட்டை, மாணவர்கள் மீதான தாக்குதல், பெண்கள் மீதான வன்முறை, உணவுக்கான உரிமை போன்ற பிரச்சினைகளில் இதர பெண்கள் அமைப்புகள் தன்னார்வ அமைப்புகளுடன் கூட்டு இயக்கம் நடத்தப்பட்டுள்ளது. வாலிபர் சங்கம், மாணவர் சங்கம், விவசாய சங்கம், தொழிற்சங்கங்களுடன் கூட்டு இயக்கத்திற்கான திட்டமிடல் தேவைப்படுகிறது.

ஸ்தாபனம்

8.20 உறுப்பினர் பதிவு தொடர்ந்து அதிகரித்தது, சென்ற மாநாட்டின் போது 3,15,000ஆக இருந்த எண்ணிக்கை 2003இல் 4,56,350-ஐ எட்டியுள்ளது. ஒட்டுமொத்த உயர்வு இருந்தாலும் கரூர், புதுக்கோட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, நாமக்கல், தூத்துக்குடி மாவட்டங்களின் நிலைமை திருப்திகரமாக இல்லை. சில மாவட்டங்களில் முன்னேற்றம் காண வலுவான முயற்சிகள் தேவை. வடசென்னை, விருதுநகர், திருப்பூர், குமரி மாவட்டங்களில் நல்ல முன்னேற்றம் உண்டு.

8.21 சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் கிளைகளாக்க வேண்டும் என்று விசேஷ அழுத்தம் கொடுத்த அடிப்படையில் பல புதிய கிளைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் பதிவினை ஸ்தாபனமாக மாற்றுவதில் நமது முயற்சிகளை பெருமளவு பலப்படுத்த வேண்டியுள்ளது.

8.22 மூன்று முறைக்கு மேல் முக்கியப் பொறுப்புகளில் நீடிக்க கூடாது என்ற அமைப்பு விதி திருத்தம் பல புதிய ஊழியர்களுக்குப் பொறுப்பு கொடுக்க உதவியுள்ளது. தலித் ஊழியர்கள், இளம் பெண்கள், சிறுபான்மை பெண்களை இணைக்கவும் உணர்வு பூர்வமான முயற்சி எடுக்கப்படுகிறது. காஞ்சிபுரம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் ஊதியம் பெறும் ஒரு முழுநேர ஊழியர் கூட இல்லை.

8.23 மாவட்டக் கமிட்டிகள் ஓரளவு முறையாகக் கூடினாலும், இடைக் கமிட்டிகளும், கிளைகளும் நிறையவே பின்தங்கியுள்ளன. இயக்கங்களில் பெண்களின் பங்கேற்பும் திருப்திகரமாக இல்லை. அதிகபட்சம் 5 சதவீதம் உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள் என்கிற நிலைதான் உள்ளது.

8.24 சுயேச்சையான செயல்பாடு என்கிற கோட்பாடு மாநில அளவில் முன்னேற்றகரமாக உள்ளது. மாவட்டங்களில் ஓரளவு பரவாயில்லை. அதற்கும் கீழ் பெரிய அளவில் முன்னேற்றத்திற்கான முயற்சிகள் தேவை.

8.25 மகளிர் சிந்தனை சராசரியாக 7,500 பிரதிகள் விற்பனையாகின்றன. மாவட்ட சிறப்பிதழ்களும் சில பிரச்சினைகள் பற்றிய சிறப்பிதழ்களும் வெளியிடப்படுகின்றன. ஆனால் உறுப்பினர் எண்ணிக்கைக்கும் விற்பனைக்கும் மிகுந்த இடைவெளி உள்ளது. நமது நிலைபாட்டை பரந்துபட்ட பெண்களிடம் கொண்டு செல்வது இதனால் பாதிக்கப்படுகிறது. எண்ணிக்கை குறைவதால் நஷ்டமும் ஏற்படுகிறது.

கட்சி வழிகாட்டுதல்

8.26 மாதர் சங்கத்தின் வெகுஜனத் தன்மையை பலப்படுத்துவதில் 3 ஆண்டுகளில் மேலும் முன்னேற்றம் உண்டு. இந்த அரங்கிற்கான கட்சி வழிகாட்டுதல் நேரடியாக மாதர் சங்கத்திற்கு கொண்டு செல்ல கூடாது என்றும் மாவட்ட மாதர் அரங்க பிராக்சனில் விவாதித்தே கொண்டு செல்ல வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். கட்சியில் கடந்த மாநில மாநாட்டின் போது 23 மாவட்டங்களில் மட்டுமே மாவட்ட பிராக்சன்கள் செயல்பட்டன. தற்போது 32 மாவட்டங்களில் மாதர் பிராக்ஷன்கள் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. இவற்றை முறையாக செயல்படுத்துவதில் கட்சியின் மாவட்டக்குழுக்கள் தனிகவனம் செலுத்த வேண்டும்.

8.27 மாதர் அரங்க மாநில பிராக்ஷன் செயல்படுவதில் முன்னேற்றம் உள்ளது. கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் என். வரதராஜன் உள்பட மாநில செயற்குழு உறுப்பினர்கள் 3 பேர் இந்த அரங்கப் பொறுப்பாளர்களுடன் இணைந்து கலந்து கொண்ட ஒரு பிராக்ஷன் கூட்டமும் நடந்துள்ளது. சில சிக்கலான சமூகப் பிரச்சினைகளை எடுக்கும்போது அதன் எல்லை என்ன? கடைப்பிடிக்க வேண்டிய உத்தி என்னவாக இருக்கலாம் என்பன போன்ற விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. இந்த அடிப்படையில் திருச்சி இளம் பெண் நிஷா பிரச்சினையில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்தும் இக்கூட்டத்தில் விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இந்த அரங்கில் கூட்டு செயல்பாட்டையும், ஒருங்கிணைப்பையும் பலப்படுத்துவது பற்றியும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

8.28 பெண்கள் சம்மந்தப்பட்ட பிரச்சினையில் கட்சியின் நேரடி நடவடிக்கைகளை அதிகப்படுத்த வேண்டும் என கடந்த மாநில மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. இத்திசை வழியில் சில முன்னேற்றங்கள் உண்டு. போராட்டங்களையும் நேரடியாக நடத்தின. இத்தகைய முயற்சிகள் வருங்காலத்தில் பலப்படுத்தப்பட வேண்டும்.

8.29 இந்த அரங்கில் கட்சி கட்டும் பணியில் தொடர்ச்சியான முன்னேற்றம் உள்ளது. கடந்த மாநாட்டின் போது, கட்சி உறுப்பினர்களில் பெண்களின் எண்ணிக்கை 7890. 2001இல் கட்சி உறுப்பினர்களில் 7.4 சதமாக இருந்த பெண்களின் எண்ணிக்கை தற்போது 11.5 சதமாக உயர்ந்து உள்ளது.

8.30 பெண் கட்சி கிளைகள் அமைப்பதில் பொதுவான முன்னேற்றம் உண்டு. 16 மாவட்டங்களில் 416 பெண் கட்சி கிளைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில மையத்திடம் தகவல் உள்ளது. இதர மாவட்டங்களில் இருந்து விவரம் கிடைக்கவில்லை. அனைத்து மாவட்டங்களிலும் பெண் கட்சி கிளைகள் தனியாக அமைப்பதும், முறையாக செயல்படுத்துவதும் பெண் ஊழியர்கள் வளர்ச்சிக்கு உதவும்.

8.31 இன்றைய சமூக மற்றும் குடும்ப சூழலில் பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவது சிரமங்களும் பிரச்சனைகளும் நிறைந்ததாக உள்ளது.

எதிர்கால கடமைகள்

- ❑ உலகமய பின்னணியில் தீவிரமடைந்து வரும் நகர்ப்புற, கிராமப்புற உழைப்பாளி பெண்களின் வர்க்கப் பிரச்சினைகளில் சுயேச்சையாகவும், வர்க்க - வெகுஜன அமைப்புகளுடனும் இணைந்து கூட்டாகவும் தலையீடு செய்வதில் மேலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.
- ❑ தீண்டாமை பிரச்சனைகள் மீதான இயக்கம் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். வகுப்புவாத கருத்துக்களுக்கு எதிராக கலாச்சார நடவடிக்கைகள் தொடர வேண்டும். இந்துத்துவாவின்

பாதகமான விளைவுகளை அம்பலப்படுத்த வேண்டும். முஸ்லீம் பெண்களை ஸ்தாபனப்படுத்துவதிலும், அவர்கள் சந்திக்கும் தனிநபர் சட்டப் பிரச்சினைகள் உட்பட பல பிரச்சினைகளில் தலையீடு செய்வதிலும் கவனமான முயற்சிகள் தேவை.

- ❑ சமத்துவம், பாலியல் பலாத்கார பிரச்சனைகள், வரதட்சணை கொடுமைகள், பெண் சிசுக் கொலை, கள்ளச்சாராயம் உள்பட பெண்களின் அன்றாட பிரச்சனைகளின் நமது தலையீடுகளை அதிகப்படுத்துவது.
- ❑ சுய உதவிக்குழுக்களை கூடுதலாக அமைப்பதும், மற்ற குழுக்களுடன் தொடர்பை வலுப்படுயத்துவதும் அத்தியாவசியமானதாகும்.
- ❑ அனைத்து உறுப்பினர்களையும் கிளைகளாக்க கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இடைக் கமிட்டிகளுக்கு கிளைகளை நடத்த பயிற்சியளிக்க வேண்டும்.
- ❑ பெண்கள் மத்தியில் கட்சியின் நேரடி நடவடிக்கைகளை பலப்படுத்துவதிலும், பெண்களை கட்சிக்குள் கொண்டு வருவதிலும் அவர்களுக்கு பயிற்சி அளித்து செயல்பாட்டை பலப்படுத்துவதிலும் தொடர்ச்சியாக கவனம் செலுத்துவது.

மாணவர் அரங்கம்

9.1 நமது மாணவர் அரங்கம் இக்காலத்தில் தொடர்ச்சியான தலையீடுகள் செய்து அதன் மூலமாக சிறிய முன்னேற்றத்தை கண்டுள்ளது. கட்சியின் மாநிலக்குழு முன்னுரிமை அரங்கமாக தேர்ந்தெடுத்து சில உதவிகள் செய்தது இந்த முன்னேற்றத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது. உறுப்பினர் பதிவில் முறிப்பு ஏற்பட்டு 1.5 லட்சமாக உயர்ந்துள்ளது.

தமிழக கல்வி சூழல்

9.2 உலகமயம் மற்றும் மதவெறியின் கோரப்பிடியில் இந்தியக் கல்வி சிக்க வைக்கப்பட்டு சீரழிக்கப்பட்ட நிலைமைகளை தமிழகமும் இக்காலத்தில் சந்தித்தது. 2002 ம் ஆண்டில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பினை பயன்படுத்தி தமிழகத்தில் உள்ள சுயநிதி கல்வி நிலையங்கள் மாறி மாறி நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் இட ஒதுக்கீடு தேவையில்லை என்ற சமூக நீதிக்கு எதிரான தீர்ப்புகளை பெற்றிருக்கின்றன. அதே போல் தங்களது இஷ்டத்திற்கு கல்விக் கட்டணங்களை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற தீர்ப்புகளின் மூலமாக உயர்கல்வி ஏழைகளுக்கு எட்டாததாக ஆக்கப்பட்டுள்ளது. இத்தகைய வழக்குகள் நீதிமன்றங்களில் நடந்த போது தமிழக அரசு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சாதகமாக செயல்பட்டு சமூகநீதி கோட்பாட்டிற்கு துரோகம் இழைத்தது.

9.3 தமிழக அரசு மாணவர் விரோத அரசாகவே செயல்பட்டு வருகிறது. உலகமயமாக்கல் கொள்கைகளை அமல்படுத்தும் விதமாக மருத்துவ மற்றும் சட்டக் கல்வியை தனியார் மயமாக்க முயற்சிக்கிறது. மாணவர்களுக்கான இலவச பஸ்பாசை ரத்து செய்து பாராளுமன்ற தேர்தல் தோல்விக்கு பின்தான் மீண்டும் கொடுத்துள்ளது.

9.4 கல்வி வியாபாரமாக்கப்பட்டதன் கோரத்தை கும்பகோணம் பள்ளியில் 93 பச்சிளம் குழந்தைகள் தீயில் வெந்து மரணமடைந்த சம்பவம் உணர்த்துகிறது.

9.5 மாணவர் போராட்டங்களின் மீது போலீஸ் அடக்குமுறை மற்றும் கல்விநிலையங்களிலிருந்து இடைநீக்கம், நிரந்தர நீக்கம் போன்ற ஜனநாயக விரோத போக்குகள் தொடர்கின்றன.

9.6 கல்வித்திறன் குறித்த கருத்துநிலை மாற்றப்பட்டு வருகிறது. மழலையர் வகுப்பு முதலே தேர்வு மற்றும் மதிப்பெண்களை நோக்கி மாணவர்கள் உருவாக்கப்படுகின்றனர். இதனால் சுய நலன் சார்ந்த போட்டி மனோபாவம் திட்டமிட்டு வளர்க்கப்படுகிறது. ஆண்டு முழுவதும் தேர்வுகள், தனி வகுப்புகள், டியூசன்கள் என்றாக்கப்பட்டு மாணவர் பருவ சுதந்திரமும், ஜனநாயகமும், சமூக விழிப்புணர்வு சிந்தனையும் பறிக்கப்பட்டுள்ளது.

9.7 தமிழகத்தில் 70 சதவீத மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் பயில்கின்றனர். இங்கு

மாணவர்களுக்கான ஜனநாயகம் பேச்சளவில் கூட இல்லை. இதற்கு மேலாக அரசியல் என்பது மாணவர்களின் கல்விக்கு குந்தகம் ஏற்படுத்துவது என்ற கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் மாணவர்களை அமைப்புரீதியாக திரட்டுகிற பணியை சிரமங்களுக்கு இடையில் நடத்த வேண்டியுள்ளது. பாதகமான சூழ்நிலைகளை கடந்து முன்னேற வேண்டியுள்ளது. இலக்கு பகுதிகளை தீர்மானித்து செயல்பட வேண்டியுள்ளது.

இதர மாணவர் அமைப்புகள்

9.10 திராவிட கட்சிகளுக்கு இப்போதைய மாணவர் சமுதாயத்தின் மீது கொள்கை ரீதியான பிடிமானம் இல்லை எனலாம். இதனால் திராவிடக் கட்சிகளின் மாணவர் அமைப்புகள் பெயரளவில் மட்டுமே உள்ளன. உறுப்பினர் சேர்ப்போ, செயல்பாடோ இல்லை. காங்கிரஸ் மாணவர் அமைப்பின் நிலைமையும் ஏறக்குறைய இதே தான்.

9.11 சங்பரிவார மாணவர் பிரிவான ஏபிவிபி சில வித்தியாசமான முயற்சிகள் மூலம் ஊடுருவ கடுமையாக முயற்சித்து வருகிறது. ஆனாலும் முயற்சிக்கு ஏற்ப செல்வாக்கு பெற முடியவில்லை. அதிகமான முழுநேர ஊழியர்களை களத்தில் இறக்கிவிட்டுள்ளது. சில மாணவர்களின் படிப்பிற்கு உதவுவதன் மூலம் தங்கள் பக்கம் ஈர்க்கின்றனர். மதவெறி மற்றும் கல்வி காவிமயமாக்கலை ஆதரித்து செயல்படுகிறது. ஏவிவிபி ஆபத்தை எதிர்த்து தொடர் போராட்டங்களை நாம் நடத்த வேண்டும்.

9.12 சிறுபான்மை மதங்களை சேர்ந்த மாணவர் அமைப்புகளும் செயல்படுகின்றன. கிறித்துவ மாணவர் அமைப்பான ஏஐசியுஎப், கிறித்துவ கல்வி நிலையங்களில் அங்கீகாரத்துடன் செயல்பட்டு வருகிறது.

9.13 தலித் மாணவர்களிடையே உருவாகி வரும் விழிப்புணர்வை பயன்படுத்தி விடுதலைசிறுத்தை, புதிய தமிழகம் கட்சிகள் தலித் மாணவர்களை ஒன்றுதிரட்டி அமைப்பு ரீதியாக செயல்படும் முயற்சி உள்ளது. சில அரசினர் மாணவர் விடுதிகளில் இவர்களது பிடிப்பு உள்ளது.

9.14 சமீப மாதங்களாக அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழகத்தில் சில மாவட்டங்களை குறி வைத்து தனது நடவடிக்கைகளை துவக்கியுள்ளது.

முக்கிய இயக்கங்களும், அனுபவங்களும்

9.15 கல்வி வியாபாரமயமாக்கலை எதிர்த்து தொடர்ச்சியான இயக்கங்களை நடத்தி வருகிறோம். பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பெரும் தொகையை நன்கொடையாக வசூலிக்கும் முறைகளை எதிர்த்து இந்த கல்வியாண்டு துவக்கத்தில் பல மையங்களில் போராட்டங்கள் நடந்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலையிட்டு நன்கொடைகளை ரத்து செய்தனர். ஈரோட்டில் நமது தோழர்கள் தாக்கப்பட்டனர்.

9.16 2003 ல் பாலிடெக்னிக் கட்டண உயர்வையும், பல்கலைக்கழக கட்டண உயர்வையும் எதிர்த்து போராடி வெற்றி பெற்றோம். ஆனால் பள்ளி மாணவர் இயக்கம் பல மாவட்டங்களில் பலவீனமாக இருப்பதால் +2 கட்டண உயர்வை எதிர்த்து இயக்கத்தை பெரும் போராட்டமாக்க முடியவில்லை.

9.17 2002 ம் ஆண்டில் அரசுக்கல்லூரிகளை பல்கலைக்கழங்களுடன் இணைக்கும் தமிழக அரசின் முடிவை எதிர்த்து தமிழகத்தில் உள்ள 67 அரசுக்கல்லூரி மாணவர்கள் ஒட்டுமொத்தமாக நமது மாணவர் அரங்க பதாகையின் கீழ் திரண்டு 67 தினங்கள் வகுப்பு புறக்கணிப்பு போராட்டத்தை நடத்தினர். தனக்கு சாதகமான சிலரை அழைத்து மாணவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், போராட்டம் திரும்ப பெறப்பட்டதாகவும் தமிழக முதல்வர் இரண்டுமுறை அறிவித்தார். மாணவர்கள் இதனை ஏற்காமல் தொடர்ந்து போராடினர். 17 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். போலீஸ் அடக்குமுறைகள் ஏவிவிடப்பட்டன. சென்னையில் பல்லாயிரம் மாணவர்கள் பங்கேற்ற பேரணியைத்தொடர்ந்து கல்வி அமைச்சர் நமது தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இப்போராட்டத்தின் போது இதர மாணவர் அமைப்புக்கள் ஆதாயம் பெறுவதற்கு பெரும் முயற்சிகள் எடுத்த போதும், நமது அமைப்பைத்தான் மாணவர்கள் அங்கீகரித்தனர். நமது செல்வாக்கை உயர்த்துவதற்கு இப்போராட்டம் உதவியுள்ளது.

9.18 ராணிமேரி கல்லூரியை இடிப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து, இக்கல்லூரியை சேர்ந்த மாணவிகளின் போராட்டத்தை நாம் தலைமை ஏற்று நடத்தினோம். போராட்டம் வென்றது. தொடர்ந்து நடந்த இக்கல்லூரியின் மாணவர் பேரவை தேர்தலில் அனைத்து பொறுப்புக்களிலும் நமது தோழர்கள் வெற்றி பெற்றுள்ளனர். பழனி ஆண்டவர் மகளிர் கல்லூரியின் மோசடிகளைக் கண்டித்து நடைபெற்ற போராட்டமும் முக்கியமான போராட்டமாகும்.

9.19 2002 மற்றும் 2004 ம் ஆண்டுகளில் பள்ளி மாணவர்களின் அடிப்படை கோரிக்கைகளின் மீது தொடர்ச்சியாகவும், பரவலாகவும் போராட்டங்களை நடத்தியதால் உறுப்பினர் சேர்ப்பில் பள்ளித்துறையில் உயர்வு கிடைத்ததோடு, இப்பகுதிகளிலிருந்து ஊழியர்களை உருவாக்கவும் முடிந்துள்ளது. மேலும் கல்விநிலைய அளவில் போராட்டங்களை உருவாக்கினால் நமது பலத்தை பள்ளி மாணவர் மத்தியில் பெருக்கிக் கொள்ள முடியும்.

9.20 2004 ஆகஸ்ட் 6 ந் தேதி பள்ளி மாணவர் இயக்கத்தையொட்டி நமது மாநிலத்தலைவர் ஜி. செல்வா, தென் சென்னை மாவட்டதலைவர் வெண்மதி, சகிலா, முருகன், லெனின், ராஜேஷ் ஆகியோர் சென்னை காவல்துறையால் கடுமையாக தாக்கப்பட்டார்கள். இதனை எதிர்த்து தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராடினர். நமது அமைப்பு இல்லாத கல்வி நிலையங்களிலும் போராட்டங்கள் நடந்தது குறிப்பிடத்தக்கது.

9.21 கும்பகோணம் பள்ளி மாணவர்கள் 93 பேர் நெருப்புக்கு பலியான சம்பவத்தை கல்வி வியாபாரமயமாக்கலை எதிர்த்து போராட்டம் நடத்தினோம். ஜீலை 16 ந் தேதியை ஆண்டுதோறும் கல்விவியாபார எதிர்ப்பு தினமாக அனுஷ்டிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

9.22 கல்வி நிலையக் கோரிக்கைகள் மீதான தலையிட்டால் புதிய பகுதியினரை வெல்ல முடியும். சமீபத்தில் திருநெல்வேலி எஸ்.ஏ. ராஜா குழுமத்தின் பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் மோசடிகள் செய்து ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்பட்ட போது, நாம் தலையிட்டு போராடி வேறு கல்லூரிகளில் படிப்பைத் தொடர்வதற்கு அண்ணாபல்கலைக்கழகத்தின் மூலமாக உத்தரவு பிறப்பிக்க வைத்தோம். இம்மாணவர்கள் நமது அமைப்பில் திரண்டுள்ளனர்.

துறைவாரி இயக்கம்

9.23 உலக மயமாக்கல் காரணமாக மாறியுள்ள சூழ்நிலையில் பல அமைப்புகள் மாணவர்கள் மத்தியில் பிடிப்பை இழந்துள்ள நிலையில் நமது நடவடிக்கைகளும், செல்வாக்கும் அதிகரித்து வருவதற்கு துறைவாரி இயக்கத்தில் கவனம் செலுத்தியது முக்கிய காரணமாகும்.

9.24 1990-களுக்கு முன்பிருந்ததைப் போல் ஒன்றுபட்ட சமூகமாக மாணவர் சமூகம் இல்லை. அரசுக்கல்லூரி மாணவர்கள் போராடியபோது பல முயற்சிகள் எடுத்தும் அரசு உதவிபெறும் கல்லூரி மாணவர்களை ஆதரவாக களத்தில் இறக்க முடியவில்லை. அவரவர் கோரிக்கை களுக்கு அவரவரே போராடிக் கொள்ள வேண்டுமென்ற போக்கு உருவாகியுள்ளது. இக்காலத்தில் நடைபெற்ற பல போராட்டங்களில் இப்போக்கை காண முடிந்தது.

9.25 இத்தகைய நிலைமையில் சட்டக்கல்லூரி, மருத்துவக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி, பொறியியல் கல்லூரி, அரசு கல்லூரி, பள்ளிக்கல்வி, அரசினர் மாணவர் விடுதி, தொழிற்பயிற்சி கல்வி மற்றும் மாணவிகள் ஆகிய துறைகளுக்கு உபகுழுக்களை அமைத்து செயல்பட்டும் துறைவாரி பிரச்சனைகளில் இயக்கங்கள் நடத்தியும் வருகிறோம்.

9.26 சட்டக்கல்லூரி துறையில் தொடர்ச்சியான இயக்கங்களை நடத்தியுள்ளோம். 2002 ம் ஆண்டில் சட்டக்கல்லூரி மாணவர் மீதான தாக்குதல், தனியார் சட்டக்கல்லூரி எதிர்ப்பு போராட்டம், சென்னை சட்டக்கல்லூரி மூடலை எதிர்த்து போராட்டம் மற்றும் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வெற்றி கண்டது போன்றவற்றை சொல்லலாம். இதனால் தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டக்கல்லூரிகளிலும் நமது கிளைகள் செயல்படுகின்றன. செங்கல்பட்டு சட்டக்கல்லூரிக்காக தற்போது வழக்கு தொடர்ந்துள்ளோம்.

9.27 கடந்த 3 ஆண்டுகளாக மாநில மாணவியர் மாநாடு நடைபெற்றுள்ளது. மாவட்ட அளவிலான உபகுழு செயல்பாடு 12 மாவட்டங்களில் உள்ளது. மாநில மையம் முதல் பகுதி நிர்வாகிகள் வரை ஏராளமான மாணவியர்கள் பொறுப்புகளில் உள்ளனர். விடுதிகளில் செயல்பாட்டுக்கு கூடுதல் கவனம் தேவை. மாவட்ட உபகுழு உருவாக்குவதே முதல் தேவை.

9.28 மாணவிகளின் பிரத்யேகமான பிரச்சனைகள் என்ற முறையில் ஈவ்டீசிங், ஆபாச திரைப்பட எதிர்ப்பு, மாணவிகள் மீது பாலியல் துன்புறுத்தல் போன்றவற்றிற்கு எதிராக போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

9.29 வேறுதுறைவாரி பிரச்சனைகளிலும் தலையிட்டு முன்னேற முடிந்துள்ளது. துறைவாரி செயல்பாட்டை மேலும் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும். பொதுவாக துறைவாரி உபகுழுக்கள் அமைத்து செயல்படுவதை மாவட்ட மட்டங்களுக்கு விரிவுபடுத்துவது அடுத்த கட்ட முன்னேற்றத்திற்கு உதவும்

உறுப்பினர் பதிவு

9.30 தமிழகத்தில் மாணவர்களுக்கான அமைப்பாக நமது அமைப்பு செயல்பட்டு வருகிறது. உறுப்பினர் சேர்ப்பு, மாநிலக்குழு, மாவட்டக்குழு செயல்பாடு, கிளைச் செயல்பாடு முயற்சி, மாணவர் பிரச்சனைகளில் தொடர்ச்சியான தலையீடுகள், இயக்கம் என்ற வகையில் மாணவர் சமுதாயத்தின் அங்கீகாரத்தை நாம் பெற்றுள்ளோம்.

9.31 தமிழகத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உறுப்பினர் பதிவு நடைபெற்றுள்ளது. 1 லட்சத்திலிருந்து 1.5 லட்சமாக பதிவு உயர்ந்துள்ளது. ஆனாலும் இதனை செல்வாக்குக்கு ஏற்ற உயர்வு என சொல்ல முடியாது

9.32 கடலூர், நெல்லை, குமரி, மதுரைபுறநகர் மாவட்டங்களில் பதிவில் முன்னேற்றமுள்ளது. தஞ்சை, கோவை, சேலம், திருப்பூர், விருதுநகர் மாவட்டங்களில் சிறிய முன்னேற்றம் கிடைத்துள்ளது.

9.33 ஈரோடு, வடசென்னை, தென்சென்னை, பாண்டிச்சேரி பலவீனமடைந்துள்ளது, பரிசீலனைக்குரியதாகும். திருச்சி, மதுரைமாநகர், திருவாரூர், திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, தேனி, நாகை மாவட்டங்களில் போதிய முன்னேற்றமில்லை.

9.34 ஸ்தாபன செயல்பாட்டுக்கு சிவகங்கை, திருவள்ளூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நீல்கிரி, நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம் மாவட்டங்களில் தொடர்புகள் இருந்தாலும் பயன்படாத நிலை தொடர்கிறது. புதுக்கோட்டை, காஞ்சிபுரம், ராமநாதபுரம் மாவட்டங்களில் தொடர்பற்ற நிலை பல ஆண்டுகளாக நீடிக்கிறது.

9.35 கட்சியின் மாவட்ட செயற்குழுக்களும், இடைக்கமிட்டிகளும் தீவிர கவனம் செலுத்தினால் மாபெரும் அமைப்பாக நாம் உருவாக முடியும்.

ஸ்தாபனமும், ஊழியர்களும்

9.36 மாணவர் அரங்கம் முன்னுரிமை அரங்கமாக ஏற்கப்பட்டதையொட்டி 6 பேர் கொண்ட மாநில மையம் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகிறது. சில மாவட்டங்களில் ஓரளவு கவனம் செலுத்தப்பட்டது. தொடர்ச்சியாக செயல்படுகிற மாவட்ட மையங்களை உருவாக்குவதில் முன்னேற வேண்டியுள்ளது.

9.37 ஒரு கல்வியாண்டில் தேர்வு நாட்கள், தேர்வு தயாரிப்பு நாட்கள், விடுமுறை நாட்கள் போக கிடைக்கக்கூடிய குறுகிய காலத்திற்குள் உறுப்பினர் சேர்ப்பு, ஸ்தாபனப்படுத்துதல், அரசியல் பயிற்சியளித்தல் ஊழியர்களை கண்டறிந்து வளர்த்தெடுத்தல் ஆகிய பணிகளை செய்து முடிக்க வேண்டிய அரங்கமாகும்.

9.38 சில ஆண்டுகளாவது நீடித்து செயல்படுகிற மாவட்ட மையங்களை உருவாக்குவது மாணவ அரங்க வளர்ச்சிக்கு முக்கிய தேவையாகும். பல மாவட்டங்களில் ஆண்டுதோறும் நிர்வாகிகள் மாறுகிற நிலைமை அரங்கத்தின் தொடர் செயல்பாட்டை பாதிக்கிறது. இதை தவிர்க்க

வேண்டுமெனில் மாவட்டங்களில் முழுநேர ஊழியர் ஏற்பாட்டை உறுதி செய்ய வேண்டியுள்ளது. முழுநேர ஊழியர் அல்லது அலவன்ஸ் ஊழியர் செயல்படும் மாவட்டங்களில்தான் ஸ்தாபன வளர்ச்சி உள்ளது.

9.39 தற்போது கடலூர், திருவாரூர், தஞ்சை, திருச்சி, தேனி, மதுரைபுறநகர், விருதுநகர், நெல்லை, குமரி, தூத்துக்குடி, கோவை ஆகிய 11 மாவட்டங்களில் மட்டும் தான் ஊழியருக்கான ஏற்பாடுகள் உள்ளது. வடசென்னை, தென்சென்னை, திருச்சி, மதுரைநகர், திண்டுக்கல், நாகை மாவட்டங்களில் ஊழியர்கள் சிலருக்கு டிஏ. ஏற்பாடு உள்ளன.

9.40 மாணவர் அரங்கத்தை பொறுத்தவரை ஊழியர் வளர்ச்சிக்கு தொடர்ச்சியான பயிற்சி முகாம்கள் முக்கியமாகும். ஆண்டுதோறும் மாநில பயிற்சிமுகாம், மாவட்ட பயிற்சி முகாம்கள், துறைவாரி மாநாடுகள் மூலமாகத்தான் ஊழியர்களை வளர்த்து தொடர்ச்சி அறுந்து விடாமல் தலைமைக்கு தோழர்களை உருவாக்க வேண்டியுள்ளது.

கட்சி கட்டும் பணி

9.41 13 தோழர்களைக் கொண்ட மாநில உபகுழு அமைக்கப்பட்டு செயல்படுகிறது. மாணவர் அரங்கத்தில் கட்சி கட்டும் பணி மந்த கதியிலேயே நடைபெறுகிறது. அரசியல் படுத்துவதில் உள்ள பலவீனங்களும், மாநில மாவட்ட உபகுழுக்களின் நிகழ்ச்சிநிரலில் கட்சி கட்டுமானம் முன்னுரிமை பெறாததும் காரணங்கள் எனலாம்

9.42 உபகுழு கூட்டங்களில் அரங்கப் பணி திட்டமிடல்கள் ஆக்கிரமித்துக் கொள்கின்றன. மத்தியக்குழுவின் ஆவணம் சொல்லியுள்ளபடி உபகுழுக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

9.43 வடசென்னை, தென்சென்னை, கடலூர், பாண்டி, தஞ்சை, திருப்பூர், கோவை, மதுரைபுறநகர், விருதுநகர், நெல்லை, குமரி ஆகிய 11 மாவட்டங்களில் மாவட்ட உபகுழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படுகின்றன. இதர மாவட்டங்களில் வாய்ப்புகளை பயன்படுத்தியும், வாய்ப்புகளை உருவாக்கியும் உபகுழுக்கள் அமைக்க கட்சி மாவட்டக்குழுக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

9.44 மாணவர் கட்சி உறுப்பினர்களுக்கும், துணைக்குழு உறுப்பினர்களுக்கும் கட்சி கல்வி கொடுப்பதற்கு, அரசியல் முடிவுகளை விளக்குவதற்கு விஷேசமான ஏற்பாடுகள் செய்து நடத்த வேண்டும்.

வழக்கறிஞர் அரங்கம்

10.1 தமிழகத்தில் சுமார் 40,000 வழக்கறிஞர்கள் உள்ளனர். நமது தலைமையிலான அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தில் 2500 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 12 மாவட்டங்களில் மாவட்டக் கிளைகள் உள்ளன. 8 மாவட்டங்களில் கிளைகள் அமைக்க வாய்ப்புள்ளது.

10.2 இச்சங்கத்தின் 6வது மாநில மாநாடு கோவையில் 2004ல் நடைபெற்றது. உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் வழக்கறிஞர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

10.3 'மனித உரிமை மீறல், லாக்கப் மரணம் போன்ற பிரச்சனைகளில் வழக்கறிஞர் சங்கம் தலையிட்டுள்ளது. பொடா சட்ட எதிர்ப்பு மாநாடு நாகர்கோவிலில் இச்சங்கத்தின் முன் முயற்சியால் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. குற்றவியல் விசாரணைச் சட்டம் மற்றும் சிவில் முறை சட்டம் ஆகியவற்றின் பாதகமான அம்சங்களை விளக்கி வழக்கறிஞர் சங்கம் முறையே 3000, 7000 பிரசுரங்கள் வெளியிட்டது.

10.4 மதுரையில் சென்னை உயர்நீதிமன்ற கிளை திறக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக வழக்கறிஞர் சங்கம் குரலெழுப்பியது. இதைப் போலவே உச்சநீதிமன்ற தென் மாநிலங்களின் கிளை சென்னையில் திறக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி வருகிறது.

10.5 சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டியை மாற்றிடவேண்டுமென்றும், அவர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டுமென்றும் நடைபெற்ற மாநிலம் தழுவிய ஒன்றுபட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தில் நமது வழக்கறிஞர்கள் சங்கம் முக்கிய பங்காற்றியுள்ளது. குறிப்பாக சென்னையில் நமது தோழர்களின் பணி குறிப்பிடத்தக்கது.

10.6 வழக்கறிஞர்கள் அரங்க மாநில பிராக்ஷன் கூட்டத்திற்கு வருகை குறைவாக உள்ளது. வழக்கறிஞர் அரங்க கட்சிக் கிளைகள் கட்சியின் மாவட்டக்குழுக்களின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வருகின்றன.

10.7 கடந்த மூன்றாண்டுகளில் இரண்டுமுறை கட்சி உறுப்பினர்களுக்கு மாநில அளவிலான வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

10.8 வழக்கறிஞர்களுக்கு சமூகத்தில் உள்ள அந்தஸ்தை கட்சி மற்றும் வெகுஜன அரங்க வளர்ச்சிக்கு மாவட்டக்குழுக்கள் பயன்படுத்திட வேண்டும்.

10.9 கட்சியின் மாநிலக்குழுவிற்கு பல பிரச்சனைகளில் சட்ட ஆலோசனைகளை அளித்திட மாநில அளவிலான ஆலோசனைக்குழு உருவாக்கிட வேண்டியுள்ளது. மாநிலத்தில் எழும் சில பிரச்சனைகளில் பொதுநல வழக்கு தொடுத்திட வழக்கறிஞர் சங்கம் திட்டமிட வேண்டும்.

கலை - இலக்கிய அரங்கம்

11.1 தமிழகத்தின் பண்பாட்டுக் களம் அண்மைக் காலமாக பெரிதும் வெப்ப நிலையில் உள்ளது. பரபரப்பு நிகழ்வுகளும், திடீர்த் திருப்பங்களும் நிறைந்ததாக மாறிப் போனது. இதற்கு ஈடு கொடுக்கும் வகையில் கட்சியின் இவ்வரங்கத் தோழர்கள் செயல்பட வேண்டியுள்ளது.

நிகழ்வுகள்... இயக்கங்கள்...

11.2 கட்சி எழுத்தாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் 8-வது மாநில மாநாடு கடலூரில் 2002 ஆகஸ்டில் நடைபெற்றது. 600க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் முழு ஈடுபாட்டோடு பங்கு கொண்ட இந்த மாநாட்டில் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பிரகாஷ் காரத் கலந்து கொண்டது குறிக்கத்தக்கது.

11.3 இந்த மாநாட்டின் அறைகூவலுக்கிணங்க காந்திஜி பிறந்த நாளாகிய அக்டோபர் 2 "மதவெறி எதிர்ப்பு நாளாக" கடைப்பிடிக்கப்பட்டது. சுமார் 20 மாவட்டங்களில் ஒரே நாளில் த.மு.எ.ச.வினால் நிகழ்ச்சிகளை நடத்த முடிந்தது.

11.4 தமிழில் குடமுழுக்கு நடத்த காஞ்சி மடத்தின் ஜெயேந்திரரும், ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தினரும் எதிர்ப்பு தெரிவித்த போது அதை வன்மையாகக் கண்டித்தது த.மு.எ.ச. இவர்களின் முழு ஆதரவோடு "மதமாற்றத் தடைச் சட்டம்" கொண்டு வரப்பட்ட போதும், அதை எதிர்த்து 2003 பிப்ரவரி 9 அன்று காஞ்சிபுரத்தில் நடத்தப்பட்ட மாநாட்டில் மாநிலம் முழுவதிலும் இருந்து 1200 பேர் கலந்து கொண்டனர். மாநாட்டின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் சில பிரபலங்கள் உள்ளிட்ட பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிவு ஜீவிகள் கையொப்பம் இட்டிருந்தார்கள்.

11.5 தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வலியுறுத்தி டில்லி வரை சென்று ஆர்ப்பாட்டம் நடத்திய அமைப்பு த.மு.எ.ச. 2003 செப்டம்பர் 11 பாரதி நினைவு நாளன்று மாவட்டத் தலைநகர்களில் உண்ணாநோன்பும், கோரிக்கை முழக்கப் போராட்டமும் நடைபெற்றன. மத்தியில் அமைந்த புதிய அமைச்சரவை இதற்கான ஒப்புதலைத் தந்த போது மிகுந்த உற்சாகத்தோடு அதை வரவேற்றது த.மு.எ.ச. அதே நேரத்தில், அதற்கான அறிவிக்கையை உடன் வெளியிட வேண்டும் என்றும் வற்புறுத்தியது. செம்மொழிக் கோரிக்கையை மாநில அளவிலும், தேசிய அளவிலும் பிரபலப்படுத்தியதில் த.மு.எ.ச.விற்கு தனித்த பங்கு உண்டு. இந்த நோக்கிலிருந்து தமிழ் தாத்தா உ.வே. சாமிநாதய்யரின் 150வது ஆண்டு விழாவைக் கொண்டாடவும் முடிவு செய்யப்பட்டது.

11.6 2004 அக்டோபர் 2ஆம் நாளை மதவெறி எதிர்ப்பு நாளாக கடைப்பிடித்தது த.மு.எ.ச. அவ்வமயம் இந்துத்துவா சக்திகள் எழுப்பிய பசுவதைத் தடைச் சட்டம், பொது சிவில் சட்டம் போன்றவற்றின் உள்நோக்கங்களை விண்டுரைத்தது. "பொது சிவில் சட்டம் இப்போது வேண்டாம், பசுவதைத் தடைச் சட்டம் எப்போதும் வேண்டாம்" என்கிற சரியான முழக்கத்தைக் கொடுத்தது.

11.7 வர்ணாஸ்ரம எதிர்ப்பு - ஆணாதிக்க எதிர்ப்பு - மூட நம்பிக்கை எதிர்ப்பு ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காக பெரியாரின் 125வது பிறந்த நாளை கொண்டாடுவது என்று முடிவு செய்தது த.மு.எ.ச. இந்துத்துவா சக்திகள் தலையெடுத்திருந்த நிலையில், அவற்றை எதிர்ப்பதில் திராவிட இயக்கக் கட்சிகள் தள்ளாட்டம் காட்டிய நிலையில் இது பொருள் பொதிந்த செயல்பாடானது. பல நகரங்களிலும் இந்த விழா நடைபெற்றது. ஈரோடும், நாகப்பட்டினமும் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை. "கலகக்காரர் தோழர் பெரியார்" நாடகமும் த.மு.எ.ச.வின் சில கிளைகள் சார்பில் மேடையேற்றப்பட்டன.

11.8 கோவில்களில் ஆடு - கோழி பலியிடுவதை தடை செய்யும் சட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தத் துவங்கியது அஇஅதிமுக அரசு. இதற்குள் ஒளிந்திருக்கும் வர்ணாசிரம - சமஸ்கிருதமயமாக்கல் சிந்தனையை உணர்ந்திட்ட த.மு.எ.ச. எதிர்த்து அறிக்கை விடுத்தது. மதுரை புறநகர் மாவட்டத்தின் சார்பில் கருமாத்தூரில் மாநாடு நடத்தப்பட்டது. கலை இரவுகளில் இது விஷயம் எழுப்பப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலில் தனக்கு ஏற்பட்ட படுதோல்வியைத் தொடர்ந்து அஇஅதிமுக அரசு அந்தச் சட்டத்தையே ரத்து செய்தது. மக்களின் மனவுணர்வினைத் த.மு.எ.ச. சரியாகவே பிரதிபலித்திருந்தது உறுதிப்பட்டது.

11.9 இந்துத்துவா சக்திகள் மீண்டும் ஆட்சிக்கு வந்து விடக் கூடாது என்பதில் அக்கறை கொண்ட த.மு.எ.ச. நாடாளுமன்றத் தேர்தலின் போது அதற்கான அறைகூவலை விடுத்தது. பல கிளைகளும் அதை நகல் எடுத்து விநியோகித்தன. வடசென்னை, மதுரை மாநகர் போன்ற மாவட்டக்குழுக்கள் மதச்சார்பற்ற அணியின் வேட்பாளர்களை ஆதரித்து துண்டுப் பிரசுரம் வெளியிட்டன. நமது எழுத்தாளர்களும், ஓவியர்களும் "தீக்கதிர்", "செம்மலர்" ஏடுகளில் எழுதினார்கள், கருத்துப் படம் போட்டார்கள். தத்தம் அரங்குகளில் தேர்தல் பணியில் ஈடுபட்டார்கள்.

11.10 தோழர் கே. முத்தையா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் இலக்கியச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தின் பட்டுக்கோட்டையில் முதல் சொற்பொழிவும், மதுரை புறநகர் மாவட்டத்தின் திருமங்கலத்தில் இரண்டாவது சொற்பொழிவும் நடந்ததுள்ளன.

11.11 விடாது ஒவ்வொரு ஆண்டும் சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு "த.மு.எ.ச. விருது" வழங்கப்படுகிறது. 2003ம் ஆண்டின் ஒரே சிறந்த படமாக "அன்பே சிவம்" தேர்வு செய்யப்பட்டு 2004 டிசம்பரில் விருது வழங்கப்பட்டது. கூடவே "தமிழ்த் திரை உலகக் கலை மலர்" ஒன்றும் வெளியிடப்பட்டது.

11.12 இந்த மூன்றாண்டு காலச் செயல்பாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் தமிழகத்தின் முக்கியமான பண்பாட்டு நிகழ்வுகளுக்கு எல்லாம் த.மு.எ.ச. எதிர்வினை ஆற்றியிருப்பதைக் காணலாம். அனேகமாக மாநிலத்தில் வேறு எந்த அமைப்பும் இவ்வாறு செயலாற்றவில்லை என்று துணிந்து கூறலாம். எனினும், பண்பாட்டுத் தளத்தின் முகவரியை மாற்றுகிற அளவுக்கு சக்தி வாய்ந்த இயக்கங்களை நடத்துகிற அமைப்பாக த.மு.எ.ச. இன்னும் வளர வேண்டியிருக்கிறது என்பதும் உண்மையாகும்.

படைப்பாக்கம்

11.13 ஏற்கெனவே, சிறுகதைத் துறையில் த.மு.எ.ச. எழுத்தாளர்கள் தனித்த பங்களிப்பைச் செய்து வந்தார்கள். அது தொடர்கிறது. செம்மலர், வண்ணக்கதிரில் மட்டுமல்லாது வெளிப் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார்கள். போட்டிகளில் பரிசுகளையும் வெல்கிறார்கள். தீண்டாமைக் கொடுமை போன்ற சமூக அநீதிகளை எதிர்த்து அவர்கள் எழுதுகோலை ஏந்தியிருப்பதை "பூமிக்குப் பொறுக்காது" சிறுகதைத் தொகுப்பு உணர்த்துகிறது. மதுரையில் கட்சி நடத்திய தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் இந்த தலித் சிறுகதைகள் தொகுப்பு வெளியிடப்பட்டது. நிலத்தடி நீரைப் பன்னாட்டு நிறுவனங்கள் உறிஞ்சி ஏப்பமிடுவதும் சிறுகதையாக்கப்பட்டுள்ளது.

11.14 சிறுகதை - கவிதை அளவுக்கு இல்லையென்றாலும் நாவல் துறையிலும் சில படைப்புகள் வெளிவந்துள்ளன. நகர்ப்புற - கிராமப்புற தொழிலாளர்களின் போராட்டங்களை மையமாக

வைத்து நாவல்கள் எழுதப்பட்டன. இந்துத்துவா எதிர்ப்பும், இதிகாச மறுவாசிப்பும், சரித்திர அநீதிகளும் கூட நாவலின் கருப்பொருள் ஆகியுள்ளன.

11.15 பெருந்திரள் மக்களை நமது எழுத்தாளர்கள் சந்திக்கிற ஒரே வடிவமாகக் "கலை இரவு" திகழ்கிறது.

11.16 படைப்பிலக்கியத்தில் மட்டுமல்லாது நமது எழுத்தாளர்கள் சமூக மற்றும் சரித்திர ஆய்வு நூல்கள் எழுதுவதிலும் இக்காலத்தில் தனிக் கவனம் செலுத்தியுள்ளனர். இந்துத்துவாவின் பல கூறுகளை அம்பலப்படுத்தி சிறு சிறு நூல்கள் வந்தது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் தத்துவ வரலாறும் கூட எழுதப்பட்டுள்ளது.

அமைப்பு

11.17 மாநில எழுத்தாளர் அரங்க பிராக்ஷனானது இக்காலத்தில் எட்டு முறை கூடியுள்ளது. செம்மலர் மற்றும் த.மு.எ.ச. பற்றி பேசுவதற்காக எழுத்தளார் அரங்கில் பணியாற்றும் முன்னணித் தோழர்களின் கூட்டம் 2002 மே மாதத்தில் நடைபெற்றது. தோழர்கள் கு. சின்னப்பாரதி, டி. செல்வராஜ் உள்ளிட்ட 16 பேர் கலந்து கொண்டார்கள். கட்சியின் மாநிலச் செயற்குழு சார்பில் தோழர் டி. இலட்சுமணன் பங்கு கொண்டார்.

11.18 கடலூர் மாநில மாநாட்டில் த.மு.எ.ச. தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருந்த தோழர் டி. இலட்சுமணன் அவர்களை மாற்றுவது என்று கட்சியின் மாநிலச் செயற்குழு முடிவு செய்தது. இதற்காக 2002 டிசம்பரில் த.மு.எ.ச. மாநிலக்குழுவில் உள்ள கட்சி உறுப்பினர்களின் கூட்டம் நடத்தப்பட்டு அதில் இந்த முடிவு அமல்படுத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தோழர்கள் என். வரதராஜன், கே. பாலகிருஷ்ணன், டி. இலட்சுமணன் பங்கேற்றார்கள்.

11.19 கட்சியின் சார்பில் திருப்பூரில் 2003 ஜூனில் எழுத்தாளர்கள் - கலைஞர்களுக்கான அரசியல் வகுப்பு நடத்தப்பட்டது. இந்த இரு நாள் வகுப்பில் தோழர்கள் என். சங்கரய்யா, என். வரதராஜன், ஜி. இராமகிருஷ்ணன் கலந்து கொண்டார்கள். "மார்க்சிய அழகியல்" பற்றி அருணனும், "மார்க்சிஸ்ட் கட்சியும் கலை இலக்கியவாதிகளும்" பற்றி எஸ்.ஏ. பெருமாளும் உரையாற்றினார்கள். குழு விவாதமும் தொகுப்புரைகளும் இடம் பெற்ற இந்த வகுப்பில் மாநிலம் முழுவதிலுமிருந்து சுமார் 100 பேர் கலந்து கொண்டார்கள். கலை - இலக்கியம் குறித்த மார்க்சிய பார்வையை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள இது உதவியது என்றாலும், சித்தாந்த ரீதியாக, அமைப்பு ரீதியாக இருக்க வேண்டிய வலுவான ஒருங்கிணைப்பை உருவாக்கித் தந்ததாகக் கூற முடியாது.

11.20 தோழர் கு. சின்னப்பாரதி எழுதிய ஒரு நூல் த.மு.எ.ச.விற்குள் ஸ்தாபனப் பிரச்சினையை உருவாக்கியது. இதை முடிவுக்கு கொண்டு வர அதன் மாநிலக்குழுவில் உள்ள கட்சி உறுப்பினர்களின் கூட்டம் திருச்சியில் 2004 அக்டோபரில் நடத்தப்பட்டது. இதில் தோழர்கள் என். வரதராஜன், டி. இலட்சுமணன், பி. சம்பத், கே. தங்கவேலு பங்கு கொண்டார்கள். தனது அந்த நூலை அந்த மாதிரியாக எழுதியிருக்கக் கூடாது என்று தோழர் கு. சின்னப்பபாரதி ஒப்புக் கொண்டிருப்பது கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

11.21 த.மு.எ.ச.வை இலக்கிய ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் செழுமைப்படுத்த மண்டலவாரியான சிறப்பு பேரவைகளை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. ஆறு மண்டலங்களில் நெல்லை, மதுரை, கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம் என்று ஐந்து நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாவட்டக்குழு உறுப்பினர்களும், கிளைச் செயலாளர்களும் பங்கேற்கும் இந்தப் பேரவைகளில் 70 முதல் 120 வரை வருகை இருந்தது.

11.22 "மாநில முடிவுகளில் தனக்கு விரும்பியவற்றை அமலாக்குவது, விருப்பமில்லாதவற்றை நிராகரிப்பது என்ற போக்கு த.மு.எ.ச.வின் ஒன்றிரண்டு மாவட்டக்குழுக்களில் தலை தூக்கியுள்ளது." என்று கட்சியின் சென்ற மாநில மாநாட்டு அறிக்கையில் கூறப்பட்டது. இந்த வியாதி இன்னும் களையப்படவில்லை.

11.23 "மாநிலத் தலைமையிலான த.மு.எ.ச.வின் செயற்குழுத் தோழர்களிடையே கலை - இலக்கியம் குறித்த மார்க்சீய அணுகுமுறையிலான சித்தாந்த ஒற்றுமையை மேலும் வலுப்படுத்த வேண்டிய

தேவை உள்ளது." என்று கட்சியின் சென்ற மாநில மாநாட்டு அறிக்கையில் கூறப்பட்டது. இதற்காகத்தான் திருப்பூரில் இரு நாள் வகுப்பு கட்சியால் நடத்தப்பட்டது. எனினும் இதுவொரு தொடர் போராட்டமாகவே இருக்கும் என்பதை அனுபவம் உணர்த்துகிறது.

11.24 பல மாவட்டங்களில் இவ்வரங்கத்திற்கு பிராக்ஷன்கள் உள்ளன. அவற்றை முறையாகச் செயல்பட வைக்க வேண்டும்.

11.25 பொருளியல் வாழ்வே சமூதாயத்தின் அடித்தளம் என்றாலும் பண்பாட்டுத் தளத்தை மார்க்சியம் புறக்கணிப்பதில்லை. அது முழுச் சமுதாயத்தின் மீதும் செலுத்துகிற செல்வாக்கை உணர்ந்தே இருக்கிறது. தமிழகத்தின் பண்பாட்டு தளத்தில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. அதை முழுமையாக பயன்படுத்திட வேண்டும்.

11.26 விரிந்த ஜனநாயகமும், தேவையான கட்டுப்பாடும் ஒருங்கே கொண்டதாகத் த.மு.எ.ச.வை வளர்த்தெடுப்பது காலத்தின் கட்டாயமாகும். தனிமனித அகவுணர்வுகளுக்கு ஆட்படாமல் அமைப்பின் நலனைப் பாதுகாத்து நிற்கிற பக்குவத்தை வளர்த்தெடுக்க வேண்டும்.

கலை அரங்கம்

11.27 நமது பிரச்சாரத்தில் ஈடுபடும் கலைக்குழுக்கள் மற்றும் கலைஞர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் மாநில அளவில் கலை அரங்க ஆலோசனைக்குழு அமைக்க மாநில செயற்குழு முடிவு செய்தது. தோழர் என். நன்மாறன் அவர்களை கன்வீனராக கொண்டு 20 பேர் கொண்ட ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது.

11.28 இக்குழுவின் கூட்டம் மதுரையில் நடத்தப்பட்டது. தொடர்புடைய கலைஞர்களை இணைத்து திண்டுக்கல்லில் விரிவடைந்த கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. அரசியல் பிரச்சாரத்தை உள்ளடக்கிய பாடல்கள் உருவாக்கப்பட்டு, ஒலி நாடா வெளியிடப்பட்டது.

11.29 நாடு தழுவிய பிரச்சார இயக்கத்திற்கு பாடல்கள் உருவாக்கப்பட்டு, நெல்லையில் நடைபெற்ற சிஐடியு மாநில மாநாட்டை பயன்படுத்தி ஒலிநாடா தயாரிக்கப்பட்டது. அனைத்து மாவட்டக்குழுக்களுக்கும் 10 பிரதிகள் வீதம் அனுப்பப்பட்டு கூடுதல் பிரதிகள் எடுத்துக் கொள்ள வழிகாட்டப்பட்டது. நாடகக்குழுக்களுக்கும் நமது அரசியல் நிலைபாடு குறித்து வழிகாட்டப்பட்டது.

11.30 நாடாளுமன்றத் தேர்தலின்போது பிரச்சாரத்திற்காக விரிவடைந்த கலைஞர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. திருப்பரங்குன்றத்தில் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. நாம் போட்டியிடும் தொகுதிகளுக்கேற்பவும், இதர தொகுதிகளுக்கேற்பவும் பிரச்சாரத்தை கொண்டு செல்ல வழிகாட்டப்பட்டது. இப்பயிலரங்கில் உருவாக்கப்பட்ட பாடல்களை தேர்ந்தெடுத்து ஒலி நாடா மாநில அளவில் வெளியிடப்பட்டது. இது தவிர மதுரை பாராளுமன்றத் தொகுதிக்கும், நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதிக்கும் தனித்தனியே ஒலி நாடாக்கள் வெளியிடப்பட்டன. தயாரிக்கப்பட்ட நாடகங்கள் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்தப்பட்டன.

11.31 நமது கலைக்குழுக்களின் பங்கு, நமது தோழமை கட்சியினர் அனைவரின் பாராட்டையும் பெற்றது. தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்ற கலைக்குழுக்களை அழைத்து சென்னை மாநிலக்குழு அலுவலகத்தில் பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டு, தேர்தலுக்கு பிந்தைய அரசியல் நிலைமை விளக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் ஈடுபட்ட கலைஞர்களுக்கு மாநிலச் செயலாளர் கையொப்பமிட்டன 400 பாராட்டுச் சான்றிதழ்கள் மாவட்டக்குழுக்கள் மூலம் வழங்கப்பட்டது. இது கலைஞர்களை உற்சாகமூட்டுவதாக அமைந்தது.

11.32 இக்காலங்களில் நடைபெற்ற கலைஞர்களின் கூட்டங்களுக்கு மாவட்டக்குழுக்கள் பொறுப்பேற்று, நிதி உதவி செய்து கலைஞர்களை அனுப்பி வைத்தன. இக்கூட்டங்களில் மாநிலச் செயலாளர் என். வரதராஜன் மற்றும் தோழர்கள் கே. வரதராஜன், டி. லெட்சுமணன், பி. சம்பத், அருணன், எம்.என்.எஸ். வெங்கட்ராமன், எஸ்.ஏ.பி., என். நன்மாறன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர். கலைஞர்களுக்கு நம்பிக்கையளிக்கும் விதமாகவும் இக்கூட்டங்கள் அமைந்தன.

11.33 இக்காலத்தில் மாநில ஆலோசனைக்குழு, விரிவடைந்த கலைஞர்கள் கூட்டம், பயிலரங்கம் மற்றும் ஒலிநாடா தயாரிப்பு என்ற வகையில் 7 முறை சந்திப்புகள் நடந்துள்ளன.

11.34 நமது தலைவர்கள் பங்கேற்று கூட்டங்களை நடத்தியது தோழர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மாவட்டக்குழுக்கள், கலைக்குழுக்கள் மீது முன்பைவிட கூடுதல் கவனம் எடுத்துள்ளன. ஆனாலும், இது போதாது. கட்சியின் சார்பிலும், அரங்கங்கள் சார்பிலும் ஏராளமான கலைக்குழுக்களை உருவாக்க வேண்டும். இதில் பணிபுரியும் தோழர்கள் ஆற்றும் பணி, கட்சிப் பணியே என்று அங்கீகரிக்கப்பட வேண்டும். தற்போதைய நமது முயற்சி, குழுக்களை அரசியல் ரீதியாக ஒருங்கிணைக்க உதவியுள்ளது. ஆனாலும், வெகுதூரத்தில் இருக்கின்றோம். ஆலோசனைக்குழு வருங்காலத்தில் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

❑❑❑

கட்சி ஸ்தாபனம்

12.1 கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சி பல சவால்களை சந்தித்துள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் மத்தியில் வகுப்புவாத பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியை வீழ்த்தி, மதச்சார்பற்ற அரசை உருவாக்குவதில் நமது கட்சி முக்கிய பங்காற்றியுள்ளது. தமிழகத்தில் அஇஅதிமுக - பா.ஜ.க. கூட்டணியை படுதோல்வி அடையச் செய்ததில் நமது கட்சிக்கு முக்கிய பங்குண்டு. வகுப்புவாத சக்திகளுக்கு எதிராகவும், தாராளமய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகவும், தொடர்ச்சியாக இயக்கம் நடத்தியுள்ளோம். உழைப்பாளி மக்களின் போராட்டங்களை உறுதியாக ஆதரித்ததோடு, மக்கள் நலன் காக்க பல இயக்கங்களையும் நடத்தியுள்ளோம். மொத்தத்தில் கடந்த மூன்று ஆண்டு காலமாக கட்சி கடைப்பிடித்த நடைமுறை கொள்கையால் நமது கட்சியின் செல்வாக்கு, மரியாதை உயர்ந்துள்ளது. இப்பின்னணியில் 17வது மாநில மாநாடு தீர்மானித்த ஸ்தாபன கடமைகளை எவ்வாறு நிறைவேற்றியுள்ளோம் என்பதை பரிசீலிப்போம்.

கோவை மாநாடு தீர்மானித்த ஸ்தாபன கடமைகள்

1 **கட்சியின் மாநில, மாவட்ட மையங்களை பலப்படுத்திட வேண்டும்.**

2 **இடைக்கமிட்டிகளையும், கிளைகளையும் செயல்படும் அமைப்புகளாக உருவாக்கிட வேண்டும்.**

3 **நெறிப்படுத்தும் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல திட்டமிட வேண்டும்.**

4 **தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட், பீப்பிள்ஸ் டெமாக்ரசி ஆகியவற்றின் விற்பனையை அதிகப்படுத்துவதுடன், கட்சிப் பிரசுர, நூல் விற்பனைக்கு முறையான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.**

மேற்கண்ட கடமைகளையும், மாநில செயற்குழுவிலிருந்து - கிளை வரையிலுமான கட்சி ஸ்தாபன செயல்பாடுகள் குறித்து விரிவாக பரிசீலிப்போம்.

12.2 கோவையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் 83 தோழர்களைக் கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது. தோழர் ஜானகிராமன் இயற்கை எய்தினார். கரூர் ஜி. குமார் கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் மாநிலக்குழுவில் இருந்து விலக்கப்பட்டார். 15 தோழர்களைக் கொண்ட மாநில செயற்குழு தேர்வு செய்யப்பட்டது. கோவை மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலக்குழு பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

மாநில செயற்குழு உறுப்பினர்களின் வேலைப் பிரிவினை

செயற்குழு உறுப்பினர்களின் வேலைப் பிரிவினை

1. என். சங்கரய்யா	:	மாநில மைய பொறுப்புகள்.
2. என். வரதராஜன்	:	மாநில மைய பொறுப்புகள், சட்டமன்றஅரங்கம், அரசு ஊழியர், ஆசிரியர் அரங்கம்.
3. டி.கே. ரெங்கராஜன்	:	மாநில மையம், மாநில தொழிற்சங்க அரங்கம், ரயில்வே, வங்கி அரங்கங்கள் கடலூர், சேலம் மாவட்டம்.
4. ஜி.வீரய்யன்	;	வி.தொ.ச அரங்கம், தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டம்
5. டி. லட்சுமணன்	:	மாநில மையம், தீக்கதிர் ஆசிரியர் உபகுழு, சிறுபான்மை உபகுழு, அரசு ஊழியர், ஆசிரியர் அரங்கம், மதுரை புறநகர், விருதுநகர், திண்டுக்கல் மாவட்ட பொறுப்பு, தமுஎச பிராக்ஷன்.

6. ஏ.கே. பத்மநாபன் : மாநில தொழிற்சங்க அரங்கம், மருத்துவ பிரதிநிதி, காப்பீடு ஊழியர், மத்திய அரசு - ஊழியர், மின் ஊழியர் அரங்கங்கள், குமரி மாவட்டம்.

7. வி. மீனாட்சிசுந்தரம் : மாநில மையம், மார்க்சிஸ்ட் ஆசிரியர், கல்வி உபகுழு, வடசென்னை, தென்சென்னை மாவட்டங்கள்.

8. ஜி. ராமகிருஷ்ணன் : மாநில மையம், மாநில கட்சிக் கல்வி பொறுப்பு, அறிவியல் உள்ளாட்சிமன்றஅரங்கங்கள், பாரதி புத்தகாலயம், கட்சி வெளியீடுகள், திருவாரூர், நாகை மாவட்டங்கள்.

9. பி. சம்பத் : மாநில மையம், கல்விக்குழு, மாதர் அரங்கம், தபால் தந்தி அரங்கம், நெல்லை, மதுரை மாநகர், திருச்சி மாவட்டங்கள்.

10. அ. சவுந்தரராசன் : மாநில தொழிற்சங்க அரங்கம், போக்குவரத்து ஊழியர் அரங்கம், திருவள்ளூர், நாமக்கல் மாவட்டங்கள்.

11. கே. தங்கவேல் : தீக்கதிர் நிர்வாகப் பொறுப்பு, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்கள்.

12. கே. பாலகிருஷ்ணன் : மாநில வி.ச அரங்கம், கிருஷ்ணகிரி, விழுப்புரம் மாவட்டங்கள் பொறுப்பு.

13. பி. செல்வசிங் : மாநில மையம், வாலிபர் அரங்கம், காஞ்சிபுரம், பாண்டி, வேலூர் மாவட்டங்கள்.

14. பாப்பா உமாநாத் : மாதர் மாநில மையம், மாதர் அரங்க பொறுப்பு.

15. MNS வெங்கட்ராமன் : சிவகங்கை, தூத்துக்குடி மாவட்ட பொறுப்பு, கல்விக்குழு, மாணவர் அரங்கம்.

மாநில செயற்குழு:

12.3 மாநில செயற்குழு கடந்த மூன்று ஆண்டுகளில் 65 முறை கூடியுள்ளது. கட்சியின் மத்தியக்குழு எடுக்கும் அரசியல் ஸ்தாபன முடிவுகளை அமலாக்கிடவும், மாநிலத்தில் எழும் அரசியல் நிலை குறித்து நமது நிலைபாட்டை மேற்கொள்ளவும் இயக்கங்களுக்கு திட்டமிடவும், வெகுஜன அரங்கங்களுக்கு வழிகாட்டவும், மாநில, மாவட்ட ஸ்தாபன பிரச்சனைகளை தீர்த்திடவும் மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டியுள்ளது. அரசியல் - ஸ்தாபனம், இயக்கம் குறித்த முக்கியமான அம்சங்களை மாநிலகுழுவில் விவாதித்து, இறுதிப்படுத்தி அமலாக்கப்பட்டு வருகிறது.

12.4 2004 மே மாதம் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் நமது நிலைபாட்டை உருவாக்கிட, நட்பு கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கண்டிட, தேர்தல் பணிகளுக்கு திட்டமிட, அமலாக்கிட மாநில செயற்குழு விரிவாக விவாதித்து, மாநிலக்குழுவிற்கு ஆலோசனைகளை முன்வைத்தது.

12.5 ஒவ்வொரு செயற்குழு கூட்டத்திற்குப் பிறகும் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளில் கட்சி எவ்வாறு தலையிட்டது என்பதை விவாதிப்பதோடு, மாறி வரும் அரசியல் சூழலுக்கேற்ப, அடுத்து வரும் நாட்களில் எத்தகைய அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டுமென்றும் செயற்குழு முடிவு செய்யும்.

12.6 அரசு ஊழியர் - ஆசிரியர் வேலைநிறுத்தம் துவங்கிய பிறகு மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டியுள்ளது. வேலைநிறுத்தம் முடிந்த பிறகு இப்போராட்டம் குறித்து மாநில செயற்குழு

பரிசீலித்து மாநிலக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தது. பிறகு மாநிலக்குழு பரிசீலனையை மாநிலம் முழுவதும் கட்சி அணிகளுக்கு ரிப்போர்ட் செய்தோம்.

12.7 மாவட்டங்களில் எழும் அரசியல் - சமூகப் பிரச்சினைகளில் உரிய நடைமுறையை உருவாக்கிடவும் மாநில செயற்குழு உதவி செய்துள்ளது.

12.8 வெகுஜன அரங்க பிராக்ஷன்கள், உபகுழுக்களின் அறிக்கைகளை பெற்று, மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டியுள்ளது.

12.9 மாவட்டங்களிலிருந்து பல்வேறு பிரச்சனைகளுக்கு வழிகாட்டுதல் கேட்டு கடிதங்கள் வருகின்றபோது, மாவட்டங்களில் ஸ்தாபன பிரச்சனைகள் எழுகின்றபோது மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டியுள்ளது. கரூர், தருமபுரி, கோவை மேற்கு, கடலூர், புதுவை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, நெல்லை, மதுரை புறநகர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, விருதுநகர், திருவாரூர், தென்சென்னை, காஞ்சிபுரம் போன்ற மாவட்டங்களில் எழுந்த ஸ்தாபனப் பிரச்சினைகளை தீர்த்திட மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. இதைப்போலவே இரயில்வே, மின்னரங்கம், வாலிபர் அரங்கம், மாதர் அரங்கம் மற்றும் தனி அரங்கங்களில் எழுந்த பிரச்சினைகளை தீர்த்திடவும் மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. இத்தகைய தலையீட்டிற்குப் பிறகும் சில மாவட்டங்களில், அரங்கங்களில் பிரச்சினைகள் முடிவுக்கு வரவில்லை. இம்மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் மாநில செயற்குழு மீண்டும் தலையிட வேண்டியுள்ளது.

12.10 மாவட்ட அரங்க ஸ்தாபன செயல்பாட்டில் உருவாகும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாநில செயற்குழு தலையிட்டிருந்தாலும், அரசியலில் எடுக்கும் முன்முயற்சி அளவிற்கு ஸ்தாபனத் துறையில் தலையீடு போதுமான அளவிற்கு இல்லை. எதிர்காலத்தில் இத்துறையில் கூடுதல் கவனம் செலுத்திட திட்டமிட வேண்டும்.

12.11 மாநில செயற்குழு உறுப்பினர்கள் தாங்கள் பொறுப்பாக உள்ள அரங்கங்களுக்கு, பிராக்ஷன்கள் மூலம் வழிகாட்டி வருகிறார்கள். பிராக்ஷன்களில் எழும் பிரச்சினைகள் பற்றி மாநிலசெயற்குழு விவாதிக்கிறது. இருப்பினும் எல்லா பிராக்ஷன்களின் செயல்பாடு பற்றியும் மாநில செயற்குழு விவாதிக்க இயலவில்லை.

12.12 மாநில செயற்குழு சராசரி 17 நாட்களுக்கு ஒருமுறை கூடியுள்ளது. பெரும்பாலும் இரண்டு நாள் கூட்டமாக நடந்துள்ளது. ஒவ்வொரு கூட்டத்தின் போதும், அடுத்த கூட்டத்திற்கான தேதிகள் நிச்சயிக்கப்படுகின்றன. இதனால் செயற்குழு தவறாமல் கூடுவதற்கும், செயற்குழு உறுப்பினர்கள் இதற்கேற்றவாறு தங்கள் வேலைகளைத் தீர்மானித்துக் கொள்வதற்கும் ஏதுவாகிறது.

12.13 மாநில செயற்குழு கூட்டுத் தலைமையாக செயல்படுவதில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாநில செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொண்டே, தத்துவார்த்த - அரசியல் பிரச்சினைகளில் தீக்கதிருக்கு கட்டுரை எழுதுவது என்ற கடந்த மாநாட்டு முடிவு முழுமையாக அமலாக்கப்படவில்லை.

12.14 **அரசியல் ஸ்தாபன பிரச்சனைகளை விவாதிப்பதிலும், பெரும்பான்மை கருத்தின் அடிப்படையில் விவாதித்து, எடுத்த முடிவினை கருத்து வேறுபாடின்றி அமலாக்குவதிலும் ஜனநாயக மத்தியத்துவ கோட்பாட்டின் அடிப்படையில் மாநில செயற்குழு செயலாற்றி வருகிறது.**

12.15 தோழர்கள் என்.எஸ்., என்.வி., பாப்பா ஆகிய தோழர்களுக்கு மாவட்ட பொறுப்புகள் அளிக்கவில்லை. மற்ற மாநில செயற்குழு தோழர்கள் மாவட்ட பொறுப்புகளை கவனித்து வருகிறார்கள். கரூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், தருமபுரி, ராமநாதபுரம், தேனி ஆகிய மாவட்டங்களை மாநிலக்குழு உறுப்பினர்கள் கவனித்து வருகிறார்கள். அதைப்போலவே வழக்கறிஞர் அரங்கம், மருத்துவர் அரங்கம் ஆகிய அரங்கங்களை மாநிலக்குழு உறுப்பினர்கள் கவனித்து வருகிறார்கள்.

12.16 தீக்கதிர் பிரசுர வெளியீடு, தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான இயக்கம், ஓராண்டு திட்டத்திற்கான ஏற்பாடுகள், கட்சிக் கல்வி - இதுபோன்ற முக்கிய பணிகளுக்கு மாநில செயற்குழு வழிகாட்டியுள்ளது.

12.17 முக்கியமான அரசியல் - ஸ்தாபன பிரச்சினைகளில் அரசியல் தலைமைக்குழுவினுடைய ஆலோசனைகளைப் பெற்று செயற்குழு செயலாற்றி வருகிறது. தோழர்கள் பிரகாஷ்காரத், ஆர். உமாநாத், பி. ராமச்சந்திரன் போன்றவர்கள் அவ்வப்பொழுது செயற்குழு கூட்டங்ளில் கலந்து கொண்டு வழிகாட்டி வருகிறார்கள்.

12.18 கட்சியினுடைய மாநில வரவு - செலவுகளை கவனிப்பதற்கு தோழர்கள் என்.வி., ஜி.ஆர்., டி.எல்., என மூன்று பேர் கொண்ட நிதிக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாநில செயற்குழுவிற்கும், மாநிலக்குழுவிற்கும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வரவு - செலவு கணக்குகள் வைக்கப்படுகின்றன.

12.19 கட்சி உறுப்பினர் பதிவுப் பரிசீலனையில் மாவட்டங்களில் உள்ள குறைபாடுகள் பற்றி மாநில செயற்குழு ஆழமாக பரிசீலிக்க இயலவில்லை.

12.20 தொழிற்சங்க அரங்கத்தில் கட்சி மேற்கொள்ள வேண்டிய கடமைகள் பற்றி மத்தியக்குழு விவாதித்து ஓர் ஆவணம் உருவாக்கியது. இந்த ஆவணத்தை மாநிலக்குழுவிற்கும், மாவட்ட கட்சி அணிகளுக்கும் ரிப்போர்ட் செய்துள்ளோம். இந்த ஆவணத்தின் அடிப்படையில் தொழிற்சங்க அரங்கில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை தீர்மானித்து அமலாக்கிட வேண்டும்.

12.21 தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற கலை - இலக்கிய வெகுஜன அமைப்பில் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் தே. இலட்சுமணன் அவர்களை தலைவராக தேர்வு செய்ததை தவிர்த்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அப்பொறுப்பை ராஜினாமா செய்வதென்று மாநில செயற்குழு முடிவு செய்தது. இவ்வரங்கத்தில் நீடித்து வரும் கருத்து வேறுபாடுகளை போக்கிட மாநில செயற்குழு தொடர்ந்து தலையிட வேண்டியுள்ளது.

12.22 நெறிப்படுத்தும் ஆவணத்தை அமலாக்கிட சில அம்சங்களில் மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் வரவு - செலவு கணக்குப் பிரச்சினை ஏற்பட்டபோது, மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. இதைப்போலவே சில மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் கோஷ்டிப்போக்கு உருவான போது அதை களைவதற்கும் மாநில செயற்குழு தலையிட்டுள்ளது. அதே நேரத்தில் நெறிப்படுத்தும் இயக்கம் பற்றிய மற்ற அம்சங்களில் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

12.23 கட்சியின் முழுநேர ஊழியர்களின் குடும்ப திருமணங்கள் பற்றி பல விமர்சனங்களும் ஆலோசனைகளும் வந்தன. ஆகவே அப்படிப்பட்ட திருமணங்களின் வரவு - செலவு கணக்குகளை அவர்கள் சம்பந்தப்பட்ட கமிட்டிகளில் சமர்ப்பிக்க வேண்டுமென்று வழிகாட்டப்பட்டது.

12.24 நெறிப்படுத்தும் இயக்கம் பற்றிய ஆவணத்தில் உள்ள அம்சங்களை அமலாக்கிட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்காலத்தில் திட்டமிட வேண்டும்.

மாநில மையம்

12.25 தோழர்கள் என்.வி., என்.எஸ்., டி.கே.ஆர்., ஜி.ஆர்., டி.எல்., வி.எம்.எஸ்., செல்வசிங் ஆகிய தோழர்களைக் கொண்ட மாநில மையம் உருவாக்கப்பட்டது. முன்னுக்குவரும் அரசியல் பிரச்சனைகள் குறித்து மையம் கூடி விவாதித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சில பிரச்சனைகளில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவது, உடனடி இயக்கத்திற்கு திட்டமிடுவது, மாவட்ட அளவிலான பிரச்சனைகளாக இருந்தால் மாவட்டக்குழுக்களோடு தொடர்பு கொண்டு பேசுவது போன்ற வகையில் அன்றாட அரசியல் பிரச்சனைகளில் மாநில மையம் தலையிடுகிறது.

12.26 அரசியல் மற்றும் பல பிரச்சினைகள் மீது மாநில செயற்குழு சார்பில் அறிக்கை வெளியிடுவதில் கடந்த காலங்களை விட, இந்த மூன்று ஆண்டுகளில் கூடுதல் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

12.27 சில முக்கிய பிரச்சனைகளில் சென்னையில் உள்ள மாநில செயற்குழு தோழர்களுக்கு தகவல் கொடுத்து விரிவடைந்த மையக் கூட்டத்தை நடத்தி, பிரச்சனைகள் மீது முடிவு எடுக்கிறோம். மாநில செயற்குழுவில் விவாதிக்க வேண்டிய முக்கிய பிரச்சனையாக இருந்தால் மாநில செயற்குழுவிற்கு கொண்டு செல்கிறோம்.

12.28 மாநில செயற்குழு மற்றும் மாநிலக்குழு கூட்டத்திற்கான தயாரிப்பு வேலைகளையும் மாநில மையம் செய்து வருகிறது. மாநில செயற்குழு மற்றும் மாநிலக்குழு கூட்டங்கள் முடிந்த பிறகு எடுக்கப்பட்ட முடிவுகளை அமலாக்கிட மாநில மையம் முயற்சிகளை மேற்கொள்கிறது.

12.29 இரண்டு மாநில செயற்குழு கூட்டங்களுக்கு இடையில் மையம் எடுக்கும் முக்கிய முடிவுகளை மாநில செயற்குழுவிற்கு விவாதத்திற்காக விளக்கப்படுகிறது.

12.30 அரங்க பிரச்சனைகளை விவாதிப்பதற்கும் தேவைப்படுகிற போது விரிவடைந்த மையம் கூட்டப்படுகிறது. மாநில செயற்குழு கூட்டம் முடிந்தவுடன் மாவட்டக்குழுக்களுக்கு பொறுப்பாக உள்ள மாநிலக்குழு உறுப்பினர்கள்கூட்டம் நடத்தி மாநில செயற்குழு முடிவுகள் விளக்கப்படுகின்றன.

12.31 பல்வேறு அரசியல் பிரச்சனைகள் மீது அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவது, கட்சியின் சட்டமன்றக்குழு உறுப்பினர்களுக்கு வழிகாட்டுவது, கட்சியினுடைய மாநில பிராக்ஷனில் எழும் பிரச்சனைகளை அழைத்துப் பேசி வழிகாட்டப்பட்டுள்ளது.

12.32 பல புகார் கடிதங்கள், கட்சி அணிகளிடமிருந்து வருகின்றன. சில கடிதங்கள் கையெழுத்திடாமலும் வருகின்றன. இதன் மீதும் விவாதித்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

12.33 புகார் கடிதங்கள் மாவட்டங்களுக்கு அனுப்பி விவரம் கேட்கப்படுகிறது. ஆனால் அங்கிருந்து பதில் வருவதில் தாமதம் ஏற்படுகிறது. இதனால் கீழிருந்து எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணுவதிலும் தாமதம் ஏற்படுகிறது. எதிர்காலத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் மாவட்டக்குழுக்கள் பதில் அனுப்பிட பணித்திட வேண்டியுள்ளது.

12.34 தமிழ்நாட்டில் கட்சி நடத்தி வரும் அரசியல் நிகழ்ச்சிகள், இயக்கங்கள் பற்றி மத்தியக்குழுவிற்கும், ஆங்கில பத்திரிகையான பீப்பிள்ஸ் டிமாக்ரசிக்கும் அவ்வப்போது செய்தி அனுப்பப்படுகிறது. இருப்பினும் மாநிலத்தின் அரசியல் நிலைமை குறித்தும், நாம் நடத்தும் இயக்கங்கள் குறித்தும் பீப்பிள்ஸ் டெமாக்ரசி இதழுக்கு தொடர்ச்சியாக கட்டுரை எழுதிட வேண்டும்.

12.35 கட்சியின் மாநில மையத்தில் குறைந்தபட்சம் இரண்டு செயற்குழு தோழர்களாவது இருந்து செயல்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. இதைப் பெரும்பாலும் நிறைவேற்றி வருகிறோம், சில சமயங்களில் வேலை மிகுதியின் காரணமாக மாநில மையத்தில் மாநில செயற்குழு தோழர்கள் இல்லாத நிலையும் ஏற்படுகிறது. இக்குறைபாட்டை போக்கும் அளவிற்கு எதிர்காலத்தில் மையத் தோழர்களின் வேலைகளைத் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

மாநிலக்குழு

12.36 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு மாநிலக்குழு 17 முறை கூடியுள்ளது. மாநிலக்குழு உறுப்பினர்கள்அல்லாத மாவட்ட செயலாளர்கள் தேவைப்படுகிற போது சிறப்பு அழைப்பாளர்களாக மாநிலக்குழு கூட்டங்களுக்கு அழைக்கப்படுகின்றனர். தேவைப்படுகிற போது மாவட்ட செயலாளர்கள் கூட்டமும் நடத்தப்படுகிறது.

12.37 மாநில அரசியல் நிலைமை குறித்து அவ்வப்போது விவாதித்து, எதிர்கால அரசியல் அணுகுமுறையை மாநிலக்குழு இறுதிப்படுத்துகிறது. குறிப்பாக மக்களவைத் தேர்தலில் நமது உத்தி, தொகுதி உடன்பாடு, வேட்பாளர்கள் தேர்வு, தேர்தல் பணி ஆகியவற்றை மாநிலக்குழு இறுதிப்படுத்தியது.

12.38 மாநில அளவிலான அரசியல் இயக்கங்களுக்கு மாநிலக்குழு திட்டமிடுகிறது. மத்தியக்குழு முடிவு செய்யும் இயக்கங்களை அமலாக்குவது குறித்தும் மாநிலக்குழு விவாதித்து அமலாக்கி வருகிறது.

12.39 முக்கியமான ஸ்தாபன பிரச்சனைகளை மாநிலக்குழு விவாதித்து இறுதிப்படுத்தியுள்ளது. இயக்கங்கள் குறித்தும், அரங்கங்களின் செயல்பாடுகள் குறித்தும் பிராக்ஷன் மற்றும் உபகுழுக்களின் அறிக்கைகள் மீதும் மாநிலக்குழுவில் விவாதித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12.40 வகுப்புவாதத்தை எதிர்கொள்வது பற்றிய நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு பேராசிரியர் கே.என். பணிக்கர் கலந்து கொண்ட பட்டறை நடத்தினோம். இதில் உருவாக்கப்பட்ட ஆவணத்தை மாநிலக்குழு விவாதித்து இறுதிப்படுத்தியது.

12.41 பெரும்பாலான மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்ட செயலாளர்களாக உள்ளனர். ஒரு பகுதி மாநிலக்குழு உறுப்பினர்கள் அரங்கங்களில் பணியாற்றி வருகின்றனர்.

12.42 தோழர்கள் ஏ. லாசர், பி.எம்.குமார், என். குணசேகரன், பி. சண்முகம், எஸ். திருநாவுக்கரசு ஆகிய தோழர்கள் தலா ஒரு மாவட்டக்குழுவிற்கு பொறுப்பாளர்களாக இருந்து செயலாற்றி வருகிறார்கள். தோழர்கள் பி.எம். குமார், பி. சண்முகம், திருநாவுக்கரசு ஆகியோர் அரங்கங்களிலும் பணியாற்றி வருகிறார்கள். தோழர்கள் ஆர். ராமமூர்த்தியும், வி. சுந்தரமும் இரண்டு அரங்கங்களுக்கு மாநிலக் குழு சார்பில் பொறுப்பாளர்களாக உள்ளனர்.

12.43 ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலக்குழு உறுப்பினர்கள் உள்ள மாவட்டங்களில் மாநிலக்குழு உறுப்பினர்கள் மட்டும் ஒரு அமைப்பு அல்ல, என்றாலும் இவர்கள் கருத்தொற்றுமை செயல் ஒற்றுமையுடன் செயல்பட வழிகாட்டப்பட்டுள்ளது.

12.44 83 தோழர்களைக் கொண்ட மாநிலக்குழு என்பதால், மாநிலக்குழுவில் பிரச்சனைகள் மீது விவாதிப்பதற்கு போதிய நேரம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. மாநிலக்குழு கூட்டம் தேவைக்கேற்றவாறு இரண்டு நாள் மூன்று நாள் கூட்டங்களாக நடத்தப்படுகிறது.

12.45 அடுக்கடுக்கான பல அரசியல் - ஸ்தாபன பணிகளை நிறைவேற்றிட வேண்டியிருந்ததால், இரண்டு மாநாடுகளுக்கு இடையில் நடத்திட வேண்டிய ஆண்டு ஸ்தாபன பரிசீலனையை மாநிலக்குழு மேற்கொள்ள இயலவில்லை.

மாவட்டக்குழுக்கள்

12.46 கோவை மாநில மாநாடு மாவட்டக்குழுக்களின் செயல்முறைகள் குறித்து கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்தது.

"கட்சியினுடைய மத்தியக்குழு முடிவுகள், மாநிலக்குழு முடிவுகள், வர்க்க - வெகுஜன அரங்கப் பணிகள், அரசியல் மற்றும் ஸ்தாபன கடமைகள், மக்கள் பிரச்சினைகள் மீதான இயக்கங்கள், நிதி திரட்டுதல், கட்சிக் கல்விக்கு ஏற்பாடு செய்தல் போன்று மாவட்டக்குழுக்கள் கட்சி செயல்பாட்டில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன."

"பல மாவட்ட செயற்குழுக்களும், மாவட்டக்குழுக்களும் இன்றுள்ள நிலைமைக்கேற்ப பன்முக வேலைகளை செய்யும் நிலையில் இல்லை"

12.47 மேற்கண்ட மதிப்பீட்டினை கருத்தில் கொண்டு பல மாவட்டக்குழுக்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தங்களது செயல்முறையில் முன்னேற்றம் காண முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

12.48 பல மாவட்டக்குழுக்கள், மாவட்டங்களில் உருவாகும் பிரத்தியேகமான மக்கள் பிரச்சினைகள் மீது இயக்கங்கள் நடத்தியுள்ளன. வைகை ஆற்றுப் படுகையில் நிலத்தடி நீரை எடுப்பதை எதிர்த்து சிவகங்கை மாவட்டத்தில் இயக்கம், தேயிலைக்கு விலைகேட்டு நீலகிரி மாவட்டத்தில் இயக்கம், கரூர், சேலம், திருப்பூர், கோவை, ஈரோடு, நாமக்கல் போன்ற மாவட்டங்களில் கைத்தறி, விசைத்தறி, சிறுதொழில் பாதுகாப்பு மாநாடுகள் போன்று பல இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

12.49 மாவட்டக்குழுக்களின் செயல்பாட்டில் ஓரளவு முன்னேற்றம் உண்டு. எனினும், மாவட்ட மையங்கள் பலமடைய வேண்டியுள்ளது.

12.50 மாவட்டக்குழுக்கள் சிலவற்றில் கோஷ்டி போக்குகள் உள்ளன. ஒற்றுமையின்மை, கூட்டுத் தலைமை இல்லாமை, அதிகார வர்க்க போக்கு போன்றவை நீடிக்கின்றன. மாநில மையம் தலையிட்டு தவறான போக்குகளை சரி செய்தாலும், மீண்டும் இப்படிப்பட்ட போக்குகள் தலை தூக்குகின்றன. கூட்டுத் தலைமையை உருவாக்குவது, கோஷ்டிப் போக்கை களைவது, முடிவெடுப்பதில் ஜனநாயக முறை, அமலாக்குவதில் மத்தியத்துவக் கோட்பாடு போன்ற அம்சங்களை கொண்ட ஜனநாயக மத்தியத்துவ கோட்பாடுகளை கறாராக அமலாக்கிட வேண்டும்.

12.51 பெரும்பாலான மாவட்டக்குழுக்களில் வேலை அறிக்கை வைத்து விவாதிக்கப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு தோழருக்கும் அளிக்கப்பட்ட அரங்க, கட்சிப் பொறுப்புகளில் முன்னேற்றம் கண்டுள்ளார்களா? என்று விமர்சனபூர்வமான விவாதம் நடைபெறுவதில்லை.

12.52 வர்க்க, வெகுஜன அரங்கங்களில், மாவட்ட அளவில் வரவு - செலவுகளில் முறைகேடுகள் தலை தூக்குகின்றன. இத்தகைய போக்குகளைக் களைந்தெறிய கட்சியின் மாவட்டக்குழுக்கள் உரிய முறையில் தலையிட வேண்டும்.

12.53 ஒரு பகுதி மாவட்டங்களில் மட்டுமே சுமார் 50 சதவீத முழுநேர ஊழியர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட ஊதியம் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது. மற்ற ஊழியர்களுக்கு இப்படி நிச்சயிக்கப்பட்ட ஊதியம் முழுவதும் வழங்கப்படுவதில்லை.

12.54 சில மாவட்டங்களில் வாகனம் வாங்குவது, கட்டிடம் கட்டுவது போன்ற செலவினங்களைச் செய்து, நிதி நெருக்கடி ஏற்பட்டு மாதக் கணக்கில் ஊதியம் வழங்காத போக்கும் நீடிக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் முழுநேர ஊழியர்களுக்கு ஊதியம் வழங்காமல் இருப்பது ஏற்புடையது அல்ல; எதிர் காலத்தில் முழுநேர ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதை கட்சி ஸ்தாபனத்தில் முதற்கடமையாக ஆக்கிட வேண்டும். இதில் கட்சியின் மாநில, மாவட்டக்குழுக்கள் உரிய கவனம் செலுத்திட வேண்டியுள்ளது.

12.55 மாவட்ட நிதி நிலைமையில் முன்னேற்றம் காண வசூலுக்கு திட்டமிடுகிறபோது, மக்களிடம் இருந்து வசூலிக்கப்படும் தொகைதான் பிரதானமானதாக இருக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் மற்ற வாய்ப்புகளையும் பயன்படுத்திட வேண்டுமெனவும் மாநிலக்குழு தொடர்ந்து சுட்டிக்காட்டியுள்ளது. இதில் விருதுநகர் மாவட்டத்தினுடைய அனுபவம் குறிப்பிடத்தக்கது.

"கட்சிக்கு தேவையான நிதியை வசூல் செய்வதில் இக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நெறிப்படுத்தும் இயக்கம் சுட்டிக்காட்டியபடி வெகுஜன வசூல் பிரதான வடிவமாக்கப்பட வேண்டும் என்பதில் நமது மாவட்டத்தில் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து வருகிறோம். 2002ஆம் ஆண்டு வெகுஜன வசூல் மூலமாக 49 சதவீதமும், 2003ஆம் ஆண்டில் 50 சதவீதமும், 2004ஆம் ஆண்டில் 60 சதவீதமும் வெகுஜன பக்கெட் வசூல் மூலம் வசூலாகி உள்ளது. வெகுஜன வசூல் அனுபவங்கள் கட்சி அணிகளுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி உள்ளது."

வடசென்னை, தென்சென்னை ஆகு இரண்டு மாவட்டக்குழுக்களின் நிதி வசூலில் பெரும் பகுதி வெகுஜன வசூல் என்பது குறிப்பிடத்தக்கது.

12.56 அரசியல் ஸ்தாபன பொறுப்புகளை நிறைவேற்றுவது, வெகுஜன அரங்கங்களுக்கு வழிகாட்டுவது, இடைக்கமிட்டிகள், கிளைகள் செயல்பாட்டை உத்திரவாதப்படுத்துவது, கட்சிக்கல்வி, பிரசுர விற்பனைக்கு திட்டமிடுவது என பல பணிகளை செய்யக் கூடிய திறமை படைத்த மாவட்டக்குழுக்களாக ஒரு சில மாவட்டக்குழுக்களே செயல்படுகின்றன. பல மாவட்டக்குழுக்கள் இதில் பின்தங்கியுள்ளன.

12.57 பல மாவட்டங்களில் நடுத்தர மற்றும் தனியரங்கத் தோழர்களுக்கு அரசியல் ரீதியாக வழிகாட்டுதல் போதுமான அளவுக்கு இல்லை.

12.58 பல மாவட்டங்களில் மாவட்ட செயற்குழு, மாவட்டக்குழு கூட்டங்கள் குறித்த நேரத்தில் கூடுவதில்லை. தாமதமாக கூடுகின்றன. எதிர்காலத்தில் இதில் முறிப்பை ஏற்படுத்திட வேண்டும். இப்பிரச்சினை குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட மாநாட்டு அறிக்கை கீழ்கண்டவாறு சரியாக கூறுகிறது.

"மாவட்ட செயற்குழு உறுப்பினர்களில் இருந்து, இடைக்கமிட்டி உறுப்பினர்கள் வரை அறிவித்த நேரத்திற்கு கூட்டத்திற்கு வருவதில்லை. செயற்குழு கூட்டமே பல மணிநேரம் தாமதமாக நடைபெறுகிறது. இதனால் வந்தவர்கள் பலமணி நேரம் காத்திருக்க நேருகிறது. அறிவித்த நேரத்திற்கு கூட்டத்திற்கு வந்து சேர வேண்டும். அனுமதி பெறாமலேயே கமிட்டி கூட்டங்களுக்கு வராமல் இருப்பது வழக்கமாக உள்ளது. முக்கியமான பணிகள் குறுக்கிடுகிறபோது கமிட்டி கூட்டங்களுக்கு வரமுடியாமல் போவது தவிர்க்க முடியாதது. ஆனால் சிலர் எந்தக் காரணமும் இல்லாமல் கமிட்டி கூட்டத்தை தவிர்க்கும் நிலை உள்ளது. உறுப்பினர்கள் இந்த பலவீனங்களை போக்கிக் கொண்டு அறிவித்த நேரத்திற்கு கமிட்டி கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்."

12.59 மாநிலக்குழு மாவட்டங்களுக்கு தீர்மானிக்கிற நிதி கோட்டா, பிரசுர விற்பனை தொகை, கட்சி உறுப்பினர் லெவி - ஈவுத் தொகை போன்றவைகளை ஒரு சில மாவட்டங்களே முறையாக செலுத்துகின்றன. பெரும்பாலான மாவட்டக்குழுக்கள் இதில் போதிய கவனம் செலுத்துவதில்லை.

12.60 கடந்த மூன்றாண்டு காலத்தில் பல்வேறு அரசியல், ஸ்தாபன பணிகளை மாவட்டக்குழுக்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளன. மேலே குறிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை போக்கி மாவட்டக்குழுக்கள் செயல்பட்டால் கட்சி மேலும் பலமடையும்.

இடைக்குழுக்கள் செயல்பாடு

"நிதிப் பற்றாக்குறையை போக்கி, இடைக்கமிட்டி செயலாளரோடு ஓரிரு தோழர்கள் இணைந்து செயல்படக் கூடிய மையத்தை உருவாக்கி, கிளைகளை சுயமாக நடத்தக்கூடிய திறமை உள்ளவர்களாக இடைக்கமிட்டி உறுப்பினர்களை வளர்த்தெடுத்து, அரங்க வேலைகள் உள்ளிட்டு பல பணிகளுக்கு திட்டமிட்டு செயல்படக் கூடிய கமிட்டிகளாக இடைக்கமிட்டிகளை பலப்படுத்திட வேண்டும்"

என கடந்த கோவை மாநில மாநாடு இடைக்கமிட்டி செயல்பாடு பற்றி சுட்டிக்காட்டியது. கடந்த மாநாடு காட்டிய வழியில் இடைக்கமிட்டிகள் செயல்பட்டுள்ளனவா என்று பரிசீலிக்க வேண்டும்.

12.61 சில மாவட்டங்களில் இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் பெரும்பாலான இடைக்கமிட்டிகளின் செயல்முறையில் முன்னேற்றமில்லை.

12.62 பெரும்பாலான இடைக்கமிட்டிகளில் மையம் என்பது பெயரளவில்தான் உள்ளது. எல்லாம் இடைக்கமிட்டி செயலாளர் என்பதுதான் இன்று உள்ள நிலை. இதனால் செயலாளர் ஒருவர் மீதே வேலை சுமந்து பணிகள் தேக்கமடைகின்றன.

12.63 சில மாவட்டங்களில் இடைக்கமிட்டிகளில் செயற்குழுவும் தேர்வு செய்யப்படுகிறது. திருப்பூர், கோவை போன்ற பெரு நகரங்களில் அல்லது பலமான கிராமப்புற வட்டக் குழுக்களில் செய்ற்குழு தேவைப்படலாம். ஆனால் சில மாவட்டங்களில் விதிவிலக்கின்றி எல்லா இடைக்கமிட்டிகளிலும் செயற்குழு உள்ளது. நடைமுறையில் இத்தகைய செயற்குழுக்களே இடைக்கமிட்டிகளாகி, செயற்குழு முடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கும் குழுக்களாக இடைக்கமிட்டிகள் ஆகி விடுகின்றன.

12.64 பெரும்பாலான மாவட்டங்களில் இடைக்கமிட்டி கூட்டங்களுக்கான உறுப்பினர் வருகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இடைக்கமிட்டி உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரங்க கட்சி கிளை பொறுப்புகளை பெரும்பாலான உறுப்பினர்கள் நிறைவேற்றும் நிலையில் இல்லை. இதனால் இடைக்கமிட்டிகளின் வழிகாட்டுதலில் செயல்பட வேண்டிய அரங்கங்களின், கிளைகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண இயலவில்லை. இடைக்குழுக்களின் செயல்பாடுகள் பற்றி தஞ்சை மாவட்ட மாநாட்டு அறிக்கை கூறுவதை இங்கே மேற்கோள் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

"இடைக்கமிட்டிகளின் செயல்பாடும் பெருமளவு மேம்படுத்தப்பட வேண்டும். இடைக்கமிட்டி உறுப்பினர்களில் கணிசமானவர்கள் செயல்பாட்டில் முன்னேற்றம் தேவைப்படுகிறது. கிளைகளை செயல்படுத்துவதிலும், கட்சியை விஸ்தரிப்பதற்கான முயற்சி தேவைப்படுகிறது. ஸ்தல பிரச்சினைகளை எடுத்து, அவற்றை இயக்கங்களாக மாற்றுவதில் ஒரு சில இடைக்கமிட்டிகளே கவனம் செலுத்தும் நிலைமை உள்ளது."

12.65 விதி விலக்காக சில இடைக்கமிட்டிகளைத் தவிர பெரும்பாலான கிராமப்புற இடைக்கமிட்டிகள் கட்சிப் பணிக்கு அடுத்ததாக விவசாயிகள் அரங்கம், விவசாய தொழிலாளர்கள் சங்கம் ஆகிய பணிகள்தான் பிரதான பணிகள் என்பதை போதுமான அளவு உணரவில்லை.

12.66 கடந்த 10 ஆண்டுகளில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய நகர்ப்புறங்களில் கட்சிப்பணி விரிவடைந்துள்ளது. இதற்கு நகர்ப்புற இடைக்கமிட்டிகளின் (நகர் கமிட்டிகள்) செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே காரணமாகும். மற்ற பல மாநிலங்களை ஒப்பிடுகிறபோது, நகர்மயமாக்கல் தமிழகத்தில் வேகமாக நடைபெற்று வருவதால் (திருப்பூர், ஈரோடு போன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாக மாற்றிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது) நகர்ப்புற இடைக்கமிட்டிளின் செயல்பாட்டில் கூடுதல் கவனம் செலுத்தினால் கட்சி மேலும் வலுவடையும்.

12.67 போக்குவரத்து, மின்வாரியம், ரயில், வங்கி, இன்சூரன்ஸ் போன்ற அரங்க இடைக்கமிட்டிகளை செயல்படுத்திட கவனம் செலுத்திய மாவட்டங்களில் முன்னேற்றம் உள்ளது. வாய்ப்பிருப்பிருந்தும் சில மாவட்டங்கள் இதில் கவனம் செலுத்தவில்லை.

12.68 கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளின் முடிவுகளனைத்தையும் அமலாக்கிட வேண்டிய பொறுப்பில் உள்ள இடைக்கமிட்டிகள் நிதி நெருக்கடியில் உள்ளன. இதனால் அன்றாட செயல்பாடே பாதிப்புக்குள்ளாகிறது.

12.69 பல இடைக்கமிட்டிகளில் கோஷ்டிப் போக்கு உள்ளது. இடைக்கமிட்டிகளின் விவாதத்தில் எழும் மாறுபட்ட கருத்துக்களை கமிட்டிக்கு வெளியே தங்களுக்கு வேண்டியவர்களிடம் சொல்லும் தன்மை பரவலாக உள்ளது. முடிவுகளை மட்டும் சொல்வதற்கு பதிலாக விவாதித்ததை கசிய விடும் தவறான போக்கு ஜனநாயக மத்தியத்துவத்திற்கு விரோதமானது என்பதோடு கூட்டுத் தலைமையை, ஒற்றுமையை குலைத்து விடுகிறது.

12.70 பெரும்பாலான இடைக்கமிட்டிகளில் செயலாளர்களே நிதிப்பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள். பணத்தை கையாள்வதும், கணக்கை பராமரிப்பதும் அவரே என்பதால் வரவு - செலவு கணக்கு முறையாக பராமரிக்கப்படுவதில்லை. சில கமிட்டிகளில் செயலாளரல்லாத ஒரு தோழர் நிதிப் பொறுப்பாளராக உள்ளார். பெரும்பாலான இடைக்கமிட்டிகள் நிதிப் பற்றாக்குறையில் இருப்பதால், நிதிப் பொறுப்பாளராக வேறு ஒருவரை போட வேண்டாம் என்ற கருத்து வருகிறது. எத்தகைய சூழல் இருந்தாலும் நிதிப் பொறுப்பாளராக தனியாக ஒருவரை நியமிப்பதன் மூலம்தான் வரவு - செலவு கணக்கில் தவறு நடக்காமல் தவிர்க்க முடியும்.

12.71 எல்லா இடைக்கமிட்டிகளிலும் செயலாளர் முழுநேர ஊழியராக இல்லையென்றாலும், பலமுள்ள இடைக்கமிட்டிகளில் செயலாளர் முழுநேர ஊழியராக இருக்க வேண்டும் என்ற முடிவை அமலாக்கிட வேண்டும். இப்போது அந்த நிலை பல மாவட்டங்களில் இல்லை.

12.72 இடைக்கமிட்டிகளின் முனைப்பான செயல்பாட்டால் மட்டுமே கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களின் வளர்ச்சியை காண முடியும். பல மாவட்டங்களில் கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களின் வளர்ச்சியில் உள்ள தேக்கத்திற்கு இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளே காரணமாக உள்ளது.

12.73 கிளைகளை மாதம் ஒருமுறை கூட்டிடவும், கிளைக்கு ஒரு தீக்கதிர் வாங்கிடவும், கிளைக்குட்பட்ட பகுதிகளில் வர்க்க - வெகுஜன அமைப்புகளை உருவாக்கிடவும், இடைக்கமிட்டிகள் உத்திரவாதப்படுத்திட வேண்டும்.

12.74 மேற்கண்ட பல குறைபாடுகள் இருப்பினும் அரசியல், ஸ்தாபன பணிகளை நிறைவேற்றி வருவது இடைக்கமிட்டிகள்தான். எல்லா வகையிலான பணிகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் இடைக்கமிட்டிகளை செயல்பட வைத்திட மாவட்டக்குழுக்கள் பிரத்யேகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்டக்குழு மேற்கொள்ள வேண்டிய இத்தகைய பணிகள் நடைபெறுகிறதா என்பதை மாநிலக்குழுவும் அவ்வப்பொழுது பரிசீலிக்க வேண்டும்.

கடசிக் கிளைகள்

"கட்சிக் கிளைகள் மக்களுடன் உயிரோட்டமான தொடர்பினை கொண்டிருப்பது, வெகுஜனங்களிடையே கிளர்ச்சியையும், பிரச்சாரப் பணிகளையும் மேற்கொள்வது, கட்சியின்

செயல்பாடுகளில் தீவிரமானவர்களையும் ஆதரவாளர்களையும் ஈர்த்து உறுப்பினர்களாக்குவதோடு அவர்களது அனுபவங்களை மேல் கமிட்டிகளுக்கு தெரிவிப்பது, கட்சியின் கொள்கைகளை விவாதிப்பது போன்ற முறையில் கிளைகள் செயல்பட வேண்டும். ஆனால் பெருமளவிலான கிளைகள் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ மட்டும் கூடுகின்றன. பல கிளைகள் தேர்தல் நேரத்திலும் மாநாடுகள் நடைபெறும் போதும் அல்லது விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் மட்டும் செயல்பட்டு வருகின்றன."

என 17வது கட்சி காங்கிரஸ் கிளை செயல்பாடுகள் பற்றி மதிப்பீடு செய்தது. கடந்த மூன்றாண்டுகளில் இத்தகைய குறைபாடுகளை களையக்கூடிய அளவுக்கு கிளைகளின் செயல்பாடுகள் அமையவில்லை.

12.75 மாநிலம் முழுவதும் மொத்தம் 10,934 கட்சிக் கிளைகள் உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் கிளைகளின் எண்ணிக்கை 914 உயர்ந்துள்ளது.

12.76 கிளை செயல்பாட்டில் முன்னேற்றமில்லாததுதான் கட்சி மற்றும் வெகுஜன அரங்கங்களின் விஸ்தரிப்புக்கு தடையாக உள்ளது.

12.77 மாநாடு, தேர்தல் போன்ற காலங்களில் கிளைகள் கூடுகின்றன. அதிலும் சுயமாக கூடும் கிளைகள் மிகக் குறைவே.

12.78 கிராமத்தில், நகர வார்டுகளில், தொழிற்சாலைகளில் மற்ற கட்சிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை கூர்ந்து கவனித்து நமது கட்சியை முன்னிறுத்தும் அளவுக்கு கிளை செயல்பாடுகள் இல்லை.

12.79 மாநில அரசியல் சூழலுக்கேற்ப கட்சி உருவாக்கும் அரசியல் அணுகுமுறையை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியையும் முதலாளித்துவ கட்சிகளிடம் இருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டும் அரசியல் பணியையும் செய்யும் அளவுக்கு கட்சிக் கிளைகளின் தரம் உயர வேண்டும். இல்லையேல், நாம் சரியான அரசியல் நிலைபாட்டை மேற்கொண்டாலும் கிளை செயல்பாட்டில் உள்ள குறைபாட்டால் நாம் கடைப்பிடிக்கும் அரசியல் உத்தி கிராம, நகர அளவில் கட்சி வளர்ச்சிக்கு இட்டுச் செல்லாது.

12.80 அன்றாட மக்கள் பிரச்சினைகள் மீது இயக்கம் நடத்துவது, இவ்வியக்கத்தில் கலந்து கொள்ளும் மக்கள் மத்தியில் நமது அரசியலை கொண்டு செல்வதுமாகிய பணிகளை தொடர்ச்சியாக செய்வதற்கு கிளைகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். மக்களுடன் நேரடியாக தொடர்புள்ள கட்சிக் கிளைகளின் செயல்பாட்டை இடைக்குழுக்கள் உத்திரவாதப்படுத்திட வேண்டும். மாவட்ட செயற்குழுவும், மாநிலக் குழுவும் அவ்வப்பொழுது கிளை செயல்பாட்டை பரிசீலிக்க வேண்டும்.

கிளைச் செயலாளர்கள்

12.81 கிளைச் செயலாளர்கள் முன்முயற்சியின்றி கிளைகள் சரியாக செயல்பட இயலாது. கிளைச் செயலாளர்களை அரசியல் ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் பயிற்றுவிக்க அவ்வப்பொழுது கிளைச் செயலாளர்கள் கூட்டம் நடத்திட வேண்டுமென மாநிலக்குழு முடிவு செய்தது.

12.82 கிளைச் செயலாளர்கள் வருகை குறைவாக இருப்பதால் இத்தகைய கூட்டங்களை நடத்துவதில் மாவட்டக்குழுக்கள் ஆர்வம் காட்டவில்லை. கிராமம் அல்லது நகரம் எதுவாக இருந்தாலும் அங்குள்ள அரசியல் சூழல், மற்ற கட்சிகளின் போக்கு, மக்களின் வாழ்க்கை, முன்னுரிமை அரங்கங்கள், மக்கள் பிரச்சினைகள் மீது இயக்கம் நடத்திட முன்முயற்சி எடுக்கும் திறமை ஆகிய தகுதி படைத்தவர்களாக கிளைச் செயலாளர்களை வளர்த்திடும் பொறுப்பு மாநிலக்குழுவிற்கும், மாவட்டக்குழுக்களுக்கும் உள்ளது.

கட்சி உறுப்பினர்கள்

12.83 கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் சிறிதளவே உயர்ந்துள்ளது.

2002 - 90,777

2003 - 91,709

2004 - 94,845

12.84 கடந்த மூன்றாண்டுகளில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 4068 மட்டுமே உயர்ந்துள்ளது. வடசென்னை - தென்சென்னை, திருச்சி, பெரம்பலூர், சேலம், சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சிறிதளவு உறுப்பினர் எண்ணிக்கை குறைந்துள்ளது. மற்ற மாவட்டங்களில் சிறிதளவு உயர்ந்துள்ளது. இருப்பினும் உயர்வு அதிகமில்லை. உறுப்பினர்கள் எண்ணிக்கை உயராததற்கு பல காரணங்கள் உள்ளன.

12.85 புதிதாக பல ஆயிரம் துணைக்குழு உறுப்பினர்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்பட்டாலும், அவர்களை பயிற்றுவித்து பரீட்சார்த்த உறுப்பினர்களாக உயர்த்துவதற்கு போதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படாததால், துணைக்குழு உறுப்பினர்களாகவே நீடிப்பது அல்லது பெரும் பகுதியினர் அதிலிருந்தும் விடுபடுவது என்பது தொடர்கிறது. இதனால், கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை.

12.86 கிளை முறையாக செயல்படாததும், கிளைச் செயலாளர்களின் முன்முயற்சி இல்லாததும், கிளைகளை இயக்கிட இடைக்குழுக்கள் உரிய நடவடிக்கை எடுக்காததும், கட்சி உறுப்பினர்கள் பதிவு பற்றி முறையாக பரிசீலிக்காததும், இத்தகைய பணிகள் முறையாக நடைபெறுகின்றனவா? என மாவட்டக்குழுக்களும், மாநிலக்குழுவும் அவ்வப்பொழுது பரிசீலிக்காததும், கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயராததற்கு அடிப்படை காரணங்களாகும்.

12.87 குறிப்பாக மக்களோடு நேரடியாக தொடர்புள்ள, மக்கள் மத்தியில் இருந்து செயல்படக்கூடிய கட்சி உறுப்பினர்களுக்கு புதியவர்களை கட்சிக்கு கொண்டு வருவதில் முக்கிய பங்குள்ளது. இத்தகைய பணியை கட்சி உறுப்பினர்கள் நிறைவேற்றிட வேண்டும் என்றால், பொதுவான அரசியல் விசுவாசம் என்பதைத் தாண்டி நமது கட்சியின் அரசியல் நடைமுறை கொள்கையை அமலாக்கி, மற்ற முதலாளித்துவ கட்சிகளிடம் இருந்து பல அம்சங்களில் நாம் மாறுபட்டு உள்ளோம் என்பதோடு, நாம் மட்டும்தான் ஒரு சரியான மாற்றுத் திட்டத்தை முன் வைத்துள்ளோம் என்பதை புரிந்து, இவைகளையெல்லாம் மக்கள் மத்தியில் கொண்டுச் செல்லக்கூடிய அளவுக்கு கட்சி உறுப்பினர்களின் தரத்தை உயர்த்துவதன் மூலமே புதிய பகுதிகளுக்கும் கட்சியை விஸ்தரிக்க முடியும். இதன் மூலம் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்த முடியும்.

12.88 மாநிலத்தில் கட்சி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்களே அன்றாட வேலைகளில் பங்கேற்கிறார்கள் என்று தொடர்ச்சியாக மாநில மாநாடுகள் மதிப்பீடு செய்துள்ளன. சில மாவட்டங்களில் இதற்கும் குறைவாகத்தான் பங்கேற்பு உள்ளது.

12.89 ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ஒரு வெகுஜன அரங்கத்தில் வேலை செய்ய வேண்டும் என்ற விதி முழுமையாக அமலாகவில்லை.

12.90 தத்துவார்த்த உணர்வு குறைவாக இருப்பதும், அன்றாட வேலைகளில் பங்கேற்காமல் இருப்பதும், கிளைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாததும், ஒரு வெகுஜன அரங்கத்தில் இருந்து வேலை செய்யாததும் போன்ற குறைபாடுகள் உள்ள தோழர்கள் நாளடைவில் ஆர்வம் குறைந்து, கட்சி உறுப்பினர்கள் என்ற அந்தஸ்தில் இருந்தும் விடுபடும் நிலையுள்ளது. இப்பிரச்சினை குறித்து நெல்லை மாவட்ட மாநாடு தங்களது அனுபவத்தை கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

"ஒவ்வொரு ஆண்டும் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் 20 சதவீதம் உயர்வு ஏற்படுத்துவது என்று கடந்த மாவட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்த நான்கு ஆண்டுகளில் மாவட்டத்தில் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 5 சதவீதம் குறைந்துள்ளது.

புதிய பகுதிகளுக்கு விஸ்தரிப்பு ஏற்பட்டாலும் செயல்படாத உறுப்பினர்கள் கணிசமாக விடுபடுகின்றனர்.

கட்சி கிளைகள் செயல்படாத நிலையில் இதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.”

1291 ஆண்டுதோறும் 15,000 முதல் 20,000 வரை புதியதாக துணைக்குழு உறுப்பினர்கள் சேர்க்கப்படுகின்றனர். இவர்களுக்கு பயிற்சி அளித்து வேலை செய்ய வைத்து பரீட்சார்த்த உறுப்பினர்களாக உயர்த்துவது சரியாக நடைபெறாததால் ஆயிரக்கணக்கில் வருவதும், போவதும் என்ற நிலை நீடித்து வருகிறது.

1292 கட்சி உறுப்பினர் பதிவு என்பது கட்சி உறுப்பினர்களின் அரசியல் ஸ்தாபன வளர்ச்சியை பரிசீலிப்பது என்பதுதான். இது 50 சதவீதம் தான் நடைபெறுகிறது. மற்றவை வெறும் லெவி வசூல் என்பதிலேயே முடிந்து விடுகிறது. லெவி பாக்கி இருந்தாலும் எண்ணிக்கை குறைந்து விடக் கூடாது என்று புதுப்பித்தலும் சில மாவட்டங்களில் உள்ளது. இக்குறைப்பாட்டை களையாமல் தரத்தை உயர்த்த முடியாது.

1293 அனைத்துப் பகுதி உழைக்கும் மக்கள் மத்தியிலும், கட்சியை கட்டுவது கட்சி அணிகளின் தரத்தை உயர்த்துவது என்ற பணியை செய்யாமல் வெகுஜன புரட்சிக் கட்சி என்ற இலக்கை நோக்கி செல்ல இயலாது. இத்தகைய கடமைகளை நிறைவேற்றிட இடைக்கமிட்டிகளும், மாவட்டக்குழுக்களும் திட்டமிட வேண்டும்.

கட்சியும் - வெகுஜன அமைப்புகளும்

‘புரட்சி, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுதல் போன்ற சமூக மாற்றத்திற்கான கட்சியின் அடிப்படை கோஷங்கள் உடனடியாக சாதாரண மக்களை ஈர்க்காது. இதற்காகத்தான் வெகுஜன அமைப்புகள் தேவைப்படுகின்றன. வெகுஜன அமைப்புகளின் வளர்ச்சியும், விரிவாக்கமும் இல்லாமல் கட்சி வளர்ச்சியில்லை.’

என வெகுஜன அரங்கங்களைப் பற்றி மத்தியக்குழு நிறைவேற்றியுள்ள ஆவணம் கூறுகிறது. இந்த நோக்கத்தோடுதான் ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ஏதாவது ஒரு வெகுஜன அமைப்பிலிருந்து வேலை செய்ய வேண்டுமென்று கட்சி கூறுகிறது.

1294 வெகுஜன அமைப்புகளுக்கு கட்சி வழிகாட்டி வருகிறது. நேரிடையாக அல்ல; பிராக்ஷன், உபகுழுக்கள் மூலமாகவும், கட்சி உறுப்பினர்கள் மூலமாகவும் வெகுஜன அரங்கங்களுக்கு கட்சி வழிகாட்டுகிறது. இப்பணியை செய்கிறபோது இரண்டு தவறுகள் ஏற்படுகின்றன.

- ❑ வெகுஜன அமைப்புகளின் தன்மையை பாதிக்கக் கூடிய அடிப்படையில் அவைகளை கட்சியின் உறுப்புபோல் நடத்துவது,
- ❑ கட்சியை கலந்தாலோசிக்காமல் கட்சியின் வழிகாட்டுதலின்றி வெகுஜன அமைப்புகள் செயல்படுவது.

1295 இந்த இரண்டு தவறுகளில் அதிகமாக நிகழ்வது முதல் தவறுதான். இந்தத் தவறை களையாமல் வெகுஜன அமைப்பு வளராது. இந்தத் தவறான அணுகுமுறையைக் களைய வேண்டுமென்று மத்தியக்குழு 1981ம் ஆண்டு ‘வெகுஜன அரங்கங்கள் பற்றி’ என்ற ஆவணத்தை உருவாக்கியது. அந்த ஆவணத்தின் படி நாம் செயல்படாததால் கட்சியின் மத்தியக்குழு மீண்டும் இவ்வாண்டு ‘வெகுஜன அரங்கங்கள் பற்றிய நமது அணுகுமுறை’ என்ற மற்றொரு ஆவணத்தை உருவாக்கியுள்ளது. இந்த ஆவணத்தின் அடிப்படையில் தமிழகத்தில் நம்முடைய செயல்முறையை பரிசீலிக்க வேண்டும்.

ஆவணத்தில் உள்ள முக்கியம்சங்கள்

1. கட்சியின் கோஷங்களை இயந்திரகதியாக வெகுஜன அமைப்புகளில் அமலாக்கக் கூடாது.
2. மக்களின் அன்றாட உடனடி பிரச்சனைகள் மீது ஸ்தல அளவில் விரிவாக இயக்கம் நடத்திட வேண்டும்.
3. வெகுஜன அரங்கங்களின் மாநாடுகளில் அவ்வமைப்பில் அங்கமில்லாத கட்சி தலைவர்கள் பங்கேற்கக் கூடாது.

4. குறிப்பாக, பல வர்க்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட மாணவர், வாலிபர், மாதர் அமைப்புகளில் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளக் கூடாது.

5. கட்சிப் பேரணிகளில் மாணவர், வாலிபர், மாதர் அமைப்பைச் சார்ந்தவர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று கட்சி சுற்றறிக்கை போடுவது தவறான அணுகுமுறை.

6. வெகுஜன அமைப்புகளின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகிய பொறுப்புகளை தீர்மானிப்பதில் கட்சி தனது ஒப்புதலை தரலாம். மற்ற நிர்வாகிகள் பற்றி சம்பந்தப்பட்ட பிராக்ஷன் கருத்தை வெகுஜன அமைப்புகளுக்கு கொண்டு செல்லலாம்.

7. வெகுஜன அமைப்புகளின் அலுவலகங்கள், கட்சி அலுவலகத்திலிருந்து செயல்படக் கூடாது முதற்கட்டமாக மாநில, மாவட்ட வெகுஜன அமைப்புகளின் அலுவலகங்கள் கட்சி அலுவலகத்திலிருந்து செயல்படுவதை மாற்றிட வேண்டும்.

மேற்கண்ட ஏழு அம்சங்களிலும் தமிழகத்தில் நம்முடைய செயல்பாடு எவ்வாறு உள்ளது என்பதை பரிசீலிக்க வேண்டும். வெகுஜன அமைப்புகளின், நடுத்தர வர்க்க அமைப்புகளின் மாநிலக்குழு அலுவலகங்கள் சென்னையில் கட்சி அலுவலகத்தில் இல்லை. அவைகள் தனித்தனியே வெவ்வேறு மையங்களில் இருந்து செயல்படுகின்றன. ஆனால் பெரும்பாலான மாவட்டங்களில் வெகுஜன அமைப்புகளின் மாவட்டக்குழுக்கள் கட்சி அலுவலகங்களில் இருந்தே செயல்பட்டு வருகின்றன. இதில் மாற்றத்தை உருவாக்கிட வேண்டும்.

சுயேச்சையான - ஜனநாயக முறையிலான செயல்பாடுகள்:

12.96 வெகுஜன அரங்கங்களில் இந்த இரண்டு அம்சங்களையும் அமலாக்கிட வேண்டும். ஜனநாயக முறையிலான செயல்பாடு, சுயேச்சையான செயல்பாடு என்ற இரண்டு அம்சங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்தது. இந்த இரண்டு அம்சங்களையும் சரியாக கடைப்பிடித்தால் தான் வெகுஜன அரங்கங்களில் வளர்ச்சி காண முடியும்.

12.97 கட்சி அமைப்பு, ஜனநாயக மத்தியத்துவம் என்ற கோட்பாட்டின் படி செயல்பட வேண்டும் ஆனால், இக்கோட்பாடு வெகுஜன அமைப்புகளுக்கு பொருந்தாது. ஒவ்வொரு வெகுஜன அமைப்பும் அதனதன் அமைப்புச் சட்டப்படி தான் செயல்பட வேண்டும். அதே நேரத்தில் வெகுஜன அமைப்புகளில் வேலை செய்யும் கட்சி உறுப்பினர்கள் கட்சியின் ஜனநாயக மத்தியத்துவம் என்ற கோட்பாட்டின் படி செயல்பட வேண்டும்.

12.98 தொழிற்சங்கத் தலைவர்களாக உள்ள கட்சித் தோழர்கள் சங்கத்தின் சாதாரண உறுப்பினர்கள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் போன்று பல மட்டத்தில் உள்ள அனைவரையும் ஈடுபடுத்திடும் ஜனநாயக முறையில் செயல்பட வேண்டும்.

12.99 மாணவர், வாலிபர், மாதர் போன்ற அமைப்புகளின் ஜனநாயகத் தன்மை பாதிக்கப்படாமல் இவ்வமைப்புகளுக்கு வழிகாட்ட வேண்டும். பல வர்க்கங்களைச் சார்ந்த உறுப்பினர்கள், இவ்வமைப்பில் உள்ளனர். இந்த அமைப்பின் தன்மைக்கேற்ப கோரிக்கை அமைய வேண்டும் மெல்ல, மெல்ல பொதுவான ஜனநாயக இயக்கத்தின் கோரிக்கைகளை ஆதரிக்கக் கூடிய அளவிற்கு இவர்களின் உணர்வைஉயர்த்த வேண்டும். மேலும் வெகுஜன அமைப்புகளின் ஜனநாயக முறையிலான செயல்பாடு என்பது அவ்வமைப்பு எடுக்கும் முடிவுகளில் அந்த அமைப்பில் உள்ள சாதாரண உறுப்பினர்களை ஈடுபடுத்திடும் அளவிற்கு இருக்க வேண்டும். இதல்லாமல் வெகுஜன அமைப்பின் அனைத்துப் பிரச்சனைகளையும் அவ்வரங்க பிராக்ஷனில் விவாதிக்க கூடாது. இப்படிச் செய்வது என்பது வெகுஜன அமைப்பை கட்சியின் ரப்பர் ஸ்டாம்பாக மாற்றி விடும்.

12.100 இதுபோன்று வெகுஜன அரங்கங்களைப் பற்றிய புதிய ஆவணம் பல அம்சங்களைக் கூறுகிறது. இதில் சுட்டிக்காட்டிய பல தவறான அணுகுமுறைகள் தமிழகத்தில் நம்மிடமும் உள்ளது. இதுகுறித்து மாநில மாநாடு விவாதிப்பதோடு, எதிர்காலத்தில் பிராக்ஷன்கள் செயல்பாட்டிலும், கட்சி கமிட்டிகளின் செயல்பாட்டிலும் உள்ள தவறான அணுகுமுறையை மாற்றிட வேண்டும்.

பிராக்ஷன் - சப்கமிட்டி:

12.101 பிராக்ஷன் - சப்கமிட்டிகள், சம்பந்தப்பட்ட அரங்கங்களில் அரசியலை எடுத்துச் செல்வது, கட்சியை கட்டுவது என்ற அரசியல் கடமையை செய்வதில்லை. மாறாக அரங்க பிரச்சனைகள் பற்றிதான் பேசப்படுகிறது.

12.102 'வெகுஜன அரங்கங்கள் பற்றிய நமது அணுகுமுறை' என்ற மத்தியக்குழு ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அடிப்படையில், பிராக்ஷன் - சப் கமிட்டிகளின் செயல்பாட்டை எதிர்காலத்தில் திருத்தி அமைக்க வேண்டியுள்ளது. இதன் மூலம்தான் வெகுஜன அமைப்பு உறுப்பினர்கள் மத்தியில் கட்சிக் கட்டும் பணியையும், வெகுஜன அமைப்புகளின் வளர்ச்சியையும் உத்திரவாதப்படுத்த முடியும்.

கட்சிக் கல்வி

12.103 கடந்த மூன்றாண்டுகளில் கட்சிக் கல்வியில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவ்வப்பொழுது கட்சிக் கல்வி மாநில உபகுழு கூடி கட்சிக் கல்வி குறித்து திட்டமிட்டுள்ளது. அனைத்து மாவட்டக்குழுக்களும் அரங்கங்களும் பரவலாக வகுப்புகள் நடத்தியுள்ளன.

12.104 புதுப்பிக்கப்பட்ட கட்சித் திட்டம் பற்றி 6 தலைப்புகளில் 2002-ல் டெல்லியில் பயிற்சி முகாம் நடந்தது. அதைத் தொடர்ந்து தமிழகத்தில் கட்சி அணிகளுக்கு கட்சித் திட்டம் பற்றி நான்கு கட்டங்களாக வகுப்பு நடத்திட வேண்டும் என முடிவு செய்தோம்.

12.105 முதற்கட்டமாக வகுப்பு எடுக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் அளவில் 150 தோழர்கள் பங்கேற்றனர். நான்கு நாள் பயிற்சிப் பட்டறை கோவையில் நடந்தது. கட்சித் திட்டத்தை நான்கு தலைப்புகளாக்கி 150 தோழர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக மாநிலத்தை ஆறு மண்டலங்களாக பிரித்து கட்சித் திட்டத்தை மூன்று தலைப்புகளாக்கி சென்னை, விழுப்புரம், திருச்சி, திருப்பூர், மதுரை, நெல்லை ஆகிய பகுதிகளில் மாவட்டக்குழு உறுப்பினர்கள், மாவட்ட - மாநில பிராக்ஷன் உறுப்பினர்களுக்கு வகுப்பு நடைபெற்றது. மூன்றாவது கட்டமாக மாவட்டங்களில் இடைக்கமிட்டி உறுப்பினர்களுக்கும், கிளைச் செயலாளர்களுக்கும் கட்சித் திட்டத்தை இரண்டு தலைப்புகளில் நடத்துவது என திட்டமிட்டோம். இந்த முடிவு எல்லா மாவட்டங்களிலும் அமலானது. நான்காவது கட்டமாக கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் இடைக்கமிட்டி அளவில் நடத்துவது என்ற முடிவு எல்லா மாவட்டங்களிலும் அமலாக்கவில்லை. வடசென்னை, தென்சென்னை, கோவை கிழக்கு, கோவை மேற்கு, மதுரை மாநகர், நெல்லை, சேலம், கடலூர், குமரி, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் கட்சி உறுப்பினர்களுக்கு இடைக்குழு அளவில் வகுப்புகள் நடந்தன. ஓரளவுக்கு வருகையும் இருந்தது. பல மாவட்டங்களில் இம்முடிவு அமலாகவில்லை.

12.106 சில அரங்கங்களில் மேற்கண்ட 2, 3 தலைப்புகளில் வகுப்பு நடத்தி இருக்கிறார்கள். கோவை மேற்கு மாவட்டத்தில் கட்சி உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்ட வகுப்பிற்கு வராத கட்சி உறுப்பினர்களுக்கு இரண்டாவது முறையாக வகுப்பு நடத்திட விடாப்பிடியான முயற்சி எடுக்கப்பட்டது வரவேற்கத்தக்கது.

12.107 மாவட்ட அளவில் நடத்திய வகுப்புகளில் வரவேண்டியவர்களில் 60 - 70 சதவீதம் வருகை இருந்தது. மாவட்ட அளவில் நடைபெற்ற வகுப்புகளில் கோவை, சென்னை, திருப்பூர், மதுரை போன்ற நகர் மாவட்டங்களில் கூடுதலாகவும், கிராமப்புற மாவட்டங்களில் குறைவாகவும் இருந்தது. வருகையை அதிகப்படுத்திட மேலும் முயற்சிக்க வேண்டும்.

12.108 கோவையில் பயிற்சி பெற்ற அனைத்து தோழர்களையும் மாவட்டங்கள் பயன்படுத்தவில்லை. இருப்பினும் சுமார் 100 தோழர்கள் வகுப்பெடுக்கும் ஆசிரியர்களாக உருவாகி இருக்கிறார்கள்.

12.109 கட்சித் திட்டம் தவிர தத்துவம், ஸ்தாபனம் போன்ற தலைப்புகளில் வகுப்புகள் நடந்துள்ளன.

12.110 துணைக்குழு உறுப்பினர்களுக்கு வகுப்பு நடத்திட தனியாக பாடக் குறிப்பு தயார் செய்து மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. பெரும்பாலான மாவட்டங்களில் வகுப்புக்கள் நடந்துள்ளன. வருகை மிகவும் குறைவாக இருந்தது. சில மாவட்டங்களில் முயற்சி இல்லை.

12.111 “அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும், கட்சிக் கல்வி” என்று முடிவு செய்தோம். அமலாக்கிட இயலவில்லை.

12.112 வகுப்புவாதத்தை எதிர் கொள்வதற்கு உரிய செயல் திட்டத்தை உருவாக்கிட வேண்டுமென்று பரவலாக வந்த கருத்தின் அடிப்படையில் பேராசிரியர் கே.என். பணிக்கர் கலந்து கொண்ட இரண்டு நாள் பட்டறையை கோவையில் நடத்தினோம். மாநிலம் முழுவதுமிருந்து 80 தோழர்கள் கலந்து கொண்டார்கள். பட்டறையில் உருவாக்கிய ஆவணத்தை மாநிலக்குழு இறுதிப்படுத்தி மாவட்டக்குழுக்களுக்கு அமலாக்கத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டது.

12.113 கட்சிக் கல்வி அளிக்க எடுக்கப்பட்ட முயற்சி பெரும்பாலும், இடைக்கமிட்டி உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள் அளவிலேயே நின்று விட்டது. பெரும்பாலான கட்சி உறுப்பினர்களுக்கு கட்சிக் கல்வி அளிக்க முடியவில்லை. கட்சி உறுப்பினர்களின் தரம் உயராததற்கு இதுவும் ஒரு காரணம். அனைத்து கட்சிக் உறுப்பினர்களுக்கும் அடிப்படை அம்சங்களில் கட்சி கல்வி அளிக்காமல், வெகுஜன புரட்சிக் கட்சிக் என்பது சாத்தியமில்லை. கட்சிக் கல்விக்கான தேவை அதிகமாக உள்ளது. இதை ஈடு கொடுக்கும் அளவிற்கு விரிவாக திட்டமிட வேண்டும். மாவட்ட அளவில் இரண்டு நாள் வகுப்போடு பல மாவட்டக்குழுக்கள் திருப்தி அடைந்து விடுகின்றன. இது போதுமானதல்ல. ஏற்கனவே நாம் உருவாக்கிய பாடக்குறிப்புகளில் ‘பெண்ணுரிமை ஒரு மார்க்சிய பார்வை’ என்ற தலைப்பில் பல மாவட்டங்களில் வகுப்புகள் நடத்திட முன்முயற்சி இல்லை.

12.114 ஒன்றிய, வட்ட, நகர அளவில், ஒரு இடைக்குழுவில் கட்சி உறுப்பினர்கள் 100க்கு மேல் இருந்தால் இடைக்குழுவை இரண்டு - மூன்று பகுதிகளாக பிரித்து, வகுப்புகள் நடத்திட திட்டமிட வேண்டும்.

12.115 பல கட்சிப் பணிகளைக் காரணம் காட்டி, மாவட்டக்குழுக்கள் வகுப்புகளை நடத்தாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்கு மாநில அளவில் ஒரு குறிப்பிட்ட காலத்தை கட்சி கல்விக்கு என்று ஒதுக்கிட வேண்டும்.

12.116 34 மாவட்டக்குழுக்களிலும் பல அரங்கங்களிலும், பரவலாக ஒரு லட்சம் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட தமிழகத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சி கல்வி அளிக்க வேண்டும் என்றால், பரவலாக்கப்பட்ட முறையில்தான் செய்திட முடியும். இருப்பினும் வகுப்பெடுக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்திட, பல மட்டத்தில் உள்ள முக்கிய ஊழியர்களுக்கு மையப்படுத்தி வகுப்புகள் நடத்திட திருச்சியை மையமாகக் கொண்டு கட்சி கல்விக்கான ஒரு பள்ளியை உருவாக்குவதற்கு எதிர்காலத்தில் நாம் திட்டமிட வேண்டியுள்ளது.

12.117 கடந்த மாநில மாநாடு சுட்டிக்காட்டியதைப் போல், கட்சிக் கல்வி என்பது பல பரிமாணங்களைக் கொண்டது.

“கட்சிக் கல்வி என்பது வகுப்பு எடுப்பது மட்டுமல்ல; எல்லா நிலையிலும் உள்ள கட்சி அணிகள் தங்களுடைய சொந்த அனுபவத்தில் கற்றுக் கொள்வதும் கட்சி கல்வியின் ஒரு பகுதியென நெறிப்படுத்தும் ஆவணம் கூறுகிறது. கிளைக் கூட்டத்தில் அல்லது தான் இருக்கும் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்வது, பேரவை மற்றும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது, போராட்டத்தில் கலந்து கொள்வது, போராட்டத்தை பரிசீலிப்பது போன்ற பணிகளும் சேர்ந்ததுதான் கட்சிக் கல்வி. இப்படிப்பட்ட அனுபவத்தை கட்சி அணிகள் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். இத்துடன் தீக்கதிர் மற்றும் கட்சிப் பத்திரிக்கைகளையும், பிரசுரங்களையும், நூல்களையும் படிக்க கட்சியணிகளை ஊக்குவித்திட வேண்டும்.”

சுயகல்வி

12.118 நூல்கள் படிக்கும் பழக்கத்தை, வாசிப்பு இயக்கமாக நடத்திட மாவட்டக்குழுக்கள் நூலகங்கள் திறப்பதோடு நூல்கள் விற்பனைக்கும் திட்டமிட வேண்டும் என முடிவு செய்தோம். வடசென்னை, தென்சென்னை, புதுவை, கோவை மேற்கு, திருச்சி, கோவை கிழக்கு, விருதுநகர், மதுரை, தஞ்சை, நெல்லை, குமரி, திண்டுக்கல், கரூர் ஆகியமாவட்டங்களில் மாவட்டக்குழுக்களின் முன் முயற்சியால் நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. துவங்கப்பட்டுள்ள

நூலகங்களை திறம்பட இயக்குவதோடு எல்லா மாவட்டங்களிலும் நூலகங்கள் திறந்திட முயற்சிக்க வேண்டும்.

பாரதி புத்தகாலயம்

12.119 இடதுசாரி - முற்போக்கு கருத்துக்களை உள்ளடக்கி ஏராளமான நூல்களை பல பதிப்பகங்கள் வெளியிட்டு வருகின்றன. இத்தகைய நூல்களை நமது கட்சி அணிகள் வாங்கிட உதவிடவும், பல புதிய தலைப்புகளில் நூல்களை வெளியிடவும் பாரதி புத்தகாலயம் துவக்கப்பட்டது. புத்தகாலயத்திற்கு உறுப்பினர்கள் சேர்ப்பதென்று முடிவு செய்து இதுவரை 2000 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நாம் வெளியிடும் நூல்களையும், வேறுபல பதிப்பகங்கள் வெளிடும் நூல்களையும் புத்தகாலய உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்திட "புதிய புத்தகம் பேசுது" என்ற மாத இதழையும் நடத்தி வருகிறோம். இதுவரை 25 தலைப்புகளில் நூல்கள் வெளியிட்டுள்ளோம்.

12.120 பாரதி புத்தகாலயம், புத்தகம் பேசுது உருவாக்கிட மாநிலக்குழு எடுத்த முயற்சிக்கு கட்சி அணிகள் மத்தியில் நல்ல வரவேற்புள்ளது.

12.121 பாரதி புத்தகாலயத்தோடு இணைந்து புத்தக விற்பனை நிலையங்களை பல மாவட்டங்களில் தனிப்பட்ட முறையில் கட்சித் தோழர்களும் கட்சியின் மாவட்டக்குழுக்களும் துவங்கியுள்ளன. பல மாவட்டங்களில் மாவட்டக்குழு அலுவலகங்களில் புத்தக விற்பனை நடந்து வருகிறது. திருப்பூரில் கடந்த இரண்டு ஆண்டுகளாக அம்மாவட்டக்குழு முன்முயற்சியில் புத்தக கண்காட்சி நடத்துவது குறிப்பிடத்தக்கது. சிவகாசியில் கட்சி முன்முயற்சியில் 10 நாட்கள் சிறப்பு புத்தக விற்பனை நடைபெற்றது. மேலும் சென்னை, திருச்சி, மதுரை, காரைக்குடி, நெய்வேலி ஆகிய நகரங்களில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் பாரதி புத்தகாலயம் பங்கேற்றுள்ளது.

12.122 தற்பொழுது புத்தகங்கள் வாங்கும் ழக்கமும், படிக்கும் பழக்கமும் அதிகரித்து வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் புத்தக விற்பனைக்கு ஏற்பாடு செய்து கட்சி அணிகளின் தரத்தை உயர்த்திட முயற்சிக்க வேண்டும்.

ஆய்வு மையம்

12.123 மாநிலத்தின் சமூக, பொருளாதார பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்திட கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்தில் இருந்து செயல்படும் திட்டத்தோடு ஆய்வு மையம் துவக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் காலங்களில் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

12.124 எதிர்காலத்தில் கட்சி உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள், இடைக்கமிட்டி உறுப்பினர்கள், மாவட்டக்குழு உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், முழுநேர ஊழியர்கள் ஆகிய தோழர்களுக்கு பயிற்சி அளித்திட தனித்தனியே பிரத்தியேகமான பாடக்குறிப்பு தயார் செய்வதோடு, கட்சித் திட்டம், தத்துவம், ஸ்தாபனம் போன்ற தலைப்புகள் அல்லாமல் வரலாறு, பொருளாதாரம், கலாச்சாரம், நேர நிர்வாகம், தலைமைப்பண்பு, வேலைக்கு திட்டமிடுதல் போன்ற பொதுவான தலைப்புகளில் பாடக்குறிப்பு தயார் செய்து வகுப்பெடுக்க திட்டமிட வேண்டும். மேலும் ***"அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் கட்சிக் கல்வி"*** என்ற முழக்கத்தை அடுத்த மூன்று ஆண்டுகளில் அமலாக்கிட முயற்சி செய்ய வேண்டும்.

12.125 கட்சிக் கல்வி, சுயகல்வி, நூலகங்கள் மற்றும் புத்தக விற்பனை நிலையங்கள் துவங்குவது போன்ற பணிகளை திட்டமிடவும், அமலாக்கிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய பணி மாவட்ட கட்சிக் கல்வி உப குழுக்களைச் சாரும். எல்லா மாவட்டங்களிலும் உபகுழுக்கள் உள்ளன. இருப்பினும் சரியாக செயல்படவில்லை. சில மாவட்டங்களில் உபகுழுக்கள் செயல்படுகின்றன. மாவட்டங்களில் மேற்கண்ட பணி எவ்வாறு நடைபெறுகிறது என்பதை பரிசீலிப்பதற்காக மாவட்ட கட்சிக் கல்விக்குழு பொறுப்பாளர்களைக் கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. இது பயனுள்ளதாக இருந்தது. மாநில கட்சிக் கல்வி உபகுழு மேற்கண்ட பணிகளுக்கு திட்டமிட ஏழு முறை கூடியுள்ளது.

பிரசுர விற்பனை

12.126 கட்சியின் சார்பில் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் கட்சி நடத்திய இயக்கங்களை யொட்டி பல தலைப்புகளில் சிறு பிரசுரங்கள் வெளியிட்டுள்ளோம். கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்டக்குழுக்கள் இத்தகைய பிரசுரங்களை விற்பனை செய்திட முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் பிரசுர விற்பனையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, குஜராத் பற்றிய பிரசுரம் 1,36,000, காயும் தமிழகம் - கதறும் கைத்தறி 1,00,000, ஈராக் போர் 1,60,000, இருண்ட காலம் (மின்சாரம்) 1,26,000, தேசம் காக்க அணிதிரள்வோம் 1,00,000, பாஜக - அதிமுகவை முறியடிப்போம் 3,00,000, நாடாளுமன்றத் தேர்தல் 2,10,000, மேற்குவங்க சாதனை 1,50,000 பிரதிகள் விற்பனையாகியுள்ளன. விற்பனையில் வடசென்னை, தென்சென்னை, கோவை (கிழக்கு), கோவை (மேற்கு), மதுரை (மாநகர்) நல்ல முயற்சிகள் மேற்கொண்டன. பெரும்பாலான மாவட்டங்களில் விற்பனை ஓரளவுக்கு அதிகரித்துள்ளது. இதிலும் சில மாவட்டக்குழுக்கள் வாய்ப்புக்கேற்ற அளவில் விற்பனை செய்யவில்லை. நமது அரசியல் நிலைபாட்டை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்றிட வரும்காலத்தில் இன்னும் பல மடங்கு பிரசுரம் வெளியிடவும், விற்பனை செய்திடவும் நாம் திட்டமிட வேண்டும்.

நமது கட்சியின் மத்தியக்குழு நிறைவேற்றும் அரசியல் தீர்மானத்தை பிரசுரமாக கொண்டு வருகிறோம் இது கட்சி அணிகள் முழுமைக்கும் எடுத்துச் செல்லப்படவில்லை. இதிலும் மாவட்டக்குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் மற்றும் பிரசுரங்கள்

12.127 சென்ற 17வது மாநில மாநாட்டு அறிக்கையில் தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் ஆகிய நமது கட்சியின் தினசரி, இலக்கிய, தத்துவார்த்த பத்திரிகைகள் விற்பனைக்கு குறியீடுகளை நிர்ணயித்திருந்தோம்.

* தீக்கதிர் சென்னைப் பதிப்பிலுள்ள 11 மாவட்டக் குழுக்கள் 7 ஆயிரம் பிரதிகளும்,
* மதுரைப் பதிப்பிலுள்ள 23 மாவட்டக் குழுக்கள் 13 ஆயிரம் பிரதிகளும் விற்பனை செய்ய மாவட்டக்குழுக்கள் முன்வரவேண்டுமென குறிப்பிட்டிருந்தோம்.
* இத்துடன் செம்மலர் 25000 பிரதிகளும், மார்க்சிஸ்ட் 15000 பிரதிகளும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தோம்.

தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட் விற்பனை விபரம்

	கடந்த மாநாட்டின்போது	தற்போது
தீக்கதிர் இரு பதிப்புகளும்	10200	13002
செம்மலர்	14400	14000
மார்க்சிஸ்ட்	8000	7000

(மாவட்ட வாரியான விபரம் பட்டியலில் தரப்பட்டுள்ளது)

12.128 இக் காலத்தில் தீக்கதிர் விற்பனையில் கடந்த மாநாட்டைக் காட்டிலும் சுமார் 2800 பிரதிகள் விற்பனையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. செம்மலர், மார்க்சிஸ்ட் விற்பனையில் குறைவு ஏற்பட்டுள்ளது. விற்பனையைத் தக்கவைத்து உயர்த்துவதற்கு கூடுதல் கவனம் அவசியமாக உள்ளது.

12.129 இக்காலத்தில் பிரசுர விற்பனையில் மாவட்டக் குழுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த மாநாட்டு அறிக்கையில் குறிப்பிட்ட அடிப்படையில் சில பிரசுரங்களை லட்சக் கணக்கில் நம்மால் கொண்டுசெல்ல முடிந்துள்ளது. ஆயினும் நமது கட்சியின் அரசியல் தேவைக்கு ஏற்றவாறு பிரசுர விற்பனயில் அனைத்து மாவட்டக் குழுக்களும் களம் இறங்கினால் மேலும் கூடுதலான பிரதிகளை விற்பனைக்குக் கொண்டுசெல்ல முடியும்.

தீக்கதிர்

12.130 தீக்கதிர் மதுரை மற்றும் சென்னைப் பதிப்புகள் இரண்டுமே பத்திரிகை அச்சிட்டு விநியோகிப்பதில் நஷ்டத்தை ஏற்று செயல்பட வேண்டியள்ளது. விளம்பர சேகரிப்பு மற்றும் ஜாப் ஒர்க் பணிகளில் கிடைக்கும் வருவாய் மூலம் நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டியுள்ளது. கோவை கிழக்கு மாவட்டக்குழு கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 11 லட்சத்திற்கு விளம்பரம் பிடித்துக் கொடுத்தது பாராட்டத்தக்கது.

12.131 இக் காலத்தில் மதுரைப் பதிப்பில் ஜாப் ஒர்க் வருவாயைக் கூட்டிட டெலிபோன் டைரக்டரி அச்சிடும் பணியை மேற்கொண்டோம். இப் பணியில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் நாமே நேரடியாக செங்கல்பட்டு டெலிபோன் டைரக்டரி டெண்டர் எடுத்து பணியை நிறைவு செய்துள்ளோம். இத்துறையில் இன்னும் கூடுதலாக முன்னேறும் வாய்ப்பு உள்ளது. சென்னைப் பதிப்பிலும் ஜாப் வருவாயைக் கூடுதலாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

12.132 ஜாப் ஒர்க் மற்றும் தீக்கதிர் அச்சின் தரத்தை முன்னேற்றும் வகையில் மதுரைப் பதிப்பில் புதிய வெப் ஆப்செட் இயந்திரம், பலமுனை பைண்டிங் இயந்திரம் வாங்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது மதுரையில் உள்ள அச்சு இயந்திரம், பைண்டிங் இயந்திரத்தை சென்னைப் பதிப்பிற்குக் கொண்டுவர முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் இரு பதிப்பிலும் ஜாப் ஒர்க் மூலம் வருவாயை அதிகரிக்க இயலும். சென்னைப் பதிப்பின் நஷ்டத்தைக் குறைப்பதற்கும் பயன்படும்.

12.133 தீக்கதிர் நஷ்டத்தை ஈடுகட்ட விளம்பரம் உதவிபுரிகிறது. கடந்த மாநாட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் அரசு மற்றும் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரம் கிடைக்காத நிலையில், கட்சியின் மாவட்டக் குழுக்கள் மூலம் கட்சி மற்றும் வர்க்க வெகுஜன ஸ்தாபனங்கள் நடத்தும் நிகழ்ச்சிகள், கட்சித் தோழர்களின் குடும்ப நிகழ்ச்சிகள் மூலமே விளம்பரங்கள் வருகின்றன. இதற்கு மாவட்டக் குழுக்களின் ஒத்துழைப்பை மேலும் கூடுதலாக்குவது அவசியமாகும்.

விற்பனையை அதிகரிக்க முயற்சிகள்

12.134 இக்காலத்தில் தீக்கதிர் விற்பனையை அதிகரிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தீக்கதிர் விற்பனையை மேம்படுத்த மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இரண்டு பதிப்பிலும் இரு முறை நடத்தப்பட்டுள்ளது.

12.135 மாவட்டச் செயற்குழு, மாவட்டக்குழு கூட்டங்களில் மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள், தீக்குதிர் நிர்வாகிகள் கலந்துகொண்டு பத்திரிகை எண்ணிக்கை உயர்வு ,விளம்பரம், செம்மலர், மார்க்சிஸ்ட் மற்றும் பிரசுரங்கள் விற்பனையை உயர்த்துவது சம்பந்தமாக விரிவாகப் பேசி திட்டமிடப்படுகிறது.

12.136 மாவட்ட வாரியாக ஏஜண்டுகள் மற்றும் இடைக்கமிட்டிச் செயலாளர்களின் கூட்டங்கள் பெரும்பாலான மாவட்டங்களில் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. மாநிலக்குழு கூட்டங்களிலும் இதுபற்றி விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

12.137 இக் காலத்தில் சிறப்பு விற்பனை இயக்கங்கள் மூலம் பத்திரிகை விற்பனையை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தேசம் காப்போம் பிரச்சார இயக்கச் சிறப்பிதழ் 1 லட்சம் பிரதிகள், 2004 ஆகஸ்ட் 25இல் பிரச்சார இயக்க சிறப்பிதழ் 1,40,000 பிரதிகள், சர்வதேச பெண்கள் தின சிறப்பிதழ் 60 ஆயிரம் பிரதிகள் ஆகியன இவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இவைதவிர தேர்தல் காலத்தில் இரு பதிப்பிலும் 6 ஆயிரம் பிரதிகள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

12.138 இக் காலத்தில் விற்பனையை உயர்த்தும் வகையில் சந்தா சேர்ப்பு இயக்கத்திற்கு திட்டமிடப்பட்டது. கோவை கிழக்கு மாவட்டக்குழு 420, தேனி மாவட்டக்குழு 150, திண்டுக்கல் மாவட்டக்குழு 225, கோவை 165, நாகை 130, திருவாரூர் 110, விருதுநகர் மாவட்டக்குழு 20, நெல்லை மாவட்டக்குழு 25 பிரதிகள் என ஓராண்டு, ஆறு மாத, மூன்று மாத, ஒரு மாத சந்தா

மூலம் எண்ணிக்கையில் விற்பனை உயர்த்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டக்குழுக்களும் இம்முயற்சியை தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் இன்றுள்ள விற்பனையை இரட்டிப்பாக்க முடியும்.

12.139 மாவட்டங்களில் பத்திரிகை, பிரசுரங்கள் விற்பனைக்கென மாவட்டச் செயற்குழுத் தோழர் ஒருவரை தனிப் பொறுப்பு கொடுத்து, கவனித்து இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று மாநிலக்குழு எடுத்த முடிவு பெரும்பாலன மாவட்டங்களில் அமலாக்கப்பட்டுள்ளது. ஆயினும் பல பொறுப்புகளுக்கு மத்தியில் இந்தப் பணியினையும், இதற்குப் பொறுப்பாக உள்ள செயற்குழு தோழர்கள் கவனிக்க வேண்டியுள்ளது. இதில் மாற்றம் கொண்டுவருவது அவசியமாகும்.

12.140 இக் காலத்தில் தீக்கதிர் விநியோகிப்பதில் மாவட்டக்குழுக்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளது. இருப்பினும் பில் தொகை செலுத்தாமல் நிறுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்படுவது தொடர்கிறது. நின்றுபோன பத்திரிகையை உடனுக்குடன் தலையிட்டு, விநியோகத்தில் தடையில்லாது உத்தரவாதப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இது தற்போது ஏற்பட்டுள்ள விற்பனை உயர்வை தக்கவைத்து மேலும் உயர்த்திட மிகவும் உதவிகரமாக இருக்கும்.

தீக்கதிர் உள்ளடக்கம்

12.141 இக் காலத்தில் தீக்கதிர் உள்ளடக்கத்தில் மாற்றங்கள் கொண்டுவர தீக்கதிர் சப்-கமிட்டியும், ஆசிரியர் குழுவும் தொடர்ந்து விவாதித்து முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. உள்ளடக்கம், வடிவமைப்பில் முன்பை விட மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

12.142 இரு பதிப்பிலும் ஆசிரியர் குழு கூட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டு, பணிகள் பரிசீலிக்கப்பட்டு மேம்படுத்தப்படுகிறது. கட்சி செய்திகளை உரிய முக்கியத்துவத்துடன் வெளியிட கூடுதல் அக்கறை செலுத்தப்படுகிறது. அதேநேரத்தில் புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு பத்திரிகையின் வெகுஜனத் தன்மையை உயர்த்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12.143 நாடாளுமன்ற தேர்தல்காலப் பணிகள் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. கோவை, குமரி என இரு பதிப்புகளை வெளியிட்டு கூடுதலாகச் செய்திகள் தரப்பட்டன. தேர்தல்காலப் பிரச்சாரத்திற்குப் பயன்படும் வகையில் தீக்கதிர் வெளிக்கொணரப்பட்டது. மத்தியக்குழு உறுப்பினர் தோழர் கே.வரதராஜன் அவர்கள் மதுரைப் பதிப்பில் தங்கியிருந்து பணிகளை ஒருங்கிணைத்து வழிகாட்டியது பேருதவியாக இருந்தது.

நிருபர்கள் ஏற்பாடு

12.144 மாவட்டச் செய்திகளைக் கூடுதலாகப் பிரசுரிப்பது, விளம்பரம் பெறுவது என்ற அடிப்படையில் மாவட்டத்திற்கு ஒரு நிருபர் என்று இலக்கு நிர்ணயித்தோம். பெரும்பாலான மாவட்டக் குழுக்களில் நிருபர் ஏற்பாடு இக் காலத்தில் செய்யப்பட்டுள்ளது. மேலும் சில மாவட்டங்களில் நிருபர்கள் நியமிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12.145 இரு பதிப்பிலும் நிருபர்கள் கூட்டம் தொடர்ந்து நடத்தப்படுகிறது. ஆயினும் நிருபர்களின் திறன்களை வளர்ப்பதற்குக் கூடுதல் பயிற்சி தேவைப்படுகிறது. நிருபர்களின் பணியை தங்குதடையின்றி மேற்கொள்ள மாவட்டக்குழுக்களின் உதவி அவசியமாக உள்ளது.

பிரசுர விற்பனை

12.146 இக்காலத்தில் கொண்டுவரப்பட்ட பிரசுரங்கள் பற்றிய விபரம் ஏற்கனவே தரப்பட்டுள்ளது. கடந்த மாநாட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள “மாதம் ஒருநாள் நமது மாநிலத்தில் உள்ள கட்சிக் கிளைகள் முழுவதும் பிரசுர விற்பனை இயக்கத்தைக் கொண்டுசெல்வது” என்கிற முடிவினை அமலாக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மார்க்சிஸ்ட் மாத இதழ்

12.147 தமிழகத்தில் இன்று சித்தாந்த மேலாதிக்கம் செலுத்தும் பூர்சுவா இனவாத, பூர்சுவா தாராளவாத கருத்துக்களை எதிர்த்து நடத்தும் இயக்கத்தில், ஒரு சித்தாந்த இதழ் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகையில் மார்க்சிஸ்ட் மாத இதழ் கட்சியால் கொண்டு வரப்படுகிறது.

மார்க்சிஸ்ட் மாத இதழ் கொண்டு வருவதன் நோக்கங்களாவன:

அ. கட்சி உறுப்பினர்களின் அரசியல் கல்விக்கு துணையாக

ஆ. நமது கட்சி மற்றும் இடதுசாரி இயக்கத்தின் அரசியல் நிலைபாடுகளின் தத்துவார்த்த அடிப்படையை மக்கள் புரிந்து கொள்ள

இ. பூர்சுவா தாராளவாத, இனவாத சித்தாந்தங்களின் சுரண்டும் வர்க்க சார்பினை அம்பலப்படுத்த

12.148 அரசியல், வரலாறு, கட்சிக் கோட்பாடு, வகுப்புவாதம், அரசியல் பொருளாதாரம், கல்வி, மூடநம்பிக்கைகளை எதிர்க்க விஞ்ஞான விளக்கம் போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் வந்துள்ளன. நூல் அறிமுகங்கள் இடம் பெற்றுள்ளன. கலை - இலக்கிய பிரச்சினைகள் பற்றி எதுவும் எழுதப்படவில்லை என்பது பெரும் குறையே. கட்சியிலிருக்கும் படைப்பாளிகளின் ஒத்துழைப்பை பெற ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. சிலரே பங்களிக்கிறார்கள். ஆசிரியர் குழு தரப்பிலும் முயற்சிகள் போதாது. படைப்பாளிகளை வற்புறுத்தி கட்டுரைகளை வாங்குவதிலும், புதிய படைப்பாளிகளைத் தேடுவதிலும் கூடுதல் அக்கறை தேவைப்படுகிறது.

12.149 ஆசிரியர் குழுக் கூட்டம் முழுப் பங்கேற்புடன் கூடுவது குறைவு. டெலிபோன், இ-மெயில் மூலம் கருத்துக்கள் பரிமாறும் பழக்கமுண்டு. ஒரு கட்டுரையை பதிப்பிக்கவோ, நிராகரிக்கவோ இருவர் அல்லது மூவர் படித்த பிறகே முடிவு செய்யப்படுகிறது. முடிந்த வரை ஆசிரியர் குழுவின் முடிவுகளாக்கி செயல்படும் நிலைமை உள்ளது. ஆனால் ஆசிரியர் குழு முழுமையாக கூடி விவாதித்து முடிவு எடுக்கும் நிலை இன்னும் வரவில்லை.

12.150 மார்க்சிஸ்ட் விற்பனை துவக்க காலத்திலிருந்து இன்றுவரை மாறாமலே உள்ளது. மாவட்டக்குழுக்கள் இதில் கவனம் செலுத்தினால் நல்லது.

12.151 மாவட்ட வாரியான பட்டியல் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பட்டியல் சராசரி 7000-தை தாண்டவில்லை என்பது தெளிவாக்குகிறது.

12.152 விற்பனையை அதிகப்படுத்தவும், தரத்தை உயர்த்தவும், பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை முன்வைத்து பேசினால் உதவிகரமாக இருக்கும்.

செம்மலர்:

12.153 கட்சியின் கலை-இலக்கிய மாத இதழாகிய செம்மலர் சிறுகதையாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் முக்கிய இடமளித்து வருகிறது. சமூக , அரசியல் - இலக்கிய பிரச்சனைகள் குறித்த கட்டுரைகள், பேட்டிகள் வெளியிடப்படுகின்றன. தொடர்ந்து கேள்வி - பதில் இடம் பெறுகிறது. பல அரசியல் - கலை - இலக்கிய பிரச்சினைகள் குறித்து நமது கட்சித் தலைவர்களின் சிறப்பு பேட்டி வெளியிடப்பட்டுள்ளது.

12.154 தரம், ஜனரஞ்சகம் என இரண்டையும் இணைத்து தீவிர மற்றும் சராசரி வாசகர்களை ஈர்க்க முயற்சிக்கப்படுகிறது. மாதந்தோறும் ஆசிரியர்குழுக் கூட்டம் நடைபெறுகிறது.

12.155 முந்தைய இதழ் பரிசிலிக்கப்பட்டு அடுத்த இதழுக்கு திட்டமிடப்படுகிறது. விற்பனையைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்திருக்கிறதே தவிர அதிகப்படுத்த முடியவில்லை. கலை - இலக்கியப் பத்திரிகை என்ற முறையில் கட்சிக் குடும்பங்கள் மற்றும் வெகுஜன அரங்க வட்டாரத்தில் இதைக் கொண்டு செல்ல தனி முயற்சி எடுக்கப்பட்டால் விற்பனையைப் பெருக்க முடியும். அதற்கு ஏதுவாக உள்ளடக்கத்திலும் தொடர்ந்து மாறுதல்கள் செய்ய வேண்டியுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள்

12.156 கடந்த உள்ளாட்சி தேர்தல் முடிந்தவுடன் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தோழர்களுக்கு நான்கு மையங்களில் பயிற்சி முகாம் நடத்தினோம். 1996-2001 ஆண்டுகளில் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் நம்முடைய செயல்பாடு இருக்க வேண்டும் என முடிவு செய்தோம்.

12.157 மாநில அரசு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாததாலும், ஊராட்சிகளுக்கு போதுமான வருவாய் இல்லாததாலும், பெரும்பாலான ஊராட்சி அமைப்புகள் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட ஊராட்சிளும், வரும் திட்டங்களை ஒன்றியங்களுக்கு, ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யும் பணியைத்தான் செய்து வருகிறது. எனவே மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் வளர்ச்சி பணிகளுக்கு திட்டமிட நிதி ஆதாரமும் இல்லை; போதுமான அதிகாரமும் இல்லை. இவ்வமைப்புகள் மாநில அரசும் மத்திய அரசும் அளிக்கும் திட்டங்களை அமலாக்கிடும் ஏஜென்சிகளாகவே செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டையும் இருக்கும் அதிகாரத்தையும் முறையாக பயன்படுத்திட வேண்டும் என மாநில உபகுழு வழிகாட்டியது.

12.158 முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கட் தொகையை கொண்ட பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும், இதற்கு கீழ்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட பேரூராட்சிகளை ஊராட்சிகளாகவும் மாற்றுவது என அரசு அறிவித்தது. இதில் உள்ள சாதக, பாதக அம்சங்களை சுட்டிக்காட்டி மாற்றம் ஏற்பட்டாலும் பேரூராட்சிகளில் உள்ள நிர்வாக ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்கக் கூடாது என கட்சியின் சார்பில் வலியுறுத்தினோம். அரசு அறிவித்த முடிவின்படி முப்பதாயிரம் மக்கள் தொகைக்கு கீழே உள்ள பேரூராட்சிகளை ஊராட்சிகளாக அறிவித்தாலும் நிர்வாக ஊழியர்கள் எண்ணிக்கை குறையாது என அரசு அறிவித்தது. ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ள அமைப்புகளின் செயல்பாட்டினை புதிய அனுபவத்தின் அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும்.

12.159 நகராட்சி, மாநகராட்சி அமைப்புகளில் அஇஅதிமுக, திமுக உறுப்பினர்கள் மக்கள் நலனை புறக்கணித்து விட்டு, அரசியல் லாவணி பாடுகிறார்கள். மக்கள் பிரச்சினைகள் மீது முறையான விவாதம் நடைபெறுவதில்லை. முறைகேடுகளில் ஈடுபடுவதில் ஆளும் கட்சி - எதிர்க்கட்சிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்படுவதில்லை. சென்னை மாநகராட்சி மன்றத்தில் ஆளும் கட்சியினர் மன்றத்தை முறையாக நடத்துவதில்லை. அதே நேரத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தில் உள்ள திமுக-காங்கிரஸ் உறுப்பினர்களும் முறையாக நடந்து கொள்வதில்லை. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நமது தோழர்கள் மக்கள் பிரச்சினைகளை வலியுறுத்தி வருகிறார்கள்.

12.160 “உள்ளாட்சி தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்தால், ஊழலற்ற, நேர்மையான நிர்வாகத்தை அளிப்பார்கள் என்று வாக்குறுதி அளித்தோம்.”

12.161 நமது கட்சி அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் நமது உள்ளாட்சி பிரதிநிதிகள் செயல்படுகிறார்களா? என்பதை சம்பந்தப்பட்ட கிளைகளும், இடைக்கமிட்டிகளும், மாவட்டக்குழுக்களும் பரிசீலனை செய்து மாநிலக்குழுவிற்கு அறிக்கை அனுப்பிட வேண்டும் என்று முடிவு செய்தோம். இதனடிப்படையில் பரிசீலனை மாநிலம் முழுவதும் நடைபெறவில்லை. திருப்பூர், கோவை, மதுரை போன்ற மாவட்டங்களில் மட்டுமே ஓரளவுக்கு பரிசீலனை நடந்துள்ளது.

12.162 திருப்பூர், கோவை, நாகை, திருவாரூர், மதுரை, குமரி ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அளவிலான உள்ளாட்சி பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றுள்ளது. இக்கூட்டத்தில் நமது பிரதிநிதிகளின் செயல்பாடு பரிசீலிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் சம்பந்தப்பட்ட கட்சி கமிட்டிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் செயல்பாடு பற்றி பரிசீலனை செய்தால்தான் குறைபாடுகளை கண்டறிய முடியும்; களைய முடியும்.

12.163 உள்ளாட்சி நிர்வாகம் என்பது நகர, கிராம அளவில் ஒரு அதிகார மையம். அந்த நிர்வாகத்தை கைப்பற்றுவதன் மூலம் மக்களோடு தொடர்பு கொள்ள, சமூக நலத் திட்டங்களை அமலாக்க இயலும். இதன் மூலம் கட்சி மற்றும் வெகுஜன அமைப்பின் வளர்ச்சிக்கு வழிவகுக்க முடியும்.

இத்தகைய நமது நோக்கத்தை நிறைவேற்ற சென்னை, கோவை, மதுரை, திருப்பூர் போன்ற மாவட்டங்களில் நமது உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஓரளவுக்கு உறுதியாக போராடி வருகிறார்கள். ஆனால், பல மாவட்டங்களில் இந்த நோக்கம் நிறைவேறவில்லை. நமது தோழர்கள் தலைமையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் முறையாக செயல்படுகின்றனவா என்று கண்காணிக்கும் பொறுப்பு, வழிகாட்டும் பொறுப்பு கிளைகளையும், இடைக்கமிட்டிகளையுமே சாரும். இதற்கு மாவட்டக்குழுவும் உதவி செய்திட வேண்டும். நமது உள்ளாட்சி பிரதிநிதிகளின் செயல்பாட்டில் குறைபாடும், முறைகேடுகளும் உள்ளன என்று இடைக்கமிட்டி, மாவட்ட மாநாட்டு விவாதங்களில் வெளிப்பட்டது. நமது கட்சி தோழர்கள் தலைமையில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மற்ற கட்சி தலைமையிலான உள்ளாட்சி அமைப்புகளுக்கும் செயல்பாட்டில் வித்தியாசமில்லை என்ற நிலை உருவானால் நமது கட்சியின் மரியாதை பாதிப்பதோடு, கட்சி வளர்ச்சியும் பாதிக்கும். எனவே கட்சியின் மாவட்டக்குழுக்கள் உள்ளாட்சி தலைவர்களுக்கு வழிகாட்டுவதோடு அவர்களின் செயல்பாடுகளில் உள்ள குறைபாடுகளை களையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு இன்னும் ஒண்ணரை ஆண்டுகள் செயல்பட வாய்ப்புள்ளதால் குறைகளை களைந்து மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் அளவிற்கு செயல்பாட்டை செழுமைப்படுத்திட வேண்டும்.

முழுநேர ஊழியர்கள்:

12.164 மாநிலத்தில் கட்சியிலும், வெகுஜன அரங்கங்களிலும் சுமார் 1000 முழுநேர ஊழியர்கள் உள்ளனர். இவர்கள் பணிகளைப் பற்றி கடந்த மாநில மாநாடு கீழ்க்கண்டவாறு கூறியது:

'முழுநேர ஊழியர்களின் பிரச்சனைகளை தீர்க்க உதவி செய்வதோடு அவர்களுக்கு பயிற்சி அளித்து அரசியல் ரீதியாக வளரவும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளை திறம்பட செய்திடவும் கட்சி உதவிட வேண்டும்'.

12.165 முழுநேர ஊழியர்களின் வேலைகளை கடந்த மூன்றாண்டுகளில் சில மாவட்டக்குழுக்களே பரிசீலனை செய்துள்ளன. மாதா மாதம் முழுநேர ஊழியர்களிடம் இருந்து வேலை அறிக்கை பெற்று வேலை அறிக்கைகளின் அடிப்படையில் மாவட்ட செயற்குழு மாவட்டக்குழுக்கள் பரிசீலிக்க வேண்டும். இத்தகைய முயற்சிகளை கோவை, திருப்பூர், தூத்துக்குடி, விருதுநகர், வடசென்னை, தென்சென்னை போன்ற மாவட்டங்கள் செய்துள்ளன. சில மாவட்டங்கள் மூன்றாண்டுகளில் ஓரிருமுறை பரிசீலித்துள்ளன. பல முழுநேர ஊழியர்களின் வேலைகளில் தேக்கம் ஏற்பட்டுள்ளது.

12.166 அன்றாட வேலைகளில் மூழ்கி, தத்துவார்த்த ரீதியில் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு நூல்கள், இதழ்கள் படிப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை என்று முழுநேர ஊழியர்கள் கூறுகின்றனர். தொடர்ச்சியான வேலை இருக்கும் என்றாலும் வேலைகளை திட்டமிடுகிறபோது, படிப்பதற்கு என்று நேரம் ஒதுக்கிட பெரும்பாலான முழுநேர ஊழியர்கள் முயற்சிப்பதில்லை. நேர நிர்வாகம், தலைமை பண்பு உள்ளிட்ட பல அம்சங்களில் முழுநேர ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

12.167 முழுநேர ஊழியர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை செய்கிறார்களா? என்று பரிசீலிக்க வேண்டியுள்ளது. சில மாவட்டங்களில் கட்சிக்கு, வெகுஜன அரங்கத்திற்கு அப்பாற்பட்ட பல வேலைகளில் முழுநேர ஊழியர்கள் ஈடுபடும் நிலை உள்ளது. இதனால் கட்சிப் பணி பாதிக்கிறது. முழுநேர ஊழியர்கள் மட்டுமல்லாது பகுதி நேர ஊழியர்கள் உட்பட கட்சி அளிக்கும் வேலைகளைச் செய்திட முன்னுரிமை அளிக்கிறார்களா என்பதை பரிசீலித்து வழிகாட்டிட வேண்டும். தொடர்ச்சியாக வேலையில் தேக்கமுற்று, முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பில்லாத முழுநேர ஊழியர்களை விடுவிப்பது குறித்தும் பரிசீலிக்க வேண்டும்.

12.168 மாநிலக்குழு தீர்மானித்த ஊதியம் பல மாவட்டங்களில் இன்னும் வழங்கப்படவில்லை. மாநிலக்குழு தீர்மானித்த ஊதியத்திற்கு குறைவான தொகை வழங்கப்படுகின்ற சில மாவட்டங்களில் கூட மாதா மாதம் வழங்குவதில்லை. மூன்று மாதம் முதல் ஆறு மாதம் வரை

ஊதியம் பாக்கி உள்ள மாவட்டங்களும் உள்ளன. இக்குறைபாட்டை களைய நிதி ஆதாரத்தை பெருக்கிட மாவட்டக்குழுக்கள் திட்டமிட வேண்டும்.

12.169 முழுநேர ஊழியர்களின் வேலையை செழுமைப்படுத்திட, அவர்களுக்கு மாநிலக்குழு தீர்மானித்த ஊதியத்தை வழங்கிட, அவர்களை அரசியல் ரீதியாக வளர்த்திட உதவி செய்வது ஆகிய அனைத்து பணிகளையும் மாவட்டக்குழுக்கள் செய்திட வேண்டியுள்ளது. முழுநேர ஊழியர்களுக்கு 'மருத்துவ காப்பீடு' ஏற்பாடு செய்ய திட்டமிட வேண்டும்.

12.170 மாவட்டங்களில் முழுநேர ஊழியர்களின் வேலை, முழுநேர ஊழியர்களின் எண்ணிக்கை, ஊதியம், அவர்களது அரசியல் வளர்ச்சி போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்து கட்சியின் மாநிலக்குழு பரிசீலனை செய்து பொருத்தமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

சட்டமன்றப் பணி

12.171 நமது கட்சியின் சட்டமன்றக்குழு தலைவராக ஜே. ஹேமசந்திரன், துணைத் தலைவராக கே.சி. கருணாகரன், கொறடாவாக தோழர் என். நன்மாறன் செயல்பட்டு வருகின்றனர். இக்காலத்தில் எதிர்கட்சி வரிசையில் உள்ள உறுப்பினர்களை பேச அனுமதிப்பதில்லை. பேசினாலும் குறுக்கிட்டு நிறுத்துவது என்ற ஜனநாயக விரோத முறையில்தான் சட்டமன்றம் நடத்தப்பட்டது. சட்டமன்ற நடவடிக்கையை விமர்சிக்கிற பத்திரிக்கைகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பது அரசை விமர்சிக்கின்ற உறுப்பினர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பது போன்ற எதேச்சதிகார முறையில் ஆளுங்கட்சி நடந்து கொண்டது. இத்தகைய சூழலில் நமது உறுப்பினர்கள், நமது கட்சி வழிகாட்டுதலின் அடிப்படையில் செயல்பட்டுள்ளனர்.

12.172 சட்டமன்றக் கூட்டம் துவங்குவதற்கு முன்பு நமது உறுப்பினர்கள் கூட்டம் நடத்தி நமது அரசியல் நிலைபாட்டிற்கேற்ப நமது அணுகுமுறை இருக்க வேண்டுமென வழிகாட்டி வருகிறோம். சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற நேரத்திலும் அன்றாடம் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடத்தப்படுகிறது. மாவட்டங்களிலிருந்தும், அரங்கங்களிலிருந்தும் வரும் கடிதங்கள், மனுக்கள் ஆகியவற்றுக்கு அமைச்சர்கள், அதிகாரிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் சந்தித்து தீர்வு காண முயற்சித்து வருகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவி செய்திட ஒரு ஊழியர் பணியாற்றி வருகிறார்.

12.173 துறைவாரி மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிற போது நமது கட்சி சார்பில் பேசுவதற்கு, கேள்வி எழுப்புவதற்கு தகவல்களை மாவட்டக்குழுக்கள் அனுப்பி வைக்க வலியுறுத்தி வந்தாலும் சில மாவட்டங்களே அனுப்புகின்றன. கூட்டத் தொடர் முடிந்து அடுத்து வரும் மாநிலக்குழு கூட்டத்தில் மாநிலக்குழு வேலை அறிக்கை மீதான விவாதத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பணி பற்றியும் விவாதிக்கப்படுகிறது. மாவட்டங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் பணி பற்றி மாவட்ட செயற்குழுக்கள் பரிசீலிக்க வேண்டும்.

12.174 மாநிலக்குழுவின் முடிவின்படி சட்டமன்ற உறுப்பினர்கள் பல மாவட்டங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்கள் பகுதியினரைச் சந்தித்து பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் பல பணிகளை செய்துள்ளனர். சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றுப் பகுதியில் கோகோ கோலா நிறுவனம் தண்ணீர் எடுத்தப் பிரச்சினையிலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவும், கும்பகோணத்தில் பள்ளிக் குழந்தைகள் தீயில் கருகியதை பார்வையிடவும் சென்றுள்ளார்கள். இதுபோல் பல்வேறு பிரச்சினைகளில் தலையிட்டுள்ளனர்.

நாடாளுமன்றப் பணி

12.175 டெல்லியில் தோழர் பி.மோகன், ஏ.வி.பெல்லார்மின் ஆகிய இரண்டு தோழர்களுக்கும் சேர்த்து ஒரு குடியிருப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. கணினி வசதியோடு ஒரு ஊழியர் அங்கிருந்து செயல்பட்டு வருகிறார். மாநிலத்திலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள், மனுக்கள் மீது நடவடிக்கையும்

எடுக்கப்பட்டு வருகிறது. நமது உறுப்பினர்கள் மக்களவையில் எழுப்பும் முக்கியமான பிரச்சினைகளின் பேச்சுக்களை உடனுக்குடன் பெற்று மாநிலக்குழுவிற்கும், பத்திரிகைகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது.

12.176 குறிப்பாக இக்காலத்தில் தோழர் பி.மோகன் தமிழ் செம்மொழி, இந்துஸ்தான் போட்டோ பிலிம், என்.எல்.சி.யில் தனியார்மயம், சேலம் உருக்காலை, பாராளுமன்றத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் படத் திறப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளில் பாராளுமன்றத்தில் குரலெழுப்பியிருக்கிறார். தமிழகத்தில் பல பகுதிகளில் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறபோது, நேரில் சென்றும் நடவடிக்கை எடுத்திடவும் உதவியிருக்கிறார்.

மாநிலக்குழு நிதி நிலை

12.177 மாநிலக்குழுவிற்கு தற்பொழுது சராசரி மாதம் ஒன்றிற்கு ரூ. 2.5 லட்சம் செலவாகிறது. இந்த செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

லெவி மூலம் கடந்த ஆண்டு 2003-04 ரூ. 8.58 லட்சம் வரவு வந்துள்ளது. மாநிலக்குழு செலவிற்காக ஆண்டுதோறும் கட்சி நிதி வசூலித்திட மாநிலக்குழு திட்டமிடுகிறது.

12.178 2002-03இல் ரூ.7.75 இலட்சமும், 2003-04இல் ரூ.10.71 இலட்சமும் மாநிலக்குழுவிற்கு வரவானது. குறிப்பாக கோவை கிழக்கு, கோவை மேற்கு, வடசென்னை, தென்சென்னை, ஈரோடு, மதுரை நகர் போன்ற மாவட்டக்குழுக்கள் மாநிலக்குழு தீர்மானித்திடும் நிதி இலக்கை முறையாக மாநில மையத்திற்கு செலுத்தி வருகிறார்கள். பல மாவட்டங்களில் நிதி வசூல் நடந்திட்டாலும், மாநிலக்குழு தீர்மானித்த இலக்கை மாவட்டக்குழுக்கள் செலுத்துவதில்லை. இக்குறைப்பாட்டை மாவட்டக்குழுக்கள் களைய வேண்டும்.

12.179 மாநிலக்குழு வரவு - செலவு கணக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாநிலக்குழுவில் வைக்கப்படுகிறது. ஆண்டு தோறும் தணிக்கை குழு மாநிலக்குழு வரவு - செலவை தணிக்கை செய்கிறது.

12.180 கட்சியின் மத்தியக்குழு அகில இந்திய அளவிலான வரவு - செலவு கணக்கை வருமான வரித்துறைக்கு அளிப்பதற்கு மாநிலக்குழுக்களிடம் இருந்து வரவு - செலவு கணக்கை கோருகிறது. மாநில வரவு - செலவு கணக்கை உரிய நேரத்தில் தயார் செய்தாலும், பல மாவட்டங்களில் இருந்து மாவட்ட வரவு - செலவு கணக்குகளை அனுப்பாததால், மத்தியக்குழுவிற்கு நாம் வரவு - செலவு கணக்கை அனுப்புவதில் ஆண்டுதோறும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே மாவட்டக்குழுக்கள் உரிய நேரத்தில் வரவு - செலவு கணக்கை முடித்து, மாநிலக்குழுவுக்கு அனுப்பி வைத்திட உத்திரவாதமான ஏற்பாட்டை செய்திட வேண்டும்.

ஓராண்டு வேலைத் திட்டம்

12.181 மாநிலத்தில் கட்சி, வெகுஜன அமைப்புகள், முன்னுரிமை சட்டமன்ற, பாராளுமன்ற தொகுதிகள், பத்திரிகை, பிரசுர விற்பனை என பல்வேறு அம்சங்கள் குறித்து மாநிலக்குழுவில் விரிவாக விவாதித்து ஓராண்டு வேலைத் திட்டத்தை உருவாக்கினோம். மாவட்டக்குழுக்களும் விரிவாக விவாதித்து, திட்டங்களை உருவாக்கின.

12.182 ஓராண்டுக்குள் எந்த அளவுக்கு அமலாக்கிட முடியும் என்று பார்ப்பதற்கு பதிலாக, விரிவான திட்டத்தை உருவாக்கி அகலக்கால் வைத்து விட்டோம். அடுத்தடுத்து வரும் இயக்க ஸ்தாபன வேலைகளை செய்து கொண்டே ஓராண்டு வேலைத் திட்டத்தை அமலாக்கிட வேண்டியிருக்கும் என்பதை உணராமல், விரிவான திட்டத்தை உருவாக்கியதால் அமலாக்கிட இயலவில்லை.

12.183 தொடர்ச்சியான வேலைகளை சந்திக்க வேண்டியிருந்ததால், மாநிலக்குழுவும் ஓராண்டு வேலைத் திட்டத்தை அமலாக்கிட கவனம் செலுத்திட இயலவில்லை. மாவட்டக்குழுக்களும் கவனம் செலுத்தவில்லை.

12.184 மாநில அளவில் மத்தியதர வர்க்க, தனியரங்கங்கள் மாணவர் அரங்கத்திற்கு நிதி உதவி

அளித்துள்ளனர். மாவட்டங்களிலும் மாணவர் அரங்கத்திற்கு நிதி உதவி கிடைத்துள்ளது. பல மாவட்டங்கள் ஓராண்டு வேலைத் திட்டத்தில் உள்ள சில அம்சங்களை அமலாக்கிட முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

18வது கட்சி மாநாடு:

12.185 கிளை மாநாடுகள் வெற்றிகரமாக நடந்துள்ளன. 60 சதம் முதல் 70 சதம் வரை கிளை மாநாடுகளில் பிரதிநிதிகள் பங்கு கொண்டார்கள். ஆனால் இடைக்கமிட்டி மாநாடுகளில் பிரதிநிதிகள் வருகை பெரும்பாலும் 50 சதம் தான் இருந்தது. இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் பெரும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்பதைத்தான் இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

மாநிலம் முழுவதும் பெரும்பாலான கிளை மாநாடுகளில் வருகை 70 - 80 - 90 சதம் இருந்திருக்கிறது. கீழ் அணிகளுக்கு அரசியல் ஆர்வம் உருவானால், அதன் செயல்பாடுகள் எப்படி இருக்கும் என்பதை கிளை மாநாடுகளில் பார்த்தோம்.

அறக்கட்டளைகள்

12.186 கட்சியின் மாநிலக்குழுவின் நேரடி பொறுப்பில் ‘உழைக்கும் மக்கள் நல அறக்கட்டளை’, ‘டாக்டர் அண்ணாஜி அறக்கட்டளை’ ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இது தவிர தோழர் வி.பி. சிந்தன் அறக்கட்டளை, தோழர் லீலாவதி அறக்கட்டளை, தோழர் கே.பி.ஜே. அறக்கட்டளை, தொழிலாளர் கல்வி அறக்கட்டளை என வர்க்க - வெகுஜன அமைப்புகளின் வழிகாட்டுதலிலும், கட்சியின் மாவட்டக்குழு வழிகாட்டுதலிலும் பல அறக்கட்டளைகள் இயங்கி வருகின்றன.

12.187 மாநிலக்குழுவின் பொறுப்பில் உள்ள அறக்கட்டளை கணக்குகள் ஆடிட்டர் உதவியுடன் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சமர்பிக்கப்பட்டு வருகின்றன.

12.188 மாவட்டங்களில் மாவட்டக்குழுக்கள், இடைக்கமிட்டிகள் கட்சி அலுவலகத்திற்காக வாங்கும் கட்டிடம் மற்றும் மனைகள் உழைக்கும் மக்கள் அறக்கட்டளை சார்பில் வாங்க வேண்டும் என முடிவு செய்தோம்.

12.189 இந்த வழிகாட்டுதலுக்குப் பிறகு பெரும்பாலான மாவட்டங்களில், உழைக்கும் மக்கள் அறக்கட்டளை சார்பில் கட்டிடம் மற்றும் மனைகள் வாங்கப்பட்ட போதிலும், சில இடங்களில் கட்சி பெயரிலும், தனிநபர் பெயரிலும் வாங்கப்படுகிறது. மாநிலக்குழுவின் அனுமதி பெற்று உழைக்கும் மக்கள் நல அறக்கட்டளை பெயரில் வருங்காலத்தில் கட்டிடம் மற்றும் மனைகள் வாங்குவதை உத்திரவாதப்படுத்திட வேண்டும்.

12.190 அறக்கட்டளை பெயரில் உள்ள கட்டிடம் மற்றும் மனை விவரங்களை மாநிலக்குழுவிற்கு அனுப்பும்படி பலமுறை வலியுறுத்தி கூறியபோதிலும், பெரும்பாலான மாவட்டக்குழுக்கள் விபரங்களை அனுப்பவில்லை. திருப்பூர், நீலகிரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், விழுப்புரம் ஆகிய மாவட்டக்குழுக்கள் மட்டுமே சமீபத்தில் ஓரளவு முழுமையாக விவரங்களை சேகரித்து அனுப்பி உள்ளன. இதர மாவட்டக் குழுக்களும் இது பற்றிய விபரங்களை அனுப்பி வைத்திட வேண்டும்.

12.191 அறக்கட்டளை சார்பில் வாங்கப்படும் அசையா சொத்துக்களின் கணக்குகளை முறையாக பராமரித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு கணக்கு சமர்ப்பித்தால் சட்டரீதியாக வரும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும்.

12.192 கிருஷ்ணகிரியில் டாக்டர் அண்ணாஜி அவர்களால் துவக்கப்பட்ட மருத்துவமனை தற்போது டாக்டர் அண்ணாஜி அறக்கட்டளை என்ற பெயரில் மாநிலக்குழுவின் நேரடி பொறுப்பில் இயங்கி வருகிறது. கட்சி சார்பில் நிதி வசூலிக்கப்பட்டு விரிவாக்கம் செய்து மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும் நவீனபடுத்தும் முயற்சி நடைபெற்று வருகிறது. அன்றாட உதவிகளை கிருஷ்ணகிரி மாவட்டக்குழு செய்து வருகிறது.

12.193 அறக்கட்டளை பராமரிப்பது சம்பந்தமான பணிகளைச் செய்திட மாநிலக்குழுவின் சார்பில்

மூன்று பேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டு அதன் கண்காணிப்பில் இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

12.194 வர்க்க - வெகுஜன அமைப்புகளின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் அறக்கட்டளைகளையும் உரிய முறையில் பராமரிக்க வேண்டியது அவசியமாகும்.

எதிர்கால அரசியல் ஸ்தாபன கடமைகள்

தோழர்களே,

12.195 17வது மாநில மாநாட்டிலிருந்து இன்று வரை ஆற்றிய அரசியல் - ஸ்தாபன பணிகளை நாம் பரிசீலித்துள்ளோம். நமது இலக்கை நோக்கிய பயணத்தை வேகப்படுத்த வேண்டும். 18வது அகில இந்திய மாநாடு வகுத்தளிக்கும் பாதையில் தமிழகத்தில் நமது ஸ்தாபனத்தையும் அரசியல் நடவடிக்கைகளையும் வலுப்படுத்துவோம். அடுத்த மூன்றாண்டுகளுக்கான கீழ்க்காணும் அரசியல் - ஸ்தாபன கடமைகளை நிறைவேற்றுவோம்.

1. கட்சி உறுப்பினர்களின் தரத்தை உயர்த்துவதற்கு தொடர்ச்சியான, திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தத்துவார்த்த கல்வி - கட்சிக் கல்வி, அனைத்து மட்டங்களிலும் திட்டமிடப்பட வேண்டும்.

2. நெறிப்படுத்தும் இயக்க வழிகாட்டுதல்களை அமலாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் காணவும், அதன் மூலம் கிளைகள் செயல்பாட்டை மேம்படுத்தவும் வேண்டும்.

4. கட்சியின் சுயேச்சையான நடவடிக்கைகளையும், கூட்டு நடவடிக்கைகளையும் பலப்படுத்தவும், உரிய காலத்தில் பரிசீலனை செய்யவும் வேண்டும்.

5. தலித் மக்கள், சிறுபான்மையினர், பெண்களை பெருமளவில் கட்சிக்கு கொண்டு வருவதற்கு திட்டமிட வேண்டும்.

6. வெகுஜன அமைப்புகளில் பணிபுரியும் கட்சித் தோழர்கள் மத்திய கமிட்டியின் சமீபத்திய வழிகாட்டுதல் அடிப்படையில் செயல்படவும் அந்த அமைப்புகளின் பலத்தை பெருமளவிற்கு அதிகப்படுத்தவும் வேண்டும்.

7. இன்றைய உலகமயச் சூழலில் மொழி, கலை, இலக்கியம், பண்பாட்டுப் பிரச்சினைகளில் நமது நிலைபாட்டை மக்களிடம் கொண்டு செல்ல விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

8. தீண்டாமை ஒழிப்பு, சாதியக் கொடுமைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவது, அதற்கு கட்சி முழுமையையும் தயார்படுத்துவது.

9. வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டுவது.

10. மக்கள் நலன் காப்பதற்கான முறையில் மத்திய அரசின் கொள்கைகள் அமலாவதற்கான மக்கள் இயக்கங்களை வலுப்படுத்துவது.

11. மாநில அஇஅதிமுக அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக, சுயேச்சையாகவும் கூட்டாகவும் போராட நடவடிக்கைகளை வலுப்படுத்துவது.

12. ஏகாதிபத்திய சூழ்ச்சிகள் அதிகமாகி வரும் நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களை வலுப்படுத்த திட்டமிடுவது.

13. இடதுசாரி ஒற்றுமையை வலுப்படுத்தவும், கட்சி முன்வைத்துள்ள இடதுசாரி, ஜனநாயக மாற்றுத் திட்டத்தை மக்களிடம் விரிவாக கொண்டு செல்லவும் வேண்டும்.

14. தீக்கதிர், மார்க்சிஸ்ட், செம்மலர் மற்றும் கட்சி வெளியீடுகளையும் முற்போக்கான நூல்களையும் கட்சி அணிகளிடமும் மக்களிடமும் கொண்டு செல்ல விரிவாக திட்டமிட வேண்டும்.

15. கலைக்குழுக்களை உருவாக்குவது மற்றும் கலை வடிவ பிரச்சாரங்களை பரவலாக்குவதற்கு திட்டமிட வேண்டும்.

16. செந்தொண்டர் படை அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்குவதற்கு உத்திரவாதப்படுத்த வேண்டும்.

12.196 கடந்த மூன்றாண்டுகளில் தமிழக அரசியல் - பொருளாதார - சமூகச் சூழலில் நமது கட்சி குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியுள்ளது.

12.197 மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் தி.மு.க., பா.ம.க., மதிமுக அங்கம் வகித்தது, தமிழகத்தில் ஆளும் கட்சியான அஇஅதிமுகவும் வகுப்புவாத பா.ஜ.க.வை ஆதரித்தது. ஆளும் கட்சி - எதிர்க்கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் வகுப்புவாத சக்திகளை ஆதரித்து நின்றபோது, இக்கட்சிகளின் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து சமரசமற்ற முறையில் நமது கட்சி சமர் புரிந்தது.

12.198 குஜராத்தில் சிறுபான்மை மக்களை இந்துத்துவா சக்திகள் நரவேட்டையாடியபோது, மோடி அரசை கண்டித்து நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் முன்மொழிந்தபோது, இன்னொரு மாநில அரசைப் பற்றி கருத்துக் கூற முடியாது என்றது தி.மு.க. தலைமை. மோடி மீண்டும் பதவியேற்றபோது, அந்த விழாவில் கலந்து கொண்டது அதிமுக தலைமை. இந்த இரண்டு கட்சிகளின் சந்தர்ப்பவாதத்தையும் நாம் அம்பலப்படுத்தினோம்.

12.199 பா.ஜ.க. தலைமையிலான மத்திய ஆட்சியில் இருந்து திமுக வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி அதன் அரசியல் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்தினோம். திமுக தலைமையை விமர்சிப்பதை மார்க்சிஸ்ட் கட்சி தலைமை கைவிட்டால்தான் தொழிற்சங்க அரங்கில் கூட்டு இயக்கத்திற்கு வர முடியும் என்று திமுக தலைமை கூறியபோது, நமது அரசியல் நிலைபாட்டில் உறுதியாக நின்றோம்.

12.200 வகுப்புவாதத்திற்கு எதிராக நாம் எடுத்த உறுதியான நிலைபாட்டினாலும், அரசியல் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தினாலும், திமுக தலைமை தேசிய ஜனநாயக அணி ஆட்சியில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பா.ம.க., மதிமுக வெளியேற வகுப்புவாதத்திற்கு எதிரான பலமான ஒரு அணியை உருவாக்குவதற்கு நமது கட்சி எடுத்த அரசியல் நிலைபாடு வித்திட்டது.

12.201 கடந்த மூன்றரை ஆண்டுகளில் அனைத்து துறைகளிலும் அராஜகமான ஆட்சி நடத்திய அஇஅதிமுக அரசை எதிர்த்து, எல்லா துறைகளிலும் நமது கட்சி வலுவான இயக்கத்தை நடத்தினோம்.

202 அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் - போக்குவரத்து தொழிலாளர்கள் - மின்னரங்க தொழிலாளர்கள் - பொதுத்துறை தொழிலாளர்கள் - கிராமப்புறத்து விவசாயிகள் - வாலிபர்கள் - மாணவர்கள் போன்று அனைத்து பகுதி உழைக்கும் மக்கள் நடத்திய வீரமிக்க போராட்டதிற்கும் உறுதுணையாக நின்றது நமது கட்சி.

12.203 வேலை நிறுத்த உரிமை ஜீவாதார உரிமை; இதை பறிப்பதற்கு ஒருக்காலும் அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியாக குரல் கொடுத்தது நமது கட்சி.

12.204 மத்திய தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் தாராளமய பொருளாதாரக் கொள்கையை அப்பழுக்கின்றி அப்படியே அஇஅதிமுக அரசு மாநிலத்தில் அமலாக்கியது. உலகமய - தாராளமய - பொருளாதாரக் கொள்கையினால் உழைப்பாளி மக்களின் நலன்களும், உரிமைகளும் பாதிக்கப்பட்டபோது, அவற்றை எதிர்த்து மார்க்சிஸ்ட் கட்சி வலுவாகக் குரல் எழுப்பியது.

12.205 மனித உரிமைகளுக்காக - ஜனநாயக உரிமைகளுக்காக - பேச்சுசுதந்திரத்திற்காக - பொதுக்கூட்டம், ஊர்வலம் நடத்தும் உரிமையைக் காக்க வேறு எந்தக் கட்சியும் முன்வராத போது, நமது கட்சி இந்தப் பிரச்சினைகளில் உறுதியான நிலையெடுத்து போராடியது.

12.206 தீண்டாமைக் கொடுமையை ஒழித்திட தமிழக கிராமப்புறங்களில் பல பகுதிகளில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டது நமது கட்சி.

12.207 பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து குரல் கொடுத்தது நமது கட்சி.

12.208 கல்வி, சுகாதாரம், வேலையின்மை, பொது விநியோக முறை, குடிநீர் போன்று பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்காகவும் எண்ணற்ற இயக்கங்களை கண்டது நமது கட்சி.

12.209 லாக் அப் சாவுகள், பொய் வழக்கு, தடியடி, கைது போன்ற அரசினுடைய காவல் துறையினுடைய தாக்குதல்களை சந்தித்தது நமது கட்சி.

12.210 மக்கள் நலன் காக்க உறுதியாக போராடிய போது, சமூக விரோதிகளின் தாக்குதல்களையும், உயிர் தியாகம் சந்தித்து நின்றது நமது கட்சி.

12.211 கடந்த மூன்றாண்டுகளில் தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் கம்யூனிஸ்டுகளுக்கே உரிய போர்க்குணத்தோடு களத்தில் நின்றோம். கடந்து வந்த பாதையை பரிசீலித்து, எதிர்கால கடமைகளை நிறைவேற்றிட சபதமேற்போம்!

மார்க்சிஸம் - லெனினிஸம் வாழ்க!

மக்கள் ஜனநாயக புரட்சி ஓங்குக!!

கட்சி உறுப்பினர் விபரம் - 2002 - 2004

வ.எண்	மாவட்டம்	2002	2003	2004
1.	வடசென்னை	4716	4114	4093
2.	தென்சென்னை	3396	2843	2906
3.	திருவள்ளூர்	1167	1301	1357
4.	காஞ்சிபுரம்	1679	1476	1450
5.	வேலூர்	2263	2429	2293
6.	திருவண்ணாமலை	1343	1423	1745
7.	விழுப்புரம்	2219	2246	2371
8.	கடலூர்	4762	4769	4850
9.	பாண்டிச்சேரி	705	743	745
10.	திருவாரூர்	2649	2892	2797
11.	நாகப்பட்டினம்	3630	3926	4267
12.	தஞ்சாவூர்	2272	2539	2687
13.	புதுக்கோட்டை	2266	2244	2427
14.	திருச்சி	4190	3631	3915
15.	கரூர்	1285	1522	1611
16.	பெரம்பலூர்	1286	823	927
17.	நாமக்கல்	1436	1537	1484
18.	சேலம்	3703	3724	3638
19.	கிருஷ்ணகிரி	3111	2835	3218
20.	தருமபுரி	1268	1215	1602
21.	ஈரோடு	1919	2112	2102
22.	கோவை கிழக்கு	2683	3104	3202
23.	கோவை மேற்கு	3316	3687	3848
24.	நீலகிரி	570	542	575
25.	தேனி	2406	2580	2564
26.	திண்டுக்கல்	5777	6092	6293
27.	மதுரை புறநகர்	3252	3334	3507
28.	மதுரை மாநகர்	4025	4408	4476
29.	விருதுநகர்	3070	3068	3187
30.	சிவகங்கை	1743	1650	1623
31.	இராமநாதபுரம்	2050	1976	1847
32.	தூத்துக்குடி	2820	2604	2550
33.	நெல்லை	3851	3927	3996
34.	குமரி	3828	4268	4565
35.	மையம்	121	125	127
	மொத்தம்	90777	91709	94845

துணைக்குழு உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்	மாவட்டம்	2002	2003	2004
1.	வடசென்னை	440	159	243
2.	தென்சென்னை	285	78	585
3.	திருவள்ளூர்	446	303	308
4.	காஞ்சிபுரம்	448	242	433
5.	வேலூர்	1041	822	519
6.	திருவண்ணாமலை	546	482	522
7.	விழுப்புரம்	972	872	990
8.	கடலூர்	1729	1276	1364
9.	பாண்டிச்சேரி	221	231	206
10.	திருவாரூர்	382	543	304
11.	நாகப்பட்டினம்	664	959	605
12.	தஞ்சாவூர்	889	781	639
13.	புதுக்கோட்டை	502	482	559
14.	திருச்சி	1201	1405	1013
15.	கரூர்	577	619	711
16.	பெரம்பலூர்	328	197	294
17.	நாமக்கல்	297	90	301
18.	சேலம்	918	579	1007
19.	கிருஷ்ணகிரி	---	800	500
20.	தருமபுரி	185	220	278
21.	ஈரோடு	270	509	364
22.	கோவை கிழக்கு	981	1220	---
23.	கோவை மேற்கு	971	750	902
24.	நீலகிரி	---	---	---
25.	தேனி	1158	2174	980
26.	திண்டுக்கல்	2434	2258	2513
27.	மதுரை புறநகர்	1675	1586	1640
28.	மதுரை மாநகர்	2305	2227	1891
29.	விருதுநகர்	718	829	495
30.	சிவகங்கை	500	620	756
31.	இராமநாதபுரம்	366	700	199
32.	தூத்துக்குடி	1010	564	600
33.	நெல்லை	1046	369	596
34.	குமரி	1761	1751	1137
35.	மையம்	1	--	--
	மொத்தம்	27267	26697	23454

பெண் கட்சி உறுப்பினர்கள் 2002-2004

வ.எண்	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	712	659	592
2	தென்சென்னை	444	436	500
3	திருவள்ளூர்	85	114	135
4	காஞ்சிபுரம்	155	162	166
5	வேலூர்	465	557	517
6	திருவண்ணாமலை	147	196	210
7	விழுப்புரம்	215	233	270
8	கடலூர்	512	553	550
9	பாண்டிச்சேரி	80	93	75
10	திருவாரூர்	254	291	306
11	நாகப்பட்டினம்	392	449	567
12	தஞ்சாவூர்	167	175	212
13	புதுக்கோட்டை	210	239	245
14	திருச்சி	365	338	462
15	கரூர்	83	152	184
16	பெரம்பலூர்	222	148	202
17	நாமக்கல்	103	114	61
18	சேலம்	427	428	487
19	கிருஷ்ணகிரி	166	150	183
20	தருமபுரி	94	107	107
21	ஈரோடு	210	196	219
22	கோவை கிழக்கு	182	229	261
23	கோவை மேற்கு	259	279	331
24	நீலகிரி	44	43	43
25	தேனி	251	289	299
26	திண்டுக்கல்	531	595	644
27	மதுரை புறநகர்	407	269	301
28	மதுரை மாநகர்	533	565	633
29	விருதுநகர்	217	271	298
30	சிவகங்கை	291	241	232
31	இராமநாதபுரம்	127	173	132
32	தூத்துக்குடி	251	225	275
33	நெல்லை	317	265	333
34	குமரி	616	823	918
35	மையம்	14	17	4
	மொத்தம்	9548	10074	10954

கிளைகள் - இடைக்கமிட்டி - முழுநேர / பகுதி நேர ஊழியர்கள் விபரம்

வ.எண்.	மாவட்டம்	கிளைகள்	இடைக்கமிட்டி	முழுநேர ஊழியர்	பகுதிநேர ஊழியர்
1	வடசென்னை	372	12	29	9
2	தென்சென்னை	288	14	23	3
3	திருவள்ளூர்	178	9	8	7
4	காஞ்சிபுரம்	174	9	12	1
5	வேலூர்	255	12	12	13
6	திருவண்ணாமலை	238	13	9	2
7	விழுப்புரம்	286	12	18	1
8	கடலூர்	439	15	21	--
9	பாண்டிச்சேரி	102	5	12	3
10	திருவாரூர்	259	13	31	--
11	நாகப்பட்டினம்	303	12	21	1
12	தஞ்சாவூர்	329	17	19	--
13	புதுக்கோட்டை	319	13	14	--
14	திருச்சி	547	13	21	4
15	கரூர்	171	10	16	--
16	பெரம்பலூர்	143	8	4	2
17	நாமக்கல்	201	11	12	--
18	சேலம்	441	16	17	--
19	கிருஷ்ணகிரி	336	11	14	--
20	தருமபுரி	140	7	5	--
21	ஈரோடு	283	13	16	6
22	கோவை கிழக்கு	368	10	29	2
23	கோவை மேற்கு	400	14	31	4
24	நீலகிரி	80	3	7	--
25	தேனி	304	7	20	4
26	திண்டுக்கல்	836	11	56	--
27	மதுரை புறநகர்	563	12	11	17
28	மதுரை மாநகர்	364	10	42	4
29	விருதுநகர்	385	14	35	3
30	சிவகங்கை	280	10	14	11
31	இராமநாதபுரம்	242	13	11	15
32	தூத்துக்குடி	274	17	23	9
33	நெல்லை	444	18	28	11
34	குமரி	583	12	18	6
35	மையம்	15	2	63	--
	மொத்தம்	10949	398	722	138

மாவட்டக்குழு - மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை விபரம்

வ.எண்.	மாவட்டம்	மாவட்டக் குழு உறுப்பினர்	மாவட்டச் செயற்குழு உறுப்பினர்	மாவட்டக் குழுவில் பெண்கள்	மாவட்ட செ.கு.வில் பெண்கள்	மாவட்டச் செயலாளர் பெயர்
1.	வடசென்னை	44	12	5	1	TK. சண்முகம்
2.	தென்சென்னை	40	14	6	2	T. நந்தகோபால்
3.	திருவள்ளூர்	27	11	2	--	B. சுந்தரராஜன்
4.	காஞ்சிபுரம்	27	7	2	1	E. சங்கர்
5.	வேலூர்	31	10	5	2	TR. புருஷோத்தமன்
6.	திருவண்ணாமலை	31	9	2	--	M. வீரபத்திரன்
7.	விழுப்புரம்	31	11	1	--	G. ஆனந்தன்
8.	கடலூர்					
9.	பாண்டிச்சேரி	31	10	5	1	V. பெருமாள்
10.	திருவாரூர்	42	15	2	1	N. கோவிந்தராஜ்
11.	நாகப்பட்டினம்					
12.	தஞ்சாவூர்	40	13	3	--	RC. பழனிவேல்
13.	புதுக்கோட்டை	31	11	3	1	M. சின்னதுரை
14.	திருச்சி	43	13	3	1	S. ஸ்ரீதர்
15.	கரூர்	22	8	1	--	S. ரெங்கராஜன்
16.	பெரம்பலூர்	25	9	3	1	T. முருகேசன்
17.	நாமக்கல்	30	11	1	--	K. கருணாகரன்
18.	சேலம்	40	11	5	1	M. ராஜகோபாலன்
19.	கிருஷ்ணகிரி	40	13	2	--	D. ரவீந்திரன்
20.	தருமபுரி	27	8	1	1	M. மாரிமுத்து
21.	ஈரோடு	31	10	2	--	P. மாரிமுத்து
22.	கோவை (கிழக்கு)	41	14	2	--	C. கோவிந்தசாமி
23.	கோவை (மேற்கு)	42	12	2	1	PR. நடராஜன்
24.	நீலகிரி	27	9	1	--	N. வாசு
25.	தேனி	40	13	4	1	K. ராஜப்பன்
26.	திண்டுக்கல்	45	12	3	2	PK. கருப்புசாமி
27.	மதுரை புறநகர்	39	11	5	1	V. சுந்தரம்
28.	மதுரை மாநகர்	41	14	5	2	R. ஜோதிராம்
29.	விருதுநகர்	40	13	4	1	S. பாலசுப்பிரமணியன்
30.	சிவகங்கை	34	11	2	--	M. அர்ஜுணன்
31.	இராமநாதபுரம்	32	11	2	--	R. ஞானவாசகம்
32.	தூத்துக்குடி	40	13	4	1	K. கனகராஜ்
33.	நெல்லை	43	15	4	1	V. பழனி
34.	குமரி	40	12	5	1	S. நூர்முகமது

கட்சி நிதி விவரம் - 2002-2004

வ.எண்	மாவட்டம்	2002 கோட்டா	2002-03	2003-04
1	வடசென்னை	1,00,000	10000	65000
2	தென்சென்னை	1,00,000	---	25000
3	திருவள்ளூர்	25,000	5000	15000
4	காஞ்சிபுரம்	25,000	---	20000
5	வேலூர்	50,000	30000	20000
6	திருவண்ணாமலை	25,000	10000	10000
7	விழுப்புரம்	40,000	---	---
8	கடலூர்	75,000	35000	15000
9	பாண்டிச்சேரி	25,000	20000	5000
10	திருவாரூர்	50,000	---	---
11	நாகப்பட்டினம்	50,000	---	---
12	தஞ்சாவூர்	30,000	15000	5000
13	புதுக்கோட்டை	30,000	---	---
14	திருச்சி	50,000	5050	---
15	கரூர்	30,000	15000	---
16	பெரம்பலூர்	20,000	5000	---
17	நாமக்கல்	30,000	10000	20000
18	சேலம்	50,000	35000	15000
19	கிருஷ்ணகிரி	50,000	---	5000
20	தருமபுரி	25,000	---	---
21	ஈரோடு	50,000	25000	15000
22	கோவை கிழக்கு	1,00,000	100000	---
23	கோவை மேற்கு	1,00,000	100000	---
24	நீலகிரி	20,000	---	10000
25	தேனி	30,000	---	20000
26	திண்டுக்கல்	1,00,000	---	20000
27	மதுரை புறநகர்	40,000	10000	20000
28	மதுரை மாநகர்	1,00,000	50000	50000
29	விருதுநகர்	50,000	35000	15000
30	சிவகங்கை	30,000	15000	---
31	இராமநாதபுரம்	25,000	10000	---
32	தூத்துக்குடி	50,000	10000	20000
33	நெல்லை	50,000	---	30000
34	குமரி	50,000	20000	35000
	மொத்தம்	16,75,000	5,70,050	4,55,000

நிவாரண நிதி - 2002-2004

வ.எண்	மாவட்டம்	ஈராக்	ரத்தினசாமி	நாராயணசாமி
1.	வடசென்னை	23211	19568	2770
2.	தென்சென்னை	36288	23650	5450
3.	திருவள்ளூர்	1960	2000	2650
4.	காஞ்சிபுரம்	2120	4056	29096
5.	வேலூர்	3816	4543	----
6.	திருவண்ணாமலை	2600	1800	700
7.	விழுப்புரம்	----	3645	----
8.	கடலூர்	15690	4406	----
9.	பாண்டிச்சேரி	----	3125	----
10.	திருவாரூர்	----	1623	----
11.	நாகப்பட்டினம்	8000	----	----
12.	தஞ்சாவூர்	3350	2500	----
13.	புதுக்கோட்டை	----	1970	----
14.	திருச்சி	----	5000	840
15.	கரூர்	250	2845	1270
16.	பெரம்பலூர்	----	500	----
17.	நாமக்கல்	1100	4565	2352
18.	சேலம்	3000	8591	2821
19.	கிருஷ்ணகிரி	1022	460	----
20.	தருமபுரி	----	----	----
21.	ஈரோடு	10335	20878	----
22.	கோவை கிழக்கு	13363	4000	5200
23.	கோவை மேற்கு	10000	38255	----
24.	நீலகிரி	----	2350	----
25.	தேனி	14521	8223	400
26.	திண்டுக்கல்	9840	9865	----
27.	மதுரை புறநகர்	2685	11476	----
28.	மதுரை மாநகர்	31100	28442	2000
29.	விருதுநகர்	16062	13891	----
30.	சிவகங்கை	----	----	4023
31.	இராமநாதபுரம்	----	5147	----
32.	தூத்துக்குடி	5180	11915	1250
33.	நெல்லை	2600	7957	1000
34.	குமரி	4549	3920	250
35.	மையம்	16251	33296	74004
	மொத்தம்	238893	294462	136076

நிவாரண நிதி - 2002-2004

வ.எண்	மாவட்டம்	மகாலிங்கம்	பாண்டியராஜன்	கும்பகோணம்
1.	வடசென்னை	5190	13190	23077
2.	தென்சென்னை	11171	6846	28590
3.	திருவள்ளூர்	628	1915	1035
4.	காஞ்சிபுரம்	3078	5566	13668
5.	வேலூர்	500	1567	4040
6.	திருவண்ணாமலை	1000	1485	1055
7.	விழுப்புரம்	2370	----	2070
8.	கடலூர்	365	2675	7167
9.	பாண்டிச்சேரி	1030	5430	12036
10.	திருவாரூர்	695	3550	4690
11.	நாகப்பட்டினம்	----	670	4400
12.	தஞ்சாவூர்	1280	1008	16202
13.	புதுக்கோட்டை	120	510	956
14.	திருச்சி	1455	1105	30654
15.	கரூர்	2550	1155	2410
16.	பெரம்பலூர்	300	690	----
17.	நாமக்கல்	1100	2480	5477
18.	சேலம்	4780	7760	11007
19.	கிருஷ்ணகிரி	----	----	1675
20.	தருமபுரி	4560	3129	1250
21.	ஈரோடு	3515	5194	34972
22.	கோவை கிழக்கு	18115	7821	40703
23.	கோவை மேற்கு	20000	29225	39591
24.	நீலகிரி	2420	1855	4570
25.	தேனி	5550	6555	6884
26.	திண்டுக்கல்	4713	57803	19319
27.	மதுரை புறநகர்	3660	3130	8765
28.	மதுரை மாநகர்	10675	15005	16514
29.	விருதுநகர்	7968	9370	15892
30.	சிவகங்கை	2000	2000	10726
31.	இராமநாதபுரம்	1500	1959	715
32.	தூத்துக்குடி	70603	10431	11452
33.	நெல்லை	9720	1776	8990
34.	குமரி	3920	2085	4930
35.	மையம்	25955	42931	82484
	மொத்தம்	232486	257871	477966

சி.ஐ.டி.யு. உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்	மாவட்டம்	2001	2002	2003
1	வடசென்னை	16232	15113	12866
2	தென்சென்னை	18954	19829	21207
3	திருவள்ளூர்	5164	6254	4046
4	காஞ்சிபுரம்	5079	2675	2418
5	வேலூர்	9503	8825	8794
6	திருவண்ணாமலை	1975	1920	1060
7	விழுப்புரம்	2457	3392	3379
8	கடலூர்	9125	10017	4787
9	பாண்டிச்சேரி	2746	3118	1845
10	திருவாரூர்	3343	2306	419
11	நாகப்பட்டினம்	645	1024	861
12	தஞ்சாவூர்	3677	3482	25
13	புதுக்கோட்டை	2411	2216	1593
14	திருச்சி	5645	5240	5429
15	கரூர்	2079	1017	962
16	பெரம்பலூர்	193	315	204
17	நாமக்கல்	2175	1485	2401
18	சேலம்	7436	7825	7371
19	கிருஷ்ணகிரி	3398	3698	3166
20	தருமபுரி	1608	1839	1284
21	ஈரோடு	12256	7476	5382
22	கோவை கிழக்கு	14250	13671	17482
23	கோவை மேற்கு	15052	15126	14051
24	நீலகிரி	2028	1982	890
25	தேனி	4517	5138	3815
26	திண்டுக்கல்	8346	7779	7748
27	மதுரை புறநகர்	4114	2294	2394
28	மதுரை மாநகர்	12256	9363	1270
29	விருதுநகர்	7278	5179	6312
30	சிவகங்கை	689	1384	741
31	இராமநாதபுரம்	2531	3142	1997
32	தூத்துக்குடி	4463	3446	1583
33	நெல்லை	11762	13710	8752
34	குமரி	31802	30732	24201
35	மின்னரங்கம்	23621	20546	17975
36	இரயில்வே	12947	14754	10475
37	டி.என்.எம்.எஸ்.ஆர்.ஏ.	4652	5269	5100
38	சிவில் சப்ளை	210		
39	தொழில்நுட்பம்		136	
40	கூட்டுறவு	629	765	655
	மொத்தம்	277278	263482	214942

குறிப்பு: இணைப்புக் கட்டணம் செலுத்திய அடிப்படையிலான உறுப்பினர் எண்ணிக்கை 2004க்கான இணைப்புக் கட்டணம் முழுமையாக இன்னமும் செலுத்தப்படவில்லை.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்	மாவட்டம்	2002	2003	2004
1.	கன்னியாகுமரி	16,070	21,140	20,000
2.	தூத்துக்குடி	6,200	10,000	10,000
3.	திருநெல்வேலி	17,098	17,500	17,700
4.	விருதுநகர்	15,251	16,000	11,000
5.	சிவகங்கை	6,600	12,262	8,500
6.	இராமநாதபுரம்	12,000	15,000	10,000
7.	மதுரை	25,770	26,000	15,000
8.	தேனி	21,000	25,000	20,000
9.	திண்டுக்கல்	24,375	25,150	20,000
10.	திருச்சி	21,400	21,400	10,150
11.	புதுக்கோட்டை	4,500	10,000	7,800
12.	நாகப்பட்டினம்	23,400	23,500	18,000
13.	திருவாரூர்	14,400	15,000	12,000
14.	தஞ்சாவூர்	14,000	16,000	16,000
15.	கரூர்	5,060	5,050	5,050
16.	ஈரோடு	4,700	5,200	5,308
17.	திருப்பூர்	6,200	8,460	7,700
18.	கோவை	600	1,000	2,000
19.	நீலகிரி	2,020	2,000	2,500
20.	சேலம்	15,000	16,400	16,400
21.	நாமக்கல்	3,000	8,000	11,500
22.	கிருஷ்ணகிரி	38,120	45,510	51,500
23.	தருமபுரி	5,600	8,000	5,000
24.	பெரம்பலூர்	3,700	5,000	5,000
25.	வேலூர்	1 3,300	10,000	10,750
26.	திருவண்ணாமலை	8,600	9,592	7,550
27.	கடலூர்	10,250	10,000	10,000
28.	விழுப்புரம்	8,000	10,100	10,000
29.	காஞ்சிபுரம்	5,000	1,500	5,000
30.	திருவள்ளூர்	3,430	3,000	3,750
31.	சென்னை	3,100	1,000	---
32.	பாண்டிச்சேரி	1,800	3,000	2,500
33.	மலைச்சங்கம்	14,694	14,694	11,950
34.	பால் சங்கம்	5,475	4,400	4,500
35.	கரும்பு சங்கம்	4,500	6,000	4,000
	மையம்	6	5	5
	மொத்தம்	3,84,219	4,27,269	3,69,805

விவசாயத் தொழிலாளர் சங்கம் உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்	மாவட்டம்	2002	2003	2004
1.	கன்னியாகுமரி	6,000	10,000	10,000
2.	தூத்துக்குடி	5,000	---	1,850
3.	திருநெல்வேலி	---	600	1,200
4.	விருதுநகர்	---	600	900
5.	சிவகங்கை	---	---	---
6.	இராமநாதபுரம்	---	---	---
7.	மதுரை	12,000	14,000	10,000
8.	தேனி	12,018	20,000	18,000
9.	திண்டுக்கல்	15,000	16,250	15,500
10.	திருச்சி	13,000	12,000	12,000
11.	புதுக்கோட்டை	5,000	2,760	3,600
12.	நாகப்பட்டினம்	20,000	22,000	22,500
13.	திருவாரூர்	15,000	15,500	16,050
14.	தஞ்சாவூர்	15,000	15,000	15,000
15.	கரூர்	7,000	7,532	4,800
16.	ஈரோடு	10,000	11,000	11,000
17.	திருப்பூர்	6,500	7,700	7,500
18.	கோவை	5,000	8,100	4,730
19.	நீலகிரி	---	---	---
20.	சேலம்	15,000	16,250	16,400
21.	நாமக்கல்	8,000	10,800	12,500
22.	கிருஷ்ணகிரி	---	---	---
23.	தருமபுரி	----	---	---
24.	பெரம்பலூர்	5,000	1,000	1,200
25.	வேலூர்	2,000	1,500	1,000
26.	திருவண்ணாமலை	5,000	1,801	3,000
27.	கடலூர்	10,000	11,012	12,000
28.	விழுப்புரம்	12,000	12,000	14,000
29.	காஞ்சிபுரம்	---	1,000	4,000
30.	திருவள்ளூர்	5,000	5,250	5,200
31.	சென்னை	---	---	---
32.	பாண்டிச்சேரி	5,000	2,000	3,000
33.	மலைச்சங்கம்	---	---	---
34.	பால் சங்கம்	---	---	---
35.	கரும்பு சங்கம்	---	---	---
	மையம்	2	3	3
	மொத்தம்	2,13,520	2,25,658	2,26,933

டி.ஒய்.எப்.ஐ., உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்.	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	68281	60204	80221
2	தென்சென்னை	29495	35118	52222
3	திருவள்ளூர்	17001	11610	21369
4	காஞ்சிபுரம்	22000	20000	13500
5	வேலூர் (கி-மே)	12145	13289	16613
6	திருவண்ணாமலை	12000	12044	12817
7	விழுப்புரம்	31900	27902	28938
8	கடலூர்	27091	27745	24000
9	பாண்டிச்சேரி	8181	5697	12200
10	திருவாரூர்	4000	8954	14800
11	நாகப்பட்டினம்	12818	12818	15463
12	தஞ்சாவூர்	8050	13174	12100
13	புதுக்கோட்டை	3000	4500	6635
14	திருச்சி	27273	27655	25100
15	கரூர்	9000	5000	2328
16	பெரம்பலூர்	635	1400	4400
17	நாமக்கல்	11591	13363	14700
18	சேலம்	17100	22136	26356
19	கிருஷ்ணகிரி	6388	7656	14100
20	தருமபுரி	4550	5254	6750
21	ஈரோடு	15243	12300	12392
22	கோவை கிழக்கு	52675	49289	95236
23	கோவை மேற்கு	32350	37504	58018
24	நீலகிரி	7000	9127	12145
25	தேனி	5364	12730	9500
26	திண்டுக்கல்	9127	11618	13475
27	மதுரை புறநகர்	11818	14000	11500
28	மதுரை மாநகர்	65000	61000	55825
29	விருதுநகர்	23344	23246	25179
30	சிவகங்கை	1000	3299	8609
31	இராமநாதபுரம்	7000	5818	7000
32	தூத்துக்குடி	13500	16205	13500
33	நெல்லை	10349	18000	17500
34	குமரி	24083	26122	23545
35	மாநிலக்குழு	--	72	72
	மொத்தம்	610352	635849	768108

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்
உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்.	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	36000	40400	45500
2	தென்சென்னை	17200	18000	21000
3	திருவள்ளூர்	3200	2399	2960
4	காஞ்சிபுரம்	5100	7000	7200
5	வேலூர்	5500	7524	8400
6	திருவண்ணாமலை	3700	3500	3500
7	விழுப்புரம்	3851	4400	6000
8	கடலூர்	15000	15500	16156
9	பாண்டிச்சேரி	4000	5017	4000
10	திருவாரூர்	10170	10000	13055
11	நாகப்பட்டினம்	14750	3000	9100
12	தஞ்சாவூர்	6000	8005	6333
13	புதுக்கோட்டை	5000	4000	2076
14	திருச்சி	15000	18000	21000
15	கரூர்	2000	2000	2000
16	பெரம்பலூர்	4000	5666	6500
17	நாமக்கல்	2000	2700	---
18	சேலம்	11500	15000	15000
19	கிருஷ்ணகிரி	4000	6033	3500
20	தருமபுரி	5000	6000	7000
21	ஈரோடு	10290	7800	8500
22	கோவை கிழக்கு	25871	29500	30500
23	கோவை மேற்கு	26000	28500	20000
24	நீலகிரி	1540	1666	1700
25	தேனி	15000	18000	18000
26	திண்டுக்கல்	20000	19000	10000
27	மதுரை புறநகர்	15000	16000	15000
28	மதுரை மாநகர்	33000	35000	35000
29	விருதுநகர்	10000	16000	19330
30	சிவகங்கை	2100	3666	4500
31	இராமநாதபுரம்	4000	2500	---
32	தூத்துக்குடி	12050	8460	10500
33	நெல்லை	13470	15000	10000
34	குமரி	26680	30000	33000
	மொத்தம்	386472	415236	416310

எஸ்.எப்.ஐ. உறுப்பினர் விபரம் 2002 - 2004

வ.எண்.	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	6381	7623	6554
2	தென்சென்னை	8000	9041	9000
3	திருவள்ளூர்	1300	700	600
4	காஞ்சிபுரம்	---	---	300
5	வேலூர்	1025	3000	1900
6	திருவண்ணாமலை	2500	1800	3500
7	விழுப்புரம்	700	220	864
8	கடலூர்	6700	8526	8786
9	பாண்டிச்சேரி	6323	4200	4100
10	திருவாரூர்	3400	3582	4153
11	நாகப்பட்டினம்	1800	1650	2550
12	தஞ்சாவூர்	10900	8600	9700
13	புதுக்கோட்டை	---	300	---
14	திருச்சி	3800	4050	4490
15	கரூர்	900	1800	600
16	பெரம்பலூர்	1500	1500	----
17	நாமக்கல்	300	500	---
18	சேலம்	7390	8062	7500
19	கிருஷ்ணகிரி	---	400	1800
20	தருமபுரி	300	---	---
21	ஈரோடு	4007	4084	1567
22	கோவை கிழக்கு	4030	6242	6426
23	கோவை மேற்கு	2300	5100	5500
24	நீலகிரி	---	250	150
25	தேனி	2000	4000	4800
26	திண்டுக்கல்	4670	4400	5500
27	மதுரை புறநகர்	4620	7500	9080
28	மதுரை மாநகர்	4000	3053	5650
29	விருதுநகர்	5720	5800	6650
30	சிவகங்கை	1000	1000	600
31	இராமநாதபுரம்	700	---	---
32	தூத்துக்குடி	2000	3725	4400
33	நெல்லை	5026	9000	9219
34	குமரி	4300	5750	10102
35	மாநிலக்குழு	73	71	58
	மொத்தம்	107665	125529	136099

தீக்கதிர் சர்க்குலேசன் விபரம் - 2002 - 2004

வ.எண்.	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	860	790	736
2	தென்சென்னை	696	640	763
3	திருவள்ளூர்	86	76	83
4	காஞ்சிபுரம்	174	169	196
5	வேலூர்	135	164	174
6	திருவண்ணாமலை	136	101	139
7	விழுப்புரம்	74	75	117
8	கடலூர்	209	175	156
9	பாண்டிச்சேரி	130	114	127
10	திருவாரூர்	224	110	203
11	நாகப்பட்டினம்	74	69	175
12	தஞ்சாவூர்	183	158	165
13	புதுக்கோட்டை	116	126	131
14	திருச்சி	324	251	292
15	கரூர்	144	146	167
16	பெரம்பலூர்	18	30	74
17	நாமக்கல்	159	157	183
18	சேலம்	313	268	253
19	கிருஷ்ணகிரி	40	66	69
20	தருமபுரி	58	59	55
21	ஈரோடு	530	520	515
22	கோவை (கிழக்கு)	646	726	1198
23	கோவை (மேற்கு)	703	766	794
24	நீலகிரி	97	81	66
25	தேனி	265	296	315
26	திண்டுக்கல்	669	673	824
27	மதுரை புறநகர்	279	345	347
28	மதுரை மாநகர்	657	705	687
29	விருதுநகர்	390	431	493
30	சிவகங்கை	137	154	121
31	இராமநாதபுரம்	128	91	99
32	தூத்துக்குடி	257	267	284
33	நெல்லை	440	491	533
34	குமரி	247	362	372
	மொத்தம்	9598	9652	10906

செம்மலர் சர்க்குலேசன் விபரம் - 2002 - 2004

வ.எண்.	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	1366	1266	1345
2	தென்சென்னை	726	801	751
3	திருவள்ளூர்	27	31	44
4	காஞ்சிபுரம்	284	298	293
5	வேலூர்	247	164	265
6	திருவண்ணாமலை	98	72	61
7	விழுப்புரம்	59	31	68
8	கடலூர்	239	351	373
9	பாண்டிச்சேரி	186	182	194
10	திருவாரூர்	64	82	85
11	நாகப்பட்டினம்	138	90	98
12	தஞ்சாவூர்	257	184	270
13	புதுக்கோட்டை	118	64	100
14	திருச்சி	120	93	123
15	கரூர்	196	182	170
16	பெரம்பலூர்	323	--	20
17	நாமக்கல்	116	111	92
18	சேலம்	181	211	290
19	கிருஷ்ணகிரி	16	45	13
20	தருமபுரி	39	25	0
21	ஈரோடு	603	525	942
22	கோவை (கிழக்கு)	2285	2570	2199
23	கோவை (மேற்கு)	841	1198	929
24	நீலகிரி	74	67	91
25	தேனி	199	236	165
26	திண்டுக்கல்	590	566	600
27	மதுரை புறநகர்	330	299	140
28	மதுரை மாநகர்	1393	1595	1453
29	விருதுநகர்	583	707	758
30	சிவகங்கை	71	64	83
31	இராமநாதபுரம்	183	108	96
32	தூத்துக்குடி	171	263	241
33	நெல்லை	646	587	577
34	குமரி	292	310	266
	மொத்தம்	13061	13378	13195

மார்க்சிஸ்ட் சர்க்குலேசன் விபரம் - 2002 - 2004

வ.எண்.	மாவட்டம்	2002	2003	2004
1	வடசென்னை	738	749	666
2	தென்சென்னை	490	611	510
3	திருவள்ளூர்	17	22	31
4	காஞ்சிபுரம்	171	209	210
5	வேலூர்	66	49	16
6	திருவண்ணாமலை	37	18	18
7	விழுப்புரம்	79	59	71
8	கடலூர்	163	488	529
9	பாண்டிச்சேரி	43	42	44
10	திருவாரூர்	8	59	63
11	நாகப்பட்டினம்	77	34	34
12	தஞ்சாவூர்	75	14	99
13	புதுக்கோட்டை	64	23	72
14	திருச்சி	124	127	131
15	கரூர்	136	127	120
16	பெரம்பலூர்	28	12	32
17	நாமக்கல்	155	112	136
18	சேலம்	151	117	145
19	கிருஷ்ணகிரி	24	52	10
20	தருமபுரி	29	51	3
21	ஈரோடு	330	341	355
22	கோவை (கிழக்கு)	666	763	600
23	கோவை (மேற்கு)	414	452	413
24	நீலகிரி	70	30	54
25	தேனி	74	134	162
26	திண்டுக்கல்	431	338	338
27	மதுரை புறநகர்	154	152	104
28	மதுரை மாநகர்	572	489	509
29	விருதுநகர்	236	108	323
30	சிவகங்கை	54	57	73
31	இராமநாதபுரம்	124	56	47
32	தூத்துக்குடி	114	170	97
33	நெல்லை	313	303	329
34	குமரி	136	191	174
	மொத்தம்	6363	6559	6518

17வது மாநில மாநாட்டிற்கு பின்பு அச்சிடப்பட்ட பிரசுரங்கள்

1.	உட்கட்சி போராட்டம் (மறுபதிப்பு)	1000
2.	காளி	1000
3.	17வது மாநில மாநாடு அரசியல் - ஸ்தாபன அறிக்கை	9000
4.	நகல் அரசியல் தீர்மானம்	1000
5.	சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி (மறுபதிப்பு)	2000
6.	கம்யூனிஸ்ட் கட்சியை பற்றி - லியூஷோசி	1500
7.	கட்சி கடிதம்	2000
8.	மார்க்சியத்தின் எதிர்காலம்	2000
9.	ஸ்தாபன அறிக்கை	8000
10.	குஜராத் பிரசுரம்	136000
11.	மத்திய கமிட்டி தீர்மானம்	1000
12.	அனந்தாஸ்ரமம்	1000
13.	திண்ணை பேச்சு	3000
14.	காயும் தமிழகம் - கதறும் கைத்தறி	100000
15.	நான் எவ்வாறு கம்யூனிஸ்ட் ஆனேன் - இ.எம்.எஸ். (மறுபதிப்பு)	1000
16.	அமைப்புச் சட்டம்	2000
17.	மார்க்சியத்தின் எதிர்காலம்	2000
18.	மத்திய கமிட்டி தீர்மானம்	2000
19.	மானாவாரிப் பூ (மறுபதிப்பு)	500
20.	கட்சி திட்டம் குறித்த விளக்க உரை	2000
21.	இந்தியா இன்று	2000
22.	இராக் போர்	160000
23.	மத்திய கமிட்டி தீர்மானம்	1000
24.	தொழிற்சங்க அரங்கில் நமது கடமை	3000
25.	மத்திய கமிட்டி தீர்மானம்	2000
26.	இருண்ட காலம் - மின்சாரம்	126000
27.	அதிமுக பிரசுரம்	50000

28.	தமிழ் இலக்கியம் கூறும் வர்க்க சமுதாயம்	1000
29.	கட்சி திட்டம்	1000
30.	இலக்கிய வானில் வெள்ளி விழா	1000
31.	தேசம் காக்க அணிதிரள்வோம்	100000
32.	அமைப்பு சட்டம்	1500
33.	ஸ்தாபன அறிக்கை	2000
34.	வரதட்சணை	10000
35.	மத்திய கமிட்டி தீர்மானம்	3000
36.	பி.ஜே.பி. - அதிமுக முறியடிப்போம்	300000
37.	நாடாளுமன்ற தேர்தலும் - மக்கள் எதிர்பார்ப்பும்	210000
38.	மத்திய கமிட்டி தீர்மானம்	3000
39.	தேர்தல் பரிசீலனை	8000
40.	தீண்டாமை ஒழிப்பு	5000
41.	பூமிக்கு பொறுக்காது	1500
42.	மேற்குவங்க பிரசுரம்	150000

❑❑❑

2005 கட்சி உறுப்பினர் தகுதி ஆய்வு விபரம்

வரிசை என்	மாவட்டம்	வயது 30க்கு கீழ்	31 – 40	41 – 50	51 – 60	61 – 70	70க்கு மேல்	பெண்கள் மொத்தம்	டி.சி.–பியில் பெண்கள்	ஏ.சி.யில் பெண்கள்	எஸ்.சி.	எஸ்.டி.	சிறுபான்மை	தொழிலாளி	விவசாயி தொழிலாளி	ஏழை விவசாயி	நடுத்தர விவசாயி	பணக்கார விவசாயி	மத்தியதர வர்க்கம்	பிற	1947க்கு முன்	1948 – 64	65 – 76	77 – 85	86 – 95	96க்கு பின்	முழுநேர ஊழியர்	கட்சி ஊதியம்	வெகுஜன ஊதியம்	பகுதி நேர ஊழியர்	கட்சி ஊதியம்	வெகுஜன ஊதியம்	டி.சி. வகுப்பு எண்ணிக்கை	ஏ.சி. வகுப்பு எண்ணிக்கை
1.	வடசென்னை	483	--	2889	--	460	2	666	6	18	1021	61	334	3350	79	80	37	2	253	324	7	20	145	831	576	2145	29	18	11	13	8	5	--	--
2.	தென்சென்னை	381	--	1966	--	333	10	502	6	--	613	17	175	2252	--	118	82	--	210	108	1	10	138	--	1050	1424	23	18	9	3	--	--	--	19
3.	திருவள்ளூர்	377	472	137	84	27	9	85	2	5	537	64	35	330	358	--	--	--	14	394	--	3	33	74	269	717	8	7	1	7	7	--	--	15
4.	காஞ்சிபுரம்	538	464	266	122	44	16	164	2	4	323	3	23	1010	184	--	--	--	105	151	1	29	37	186	378	819	12	8	4	1	--	1	1	2
5.	வேலூர்	509	690	601	325	114	43	582	6	18	323	21	97	1296	443	--	--	--	109	434	7	85	103	206	460	1421	22	9	12	9	4	5	2	3
6.	திருவண்ணாமலை	312	755	474	199	5	--	210	2	10	514	1	41	666	805	--	--	--	160	114	--	--	7	44	411	1283	9	9	--	2	2	--	8	6
7.	விழுப்புரம்	632	999	537	170	28	5	270	1	9	673	23	63	456	920	890	38	5	52	10	2	4	14	262	671	1418	19	19	--	--	--	--	1	20
8.	கடலூர்	1219	1199	1158	809	331	155	550	2	16	2487	167	221	1022	2146	1074	298	--	234	97	48	97	487	556	770	2623	21	8	13	--	--	--	--	--
9.	பாண்டிச்சேரி	185	378	137	48	7	5	100	5	7	178	4	40	114	397	--	--	--	129	110	--	5	15	55	150	475	15	11	4	3	2	1	2	2
10.	திருவாரூர்							306	2																		31							
11.	நாகப்பட்டிணம்	681	1391	1270	554	253	118	567	2	15	3302	16	215	169	2210				158	1730	12	192	605	1021	33	1500	22			28	1		1	2
12.	தஞ்சாவூர்	512	893	545	437	228	72	212	3	6	1082	--	86	307	1236	897	--	--	247	--	5	49	256	439	726	1212	21	19	--	7	7	--	--	2
13.	புதுக்கோட்டை	479	842	788	244	59	15	245	3	10	1055	2	263	368	1242				82	735	1	20	101	329	772	1204	10	9					4	3
14.	திருச்சி	1206	1864	552	312	21	10	573	3	10	1061	25	598	1448	1250	620	210	95	245	97	2	18	150	788	1277	1730	21	21		4	4		2	67
15.	கரூர்	360	640	422	122	49	18	184	1	5	728		28	315	239				57	306		10	59	271	470	801	17	17					8	
16.	பெரம்பலூர்							202	3																		4	4					1	1
17.	நாமக்கல்	375	534	353	169	30	22	87	1	--	419	113	4	702	421	257	80	3	20	--	7	54	97	193	328	804	11	8	3	5	3	2	5	5
18.	சேலம்	1201	1426	703	240	52	16	487	5	--	1696	206	89	1036	1083	952	260	43	264	--	8	63	293	693	801	1780	17	--	--	--	--	--	--	--
19.	கிருஷ்ணகிரி							183	3																		7							
20.	தர்மபுரி	250	426	650	200	164	34	107	2	4	750	40	30	48	804	560	67	27	87			12	240	726	400	1226	5	3		5			2	6
21.	ஈரோடு	419		936	383			219	2		330	45	18	1035	299	343						19	43	175	305	1193	16			6				
22.	கோவை (கிழக்கு)	747	984	860	249	66	13	261	2		632		142	226	201	133	85	3	256		1	21	48	230	675	1933	34	13	21	2				
23.	கோவை (மேற்கு)	306	1576	948	435	200	37	331	2					3052	182	133	32		331		2	57	153	673	766	1767	31							
24.	நீலகிரி	101	210	140	59	16	--	43	1	—	123	9	161	334	--	169	--	--	23	--	--	4	13	32	124	353	7	5	2	--	--	--	2	1
25.	தேனி	340	847	767	409	133	33	299	4	17	506	10	142	630	1278				101	526	3	59	303				20	20		18	4		20	
26.	திண்டுக்கல்							644	3																		55							
27.	மதுரை (புறநகர்)	700	840	980	560	280	147	301	5	11	920	90	40	650	1150	--	--	--	300	1407	--	80	400	700	1220	107	11	11	--	14	13	1	2	35
28.	மதுரை (மாநகர்)	499	2516	618	599	133	111	633	5	14	368	18	622	3919	41				482	34	24	78	260	938	1409	1767	43	33	10	2	2		21	140
29.	விருதுநகர்	602	1037	933	407	161	47	300	4	12	943	15	78	1557	738				143	749	3	63	112	448	968	1593	28	20	2	16	14	2	3	6
30.	சிவகங்கை										649		81		518	521	36	8	84	458														
31.	இராமநாதபுரம்	421	801	496	105	40	6	147	2	3	584	34	182	498	579	763	—	--	--	29	--	12	20	175	710	952	11	8	3	13	13	--	1	--
32.	தூத்துக்குடி							275	4																		23							
33.	திருநெல்வேலி	275	1717		1341		153	321	4	11	1197	11	340	1438	1263	664				238		59		586	1482	1263	28	25	3	14	9	5	2	36
34.	கன்னியாகுமரி	457		3553		657	27	918	5																									
35.	மையம்								4																									

சர்வதேச கீதம்

பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்
பாரில் கடையரே எழுங்கள் வீறுகொண்டு தோழர்காள்
கொட்டுமுரசு கண்டனம் முழக்கமெங்கும் குமுறிட
குதித்தெழு புதுவுலக வாழ்வதில் திளைத்திட (பட்டினி)

பண்டையப் பழக்கமெனும் சங்கிலி அறுந்தது
பாடுவீர் சுயேட்சை கீதம் விடுதலை பிறந்தது
இங்கு புதிய முறையிலே இப்புவனமும் அமைந்திடும்
இன்மை சிறுமைதீர நம் இளைஞருலக மாகிடும் (பட்டினி)

தொன்று தொட்டுழைத்த தொழிலாளி விவசாயிகள்
தோழராயினோம் உழைப்போர் யாவரேனும் ஓர்குலம்
உண்டுநம் உழைப்பிலே உயர்ந்தவர்க்குச் சொல்லுவோம்
உழைப்பவர்கள் யாவருக்கும் சொந்தம் இந்த உலகெல்லாம். (பட்டினி)

மக்களின் உழைப்பெலாம் மறைத்துவைத்து ஒருசிலர்
பொக்கிசங்களில் கிடந்து புரளுகின்றதறிகுவீர்
இக்கணம் அதைத்திரும்பக் கேட்பதென்ன குற்றமோ
இல்லை நாம் நமக்குரிய பங்கைத்தானே கேட்கிறோம் (பட்டினி)

பாடுபட்டுழைத்தவர் நிணத்தைத் தின்ற கழுகுகள்
பறந்தொழிந்து போதல் திண்ணம் பாரும் சில நாளதில்
காடுவெட்டி மலையுடைத்துக் கட்டிடங்கள் எழுப்புவோம்
கவலையற்ற போகவாழ்வை அனைவர் உரிமையாக்குவோம் (பட்டினி)

Vaigai Printers & Publishers, Madurai - 625 018. Ph : 0452-266 7450. Fax : 0452-2667070